
முகத்திரை

இன்பா அலோசியஸ்



நூல் குறிப்பு

- நூல் தலைப்பு — முகத்திரை
- ஆசிரியர் — இன்பா அலோசியஸ்
- மொழி — தமிழ்
- முதற் பதிப்பு — நவம்பர், 2015
- உரிமை — ஆசிரியருக்கு
- தாளின் தன்மை — 11.6 K.g. வெள்ளைத் தாள்
- நூலின் அளவு — 1 × 8 கிரவுன்
- அச்சு எழுத்து — 11 புள்ளிகள்
- மொத்தப் பக்கங்கள் — 444
- பைண்டிங் — சாதா அட்டை

விலை: ரூ. 230.00

வெளியிடுவோர் — **அன்பு இல்லம்**
கே.கே.பி. காம்ப்ளக்ஸ்,
எண். 107/2, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
செல்: 9003145746

கணினி அச்சு — மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 69.
செல்: 8939427929

அச்சிட்டோர்: — மஞ்சு ஆப்செட், சென்னை - 5.

முகத்திரை

ஆசிரியரின் பிற நூல்கள்

இதயக் கதவு	- ரூ. 240.00
நினைவலையில்	- ரூ. 250.00

முகத்திரை



என்னில் உறைந்திருக்கும்
உணர்வுகளின் குவியல்...
முகத்திரைக்குப் பின்னால்...!

தன் காதில் விழுந்த ரீபோக் ஷூவின் ஓசையில், கடிகாரத்தைப் பார்க்காமலேயே, நேரம் ஐந்து முப்பது என்பதை அறிந்து கொண்டாள் ரோஸ். அவசரமாக ஃப்ரிஜ்ஜில் இருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்துக் கொண்டு ஹாலுக்கு விரைந்தாள்.

"குட் மார்னிங் சார்...!" காலை வணக்கம் உரைத்தவள், தண்ணீர் பாட்டிலை நீட்டினாள்.

"குட் மார்னிங் ரோஸ்...!" பதில் வணக்கம் உரைத்து விட்டு, முழு பாட்டில் நீரையும் வயிற்றில் சரித்து விட்டு, வேக நடை எடுத்து நடக்கத் துவங்கினாள், ரோஸால் சார் என்று அழைக்கப்பட்ட நந்தினி ஐ.பி.எஸ்.

நந்தினி ஐ.பி.எஸ்... பெண்களுக்குள் அசாத்திய வளர்த்தியும், அதற்கேற்ற உடற்கட்டும், படிப்பிற்குத் தகுந்த மிடுக்கும், யாருக்கும் அஞ்சாத நிமிர்வும்... அவளைக் காணும் யாரையும், சற்று அகற்றியே நிற்க வைக்கும்.

பெண் என்பதற்கான எந்த அடையாளங்களும் அவளிடம் காணப்படவில்லை. பாப் தலைமுடி, ஒரு டி-ஷர்ட், காக்கி பேன்ட், காலில் ஷூ... வழக்கமான அவளது உடை இதுதான்.

உடை மட்டுமா...! அந்தக் காக்கி உடைக்குள் இருக்கும் அவளது மனமும், அவள் அணிந்திருக்கும் காக்கிச் சட்டைக்குக் குறையாத அதே விரைப்புடனும், அதே நிமிர்வுடனும் இருக்கும்.

அவள் எடுக்கும் நடவடிக்கையிலும், கீழே வேலை செய்பவர்களை ஆட்டி வைக்கும் விதத்திலும், இவள் பெண்தானா என்ற சந்தேகத்தை மற்றவர்கள் மனதில் விதைத்து விடும். சந்தேகத்தை நிவர்த்தி செய்யவென்றே... வேலைக்குச் சேர்ந்த முதல் நாளே...

அவளை 'மேடம்...' என்று அழைத்தவர்களை... "கால் மீ சார்..." குரலைக் கொஞ்சம் கூட உயர்த்தாமல்... கண்களை உறுத்து விழித்து அவள் சொன்ன விதத்தில்...

அதன்பிறகு அவளை யாரும் மேடம் என்று அழைக்கத் துணியவில்லை.

அவள் கண்கள் இன்று வரை நிலம் பார்த்து யாருமே பார்த்ததில்லை. எதிரில் நிற்பவர்களை நேருக்கு நேர், கண்களுக்குள் உற்றுப் பார்த்து அவள் கேள்வி கேட்கும் வேளையில், எந்தக் குற்றவாளிக்கும் அவள் முன்னால் பொய் சொல்லவே உதறல் எடுக்கும்.

அவள் பெண் என்பதை அவளே மறந்து வருடங்கள் பல கடந்து விட்டன. அவள், தான் ஒரு ஆண் மகனுக்கு நிகரானவள் என்பதை வார்த்தையிலும், பார்வையிலும் மட்டும் வெளிப்படுத்தாமல், செய்கையிலும் அதை வெளிப்படுத்தினாள்.

நூறு ஆண்கள் மத்தியில் ஒற்றைப் பெண்ணாக ட்ரெய்னிங் எடுத்த நாள் முதல், வேலைக்குச் சேர்ந்து, வழக்குகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையிலும், உடன் வேலை செய்யும் ஆண்கள் மத்தியில், ஒருவித நிமிர்வுடனே உலாவினாள்.

நான் பெண் என்பதால் என்னை விட்டு எட்டியிரு... இல்லையா நான் உன்னை விட்டு எட்டி நிற்கிறேன்... என்பதே இல்லாமல்... சரி நிகராக அவர்களோடு நின்று உரையாடுவது முதல், வெயில் மழை எதையும் பாராமல், நேரம் காலம் கடந்து, ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வேலை பார்த்தாள்.

அவளது இந்தச் செய்கையே... மற்றவர்களையும் அவள் பெண் என்பதை மறக்கச் செய்தது. அவள் மேல் ஒருவித மதிப்பை அளித்தது.

ரோஸிடமிருந்து நீரை வாங்கிக் குடித்தவள்... வீட்டை விட்டு வெளியேற... அவள் வரவிற்காகவே காத்திருந்த டிரைவர் கந்தன் வேகமாக வாகனத்தை இயக்கினார். அவள் ஏறி அமரவே, "குட் மார்னிங் சார்..." அவருக்குப் பதிலாக ஒரு தலையசைப்பைக் கொடுத்தவள்,

பின்னிருக்கையில் அமர்ந்து காரின் கண்ணாடியை இறக்கி விட்டவள், சாலையின் இரு பக்கமும் பார்வையைச் செலுத்தினாள்.

விடியலை ரசிக்கும் மனநிலை அவளிடம் இருக்கவில்லை. மாறாக... சுற்றுப்புறத்தை ஆராயும் பார்வையாகவே அவள் பார்வை இருந்தது. காரின் ரிவர் வியூ வழியாக அவளைப் பார்த்த கந்தனுக்கு மனம் ஒரு பக்கம் பெருமிதத்தில் விம்மினாலும்... இரு பெண் குழந்தைகளுக்குத் தந்தையான அவரால்... நந்தினி இப்படி இருப்பதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

தன்னிடம் கொஞ்சிப் பேசி, குலாவி... உரிமையாய் விளையாடி... மென்மையின் உருவாக... பட்டாம் பூச்சியாய்ச் சிறகடிக்கும் தன் பெண்களையும்... கண்களில் தீட்சண்யத்துடன், உணர்வுகளைத் துடைத்த முகத்தோடு... மென்மை என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் நந்தினியையும் ஒப்பிட்டவரின் நெஞ்சம் கனத்துப் போனது.

'பெண்களால் பேசாமல் இருக்கவே முடியாதோ...?' என்று அவரது மகள்களைப் பார்த்து எண்ணியவர்...

என்று நந்தினியைப் பார்த்தாரோ அப்பொழுதே தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டார்.

'வார்த்தைகளை இப்படியும் அளந்து பேச முடியுமா? பெண் ஆணாக உருமாற முடியுமா...? கண்களுக்குள் நெருப்பைத் தேக்க முடியுமா...? கண்கள் அலை பாயாமல் கத்தியாகப் பாய முடியுமா...? தேகம் குலுங்காமல் விறைப்பாக நடக்க முடியுமா?'

இவை அனைத்தையும் அனாயாசமாக நடத்திக் காட்டும் நந்தினியை எவ்வளவு வியப்பாய்ப் பார்த்தாரோ... அதே அளவு கவலையும் கொண்டார்.

கந்தன் தன்னைப் பார்ப்பதையும், அவர் முகம் வெளிப்படுத்தும் உணர்வுகளையும் ஓரக் கண்ணால் கண்டாலும்... அதைக் கண்டு கொள்ளாமல் தன் வேலை யிலேயே கவனமாக இருந்தாள்.

ஒரு இடத்தைக் கடக்கும் வேளையில் அவள் பார்வை கூர்மையாகியது. நான்கு பேர் கூடி நின்று கொண்டிருக்க, அவர்களுக்கு அருகில் பத்து வயது மதிக்கத்தக்க ஒரு சிறுமி, அவர்களை நோக்கிக் கை நீட்டி அழுது கொண்டிருந்தாள்.

அந்த நால்வரும் கையில் ஒரு குட்டி நாயை வைத்துக் கொண்டு, ஒருவரோடு ஒருவர் அதைத் தூக்கிப் போட்டு விளையாட, அந்தச் சிறுமியோ பரிதவிப்புடன் அவர்கள் பின்னால் அந்த நாயை வாங்க ஓடிக் கொண் டிருந்தாள்.

அந்தக் காட்சியைக் கண்ட நந்தினியின் ரத்தம் கொதிக்க,

"கந்தா... காரை நிப்பாட்டுங்க...!" நந்தினியின் குரலில் சடன் பிரேக் போட்டுக் காரை நிறுத்தினார்.

அவர் காரை நிறுத்தும் முன்பே, காரிலிருந்து குதித்து இறங்கியவள்... வேகமெடுத்து ஓடுவதைக் கண்ட கந்தன்... தானும் இறங்கி அவள் பின்னால் ஓடினார்.

கந்தன் செல்லும் முன்பே... நான்கு இளைஞர்களை வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தாள் நந்தினி. அவர்களும் விடுவதாக இல்லை.

"ஏய்... நீ யாருடி...? நீ ஏன் எங்க விஷயத்தில் தலையிடுற...? டேய்... அவளை அப்படியே புடிச்சு அமுக்குங்கடா... ஒரு பொட்டச்சிக்கு இவ்வளவு திமிரா...?" நான்கு இளைஞர்களும் கூடி அவளை அடித்து வீழ்த்த முயன்றார்கள்.

அந்தோ பரிதாபம்...! அவர்களால் அவள் அருகில் கூட நெருங்க முடியவில்லை. கராத்தேயும்... கொஞ்சம் வர்மக் கலையும் கலந்து அவர்களைப் பந்தாட... அவர்களின் மர்ம உறுப்பும் அவள் இலக்கிற்குத் தப்பவில்லை.

கந்தனோ, அவர்களை நெருங்கவும் இல்லை, பதட்டப்படவும் இல்லை. அவருக்குத் தெரியும்... நந்தினியை வீழ்த்துவது அவ்வளவு எளிதல்ல என்பது. எனவே நடப்பதை விலகியிருந்து வேடிக்கை பார்த்தார்.

"ஐயோ... அம்மா...!" என்ற அலறலோடு அவர்கள் சரிய... இறுகிய முகத்தோடு அவர்களை உறுத்து விழித் தாள்.

"ஸ்கவுன்ட்ரல்ஸ்... ஒரு சின்னப் பொண்ணு கிட்டேயும்... அந்த வாயில்லா ஜீவன் கிட்டேயும் விளையாட்டுக் காட்டுறீங்களே... நீங்கல்லாம் மனுஷ ஜென்மங்களாடா... உங்களுக்கு விளையாட வேற ஆளே கிடைக்கலையா...? எங்கே... என்கிட்டே வாங்கடா பார்க்க லாம்."

அவர்கள் கையிலிருந்து நழுவி ஓடி... அந்தச் சிறுமியின் கையில் தஞ்சம் புகுந்திருந்த நாய்க்குட்டியை அவள் ககைளில் வாங்கிக் கொண்டவள்... அவர்களிடம் அறைகூவல் விடுத்தாள்.

அவள் நின்ற தோரணையில் ஆங்காரமோ... ஆணவமோ வெளிப்படவில்லை. மாறாக... ஒரு தார்மீகக் கோபம் மட்டுமே கனன்று கொண்டிருந்தது.

"எங்க மேலயே கை வச்சுட்டல்ல... உன்னை சும்மா விட மாட்டோம்டி..." அந்த நிலையிலும் ஒருவன் அவளிடம் வாங்கிய அடியின் அவமானம் தாங்காமல் கருவினான்.

"என்னடா செய்வ...? எங்கே, செய் பார்ப்போம்... நான் இங்கே உன் கண்ணு முன்னாடிதானே நிக்கேன்..." அவள் நின்ற இடத்தில் இருந்து அசையாமல் சொல்ல, அவளிடம் பேசியவனுக்கோ இருந்த இடத்தில் இருந்து அசைய முடியாமல் வலி உயிர் போனது.

"இன்னொரு முறை இந்த மாதிரி செய்யறதை நான் பார்த்தேன்... ஏன்டா இன்னும் உயிரோட இருக்கோம்னு நீங்க ரொம்ப ஃபீல் பண்ணுவீங்க..." அவர்களிடம் சொன்னவள்,

அந்தச் சிறுமியிடம் திரும்பி, அவள் கையில் இருந்த நாய்க்குட்டியைக் கொடுத்தவள், "உங்க அம்மா அப்பா எல்லாம் எங்கே...?" அந்தச் சிறுமியிடம் வினவ,

"அவங்கல்லாம் அங்கே படுத்துருக்காங்க... நான் தான் நாய்க்குட்டி கூட விளையாண்டுட்டே அப்படியே வந்துட்டேன்..." நாய்க்குட்டியைக் கொஞ்சியவாறே அவள் பேச, அந்தச் சிறுமியைச் சலனமே இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்னை அங்கே கூட்டிப் போறியா...?" சிறுமியிடம் அவள் கேட்க, சந்தோஷமாகத் தலையாட்டினாள் அவள்.

"சார்..." கந்தன் அவளது குணமறிந்து, இது வேண்டாமே என்னும் எண்ணத்தில் அவளை அழைக்க, நந்தினி பார்த்த பார்வையில் வாயை மூடிக்கொண்டு, அவர்கள் பின்னால் சென்றார்.

அந்தச் சிறுமி தன் பெற்றோர் தூங்கும் இடத்தைக் காண்பிக்க, அவர்களை எழுப்புமாறு கந்தனுக்குச் செய்கை செய்ய, 'என்ன ஆகப் போகுதோ...?' என்ற பதைப்புடனே அவர்களை எழுப்பினார்.

அந்தச் சிறுமியின் பெற்றோர் என்னவோ ஏதோ என்ற பதட்டத்தில் கண் விழித்தார்கள். பிளாட்ஃபார்மில்

படுத்து உறங்கும் அவர்களுக்கு, அடிக்கடி போலீஸ் ரூபத்தில் தொல்லைகள் வரும் என்பதால்... பதைப்புடனே எழுந்தனர்.

அவர்கள் எழுந்த அடுத்த நிமிடம், அவளது தந்தையின் கன்னம் பழுக்கும் அளவு ஓங்கி ஒரு அறை விட்டாள் நந்தினி. சிறுமி இதை எதிர்பாராமல் விக்கித்து நிற்க,

"பிள்ளை பெத்தால் மட்டும் போதாது... அவங்களைப் பொறுப்பா வளர்க்கத் தெரியணும்... இன்னொரு முறை உன் பொண்ணைத் தனியா விட்ட தைப் பார்த்தேன்..." ஒற்றை விரல் நீட்டி எச்சரித்து விட்டு, அவர்கள் அதிர்ந்து நிற்பதைக் கூடப் பொருட்படுத்தாமல் அங்கிருந்து அகன்றாள்.

இதுதான் நந்தினி. சிறுமி அவளைக் கொஞ்சவும் இல்லை, பெற்றவர்களிடம் இளக்கம் காட்டவும் இல்லை. அவள் செய்கையில் கடமை மட்டுமே இருந்தது. எதையுமே கடமையோடு செய்யும் அவளைக் கண்ட கந்தனுக்குத் துக்கப்பந்து தொண்டைக்குள் நிரடியது.

"கந்தா... நான் இப்படியே ஜாக்கிங் கிளம்புறேன்... நீங்க வழக்கமான இடத்தில் என்னைப் பிக்கப் பண்ணிக்கோங்க..." சொல்லி விட்டு, அவரது பதிலை எதிர்பாராமல் அங்கிருந்து ஓடத் துவங்கினாள்.

எதிர்பட்ட ஆட்களிடம் சிநேகமான சிரிப்பு... ஒரு காலை வணக்கம்... எதுவும் இருக்கவில்லை. கருமமே

கண்ணாக ஓடிக் கொண்டிருந்தாள். அவளது தோற்றமே அவள் யார் என்பதை மற்றவர்களுக்கு அறிவிக்க,

மக்களின் வியந்த பார்வையோ, அவளை அறிந்த ஒரு சிலரின் முணுமுணுப்போ... எதுவும் அவளைக் கலைக்கவில்லை. அவளிடம் ஆர்வமாகப் பேச முயன்ற கல்லூரி மாணவர்களையோ... மாணவிகளையோ... வயதானவர்களையோ... கண்டு கொள்ளாமல் அவள் வேலையைத் தொடர்ந்தாள்.

அவளது செய்கைகள் அனைத்தையும் இரண்டு கண்கள் இமைக்கக் கூட மறந்து பார்த்துக் கொண்டி ருந்தது. அவளைத் தொடர்ந்து செல்ல அவன் உள்ளம் விரும்பினாலும், அவன் தொடரத் துவங்கிய அடுத்த நொடியே அவனை அவள் கண்டு கொள்வாள் என்பது அவனுக்குத் தெரியும்.

எனவே தன் ஆர்வம் அனைத்தையும் மூட்டை கட்டி மடியில் வைத்துக் கொண்டு, தன் பார்வை வட்டத்துக்குள் அவள் சுற்றிவரும் தொலைவில் இருந்து கொண்டான்.

"இதெல்லாம் ஒரு பொழப்பு..." தன் அருகில் தலையிலடித்துக் கொண்டு புலம்பும் நண்பன் சரவணனைக் கண்டு கொள்ளாமல்... கண்கள் முழுவதும் காதலைத் தேக்கி... நந்தினி செல்லும் திசையில் பார்வையைச் செலுத்தியவாறு இருந்தான் பிரதீப் என்று அனைவராலும் அழைக்கப்படும் பிரதீப் குமார்.

"டேய்... டேய்... அவங்க போய் ஒரு மணி நேரம் ஆகுதுடா... இன்னும் கண்ணைத் தொறந்து வச்சுட்டு

என்னத்தடா செய்ற...?" பாதித் தூக்கத்தில் தன்னை எழுப்பிக் கூட்டி வந்து, தன்னை அருகில் அமர வைத்து விட்டு, மற்றவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால்... அவனும் என்னதான் செய்வான்.

"உனக்குப் பொறாமைடா...!" ஒரு மாதிரிக் குரலில் பிரதீப் சொல்ல,

"நீ நடத்துறது ஒரு பொழப்பு... இதைப் பார்த்து எனக்குப் பொறாமை வேற... என்னை விடுடா... இப்படியே கடல்ல விழுந்து நான் சாவுறேன்..." சரவணன் கோபமாகக் கிளம்ப, அவனை கை பிடித்துத் தடுத்தான் பிரதீப்.

"கோச்சுக்காதேடா..." நண்பனின் தாடையைப் பிடித்து ஆட்டியவாறு சொல்ல, சரவணன் நண்பனைப் பரிதாபமாகப் பார்த்தான்.

அவன் பார்வையை உணர்ந்து, "எதுக்குடா, என்னை செய்யாத குத்தத்துக்கு ஜெயிலுக்குப் போற அப்பாவி மாதிரி இப்படிப் பார்க்குற...?" பிரதீப் வினவ, சரவணனின் முகம் கடுப்பானது.

"இப்போ எதுக்கு உன் மூஞ்சி இப்படி மாறுது...?"

"பின்ன... நீ ஒரு போலீஸை லவ் பண்ணுறன்னு தெரியும்... அதுக்குன்னு... உதாரணம் கூட அப்படியே சொல்லணுமா...?" கடுப்பானான் அவன்.

"விடுடா, விடுடா... என் நந்து கிளம்புற நேரமாச்சு... அங்கே போகலாம் வா...!" அவனை இழுத்துக் கொண்டு சென்றான்.

"உன் லவ்வரை நீ பார்க்கப் போறதுக்கு... என்னை எதுக்குடா இழுத்துட்டு அலையுற..." அலறியவாறே அவனைப் பின்தொடர்ந்தான்.

"எல்லாம் விஷயமாகத்தான்... இல்லாமல், சும்மா உன்னைக் கூட கூட்டிட்டு அலையணும்னு எனக்கு வேண்டுதலா என்ன...? பேசாமல் வாடா...!" சரவணனை இழுத்துச் சென்ற பிரதீப், உழைப்பாளர் சிலையின் அருகில் நின்றவாறு நந்தினி எங்கே என்று தேடினான்.

அவளது கார் அவனுக்கு எதிரில்தான் நின்று கொண்டிருந்தது. எப்பொழுதும் போல்... அன்றும் நந்தினியின் மிதமான ஓட்டத்தைக் கண்கள் நிறைய நிரப்பிக் கொண்டான். அதற்குமேல் அவளை நெருங்கும் எண்ணமோ, வழியோ அவனுக்குத் தெரியவில்லை.

மிதமான ஓட்டத்தில் இருந்த நந்தினியோ... கண்களை நாலா பக்கமும் சுழற்றியவாறு வந்து கொண்டிருந்தாள்.

அவளைக் கண்டவுடன், நண்பனிடம் தீவிரமாகப் பேசுபவன் போல் திரும்பி நின்று கொண்டான். அவர்களையும் சிறு ஆராய்ச்சிப் பார்வை பார்த்தவள், காரில் ஏறி அமர, வாகனம் அவள் வீட்டை நோக்கிச் சென்றது.

"என்னடா... இந்தப் பார்வை பார்த்துட்டுப் போறாங்க... சரி... நீ உன் லவ்வைச் சொல்லாமல் இப்படி முதுகைக் காட்டிட்டு நின்னா என்னடா அர்த்தம்...?" அலுத்துக் கொண்டான்.

"தேனெடுக்க ஆசைப்படுறவன்... ஓடிப்போய் தேன் கூட்டில் கை வச்சா... தேனியின் கோபத்துக்கு ஆளாகி... அதுகிட்டே கொட்டு வாங்கணும்... தேனும் கிடைக்காது.

"அதே நேரம்... கொஞ்சம் புகை எல்லாம் போட்டு... நிதானமா அதை நெருங்கி... அது எல்லாத்தையும் அமைதிப்படுத்திய பிறகு தேனெடுத்தால்... நமக்குத் தேனும் கிடைக்கும்... அவஸ்தையும் படவேண்டி இருக்காது..." ஒரு மாதிரிக் குரலில் சொன்னவன்,

சட்டென சீரியசானான். "எனக்கு நந்தினியைப் பற்றித் தெளிவாத் தெரியும்டா... அவளோட அன்பையும், காதலையும் பெற... நான் அவசரப்படவே கூடாது. என்னோட ஒரு சிறு தவறு கூட.. என் காதலை மொட்டிலேயே கருகச் செய்து விடும்.

"என்னோட காதல் மொட்டவிழ்ந்து, மலர்ந்து, மணம் வீசணும்னு நான் நினைக்கிறேன். அது கருகிப் போவதைக் கற்பனை செய்யக் கூட என்னால் முடிய வில்லை." கனத்த இதயத்தோடு அவன் சொல்ல, நண்பனின் காதலை வியப்பாய்ப் பார்த்தான் சரவணன்.

"அப்படி என்னதான்டா கிரேஸ் அவங்க மேல... அதுவும்..." மேலே சொல்லப் போனவன், நண்பனின் முகத்தில் தெரிந்த வலியில் அமைதியாகி விட்டான்.

"சொல்லுடா... ஏன் நிறுத்திட்ட... இப்படி விறைப்பா... முறைப்பா... பொண்ணாவே இல்லாதவ மேல் என்ன காதல்னுதானே கேட்க வந்தே..." குரலில் வலியுடன் பிரதீப்

கேட்க, நண்பனை வருத்தப்படுத்திவிட்ட குற்ற உணர்வில் அமைதியானான் சரவணன்.

"சாரி பிரதீப்...!" உண்மையான வருத்தம் அவன் குரலில்.

"உனக்குச் சொன்னால் புரியாது சரவணா... இன்னும் அந்தக் குட்டி நந்தினி என் கண்ணுக்குள்ளேயே இருக்கா."

சொன்னவனின் விழிகள் மூடிக் கொள்ள, அரை விழியில் குட்டி நந்தினி அவன் விழிகளுக்குள் உலா போனாள்.

நண்பனின் முகம் மென்மையானதைக் கண்ட சரவணனுக்கு, அவன் காதலை எண்ணி வியப்பாய் இருந்தது. 'மனம் முழுக்க அன்பை மட்டுமே சுமந்திருக்கும் நண்பனின் காதலை நந்தினி புரிந்து கொள்வாளா...?' என்ற கேள்வி அவன் முன் எழுந்து பூதாகாரமாய் மிரட்டியது.

அதே நேரம்... நண்பனின் காதலை அவள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற வேண்டுதலும் எழுந்தது. விடை யறியா வினாக்களின் விடை, கிடைக்குமா...?



எட்டியிரு என்னை விட்டு...!
எட்டயிருந்து பார்க்கவே
விதியிருக்கிறது எனக்கு...!

காலை ஓட்டம் முடித்து வீட்டிற்கு வந்த நந்தினியை டவலோடு வரவேற்றாள் ரோஸ். அவளிடமிருந்து டவலை வாங்கியவள்...

கந்தனிடம் திரும்பி, "நீங்க போகலாம்...!" கட்டளையா, தகவலா, அனுமதியா... இன்னதென்று புரியாத குரலில் உரைத்தவள்...

"காஃபி..." ரோஸிடம் கேட்க,

"சார்... டீ கொண்டு வரவா... உங்களுக்குக் காஃபி கொடுக்கக் கூடாதுன்னு..." ரோஸ் சொல்ல வந்ததைக் கூடச் சொல்லி முடிக்க முடியாமல், நந்தினியின் விழிகள் அவளைக் கூறு போட... பேச்சை பாதியிலேயே நிறுத்தினாள்.

"இப்போ காஃபி கிடைக்குமா, கிடைக்காதா...?" நிறுத்தி நிதானமாக அவள் வினவ...

அவளது குரலில் உள்ளுக்குள் குளிரெடுத்ததை மறைத்துக் கொண்டு...

"அது வந்துக்கா..." ரோஸ் அவளை அக்கா என்று அழைத்த அடுத்த நிமிடம், அவள் கன்னம் வீங்கும் அளவு ஒரு அறை விட்டாள் நந்தினி.

"உன்னோட லிமிட்டை நீ தாண்டவே கூடாது. புரியுதா... எனக்கு எது நல்லதுன்னு எனக்குத் தெரியும்... அதை நீ சொல்லக் கூடாது... நீ எங்கே நிக்கணுமோ அங்கே நிக்கணும்...!" ஒவ்வொரு வார்த்தையும் நெருப்புத் துண்டங்களாக வந்து விழ,

அவளது பேச்சில் எந்தவிதச் சலனமும் இல்லாமல் அவளை நேருக்கு நேர் பார்த்தாள் ரோஸ்.

"அப்படியா...? அப்போ நீங்களும் என்னை எங்கே நிறுத்தியிருக்கணுமோ அங்கே நிறுத்தி இருக்கணும். அதை நீங்க செய்யலை... அதனால் என்னோட இடத்தில் நிக்காமல்... வரம்பு மீறத்தான் செய்வேன். என்ன இப்படிப் பேசுறேன்னு இன்னும் என்னை அடிக்கணும்னு தோணுதா... அப்போ தாராளமாக இன்னும் ரெண்டு அடி சேர்த்து அடிங்க. ஆனா நீங்க என்ன செஞ்சாலும் காஃபி மட்டும் தரவே மாட்டேன்..." சண்டைக் கோழியாய் அவள் சிலிர்த்துக் கொண்டு நிற்க,

ரோஸ் தன் கையில் கொடுத்திருந்த டவலை அவள் முகத்திலேயே விசிறி அடித்து விட்டு, வேகமாகக் கிச்சனுக் குள் சென்று, தனக்கான காஃபியைத் தயாரிக்கத் துவங்கினாள் நந்தினி.

"சார்... வேணாம்... டீ குடிங்க... காஃபி குடிச்சால் இன்னும் உங்க உடம்பு கெட்டுப் போகும்... உங்களுக்கு காஃபி ஒத்துக்காது..." ரோஸின் எந்தக் கெஞ்சலும் நந்தினியிடம் வேலைக்கு ஆகவில்லை.

அவள் தயாரித்த காஃபியை வலுக்கட்டாயமாகப் பிடுங்கியவள்... அதை அப்படியே சிங்க்கில் கொட்டினாள். மீண்டும் அவளை அடிக்கக் கை ஓங்கியவள், அது முடியாமல் ஆத்திரத்தில் அவளிடம் வெடித்தாள்.

"எனக்கு எது ஒத்துக்கும்... ஒத்துக்காதுன்னு நான் தான் முடிவு செய்வேன். உன் வேலை சமையல்

செய்யறது. அதை மட்டும் பார். அதை விட்டு..." அவளை உறுத்து விழிக்க,

'நீ யார் அதை முடிவு செய்ய...?' என்ற கேள்வி அதில் தொக்கி நின்றது.

அதைக் காற்றில் கரைய விட்ட ரோஸ், "என் வேலையைத்தான் நான் பார்க்கிறேன்... இனிமேலும் பார்ப்பேன்..." அழுத்திச் சொல்லிவிட்டு அங்கிருந்து செல்லப் போனாள்.

நந்தினியின் பொறுமை கரையைக் கடக்க, "அப்போ நான் என்ன சொன்னாலும் நீ கேட்க மாட்ட... சரி, அப்படியே இருக்கட்டும். ஆனா என்னை மாத்த முடியும்னு மட்டும் கனவில் கூட நினைக்காதே. அது இந்த ஜென்மத்தில் நடக்காது." சொன்ன அடுத்த நிமிடம் அவள் அங்கே இருக்கவில்லை.

"என்னால் மாத்த முடியாமல் போகலாம். ஆனால், அந்தக் கடவுள் நினைத்தால் மாத்த முடியாததே இந்த உலகத்தில் கிடையாது. நான் உங்களுக்காக அந்த ஆண்டவன் கிட்டே வேண்டிக்கிறேன்." ரோஸின் குரல் அவளைத் தொடர, படியேறிய நந்தினி திரும்பி நின்றாள்.

"கடவுள்... ஆண்டவன்... இவங்களையெல்லாம் இன்னுமா நீ நம்புற...?" போலியாக வியந்து... ரோஸின் விழிகளுக்குள் ஊடுருவிப் பார்க்க, அவள் கேள்வியில் ஒரு நிமிடம் திடுக்கிட்டுப் போனாள் ரோஸ்.

அவளது அதிர்ச்சியை உணர்ந்த நந்தினியின் இதழ்கள் ஏளனத்தில் வளைய... தன்னை மீட்ட ரோஸோ,

"நான் எப்படி நம்பாமல் இருப்பேன்...? அதான் உங்களை எனக்குத் தந்திருக்காரே..." இதைச் சொல்லும் முன்பே அவள் இதழ்கள் நடுங்கி, விழிகள் அழுகைக்குத் தயார் ஆனது.

அவளை வெறுப்பாய் ஒரு பார்வை பார்த்தவள், மேற்கொண்டு ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அங்கிருந்து விலகினாள்.

விலகிச் செல்லும் அவளை வேதனையாய்ப் பார்த்தாள் ரோஸ். 'இவங்க ஏன் இப்படி இருக்காங்க... கொஞ்சம் கூட ஒட்டுதல் இல்லாமல் இவங்களால் எப்படி இருக்க முடியுது...?' எப்பொழுதும் அவள் முன்னால் பூதமாக எழும் வினா... அன்றும் அவளை மிரட்டியது.

ரோஸ்... நந்தினி ஒட்டுதல் இல்லாமல் இருக்கிறாளே என்று வியந்தாளே தவிர... நெஞ்சில் ஈரம் இல்லாமல் இருக்கிறாளே என்று எண்ணவில்லை. அப்படி அவளால் எண்ணவும் முடியாது.

மேலே எதையும் சிந்திக்க நேரமில்லாமல், நந்தினி இன்னும் சிறிது நேரத்தில் கீழே இறங்கி வந்துவிடுவாள் என்பதை உணர்ந்து சமைக்கச் சென்றாள். சமைக்கும் வேளையிலும் நினைவு முழுவதும் நந்தினியைச் சுற்றியே வந்தது.

அவளை அக்கா என்று சொல்லி, அறை வாங்கிய கன்னத்தைத் தன் கரங்களால் அழுந்தத் தேய்த்துக் கொண்டாள். இது ஒன்றும் ரோஸுக்குப் புதிது கிடையாது.

அவள் இங்கே வந்தது முதல்... நந்தினியை அக்கா என்று அழைத்து வாங்கிய அடிகள் கணக்கில் அடங் காது. ஆனால் கூட... இடை இடையே நந்தினியை அக்கா என்று அழைப்பதை இவளும் நிறுத்தவில்லை. அடிப்பதை அவளும் நிறுத்தவில்லை.

நந்தினிக்கு எவ்வளவுதான் கோபம் இருந்தாலும்... இன்று வரை அவளை வீட்டை விட்டு வெளியே போ என்று பேச்சுக்குக் கூட அவள் சொன்னதில்லை. அந்த ஒரே ஒரு விஷயத்தைப் பற்றிக் கொண்டு, ரோஸும் இடைவிடாமல் முயன்று கொண்டிருக்கிறாள்.

முயற்சியின் பலன் மட்டும் என்னவோ பூஜ்யம் மட்டுமே. இங்கே ரோஸ் நந்தினியைப் பற்றியே சிந்திக்க... நந்தினியோ கீழே நடந்ததின் தாக்கம் சிறிது கூட இல்லாமல் தன் வேலையைச் சரியாகச் செய்து கொண் டிருந்தாள்.

தனது அறைக்குப் பக்கத்து அறையில், தான் உருவாக்கியிருந்த உடற்பயிற்சி கூடத்தில் நுழைந் தவள்... பஞ்ச் பாக்ஸில் பாக்ஸிங் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தாள். இது அவளது அன்றாட வழக்கம். ஒரு மணி நேரம் ஜாக்கிங்... அடுத்த ஒரு மணி நேரம் பயிற்சி... அரை மணி நேரம் பேப்பர் வாசிப்பு... என அவளது காலை வேளைகள் கச்சிதமாக இருக்கும்.

இன்றும் அதில் எந்த மாற்றமும் இல்லாமல் சரியாகவே நிகழ்ந்தது. வியர்வை உலரச் சிறிது நேரம்

அமர்ந்து பேப்பர் படித்தவள், அடுத்த பத்து நிமிடங்களில் குளித்துக் கிளம்பி விட்டாள்.

யூனிஃபார்மை எடுத்து மாட்டிக் கொண்டவளிடம்,ஒரு கம்பீரம் வந்து ஒட்டிக் கொண்டது. அந்த அறையில் கண்ணாடி என்பது பெயரளவிற்குக் கூட இருக்கவில்லை.

தன் பாப் தலைமுடியை சீப்பால் இரண்டு கோது கோதியவள்... காலுக்குப் பூட்சை மாட்டிக் கொண்டு கீழே இறங்கி விட்டாள். துடைத்து வைத்த முகம், பெயரளவில் கூட அணிகலன்கள் அற்ற தேகம். காதில் ஒரு குண்டு கம்மல் மட்டுமே.

தொடர்ந்த பாக்ஸிங் பயிற்சியாலா... இல்லை யென்றால் அவள் மன இறுக்கத்தாலா... எதனால் என்று தெரியாமலேயே அவளிடம் பெண் என்ற அடையாளம் தொலைந்து போகும் நிலையில், உடலளவில் ஒருவித இறுக்கத்துடனே இருந்தாள்.

அவள் எவ்வளவுதான் பெண் என்பதை மறைக்க, மறக்க முயன்றால் கூட, துடைத்து வைத்த குத்துவிளக்குப் போன்ற அவளது முகம்... அவள் பெண் என்பதை வெளிச்சம் போட்டு மற்றவருக்குக் காட்டும்.

ஆனால் அவள்தான் அதை வலுக்கட்டாயமாக மறைக்க முயலுவாள். சாப்பாடு மேசை முன்பு வந்து அமர, ரோஸ் அவளுக்கு இட்லியைப் பரிமாறினாள்.

அதே நேரம் கந்தனும் வந்து விட, நந்தினி அவரைக் கண்டு கொள்ளாமல் சாப்பாட்டில் கவனமாக

இருக்க, "அண்ணே... வாங்க...!" ரோஸ்தான் அவரை அழைத்தாள்.

"இல்லைம்மா... நான் சாப்பிட்டேன்." அவளுக்குப் பதில் சொன்னவர், சுமோவின் அருகில் சென்று நின்று கொண்டார். நந்தினி தனது தனிப்பட்ட உபயோகத்துக் காகக் காரை உபயோகிப்பவள், டிபார்ட்மென்ட் தொடர்பான விஷயங்களுக்கு மட்டும் சுமோவைப் பயன்படுத்துவாள்.

சாப்பிட்டு முடித்தவள், தன் தொப்பியை எடுத்துக் கொண்டு வெளியேறி, சுமோவில் டிரைவர் சீட்டின் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள். போகலாம் என்று அவள் சொல்வாள் என்பதை எதிர்பார்க்காமலே வண்டியைக் கிளப்பிச் சென்றார்.

வழக்கமாகத் துவங்கிய அவளது நாள்... அதே வழக்கத்தோடு முடியுமா...?

அன்று தங்கள் அறைக்கு வந்த பிறகு, பிரதீப் குளித்து உடை மாற்ற, அவனது உடையைக் கண்ட சரவணனின் கண்கள் தெறித்து விடும்போல் விரிந்தது. நண்பனின் தோற்றத்தை நம்ப முடியாமல் பார்த்தான்.

"டேய் மாப்ள... என்னடா கோலம் இது...? அலங்கோலம்... முதல்ல போய் டிரஸ்ஸை மாத்துடா. கண்றாவியா இருக்கு." அவனை அந்த உடையில் காணச் சகிக்காமல் அவனை விரட்டினான்.

"இப்போ எதுக்குடா இவ்வளவு டென்ஷன் ஆகுற....? நான் அவ்வளவு மோசமா ஒண்ணும்

இல்லையே...!" ஆளுயரக் கண்ணாடியில் தன் பிம்பத்தைப் பார்த்தவாறே சரவணனின் கோபத்தைக் கண்டு கொள்ளாமல் பதிலுரைத்தான்.

"நீ எந்த டிரஸ் போட்டாலும் அழகாத்தான் இருப்பே...! அது எனக்கும் தெரியும். ஆனா... இந்த டிரஸ் உனக்கு வேண்டாம். இப்போ எதுக்குடா இந்த வேஷம்...?" ஆற்றாமையாகப் புலம்பினான்.

"என் காதலியை நெருங்க எனக்கு வேற வழி எதுவும் தெரியலைடா..." கவலையாகச் சொன்னான்.

"என்னடா பெரிய புடலங்கா வழி...! ஆயிரம் வழி இருக்கு. அப்படியிருக்கும் போது கண்டு பிடிச்சிருக்கான் பாரு... முதல்ல இந்த வேஷத்தை மாத்து. நாம நிதானமா யோசிக்கலாம்."

அவனை எப்படியும் மாற்றிவிட வேண்டுமென்று துடித்தான்.

எப்பொழுதும் மடிப்புக் கலையாத உடை, காலில் பளபளக்கும் பாலிஷ் ஷு, கலையாத தலைமுடி, ட்ரிம் செய்த மீசை, வழவழக்கும் தாடை என, மேல்தட்டு வர்க்கமாகவே பார்த்துப் பழகிய நண்பனை, இரண்டு நாள் தாடியோடும், சாதாரண உடை, ஸ்லிப்பர் சப்பல் என சரவணனால் பார்க்கவே முடியவில்லை.

அதிலும்... அவன் உடுத்தியிருக்கும் உடை சொல்லும் செய்தியை ஏற்கவோ நம்பவோ முடியாமல் அதிர்ந்து போயிருந்தான்.

"நிதானமா... இதுக்கு மேலேயா..." அவனது குரலே அவன் இறுதியான முடிவிற்கு வந்து விட்டதை அவனுக்கு உணர்த்தியது.

அதைக் கண்டுகொள்ளாமல், "நீ என்ன சொன்னாலும் சரி... நான் இதுக்கு அனுமதிக்கவே மாட்டேன்." சரவணன் அவனை விடப் பிடிவாதமாகச் சொன்னான்.

நண்பனின் பிடிவாதம் கண்டு திகைத்தவன், எப்படியும் அவனை ஒத்துக்கொள்ள வைத்தே ஆக வேண்டும் என்று எண்ணினான். எனவே நிதானமாக அவன் அருகில் அமர்ந்தவன், ஒரு நிமிடம் எதையும் பேசவில்லை.

பிரதீப்பின் மௌனத்தை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான் சரவணன். தொண்டையைச் செருமிய பிரதீப், "இப்போவே ரொம்பத் தாமதிச்சுட்டேன். இதுக்கு மேல அவளை நான் இப்படியே விட்டேன்னா... அவ அவளா இல்லாமலே போய்டுவாடா...!" அவன் குரலில் அவ்வளவு வலி.

நிமிட இடைவெளி விட... சரவணனுக்கு என்ன சொல்வதென்றே தெரியாமல், திகைத்து அமர்ந்து விட்டான். பிரதீப்போ,

"அதைப் பார்க்கும் சக்தி எனக்கு இல்லை. இவ்வளவு நாளும்... அவ விருப்பப்படி கொஞ்ச நாள் நிம்மதியா இருக்கட்டும்னு நான் விலகி இருந்தேன். ஆனா அவ அவளுக்குள்ளேயே இப்படி இறுகிப் போவான்னு

நான் நினைக்கவே இல்லைடா...” கண்களை மூடி, எச்சில் விழுங்கிக் கொள்ள, அவன் தொண்டைக் குழி ஏறி இறங்குவதில் இருந்தே... அவன் எவ்வளவு வேதனைப் படுகிறான் என்பதை சரவணன் உணர்ந்து கொண்டான்.

அவன் தோளை ஆதரவாக அழுத்த, அது கொடுத்த ஆறுதலில், “அப்படி மட்டும் எனக்கு ஒரு சின்ன சந்தேகம் இருந்திருந்தால் கூட... ரோமியோ மாதிரி அவளைத் தொல்லை செஞ்சிருப்பேன். அவளுக்காக இப்படி ஒரு பைத்தியக்காரன் காத்திருக்கேன்னு தெரிய வச்சிருப்பேன். ஆனா இப்போ...” விழிகள் திறந்து சரவணனைப் பார்க்க, அவன் கண்கள் சிவந்திருந்த திலேயே... வேதனையை அடக்க அவன் போராடுவது புரிய... சரவணனையும் அவனது கவலை தொற்றிக் கொண்டது.

அதைவிட... எதையும் எப்பொழுதும் இலகுவாக எடுத்துக் கொள்ளும் பிரதீப், நந்தினியின் விஷயத்தில் மட்டும் எப்பொழுதும் சீரியஸாகவே இருப்பதைக் கண்டு கவலை கொண்டான்.

“எல்லாம் சரிதான் பிரதீப்... இன்னும் கொஞ்ச நாள்...” கிட்டத்தட்டக் கெஞ்சினான்.

“ப்ளீஸ் சரவணா...! என்னை, என் மனசை, என் தவிப்பைக் கொஞ்சம் புரிஞ்சிக்க முயற்சி பண்ணு. என்னால் இதுக்கு மேல அவளைத் தனியா விட முடியாதுடா. அவளை இப்படிப் பார்க்கும் ஒவ்வொரு நிமிஷமும் நான் செத்துட்டு இருக்கேன்.

"அவளுக்காக எல்லாமா நான் இருக்க... உலகையே வெறுத்து என்னமோ யோகி மாதிரி அவள் இருக்கிறது... மொத்த உணர்வுகளையும் தொலைச்சுட்டு எல்லாத் துன்பத்தையும், கஷ்டத்தையும், வேதனையையும், வலியையும்... அப்படியே தனக்குள் கொன்னு புதைச்சிட்டு...

"இறுகி இறுகி... எரிமலைப் பாறையா அவ மேலே உறைஞ்சிருக்கா. அந்த எரிமலைக் குழம்பு என்னைக் காவது ஒருநாள் வெடிச்சுச் சிதறி... அவ சின்னாபின்ன மாகிப் போவதை என்னால் பார்க்க முடியாது.

"அப்படி எதுவும் நடக்கும் முன்னாடி... அந்த எரிமலையை நான் தணித்தே ஆகணும். அதற்காக என்ன வேண்ணா செய்ய நான் தயாரா இருக்கேன். உன்னால் முடிந்தால் எனக்கு உதவி செய். இல்லையா, என்னை விட்டு விலகியே இரு...!" ப்ரவீனின் குரல் அவ்வளவு வேதனையிலும் வலியிலும், உறுதியாக ஒலித்தது.

"என்னடா இப்படிச் சொல்லிட்ட... எனக்கு என் நண்பனோட சந்தோஷம்தான் முக்கியம். அதற்காக எதையும் செய்ய நான் தயாரா இருக்கேன். ஏதோ ஒரு ஆதங்கத்தில் இப்படிச் சொல்லிட்டேனே தவிர, உன் மனசுக்குள் என்ன இருக்குதுன்னு எனக்குத் தெரியாதா என்ன...? ஆல் தி பெஸ்ட் மாப்ள...!" நண்பனின் காதலின் ஆழம் புரிந்து, தன் வருத்தத்தையும், ஆதங்கத்தையும் மறைத்துக் கொண்டு வாழ்த்துத் தெரிவித்தான்.

நண்பனின் வாழ்த்தை ஏற்றவன்... தன் வேலை யைக் கவனிக்கச் செல்ல... எழுந்த பெருமூச்சை மறைக்காமல் வெளியேற்றிய சரவணன், வேலைக்குச் செல்ல மனமில்லாமல் அங்கேயே தங்கி விட்டான்.

ப்ரதீப்போ... வண்டியை எடுத்துக் கொண்டு நந்தினியைக் காணச் சென்றான். ஏதோ ஒரு வேகத்தில் ஒரு முடிவெடுத்து விட்டாலும், 'எப்படி அவளை நெருங்கப் போகிறோம்...?' என்பதை நினைத்துக் கவலை கொண் டான்.

கவலை ஒரு பக்கம் இருந்தாலும்... எப்படியாவது அவளை நெருங்கி விட வேண்டும் என்பதில் உறுதியாகவே இருந்தான். நினைவு முழுவதும் நந்தினியே ஆக்கிரமிக்க, செல்லும் பாதையில் கவனத்தைத் தவற விட்டான்.

கவனம் செலுத்த முயன்றாலும் அது முடியாமல் தடுமாறினான். அதே நேரம்... முதல் நாள் இரவில் அவன் வரும் பாதையை ஒன்வேயாக மாற்றியதை அறியாமல்... அந்தப் பாதையில் தன் வாகனத்தைச் செலுத்தினான்.

அந்தச் சாலையின் முடிவில் மெயின் ரோட்டைப் பிடித்து விடலாம் என்று இருக்கும் வேளையில்... ஒன்வேயில் செல்லப் போவதால்... எதிரில் எந்த வாகனமும் வரப்போவதில்லை என்ற எண்ணத்தில்... அசிரத்தையாக வந்த கந்தனோ... எதிரில் வந்த வாகனத்தைக் கண்டு சற்றுத் தடுமாறி, வாகனத்தைச் சடன்பிரேக் போட்டு நிறுத்தினார்.

ஆனால், சாலையில் கவனமே இல்லாமல் வந்த பிரதீப்போ, பிரேக் போட முடியாமல்... நேரடியாக அவர்களது சுமோவில் தன் ஆட்டோவை மோதவிட்டான்.

அவனும் மிதமான வேகத்தில் வந்ததால்... அவனுக்குப் பெரிதாக எந்த அடியும் படவில்லை. ஆனால், அவன் புது ஆட்டோவின் முன்பாகம் முழுவதும் அப்பளமாக நொறுங்கியது.

கந்தனாவது கொஞ்சம் முதலில் திகைத்தார். ஆனால், அருகில் அமர்ந்திருந்த நந்தினியோ... கொஞ்சம் கூட மாற்றமே இல்லாமல் அதே நிலையில் அமர்ந் திருந்தாள்.

"ஒன்வேல வந்திருக்கான் சார்... இருங்க, நானே பார்க்கிறேன்..." அவளிடம் சொன்னவர், வேகமாக இறங்கினார்.

பிரதீப்பிற்கோ, ஆட்டோவின் மேல் கம்பியில் மோதிய வேகத்தில் நெற்றி புடைத்துக் கொண்டது.

"ஸ்... ஆ..." என்றவாறு வேகமாக நெற்றியைத் தேய்த்தவாறு ஆட்டோவில் இருந்து இறங்கி நின்றான்.

"ஏன்டா... கண்ணைப் பின்னாடியா வச்சு இருக்க... அதான் ஒன்வேன்னு போர்டு வச்சு இருக்குல்ல... அதைக் கூடப் பார்க்காமல்..." கையை ஓங்கியவாறு அவனை அடிக்கப் பாய்ந்தார்.

அதே நேரம் அந்த இடத்தில் இருந்த ஆட்டோ டிரைவர்கள் அனைவரும் அங்கே கூடி விட்டார்கள். "சார்... சார்... என்ன பப்ளிக்ல கையெல்லாம் நீட்டிட்டு..." கந்தனைத் தடுத்தார்கள்.

அதே நேரம் அங்கே பொதுமக்களும் கூட... அங்கே சலசலப்பு எழுந்தது. "ராங் ரூட்டில் வந்தது அவன்... அதைக் கேட்டால்..." கந்தன் பதிலுக்கு எகிற... நிலைமை கை மீறும் நிலை வந்தது.

"ஐயோ... புது ஆட்டோ... இப்படி ஆயிப் போச்சே...!"

"எந்த நேரத்தில் தம்பி வண்டி எடுத்துச்சோ..."

"அதுவும் போயும் போயும்... போலீஸ் வண்டியில் வந்து விழுந்திருக்கு பாரேன்...!"

பொது மக்களின் இப்படியான பேச்சு நந்தினியின் செவிகளில் விழ... முதல் முறையாக அவள் கண்ணிமைகள் துடித்துத் தன் கோபத்தை வெளிக் காட்டினாள்.

"ஸ்டாப்பிட்.... எல்லோரும் போங்க... கந்தா, முதல்ல இவங்களை அனுப்பு..." அவளது கத்தலில் மிரண்டு கூட்டம் பின்வாங்கியது.

"ஐயோ... இந்தத் தம்பிக்கு நேரமே சுத்தமா சரியில்ல போல இருக்கே... ஆம்பள போலீஸுன்னா கூட இரக்கம் காட்டுவாங்க... இது என்னன்னா... தம்பி யாரு பெத்த புள்ளையோ...!" அவர்களது குரல் இன்னும் தொடர... நந்தினியின் முகம் இன்னும் கோபத்தில் தகித்தது.

அவள் முகத்தையும், மக்களின் பேச்சையும் கேட்ட பிரதீப்போ, "போலீஸ் வண்டியா இருக்கப் போய்த் தான்... அவங்க நின்னு என்னன்னாவது கேட்கிறாங்க... அவங்களால்தான் நான் இப்போ உயிரோடேயாவது இருக்கேன்.

"அவங்க இடத்தில் வேற யாராவது இருந்திருந்தால் ஒன்வேன்னு வேகமா வந்து என்னை அடிச்சுத் தூக்கிப் போட்டுட்டுப் போயிருப்பானுங்க... ஒன்வேல வந்தது என்னோட தப்புதான். இதை நாங்க பார்த்துக்கிறோம். உங்க எல்லோரோட உதவிக்கும் நன்றி... நீங்க போங்க..." பிரதீப் வேகமாகச் சொல்ல,

சுற்றி இருந்தவர்கள் முணுமுணுப்புடன் கலைந்து சென்றார்கள். நந்தினியோ அவன் பேச்சில், வெடுக்கென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவளது பார்வையைச் சந்திக்கவென்றே காத்திருந்தவன் போல்... அவளையே ஆழ்ந்து பார்க்க, அவனையும் ஆராயும் பார்வை பார்த்தாள் நந்தினி.

அன்பும், ஆராய்ச்சியும் மோதிக்கொள்ளுமா...?



உன்னை நெருங்கும் சந்தர்ப்பம்
அமையுமா....? அமைத்துக் கொள்ளவா...?
ஆராய்ச்சியில் நான்...!

நந்தினிக்குள் திடீரென ஏதோ ஒரு மாற்றம். அதை அவளாலே என்னவென்று அனுமானிக்க முடியவில்லை.

ஆனால், அந்த ஆட்டோக்காரன் சொன்ன ஏதோ ஒன்று தன்னை வசமிழக்கச் செய்கிறது என்பது மட்டும் புரிந்தது.

'இனிமேலும் இங்கே தாமதிக்க முடியாது...' தீர்மானித்தவளாக, அவனைப் பார்ப்பதைத் தவிர்த்து, சுற்றிலும் பார்த்தாள். அவளது அந்தப் பார்வையிலும் கொஞ்சம் கூட மனதின் தவிப்பு வெளியே தெரியவில்லை. வெளித் தோற்றத்திலோ அதே இறுக்கம்.

பிரதீப், நந்தினிக்கு ஆதரவாகப் பேசிய பிறகும் ஆட்டோ ஓட்டுனர்கள் கலைந்து செல்ல மறுக்க, "கந்தா..." என்று அவள் அழைத்த மறு நிமிடம், அவள் எண்ணம் புரிந்து, வாகனத்தில் பொருத்தியிருந்த வயர்லெசில், அருகிலிருந்த போக்குவரத்துக் காவலரை அவர் அழைக்க,

"நீங்க பார்த்துக்கோங்க..." அவரிடம் சொன்னவர், ஓட்டுனர் இருக்கையில் ஏறி அமர, அவளுக்கு மறுபக்க இருக்கையில் அவசரமாக ஏறி அமர்ந்தான் பிரதீப்.

கந்தன் அதிர்ந்து போய் நந்தினியைப் பார்க்க, அவளது வழக்கமில்லாத அமைதி, அவரைத் திகைப்படையச் செய்தது. முகத்தில் எந்த உணர்வையும் வெளிப்படுத்தாமல் அவள் கந்தனைப் பார்க்க, அவள் நடப்பு உலகத்திலேயே இல்லை என்பது அவருக்குப் புரிந்தது.

"சார்... நீங்க போங்க... இங்கே எல்லாம் நான் பார்த்துக்கிறேன்..." வேகமாகப் பதில் சொன்னார்.

அவள் ஆமோதிப்பாகத் தலையைக் கூட அசைக் காமல் ஒருவித இறுக்கத்துடனே அமர்ந்திருந்தாள். அவளது செய்கையை அவளே வெறுப்பது போல் இருந்தது அவளது நடவடிக்கை.

'எனக்கு என்ன ஆச்சு...?' தனக்குத் தானே கேள்வி எழுப்பிக் கொண்டாள்.

இவ்வளவு நேரம் கழித்து, வாகனத்தில் ஏறியவனை இறங்கச் சொல்லவும் எதுவோ ஒன்று தடுத்தது. இதுவே அவளது எரிச்சலை அதிகரித்தது. கந்தன் அவள் முகத்தில் இருந்து என்ன உணர்ந்தாரோ...

வாகனத்தை அவள் கிளப்பும் முன்பு, "ஏம்ப்பா... இந்த வண்டி பத்திய தகவல் எல்லாம் நீதானே கொடுக்கணும்... நீபாட்டுக்கு ஏறி உட்காந்துட்ட... இறங்குப்பா...!" கந்தன் குரலை கடுமைக்கு மாற்றி அவனை இறங்கச் சொன்னார்.

"அண்ணே... நான் எங்கேயும் போகலை. நேர உங்க சாரோட ஆபீஸ் தான் போறேன். உங்களுக்கு அவங்க ஆபீஸ் தெரியாதா என்ன...? எதுவா இருந்தாலும் அங்கே வந்து கேட்டுக்கோங்க...!" சட்டமாக அமர்ந்தவாறு பதில் கொடுத்தான்.

அவனது செய்கையை விட... நந்தினியின் மாற்றமே கந்தனை எதையும் சிந்திக்க விட மறுத்தது. பழைய நந்தினியாக இருந்தால்... இந்த நேரம் பிரதீப்பின் கன்னம் பழுத்திருக்கும். அத்தோடு அவர்களது வாக

னத்தில் ஏறிய அடுத்த நிமிடம் அவளிடம் உதை வாங்கி இறங்கியிருப்பான்.

இதற்கு முன்பு ஒருமுறை ஒரு கலவரத்தை அடக்கச் சென்றிருந்த பொழுது... கலவரக்காரர்களை அடித்து உதைத்து ஜீப்பில் ஏறச் சொல்ல, சிலர் அவளது சுமோவில் ஏறியபொழுது,

"நீயெல்லாம் என் வண்டியில் ஏறும் தகுதி உள்ளவனா...?" எனக் கேட்டு, மேலும் அடித்து உதைத்தவள்.

அதே நேரம் ஒரு முறை வீட்டின் அருகில் நடந்த பிரச்சினையில்... அந்த ஆட்களையும் லோக்கல் போலீஸ் ஜீப்பில் மட்டுமே ஏற அனுமதித்தாளே தவிர, அவளது வாகனத்தில் இதுவரை யாரையும் அவள் அனுமதித்த தில்லை.

அப்படியிருக்கும் பொழுது... ப்ரதீப்பை அவள் எதுவும் சொல்லாததில் இருந்தே, மனதுக்குள் வேறு எதையோ அவள் யோசிக்கிறாள் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

எனவே கவலையோடு அவள் முகத்தைப் பார்க்க, இப்பொழுதும் அவள் முகம் இறுக்கமாகவே இருந்தது. அதில் இருந்து எதையும் அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மேலே அவரிடம் எதையும் விவாதிக்காமல், வண்டியைக் கிளப்பிக் கொண்டு சென்றார். அவள் உள்

மனமோ... 'எதையும் யோசிக்காதே...' 'எதையும் எண்ணிக் குழம்பாதே...' 'ரிலாக்ஸ்...' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

அருகில் இருக்கும் அவனைத் திரும்பியும் பார்க்கவில்லை. ஆனால், ப்ரதீப்போ அவளையே கவனித்துக் கொண்டிருந்தான். 'தன்னிடம் எதையாவது பேசுவாளா...?' அவள் உள்மனப் போராட்டம் புரியாமல், ஏக்கமாக எண்ணிக் கொண்டான்.

நந்தினியோ பிரதீப் சொன்னதையே நினைத்துக் கொண்டிருந்தாள். அவன் ஒன்றும் அப்படிப் பெரிதாகச் சொல்லிவிடவில்லைதான். ஆனாலும் அவன் பேசியதில் ஏதோ ஒன்று அவளை - அவள் அடி மனதை அசைத்தது.

'அவன் அப்படி என்ன சொல்லி விட்டான் என்று நான் இப்படிக் குழம்புகிறேன். இப்படி ஒரு பேச்சை நான் எதிர்பார்த்திருந்தேனா? அதனால்தான் எனக்கு இப்படித் தோன்றுகிறதா...? இப்போ எதையும் யோசிக்காதே நந்தினி. குழப்பத்தில் எந்த முடிவும் கிடைக்காது. நீ நீயாகவே இரு...!'

தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்டாள். தன் சிந்தையிலே இருந்ததால்... அருகில் அமர்ந்திருக்கும் அவனைப் பற்றிய சிந்தையே இல்லாமல் இருந்தாள்.

'அவ பேசலைன்னா என்ன...? நீயாவது பேசுடா...?' தனக்குத் தானே சொல்லிக் கொண்டவன்,

"உங்களை ஏன் எல்லோரும் மேடம்னு சொல்லாமல், சார்னு சொல்றாங்க...?" அந்தச் சூழ்நிலைக்குச் சம்பந்தமே இல்லாமல் கேள்வி கேட்டான்.

நந்தினி தன் யோசனை கலைந்து அவனை முறைத்தவள், 'உனக்குப் பதில் சொல்ல முடியாது...!' என்பது போல் திரும்பிக் கொண்டாள். அவளது கோப முகத்தைக் கண்ட பிறகே... அவளுக்குப் பிடிக்காத கேள்வியைத் தான் கேட்டு விட்டோம் என்பதை உணர்ந்தான்.

"இல்ல... சும்மா தெரிஞ்சுக்கலாமேன்னுதான்..." அவன் இழுக்க, அதற்கும் ஒரு முறைப்பே பதிலாகக் கிடைத்தது.

'ம்ம்... அவதான் பேசணும்... நான் இப்படி வெறப்பா இருக்கணும். இங்கே எல்லாம் தலைகீழா இருக்கு... டேய் பிரதீப்... நீ ரொம்பப் பாவம்டா...!' மனதுக்குள் தனக்குத் தானே பரிதாபப் பட்டுக் கொண்டான்.

இருந்தாலும் அவளைத் தன்னிடம் எப்படியும் ஒரு வார்த்தையாவது பேச வைத்து விட வேண்டும் என்ற எண்ணத்தில், "சாரி... எனக்கு அந்த ரோடு ஒன் வேன்னு தெரியலை... அதனால்தான் நான் அந்த வழியா வந்துட்டேன்... நல்லவேளை... நீங்க வந்தீங்க... இல்லைன்னா..."

"இப்போ நீ வாயை மூடப் போறியா இல்லையா...?" அவனை முழுதாகப் பேசக்கூட விடாமல் அவனிடம் வெடித்தாள்.

அவள் கோபத்தைக் கண்டு திகைத்தவன், நொடியில் தன்னை மீட்டுக் கொண்டான். கோபமாக வாவது அவளைத் தன்னுடன் பேச வைத்து விட்டோம் என்று உள்ளுக்குள் கும்மாளம் போட்டான். அதை அவளுக்குத் தெரியாமல் சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டான்.

நடந்த சம்பவத்தைப் பற்றிப் பேசினால், ஏதோ ஒரு விதத்தில் அவள் பாதிக்கப்படுகிறாள் என்பதை உணர்ந்து கொண்டான்.

"என்னங்க... நான் உயிர் பொழச்சது அவ்வளவு பெரிய தப்பா... இப்படிக் கோபப்படுறீங்களே... எல்லாம் உங்க புண்ணியம்தான்."

"உனக்கு ஒரு முறை சொன்னால் புரியாது...?" இப்பொழுது அவனிடம் வெடித்தாள்.

அவள் வெடித்ததைக் கண்டு கொள்ளாமல், "சரி, விடுங்க.. உங்களுக்கு அதைக் கேட்கத்தான் பிடிக்கலை... நான் என்னைப் பற்றிச் சொல்லுறேன்... என் பெயர் பிரதீப்... பிரதீப் குமார். என்னோட நிக் நேம்... ம்ஹூம்... அதைச் சொல்ல மாட்டேன்..." இதைச் சொல்லும் பொழுது, அவன் கண்ணைச் சந்தித்திருந்தால் அதில் இருந்த மறைபொருளை அவள் உணர்ந்திருப்பாள்.

ஆனால் அவள்தான்... இவ்வளவு சொல்லியும் பேசிக் கொண்டிருக்கிறானே, என்பதையே சுற்றி வந்தது. அவன் பேச்சைக் கவனிக்கவே கூடாது என்று எண்ணி னாலும்... அவனது பெயர் அவள் அனுமதி இன்றியே செவிகளில் விழுந்து... மனதில் பதிந்தது.

அது இன்னும் அவள் எரிச்சலை அதிகரித்தது. இவ்வளவு நாளும்... தான் ஒரு சொல் சொன்னால்... விலகி விடும் மனிதர்களையே கண்டு வந்தவள், இரண்டாம் முறையாகத் தான் விலக்கினாலும் விலகாத ஒருவனைக் கண்டாள்.

அவனது இந்தக் குணமே அவளுக்குள் மேலும் எரிச்சலை மூட்டியது. அனைவரும் தன்னைத் தனியாக விட்டால் போதுமென்ற நிலைக்கு இப்பொழுது அவள் வந்திருந்தாள். எனவே, தன்னை அசைக்கும் எதையும் அவள் அணுக விடத் தயாராக இல்லை.

உடலையும் மனதையும் எவ்வளவுதான் முயன்று தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தாலும், மனம் கை நழுவும் நிலையைக் கடக்க வேண்டி வரும் என்பதைப் பாவம் அவள் அறிந்திருக்க நியாயமில்லை.

கோபம், வெறுப்பு,என்ற உணர்வுகளை மட்டுமே சமீப காலமாக அவள் உணர்ந்திருக்க, இந்த எரிச்சல்... தான் பாதிக்கப்படுவதால் வருவது என்பதை உணர்ந்து, அந்த நொடிகளை அறவே வெறுத்தாள். தனது வெறுப்பை அவனிடம் வெளிப்படுத்தும் வகை தெரியாமல், வாகனத்தை அசுர வேகத்தில் செலுத்தினாள்.

அவனது பேச்சில் இருந்து விடுதலை பெற வேண்டும் என்பது மட்டுமே அவள் எண்ணமாக இருந்தது. அவள் அவ்வளவு வேகத்தில் வாகனத்தைச் செலுத்தியதே இல்லை என்பது... அவள் சில இடங்களில் தடுமாறுவதில் இருந்து உணர்ந்து கொண்டான்.

"நான் வேண்ணா ஓட்டவா...?" அவளிடம் கேட்க... அதற்கும் முறைத்தாள்.

"ரொம்ப அனல் அடிக்குதுல்ல...?" அவள் முறைப்பதைக் கண்டு அவன் சொல்ல, ரோட்டில் பதித்த பார்வையை அவள் மறந்தும் கூட அவன் பக்கம் திருப்ப வில்லை.

"ஜில்லுன்னு ஏதாவது குடிக்கலாமா...?" அவள் முகம் கடுமைக்குத் திரும்புவதை உணர்ந்து,

"பில்லை நான் கொடுத்துடுறேன்...!" அவன் சேர்த்துச் சொல்ல, நந்தினியின் முகம் இப்பொழுது கோபத்தில் தகித்தது.

'பொண்ணுங்க வெக்கப்படும்போது முகம் சிவக் கும்னு கேள்விப் பட்டிருக்கேன்... நம்ம ஆளுக்கு கோபத்தில் சிவக்குது. நீ கொடுத்து வச்சது அவ்வளவு தான்டா...!' மீண்டும் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவன் பேச்சு கொடுத்த தாக்கம், அவள் வாகனம் செலுத்துவதில் தெரிந்தது. அவனோ அதைக் கண்டு கொள்ளாமல், "இல்ல... உங்களுக்கு ஜில்லுன்னு குடிக்கப் பிடிக்கலைன்னா.. டீ குடிக்கலாம்...!" அவன் இலகுவாகச் சொல்ல, நந்தினிக்கு அவனை என்ன செய்தால் தகும் என்ற எண்ணம் தோன்றியது.

அவன் இவ்வளவு பேசியும்... அவனை வண்டி யில் இருந்து உதைத்துத் தள்ளும் எண்ணம் மட்டும் அவளுக்கு வரவே இல்லை. அதே நேரம் அவனும்

அதைத்தான் எண்ணிக் கொண்டிருந்தான். தனது பேச்சுக்கு, அவள் இப்பொழுதே வாகனத்தை நிறுத்திக் கீழே இறக்கிவிடப் போகிறாள் என்று அவன் நினைக்க,

அவளோ அசுர வேகத்தில் தன் அலுவலகத்தின் முன்னால் சுமோவைப் பார்க் செய்தவள், விடுவிடுவென இறங்கி உள்ளே சென்றாள். அவள் உள்ளே செல்லவே... அவனும் அவள் பின்னாலேயே சென்றான்.

'ஏய்! நீ எங்கே வர்ற...' அவள் கேட்க வந்ததையே,

"ஏய், இந்தாப்பா... நீ எங்கே போற...? இங்கே வந்து உக்காரு...!" வெளியில் இருந்த செக்யூரிட்டி சொல்ல, அவன் பார்வையோ நந்தினியிடம் சென்றது.

'விடுங்க...' என்று சொல்ல வந்தவள்... இதை இப்படியே அனுமதிக்க முடியாது என்பதை உணர்ந்து, அவனைக் கண்டு கொள்ளாமல் தன் அறைக்குள் நுழைந்தாள்.

அவள் அறைக்குச் செல்லும் முன்னர், தன்னைப் பார்ப்பாளா என்று அவன் ஏங்க... அவனது ஏக்கத்தைக் கண்டுகொள்ளாமல் அவள் சென்று விட்டிருந்தாள்.

சுழல் நாற்காலியில் அமர்ந்தவள், தன் தொப்பியைக் கழட்டி வைத்தாள். வலுக்கட்டாயமாகத் தன் கவனத்தை வேலையில் செலுத்தினாள்.

வேலையில் கவனமாக இருப்பதுபோல் இருந்தாலும், "நான் இப்போ உயிரோட இருக்கவே இவங்க தான் காரணம்..." பிரதீப்பின் குரல் காதில் ஒலிப்பது போல்

இருக்க, மேற்கொண்டு அவளால் அங்கே இருக்க முடியவில்லை.

உள்ளே வீம்பாக வந்து விட்டாலும்... யோசனைகள் முழுவதும் பிரதீப்பையே சுற்றி வந்தது. 'இப்பொழுது என்ன செய்து கொண்டிருப்பான்...?' சிந்தித்த வேளையில் தான்... தன் ஆட்டோ நசுங்கியதைப் பற்றி அவன் கவலைப்படாதது அவளுக்கு உறைத்தது.

'ஒருவேளை அது அவனோட வண்டியே இல் லையோ...? எங்கேயாவது திருடிவிட்டு வந்து விட்டானா...? அதனால் தான் இவ்வளவு அசட்டையாக இருக்கிறானா... இன்னும் இங்கேதான் இருக்கிறானா... இல்லையென்றால் போய் விட்டானா...? இதை எப்படி இவ்வளவு நேரமும் கவனிக்காமல் போனேன்...?' தன்னையே கடிந்து கொண்டவள்... எழுந்து வெளியே வந்தாள்.

வந்தவள் வெளியே கண்ட காட்சியில் அவள் புருவங்கள் மேலே ஏறியது. அங்கே பிரதீப்போ... கந்தன் மற்றும் வாயில் காவலன் மற்றும் எழுத்தரோடு அமர்ந்து எதையோ சுவாரசியமாகப் பேசியவாறு டீ அருந்திக் கொண்டிருந்தான்.

சுள்ளென்ற கோபம் தலைக்கேற, "இங்கே என்ன நடக்குது...?" அவள் கேட்ட கேள்வியில் பிரதீப்பைச் சுற்றியிருந்த அனைவரும் வேகமாக எழுந்து நிற்க, அவனோ அவனது நிலையில் எந்த மாற்றமும் இல் லாமல்... டீயைத் துளித் துளியாய் ரசித்துக் குடித்துக் கொண்டிருந்தான்.

பார்வை அவனைத் துளைக்க, அவனோ, "என்னங்க நீங்க... நீங்களும் டீ வாங்கித் தர மாட்டீங்க... கம்பெனியும் கொடுக்க மாட்டீங்க... எனக்கு டீ வாங்கிக் கொடுத்து... கம்பெனி தர்றவங்களையும் திட்டுவீங்க. இது என்ன நியாயம்...?" அவன் சட்டமாக அமர்ந்து கொண்டு வினவ... இவ்வளவு நேரமாக அவள் கடைப்பிடித்து வந்த பொறுமை காற்றில் கரைந்தது.

ஏற்கெனவே அவன் மேல் இருந்த எரிச்சலும், உள்ளே யோசித்ததால் அவன் மேல் எழுந்த சந்தேகமும்... மற்றவர் முன்னால் தான் காப்பாற்றிவரும் முரட்டுப் பிம்பத்தையும் அவன் உடைக்க முயல்வதையும் உணர்ந்தவள்,

"ஆமா... நீ யாரு...?" நிறுத்தி நிதானமாக அவள் வினவ... முதல் முறையாகத் தன் விளையாட்டுத் தனத்தை விட்டு விட்டு, சீரியஸாக அவளைப் பார்த்தான்.

"சார்... இவர்தான்..." துவங்கிய கந்தன், நந்தினியின் விழியில் தெரிந்த செய்தியை உணர்ந்து கொண்டவராக... சட்டென அமைதியானார்.

"நீ யாருன்னு கேட்டேன்..." இம்முறை அழுத்தமாக வினவ... அங்கிருந்த மற்றவர்கள் சத்தமில்லாமல் நகர்ந்தார்கள். அங்கே கந்தன், பிரதீப்,. நந்தினி மூவர் மட்டுமே இருந்தார்கள்.

"உங்களுக்கு இவ்வளவு மறதியா...? இல்ல என் வாயால் நான் திரும்பச் சொல்லணும்னு எதிர் பார்க்கி றீங்களா தெரியலை... சரி விடுங்க, நானே சொல்லுறேன்.

"இன்னைக்குக் காலையில்... உங்க சுமோ என் ஆட்டோ மேல் மோதிடுச்சு... அதை இங்கே எடுத்துட்டு வரச் சொல்லி இருக்கீங்க... அதை வாங்கிட்டுப் போக நான் இங்கே வந்திருக்கேன். விளக்கம் போதுமா, இல்லை..." அவன் குறும்பாக வினவ... அவளுக்குள் இருக்கும் நந்தினி சிலிர்த்தெழுந்தாள்.

அதைவிட... அவன் ராங் சைடில் வந்ததை, அவன் சாமர்த்தியமாக மறைத்ததைக் கண்டு உள்ளுக்குள் வியந்தவள், வெளியே, "கந்தா... என்ன இது...?" குரலுக்குள் நெருப்பை ஒளித்து வைத்து அவள் வினவ... கந்தன் நிலைமையை எப்படிச் சமாளிக்க என்று தெரியாமல் தடுமாறினார்.

அதிலும் கொஞ்சம் முன்பு பிரதீப் சொன்னவற்றைக் கேட்ட பிறகு... அவரால் எதையும் சட்டெனச் சொல்ல முடியவில்லை. அவர் பிரதீப்பைப் பாவமாகப் பார்க்க, பார்வையாலேயே அவருக்குத் தைரியம் சொல்ல, அதன் பிறகுதான் அவர் வாயைத் திறக்க முன்வந்தார்.

அவர்களது பார்வை பரிமாற்றத்தைப் பார்த்த நந்தினிக்கு, 'இவன் என்ன மாயவனோ... எல்லோரையும் மயக்கி ஆட்டி வைக்கிறான்...!' என்ற எண்ணம் எழுந்தது.

கந்தனோ அவள் எண்ணம் புரியாமல், "சார்... இவர்தான் ஒன்வேல வந்து தெரியாமல் நம்ம வண்டி மேல மோதிட்டார். வண்டிக்குக் கொஞ்சம் டேமேஜ்..." சொல்லி நிறுத்தியவர், அதன் பிறகு உங்களோடுதான் இங்கே வந்தார்... என்பதைச் சொல்லாமல் தடுமாறினார்.

அவரது தடுமாற்றத்தைக் கண்டு கொள்ளாதவள், "ஏன் கந்தா... ஒன்வேயில் வந்தது... அதிக வேகத்தில் வண்டி ஓட்டியது... அரசாங்க சொத்தை நாசம் செய்தது... இப்போ அந்தப் பயம் இல்லாமல் இப்படிச் சட்டமா உட்கார்ந்து இருக்கிறது... இதுக்கெல்லாம் என்ன தண்டனை கொடுப்போம்...?"

அதட்டலாக அவள் வினவ,

'முன்னாடின்னா... இவனை அதே இடத்தில் நீங்களே தூக்கிப் போட்டு மிதிச்சு இருப்பீங்க... ஆனா இன்னைக்குத்தான் எல்லாம் தலைகீழா நடக்குதே...! அதனால் என்ன தண்டனை கொடுப்போம்னு எனக்கே மறந்துடுச்சு...' நுனி நாக்கு வரை வந்து விட்ட பதிலை விழுங்கியவர்...

"இதுக்கு... அந்த இடத்திலேயே வார்ன் பண்ணி அனுப்பி இருக்கவே முடியாது... ராங் ரூட்டில் வந்தது... அதுவும் நம்ம சுமோ வேற கொஞ்சம் முன் பக்கம் டேமேஜ் பண்ணிட்டார். சோ..." வார்ன் செய்து அனுப்பி இருக்கலாம் என்று சொல்லத் துவங்கியவர், அவள் முறைக்கவே, எதையோ வேகமாகச் சொன்னவர்... முடிக்க முடியாமல் தயங்கி இழுத்தார்.

"தப்பு செய்தவங்களை இப்படித்தான் உட்கார வச்சு சரிக்கு சரி பேசிட்டு இருப்பீங்களா...? முதல்ல பக்கத்து ஸ்டேஷன்ல கூட்டிப் போய் செல்ல வைங்க... நான் சொல்லும் வரை இவனை விடவே கூடாது... போங்க...!" அவர் தயங்குவதை உணர்ந்து விரட்டினாள்.

அவள் இவ்வாறு சொல்லவே... பிரதீப்பின் முகத்தில் ஒரு மர்மப் புன்னகை தோன்றி, முகம் முழுக்க புன்னகையாய் விரிந்தது. அவன் அதிர்வான் என்று அவள் எண்ணியிருக்க, அவனது புன்னகை அவளை மேலும் கோபம் கொள்ளச் செய்தது.

எப்படியாவது தனக்குக் கீழே வேலை செய்பவர்கள் முன்... தன் நிலையைத் தக்க வைக்க வேண்டும் என்ற வேகம் பிறந்தது.

எனவே, "நான் சொல்லாமல் இவனை விடக் கூடாதுன்னு சொல்லுங்க...!" அழுத்தமாக அவள் உரைக்க... இப்பொழுது சத்தம் போட்டுச் சிரித்தான் பிரதீப்.

அவனது சிரிப்பை வெறுப்பாய் ஒரு பார்வை பார்த்தவாறு அவள் நகர்ந்து செல்ல... அவன் புன்னகையின் காரணம் மாலையில் அவளுக்குத் தெரிய வந்த பொழுது... கொந்தளித்துப் போனாள் நந்தினி.



நெருப்பிற்கு வேலி போட முயல்கிறேன்!
நினைப்பது நடக்குமா...?
நெருப்பில் தகிப்பேனா...?

இன்று காலை முதல் நடப்பவற்றை நம்ப முடியாமல் திகைத்திருந்தாள் நந்தினி. என்றும் இல்லாமல் இன்று மட்டும் தான் சரியாக இல்லாததாகத் தோன்றியது.

எப்பொழுதும் எதையுமே யோசிக்கப் பிடிக்காமல், அடுத்தது என்ன என்பதிலேயே கவனம் செலுத்தும் அவள், அன்று அடுத்து என்ன செய்ய என்பது தெரியாமல்... தேங்கி அமர்ந்திருந்தாள்.

'எதையும் யோசிக்காதே...' என்று தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்டாலும், மனம் சொன்னதைக் கேட்காமல் முரண்டியது. எப்பொழுதும் மனதை அழுத்தும் அதே வெறுமை... இப்பொழுது பலமாகத் தாக்கியது.

எப்பொழுதும் விறைப்பாகவே இருக்கும் அவள் தேகமும், தோள்களும்... முதல் முறையாகத் தளர்ந்தது.

'இவங்களாலதான் நான் இப்போ உயிரோட இருக்கேன்....' பிரதீப்பின் குரல் காதில் ஒலித்த அதே நிமிடம்,

'சனியனே! நீ ஏன் இன்னும் உயிரோட இருந்து எங்க உயிரை வாங்குற... எங்கேயாவது போய் செத்துத் தொலைய வேண்டியதுதானே... உன் ராசிதான்டி எங்களை இப்படிப் பாடாப் படுத்துது...' இந்தக் குரல் ஓங்கி ஒலித்து அவள் இதயத்தைக் குத்திக் கீழித்தது.

அதே நேரம் அவளது நினைவுகள் கடந்த காலத்தை அலசியது. நந்தினி... தாயின் கருவில் உருவான சிறிது நாட்களிலேயே... அவளது தந்தை காசிநாதனின் வேலை பறிபோனது.

அது ஒன்றும் தற்செயலாக நடந்த நிகழ்வு அல்ல. மாறாக... அவரது கம்பெனியில் பணத்தைக் கையாடல்

செய்தார் என்பதற்காக, நிர்வாகம் அவரை டெர்மினேட் செய்தது. ஆனால், அதை மனைவியிடம் மறைத்தவர், நல்லவர் போல் அவரிடம் நடித்தார்.

ஏற்கெனவே வீட்டில் அவரது வருமானம் கைக்கும், வாய்க்கும் சரியாகப் போய்க் கொண்டு இருக்க, அவருக்கு வேலை போனது வீட்டிற்கு வறுமையை அறிமுகப் படுத்தியது. அவர்களது பசியைக் கூடத் தாங்கிக் கொள்ள முடிந்த அவர்களால், மூத்தவள் சாந்தினியின் பசியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அதே நேரம் காசிநாதனின் தாய் ஜோசியம் பார்க்கச் சொல்ல... அவர்கள் சொன்ன காரணமோ வயிற்றில் இருக்கும் குழந்தையைக் காரணம் காட்டியது.

"உங்க மருமக குழந்தை உண்டான நேரம் சரியில்லை. அதுதான் உங்களை ஆட்டி வைக்குது...!" அவர் சொல்லி விட, காசிநாதனின் தாய்... தன் மருமகள் காயத்ரியிடம் அதை அப்படியே ஒலிபரப்புச் செய்தார்.

அதை அத்தோடு நிறுத்தாமல்... 'இந்தப் பிள்ளை குடும்பத்திற்கு வேண்டாம்!' சத்தம் போட்டவர், "இன்னைக்கே இதைத் துடைச்சு எடுத்துடணும்..." ஆடித் தள்ளிவிட்டார்.

காயத்ரியின் முன்பு, மாமியாருக்கு இணங்குவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. அன்றே மருத்துவ மனைக்கு விரைந்தார். நந்தினியின் நல்ல நேரமா... இல்லை கெட்ட நேரமா தெரியவில்லை. அவள் கருவாகி

நான்கு மாதங்களைக் கடந்திருந்ததால்... தங்களால் எதுவும் செய்ய முடியாது என்று கையை விரித்து விட்டனர்.

அன்று துவங்கியது நந்தினியின் கெட்ட காலம். வீட்டில் உப்பு புளி தீர்ந்தால் கூட அதற்கு நந்தினிதான் காரணம் என்று வசை மாரி பொழிவார் காயத்ரியின் மாமியார்.

அதைக் கேட்டுக் கொள்வதைத் தவிர வேறு எதுவும் செய்ய இயலவில்லை காயத்ரிக்கு. தாயின் பாட்டு அதிகரிக்கும் பொழுது... குற்ற உணர்வில் தவிப்பார் காசிநாதன். சில வேளைகளில் தாயைக் கடிந்து கொள்ளவும் செய்வார்.

எறும்பு ஊரக் கல்லும் தேயும் என்பதற்கேற்ப, மாமியாரின் பேச்சு காயத்ரியின் மனதுக்குள்ளும் 'அப்படியும் இருக்குமோ...?' என்ற எண்ணத்தை விதைத்தது.

ஒரு துளி விஷம் பாலில் கலந்து, மொத்தப் பாலையும் விஷமாக்குவதைப் போல, அவரது இந்த எண்ணமே... வயிற்றில் இருக்கும் குழந்தையின் மேல் வெறுப்பை ஏற்படுத்தியது. அதன் பிறகு காசிநாதன் ஒரு வேலையில் சேர்ந்து, வீட்டின் நிலை மாறிய பிறகும்... அந்த எண்ணத்தை மட்டும் அவ்வளவு சுலபமாக அவர்களால் மாற்றிக் கொள்ள முடியவில்லை.

காசிநாதனோ சிறிது நாள் ஒழுங்காக இருந்தவர், அதன் பிறகு பணம் கையில் புழங்கவே போதையை

நாடத் துவங்கி விட்டார். இரவில் நேரம் கழித்து அவர் வருவதால்... காயத்ரியை அவர் உறங்கச் சொல்லி விட்டு, மகனுக்குத் தானே சாப்பாடு பரிமாறவே, அவரது புதிய பழக்கம் காயத்ரிக்குத் தெரியாமலே போனது.

இந்த நேரம் அவருக்குப் பிரசவ நாள் நெருங்கவே தாய் வீடும் சென்று விட, காசிநாதன் தன் விருப்பம் போல் இருக்க அது வழி வகுத்தது. தாயின் பேச்சைக் கேட்கும் வயதை அவர் தாண்டி விட்டதால்... எதையும் கண்டு கொள்ளாமல் தன் போக்கில் இருந்தார்.

அதே வேளையில் காயத்ரிக்கு வலியெடுக்கவே, அவளை மருத்துவ மனையில் சேர்த்தார்கள். மனைவி யையும் குழந்தையையும் காண வந்த காசியோ... குடித்துவிட்டு வண்டி ஓட்டவே... ஒரு விபத்தில் சிக்கினார்.

ஏற்கெனவே கொஞ்சம் நஞ்சம் மன சஞ்சலத்தில் இருந்த காயத்ரிக்கு, மகள் பிறந்த வேளையே... தன் கணவனுக்கு விபத்து நேர்ந்தது என்று எண்ணி விட்டாள். அத்தோடு தன் தாலியைப் பறிக்க வந்த எமனாகவே அவளைக் கருதத் துவங்கினார்.

மாமியாரும் அதே ஜோசியரிடம் ஓட... அவரோ... "நான்தான் ஏற்கெனவே சொன்னேனே... கரு உருவான நேரமே சரியில்லை... இதில் குழந்தை பொறந்தால் என்ன ஆகும்...? இந்தக் குழந்தையோட ராசிக்கு... அப்பா இருக்க மாட்டார்...!"

பிறந்த குழந்தையின் மேல் அவருக்கு அப்படி என்ன வன்மமோ தெரியவில்லை.

அவர் சொன்னதைக் கேட்டு காசியின் தாய் துடித்துப் போனார். தான் இருக்க, தன் மகனுக்கு எமனாகப் பிறந்திருக்கும் பேத்தியை அடியோடு வெறுத்தாள். அந்தக் குழந்தையின் முகம் காணக் கூட மறுத்து விட்டாள்.

"இதை இங்கேயே தலை முழுகிட்டு வீட்டுக்கு வா... இல்லையா, வராதே...!" ஒற்றை வார்த்தையில் முடித்து விட்டுக் கிளம்பி விட்டார்.

காயத்ரியால் அவ்வாறு செய்ய முடியவில்லை. காசிநாதனுக்கும் என்ன சொல்வதென்று தெரியவில்லை. முன்பும் சரி, இப்பொழுதும் சரி, தவறு தன் பக்கம் இருந்தது என்பது அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது.

ஆனால், அதை அவர்களிடம் வெளிப்படையாக ஒத்துக்கொள்ளத்தான் மனமில்லை. ஆனாலும் தன் குழந்தையை அவரால் வெறுக்க முடியவில்லை. எனவே... தாயின் வார்த்தையையும் மீறி, குழந்தையையும் தாயையும் வீட்டுக்கு அழைத்து வந்து விட்டார்.

காயத்திரியின் பெற்றோர் நந்தினியை வளர்க்க முன்வந்த பொழுதும், தான் செய்த தவறுக்குத் தன் மகள் தாய் தந்தை பாசம் கிடைக்காமல் வளர்வதை அவர் விரும்பவில்லை. எனவேதான் அப்படிச் செய்தார்.

ஆனால், தன் மகள் தன் தாயிடம் படப்போகும் பாடுகளை அப்பொழுதே அறிந்திருந்தால், அப்படி ஒரு முடிவை எடுத்திருக்க மாட்டாரோ...?

நந்தினியும் காயத்ரியும் வந்து விடவே... அவர்கள் ஒரே வீட்டில் இருந்தால், தன் மகனுக்கு ஏதேனும் ஆபத்து நேருமோ என்பதை அறிய... மறுபடியும் அதே ஜோசியரை நாடிச் செல்ல... அவர் பரிகாரம், பூஜை... என்று ஒன்று விடாமல் சொன்ன அனைத்தையும் செய்தார். அதோடு நில்லாமல்... நந்தினியின் மேல் வெறுப்பை உமிழ்ந்தார்.

காயத்ரி குழந்தைக்குப் பால் கொடுப்பதைப் பார்த்தால் கூடப் போதும்... "ஆமா... என் மகனுக்கு எமனா வந்து பொறந்துருக்கு... நீ நல்லா பால் கொடுத்து அதை வளர்த்து விடு...!" மாமியார் பொரிந்து தள்ள... அதன் பிறகு குழந்தைக்குப் பால் கொடுக்கக் கூடத் தயங்கினாள் காயத்ரி.

அதிலும் மாமியார், வீட்டில் இருக்கும் வேளை களில்... குழந்தையின் அருகில் செல்லவே தயங்கினார். பசியில் வீறிட்டு அழும் நந்தினி... பசியில் அழுது ஓய்ந்து... கை கட்டை விரலைச் சப்பியவாறு உறங்கிப் போவாள்.

உறக்கத்தில் சில நேரம் கட்டை விரல் வாயில் இருந்து நழுவி விழுந்தால்... திடுக்கிட்டு எழுந்து பசியில் அழுவதைப் பார்த்தால்... பெற்ற வயிறு துடிக்கும் அவருக்கு. ஆனால், 'உனக்குத் தாலியை விட தொப்புள் கொடி பெருசாப் போச்சோ...!' என மாமியார் முறைக்கும் வேளையில், 'எனக்கு என் குழந்தைதான் முக்கியம்!' என அவரால் சொல்ல முடியாமல் போனது.

நந்தினிக்கு நான்கு மாதம் இருக்கும் போது... பரிகாரப் பூஜைகள், புனஸ்காரங்கள் என முடித்து மீண்டும் அந்த ஜோசியரை அணுக... பணம் வரும் ஒரு வீட்டை விட மனமில்லாமல் தொடர்ந்து எதையாவது சொல்லிய வாறு இருக்க, அதை விடாமல் செய்து கொண்டிருந் தனர்.

இந்த வேளையில்... காயத்ரி தனது நெருங்கிய தோழி ஒருத்தியைக் கோயிலில் வைத்துச் சந்திக்க, பேச்சு குடும்ப விஷயங்களுக்குத் தாவ... அப்பொழுது காயத்ரி சொன்னதைக் கேட்ட அவளுக்கும் கவலையாகப் போனது.

அந்த நேரம் நினைவு வந்தவளாக, "காயத்ரி, எங்க வீட்டுப் பக்கமும் இதே மாதிரி நானும் கேள்விப்பட்டேன்... ஒரு குழந்தையோட ராசி அப்படி இருந்தாலும்... இன்னொரு குழந்தையின் ராசி ஒரு உயிரைக் காப்பாத்தும்னு சொன்னாங்க...

"உன்னோட இந்தப் பொண்ணோட ராசி அப்படி இருந்தாலும்... அடுத்துப் பிறக்கும் குழந்தையின் ராசியால்... உன் தாலி தங்கலாமே. இது என்னோட கருத்துதான்... எதுக்கும் நீ யோசித்து முடிவெடு...!" சொல்லிவிட்டு அவள் சென்று விட்டாள்.

ஆனால், எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற நிலையில் இருந்த காயத்ரியோ... 'இதை ஏன் முயன்று பார்க்கக் கூடாது...?' என்ற எண்ணம் எழ... நந்தினிக்கு ஏழு மாதம் ஆன பொழுது, அவள் மீண்டும் கருவுற்றாள்.

அந்த நேரம் காசிநாதனின் ஒன்றுவிட்ட அண்ணன் ஊரில் இருந்து தொழில் துவங்கவென்று சென்னைக்கு வந்தவர்... நம்பிக்கையான ஆள் வேண்டும் எனக் கேட்க, "ஏம்ப்பா... உன் தம்பியைப் பார்த்தா நம்பிக்கையானவனா உனக்குத் தெரியலையோ...?" அவர் போட்ட போட்டில் திகைத்துப் போனார் வந்தவர்.

மறு பேச்சின்றி தன் தம்பியை உடன் வைத்துக் கொண்டார். காயத்ரியின் கர்ப்பத்தையும், வந்திருக்கும் நல்ல செய்தியையும் ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்ந்து போனார்கள். இந்த நாட்களிலேயே தன் தாய்... நந்தினியை நடத்தும் முறையைப் பார்த்து... மனம் மாறி ஒழுக்கமாக இருக்க முயன்றார் காசி.

அவரது நல்லமுறையான நடத்தைகளே அவர் மேல் நல் அபிப்பிராயத்தை அவரது அண்ணனுக்கு விதைக்கத் தன் தொழிலைத் தம்பியை நம்பி ஒப்படைக்கலாம் என்னும் முடிவிற்கு அவரது அண்ணாவை வர வைத்தது.

அடுத்த குழந்தைகள் இரட்டைக் குழந்தைகளாகப் பிறக்க, ஒரு பெண், ஒரு ஆண் என அவர்கள் வீட்டை மகிழ்ச்சியால் நிறைத்தது. இதில் எதிலும் பங்கெடுக்கவோ... கலந்து கொள்ளவோ முடியாமல் ஒரு ஜீவன் மட்டும் ஒதுங்கி இருந்தது. ஒதுக்கி வைக்கப்பட்டது - அதுதான் நந்தினி.

ஒன்றரை வயது நந்தினியோ... தாய் மருத்துவ மனையில் இருந்த ஐந்து நாட்களும் பாதி நேரம் பசியிலும், மீதி நேரம் தூக்கத்திலும் கழித்தாள்.

காசிலிங்கம் தொழிலில் கவனமாகி விட... நந்தினியைக் கவனிக்க வேண்டிய அவன் தாயோ... அவள் மேல் இருந்த வெறுப்பில் நந்தினியைக் கவனிக்க மறுத்தார்.

நந்தினியின் அழுகை பக்கத்து வீட்டில் இருந்த ஒரு விதவைத் தாயின் இதயத்தை உருக்க, தன் மகனிடம் ஒரு டம்ளர் பாலைக் கொடுத்து, அவனை வைத்து அந்தச் சிறுமியின் பசியை ஓரளவுக்குப் போக்க முயன்றார்.

அவராலும் அவள் பசியை முழுதாகப் போக்க முடியவில்லை. இளம் விதவையான அவள், அவளது அறையில் இருந்து வெளியே வருவதைக் கூட அவளது மாமனாரோ... மாமியாரோ விரும்பவில்லை.

அப்படியிருக்கையில் அவர்கள் அசந்த நேரம் மட்டுமே நந்தினியின் பசியை அவரால் போக்க முடிந்தது.

அதிலும் அவரது மகன் பள்ளி செல்வதால்... அவன் இருக்கும் வேளையையும் பார்க்க வேண்டி இருந்தது. எனவே ஒரு நாள் ஒரு வேளை மட்டுமே நந்தினிக்கு அவளால் உணவு கொடுக்க முடிந்தது. ஒரு தாயாக... நந்தினியின் அழுகை அவரை உலுக்கியது என்னவோ உண்மை.

குறும்பாக... வெகுளியாக... வெள்ளை மனமாக கேள்வி கேட்கும் தன் மகனையும் சமாளித்து... அவன் வாயால் எந்தச் செய்தியும் தன் மாமனார்... மாமியார் காதுக்குச் சென்று விடக் கூடாதே என்ற பயமும் அவரை

எதையும் ஆராயாமல் செய்ய முடியாமல் அவர் கையைக் கட்டிப் போட்டது.

அவளது கதையைக் கேட்டால்... ரத்தக் கண்ணீரே வரும். அப்படியிருக்கும் நிலையிலும் ஒரு பச்சைக் குழந்தையின் அழுகை அவரது நிலையையும் மறக்க வைத்தது.

காசியின் மூத்த மகள் சாந்தினியை அவள் பாட்டி உடன் வைத்துக் கொண்டதால், அவள் எந்தத் துன்பத் தையும் உணரவில்லை. அதைவிட வீட்டின் முதல் பேத்தி என்பதால்... அவள் மேல் தனிப் பரிவைக் கொண்டிருந்தாள் காசியின் தாய்.

ஒன்றரை வயதில் நந்தினிக்குப் புரியாத பல விஷயங்கள்... நாட்கள் செல்லச் செல்ல அவளுக்குப் புரிந்தது. ஆனால், இன்னதென்று புரியாமல் தடு மாறினாள். இரண்டு வயதிலேயே தன் பாட்டிக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்பதை உணர்ந்து கொண் டாள்.

வீட்டில் செய்யும் பலகாரங்கள் முதல்... அப்பா வாங்கி வரும் எந்தப் பொருளிலும் தான் உரிமை கொண்டாட முடியாததை ஏக்கமாகப் பார்த்திருப்பாள். தனது தம்பியும் தங்கையும் தாயின் மடியில் படுத்திருக்க, சாந்தினி பாட்டியின் மடியில் இருக்க... கிடைக்காத தாயின் மடிக்காக முதல் ஏக்கம் துவங்கியது நந்தினிக்கு.

ஒரு நாள் தாயின் மடியில் சென்று அமர... அதைப் பார்த்த காசியின் தாயோ, "அடி கழுதை... உன்

துரதிர்ஷ்டத்தை மத்தவங்களுக்கு ஒட்ட வைக்கப் பார்க்கிறியா...?" எனக் கேட்டவாறு, காயத்ரியின் மடியில் இருந்து இழுத்தவர்... இழுத்த வேகத்தில் அவள் முதுகில் இரண்டு அடி வைத்தார்.

குழந்தை துடித்துப் போனாள். வலியும் அவமானமும் அவளை நொடித்துப் போகச் செய்தது. தான் அந்த வீட்டில் வேண்டாதவள் என்ற எண்ணம் வலுப்பெறத் துவங்கியது.

இவ்வளவு துன்பத்திலும்... அவளுக்குக் கொஞ்சம் ஆறுதலைக் கொடுக்கும் ஒரே விஷயம்... பக்கத்து வீட்டுப் பையன் கொண்டு வந்து கொடுக்கும் பலகாரங்களே.

மூன்று வயதில் தன்னோடு அவ்வப்போது வந்து விளையாடும் - பாட்டிக்குத் தெரியாமல் பலகாரம் கொடுக்கும் அவனை அவளுக்கு ரொம்பப் பிடிக்கும்.

"நந்தினி..." என்று அவன் கிசுகிசுப்பாக அழைக்கும் அந்த ஒற்றைச் சொல்லுக்கு ஈடான மகிழ்ச்சியை அவளுக்கு வேறு எதுவும் கொடுத்ததில்லை.

அன்று வீடே மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது. வீட்டில் அனைவருக்கும் புதுத் துணி, பலகாரம் எனக் களை கட்டியது. பூஜை அறையிலும், வெள்ளிக் குத்து விளக்குகளைத் துலக்கி அழகாக அடுக்கி வைத்திருந்தார்கள். வீட்டிலும் சில சொந்தங்கள் வர... அவர்களின் குழந்தைகளோடு விளையாட்டு என மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தாள் நந்தினி.

அவளைக் கண்கொத்திப் பாம்பாகக் கண்காணிக் கும் காசியின் தாய் கூட அவளைக் கண்காணிக்க மறந்து விட்டிருந்தார். மறுநாள் விடுமுறை என்பதால்... பக்கத்து வீட்டுச் சிறுவனும் அவர்களோடு விளையாடிக் கொண்டி ருந்தான்.

எப்பொழுதும் அழுக்கு உடைகளோடு உலாவரும் நந்தினி, அன்று பட்டுப் பாவாடையில் ஜொலித்ததைக் கண்ட சிறுவனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

"நந்தினி... உன் டிரஸ் ரொம்ப அழகா இருக்கு... நீயும் ரொம்ப நல்லா இருக்கே..." அவன் சொல்ல... மத்தாப்பூவாய் மலர்ந்து சிரித்தாள் நந்தினி.

அவளது சிரிப்பைக் கண்ணிமைக்காமல் பார்த்தான் அவன். அவனுக்கு, அவளது மலர்ந்த முகம் மட்டுமே தெரியும். அவனுக்குத் தெரியாதே... அவனைக் காணும்போது மட்டுமே அவள் மலர்ந்து சிரிப்பாள் என்பது. அவனுக்கு அவள் ஒரு குட்டித் தேவதையாகவே தெரிந்தாள்.

அவளது தனிமையையோ... அவளது பயத் தையோ... அவளது ஏக்கத்தையோ வாய்விட்டுச் சொல்லும் வயது அவளுக்கு வந்திருக்கவில்லை. ஒரு நான்கு வயதுச் சிறுமிக்கு எவ்வளவு விபரம் தெரியும்...?

ஆனால், ஐந்தாம் வகுப்பு பயிலும் சிறுவனான அவனுக்கு, தாய், தன் பாட்டி தாத்தாவிற்குப் பயந்து, தன்னை ரகசியமாக இங்கே அனுப்புகிறார் என்பதும்,

நந்தினியின் பாட்டிக்குத் தெரியாமல், அவளுக்குக் கொண்டு வரும் உணவைக் கொடுக்க வேண்டும் என்பதும் தெரியும்.

ஆனால், ஏன் அப்படிச் செய்ய வேண்டும் என்று அவன் ஒரு நாளும் ஆராய்ந்தது இல்லை. தாய் அடைந்து கிடக்கும் அறைக்கும், நந்தினி இருக்கும் இருட்டு அறைக்கும் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தம் இருப்பதாக அவனுக்கும் தோன்றும்.

அதையே மெய்ப்பிப்பது போல... "நந்தினி பாவம்டா செல்லம்... அம்மாவை மாதிரியே அவளும் ஒரு பாவப்பட்ட ஜென்மம்டா... இந்த அம்மா சொல்வதைக் கேட்ப தானே... இதைக் கொண்டு போய்... யாருக்கும் தெரியாமல் கொடுத்திட்டு வந்துடுடா...!" தாய் கெஞ்சும் வேளைகளில் மறு பேச்சின்றி அதைச் செய்து முடிப்பான்.

தாயைப் போலவே அவள் என்று சொல்வதால்... அவனை அறியாமலேயே அவள் மேல் ஒரு பாசம் உருவாகி இருந்தது.

நந்தினியின் பாட்டி அவளைக் கண்காணிக்க வில்லை என்பதால்... தைரியமாக விளையாடிக் கொண்டிருந்தவள்... விளையாட்டு வேகத்தில் குழந்தைகள் அனைவரும் பூஜையறைக்குள் சென்று விட்டார்கள்.

அங்கே சென்ற உடனே... ஏற்கெனவே பாட்டியிடம் வாங்கிய உதை நினைவுக்கு வர,

"இங்கே விளையாட வேண்டாம்... பாட்டி பாத்தா அடிப்பாங்க... வாங்க போகலாம்...!" நந்தினி அழைக்க, அங்கிருந்த திருநீறு, குங்குமம். போன்றவற்றை எடுத்துத் தங்களது நெற்றியில் பூசிக் கொண்டு விளையாடத் துவங்கினர்.

விளையாட்டின் வேகத்தில், ஏற்றியிருந்த குத்து விளக்கை நந்தினியின் தங்கை தள்ளி விட, அதில் இருந்த எண்ணெய் சிந்தி, அதில் நெருப்புப் பற்றிக் கொண்டது. அந்த நெருப்பு சிறுவனின் சட்டையிலும் லேசாகப் பற்றிக் கொள்ள, பயத்தில் அலறி விட்டான்.

அவனும் குழந்தைதானே. அவனது அலறலில் மற்ற குழந்தைகள் ஓடிவிட... நந்தினி குத்துவிளக்கை நிமிர்த்தி வைத்தாள். அத்தோடு அவன் சட்டையில் பற்றிய நெருப்பைக் கண்டு, தன் பிஞ்சுக் கரங்களால் வேகமாகச் சென்று அடித்து அணைத்தாள்.

அது லேசான பொறிதான் என்பதால் உடனே அணைந்து விட்டது. அவளோ குழந்தை. ஆனால், நெருப்பு தனது நெருங்கிய, மனதுக்கு மிகவும் நெருக்க மான தோழன் மீது எரிகிறது என்பதாலேயே நெருப்பு என்ற பயத்தையும் மீறிச் செயல்பட்டாள்.

அந்த நேரம் குழந்தைகளின் கூக்குரல் கேட்டு, அங்கே வந்த காசியின் தாய்... நந்தினி செய்யும் வேலையைப் பார்த்தவர், அவள்தான் குத்துவிளக்கைத் தள்ளிவிட்டாள் என எண்ணி...

"ஏன்டி... இந்த வீட்டை விளங்கவே விட மாட்டியா...? உன்னை அந்த ரூமை விட்டு வெளியே வரக்கூடாதுன்னு எத்தனை நாள் சொல்லி இருக்கேன்...! இப்போ நல்ல நாளும் அதுவுமா... குத்துவிளக்கைத் தள்ளி விட்டுட்டியே...

"என் பையனைச் சாகடிக்க நினைப்பது பத்தாதுன்னு... அந்தப் பையனையும் சாகடிக்கப் பார்த்தியே... உன்னை..." சொன்னவர், அவளைத் தரதரவென்று இழுத்துச் சென்று... கரண்டியை அடுப்பில் சுட வைத்தார்.

"வேணாம் பாட்டி... இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன்... வலிக்கும் பாட்டி... வேணாம்..." நந்தினியின் அலறல் அவரை அசைக்கவே இல்லை.

"ஐயோ பாட்டி... நந்தினி எதுவும் செய்யலை... அவதான் என் மேல இருந்த நெருப்பை அணைச்சா...!" அந்தச் சிறுவனின் பேச்சைக் கேட்கும் நிலையில் அவர் இருக்கவில்லை. நந்தினியை அழுத்திப் பிடித்தவர், அவள் உள்ளங்கையில் சூடு வைத்து விட்டார்.

"அம்மா...." வலியில் கதறித் துடித்தாள். அந்தச் சிறுவனோ உறைந்து போனான். அவனுக்கும் அழுகை தான் வந்தது. மகளின் குரலில், காயத்ரி பதறியடித்து வெளியே வர, மாமியாரின் கையில் சிக்கியிருந்த மகளைக் கண்டு மனம் வெதும்பினார்.

"ஐயோ அத்தை... என்ன செஞ்சுட்டீங்க...? அவ குழந்தை..." மகளின் கையில் கொப்பளத்தைப் பார்த்துத் துடித்தார்.

காயத்ரி ஒன்றும் கொடுமைக்காரத் தாய் கிடையாதே. ஏதோ சிறிய கோபமும், மன வருத்தமும் மகள்மேல் இருக்கிறது, அதற்காக முழுதாக மகளை அவரால் வெறுக்க முடியவில்லை.

மாமியாரை மீறி எதுவும் செய்ய முடியாமல்... மகளை அரவணைக்கவும் முடியாமல் தடுமாறினார்.

"ஏய்... என்ன புதுசா பாசமெல்லாம் பொங்குது...? உன் தாலி உனக்கு வேண்டாமா...?" எங்கே அடித்தால்... மருமகள் அடங்குவாள் என்பது அவருக்குத் தெரிந்தி ருந்தது.

காயத்ரி வேகமாக அங்கிருந்து மகளின் அழுகை யைக் காணச் சகிக்காமல் நகர்ந்து விட்டார்.

"அம்மா... வாம்மா... அம்மா...!" நந்தினியின் கதறல் கேட்காத தூரத்திற்கு விரைந்து சென்று குமுறி அழுதார்.

மகளுக்கு ஆதரவாக எதையும் சொல்லவோ செய்யவோ முடியாமல்... கண்ணீர் வடித்தார். தன் கையில் புழுவாய்த் துடித்த நந்தினியை இழுத்துச் சென்று அறையில் அடைத்தவர், வெளியே தாளிட்டார்.

அவரை எதிர்த்து யாருக்கு எதுவும் சொல்ல முடிய வில்லை. ஒரே நொடியில் குழந்தைகளின் உற்சாகம் அனைத்தும் வடிந்து விட்டது. அந்தச் சிறுவன் மட்டும் மற்ற குழந்தைகளோடு கலக்காமல்... தன் வீட்டை நோக்கி ஓடினான்.

தாயிடம் நந்தினியின் நிலையைச் சொல்லிக் கண்ணீர் வடித்தான். "நந்தினிக்குச் சூடு வச்சுட்டாங்கம்மா... அவளை ரூமில் போட்டுப் பூட்டிட்டாங்க... அவளுக்குப் பயமா இருக்கும் தானேம்மா... புண்ணு எரியும் தானே...!

"அவளுக்கு யாரும்மா மருந்து போட்டு விடுவா... அவ அழுவுறாம்மா... நீங்க வாங்களேன்... அவளைப் பாருங்கம்மா... அவளை நாம இங்கே கூட்டி வந்துடலாம்... வாங்கம்மா...!" தாயின் கைப் பிடித்து இழுத்தான்.

"இவளால்தான் நான் இப்போ உயிரோடவே இருக்கேன்மா..." ஜன்னலுக்கு வெளியே தன் தோழனின் குரல் கேட்க, அழுகையில் கரைந்து கொண்டிருந்த நந்தினி விலுக்கென எழுந்து அமர்ந்தாள்.

அதே நேரம் இருக்கையில் இருந்து சிலிர்த்து நிமிர்ந்தாள் ஐ.ஜி நந்தினி.



உணர்வலையின் தாக்கம்...
உணர்கின்றேன் நான்...
உறக்கம் தொலைத்து...!

பழைய நினைவுகளின் தாக்கத்தைத் தாங்க முடியாமல் கண்களை இறுக மூடியவாறு அப்படியே இருந்தாள் நந்தினி. நான்கு வயதில் நடந்த சம்பவம்...

இன்னும் நினைவில் நிற்க முடியுமா...? நந்தினிக்கு முடிந்தது.

பிறந்தது முதல் தரித்திரம்... ராசியில்லாதவள்... தண்டம்... தேவையில்லாத ஏச்சுக்கள்... என நகர்ந்த அவள் வாழ்வில், முதல் முறையாக... அவளுக்கு ஆதரவான குரலைக் கேட்டாள். எனவே அந்த வார்த்தைகளும்... குரலும்... தோழனும்... அவள் அடிமனதில் நிரந்தரமாகத் தேங்கி விட்டார்கள்.

அவளது தொடர்ந்த நாட்களில் எவ்வளவோ ஏச்சுக்களையும்... பேச்சுக்களையும் கேட்கும் பொழுது, இந்த வாசகம் மட்டும் இடை இடையே அவள் நினைவில் வந்து போகும். ஒரு கட்டத்தில் தாங்க முடியாத துன்பங்களை அவள் கடக்க நேர்ந்த பொழுது... எதையுமே யோசிக்கும் நிலையில் அவள் இருக்கவில்லை.

யோசிப்பதே துன்பம் என்ற நிலைக்கு அவள் தள்ளப்பட்ட பொழுது... அனைத்தையும் வலுக்கட்டாயமாக அவள் நினைவுகளில் இருந்து அழித்து விட்டாள். அழித்து விட்டதாக அவள் நினைக்க... நீண்ட வருடங்களுக்குப் பிறகு இன்று நினைவிற்கு வந்ததை திகைப்பாய் உணர்ந்தாள்.

நினைவிற்கு வந்தவுடன்... 'எல்லாம் அவனால் வந்தது... எங்கே இருந்து வந்தான்...? என் தெளிந்த மனக்குளத்தில் கல்லெறிந்து கலைத்து விட்டானே...!' சுறுசுறுவென்று மனம் முழுவதும் எரிச்சல் மண்டியது.

அதைவிட, 'எவனோ எதையோ சொன்னதை... நான் எதற்கு இவ்வளவு பெரிதாக எடுத்துக் கொள் கிறேன்...!' தன்னைத் தானே நொந்தவள்... வேலையில் கவனம் செலுத்த முயன்றாள்.

எவ்வளவு முயன்றாலும்... நினைவுகள் அவனிடமே சென்று முடிந்தது. அதே நேரம் அவளுக்கு டீ கொடுக்க அட்டென்டர் உள்ளே வர... அவள் அமர்ந்திருந்த நிலையை வைத்தே... எதுவோ சரியில்லை என்பதை உணர்ந்தவர்,

"சார்! டேப்லட் ஏதாவது..."

"இப்போ நான் ஏதாவது கேட்டேனா...? டீயை வச்சுட்டீங்கல்ல... கிளம்புங்க..." அவனிடம் எரிந்து விழுந்தாள்.

எப்பொழுதும் அவள் ஒரு வார்த்தை கூடப் பேச மாட்டாள். அப்படியிருக்கையில் இன்று இவ்வளவு நீளமாகப் பேசுவதைக் கேட்டே அவருக்கு உறுதியாக எதுவோ சரியில்லை என்று தெரிந்தது.

அதையும் சொன்னால் இன்னும் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டும் என்பதால்... பேசாமல் சென்று விட்டார். ஆனால், செல்லும் முன்பு அவளைத் திரும்பிப் பார்த்தவாறே செல்ல... அவளது உறுத்த விழிகள் தன்னைத் தொடர்வதைக் கண்டவர், வேகமாக வெளி யேறினார்.

'இவங்களுக்கு என்ன ஆச்சு...?' யோசனையோடே வேகமாக டீயை உறிஞ்சியவள், கேஸ் ஹிஸ்டரியைப்

புரட்டத் துவங்கினாள். ஆனால், வெளியே சென்ற அட்டன்டரோ,

'சார்க்கு இன்னைக்கு என்னவோ ஆயிடுச்சு... என்கிட்டல்லாம் பேசுறாங்க...' தனக்குத் தானே சொல்லிக் கொண்டு அங்கிருந்து அகன்றான்.

நந்தினி பார்த்துக் கொண்டிருந்த ஃபைலில் ஒரு கைதியின் நிக் நேம் எனக் குறிப்பிட்டிருக்க,

'என் பெயர் பிரதீப்... என்னோட நிக் நேம்... ம்ஹூம்... சொல்ல மாட்டேனே...' ப்ரதீப்பின் குரல் அருகில் ஒலிப்பது போல் இருக்க... படக்கென கோப்பை மூடினாள்.

"ராஸ்கல்...!" என்னவோ அவன் எதிரில் இருக்கிறான் என்ற நினைவில் சத்தமாக இரைந்தாள்.

இதற்குமேல் அறைக்குள் அடைந்து கிடக்க முடியாது என்பதை உணர்ந்தவள்... வேகமாக வெளியேறி சுமோவின் ஓட்டுனர் இருக்கையில் ஏறி அமர்ந்தாள்.

அமர்ந்த பிறகுதான், தான் பொதுவாக வாகனத்தை ஓட்டுவதில்லை என்பது புலப்பட்டது.

'என்ன இது...?' அலுப்பாய் எண்ணியவள், இறங்கப் போன அந்த நிமிடம்,

"சார்... நான் ஓட்டவா...?" கந்தன் யதார்த்தமாக வினவ...

"ஏன், நான் இதற்குமுன் ஓட்டியதே இல்லையா?" அவள் வினவியதில் அவருக்குத்தான் தலை சுற்றிப் போனது.

வார்த்தைகளை அளந்து பேசியே பழக்கப்பட்ட அவளைப் பார்த்தே பழகிய கந்தனுக்கு... அவளது கேள்வி வியப்பை அளிக்காமல் என்ன செய்யும். அவரது திகைத்த பார்வையை உணராமல்... இருக்கையில் இருந்து இறங்கிச் சென்று பக்கத்து இருக்கையில் சென்று அமர்ந்தாள்.

அவளது மாற்றங்களை, அவளைத் தவிர சுற்றி இருந்த அனைவரும் உணர்ந்தார்கள். ஆனால், அதை அவளிடம் சொல்லும் அளவு தைரியம் யாருக்கும் இருக்கவில்லை என்பதுதான் உண்மை.

கந்தனும் அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு வாகனத்தைச் செலுத்த, "ரோடு முன்னாடி தானே இருக்கு..." கடுப்பாக அவள் வினவியதில், அவருக்குக் குளிர் பிறந்தது.

"சார் எங்கே போகணும்னு..." அவர் இழுக்க...

"வண்டியை எடுக்கும் போது இதெல்லாம் தெரிஞ்சுக் காமதான் இருப்பீங்களா...? போங்க..." அவள் சொன்ன தில்... அவருக்கு இப்பொழுது எங்கே போவது என்று தெரியாமல் விழித்தார். ஏட்டிக்குப் போட்டியாக வினவும் அவளிடம் என்ன சொல்லுவது என்று தெரியாமல்... தன் போக்கில் சென்றார்.

சில நேரங்களில் போக்குவரத்துக் காவலர்களைக் கண்காணிக்க இப்படிச் செல்வது வழக்கம் என்பதால்... தங்கள் டிவிஷனுக்குள் இருக்கும் எல்லைக்குட்பட்ட பகுதி களுக்கு வண்டியைச் செலுத்தினார்.

நந்தினியும் அமைதியாகவே இருந்தாள். அமைதி யாக இருப்பதாகக் காட்டிக் கொள்ள முயன்றாள் என்பதுதான் சரியாக இருக்கும். கண்கள் சாலையின் இரு பக்கமும் துழாவினாலும்... கண்ணிமைக்குள் ஒருவித மர்மப் புன்னகையுடன் பிரதீப் வந்து சென்றான்.

அவனது சிரிப்பை உணர்ந்தவளின் முகம் கோபத்தில் தகித்தது.

'ஜெயிலுக்குப் போன்னு சொல்லுறேன்... அப்போ எதுக்கு அப்படிச் சிரிச்சான்...?' அதுதான் முக்கியம் என்பதுபோல் யோசனை அவனைச் சுற்றியது.

'இவனை எல்லாம் இப்படியே விட முடியாது... அவனை இத்தோடு அடக்கி வைக்கணும்... இல்லைன்னா ரொம்ப தலைக்கு மேலே போய்டுவான். சாயங்காலம் வரைக்கும் செல்லுக்குள்ளேயே இருக்கட்டும். அப்போ தான் என்கிட்டே இனிமேல் எந்த வம்பும் வச்சுக்கக் கூடாதுன்னு அவனுக்குத் தெரியும்...!' தன் போக்கில் சிந்தித்தாள்.

ஒருநாள்... அதிலும் சிறிது நேரம் சந்தித்த அவனைப் பற்றியே ஏன் சிந்திக்கிறோம் என்று அவள் எண்ணவே இல்லை. அவளை அறியாமலேயே அவள் அடிமனம் வரை தாக்கினான் அவன்.

எப்பொழுதும் அனைவரையும் விலக்கி வைத்தே பழகியவள் என்பதால்... அவனையும் அவ்வப்பொழுது அவளை அறியாமல் தலைதூக்கும் அவன் நினைவு

களையும் அவள் பெரிதாக எடுத்துக் கொள்ளவே இல்லை.

மதியம் கடந்தும், பசிக்கிறது என்றோ... சாப்பிடலாம் என்றோ அவள் சொல்லவே இல்லை. அவள் சொல்லப் போவதும் இல்லை என்பதை உணர்ந்த கந்தன்,

"சார்! ஜீஸ் ஏதாவது..." அவர் கேட்டு வாயைக் கூட மூடவில்லை... அதற்குள்,

"வண்டியை நிறுத்துங்க...!" கண்களை உருட்டி அவள் சொன்ன விதத்தில், அவருக்கு வாழ்க்கையே வெறுத்து விடும் போல் இருந்தது.

அவர் சடன் பிரேக் போட்டு வண்டியை நிறுத்த, "இறங்கி நல்லா மூக்கு முட்ட ஜீஸ் குடிச்சிட்டு.... அப்படியே வீட்டுக்குப் போய்டுங்க... திரும்பி வராதீங்க...!" அவரை இறக்கி விட்டவள், ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்து வண்டியைக் கிளப்பிக் கொண்டு சென்று விட்டாள்.

என்றும் அவர் கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தாலே... "வீட்டுக்குப் போங்க..." என்று சொல்லி, அவளை வீட்டில் விடச் சொல்லி விட்டு அவரையும் சாப்பிட்டு வரச் சொல்லிப் பணிப்பவள், இன்று காரணமே இல்லாமல் கடித்துக் குதறுவதைக் கண்டு மண்டை காய்ந்தது அவருக்கு.

வண்டியை விருட்டென எடுத்துச் சென்றவளோ... அலுவலகத்துக்குள் சென்று புகுந்து கொண்டாள். அவளை அந்த நேரம் எதிர்பார்க்காத அனைவரின் புருவங்களும் உயர்ந்தது.

எப்பொழுதும் யாரின் பார்வையையும் சந்தித்துப் பழக்கமில்லாத அவள், அன்றும் அவர்களின் பார்வை களைக் கண்டுகொள்ளாமலே சென்றாள்.

என்ன செய்தாலும் பிரதீப்பின் பேச்சுக்களும், அவன் நினைவுகளும் சிறு எரிச்சலும் அடிமனதில் இருந்து விலகும் வழியை மட்டும் காணவே இல்லை. ஒரே நாளில் அவளுக்குள் இவ்வளவு மாற்றமென்றால்... இது தொடர் கதையானால்...

இங்கே பிரதீப்போ... ஐ.ஜி. ஆபீஸ் விசாரணைப் பகுதியில் அமர வைக்கப்பட்டான். "யாருப்பா இது...?" கந்தனிடம் அவர்கள் வினவ,

"நம்ம ஐ.ஜி. சாரோட விருந்தாளிப்பா... அவங்க சொல்லுற வரைக்கும் உட்கார வைக்கச் சொன்னாங்க..." கந்தன் சொல்ல, அனைவரும் சுவாரசியமாக அவனைப் பார்த்தார்கள்.

பொதுவாக நந்தினி கூட்டிக் கொண்டு வரும் கேஸ் அனைத்தையுமே அதற்குரிய டிவிஷன் ஸ்டேஷன்களில் மட்டுமே ஒப்படைப்பாள், அது எவ்வளவு பெரிய கேசாக இருந்தாலும். விசாரணையும் சரி, கேஸ் ஃபைல் செய்யும் விஷயமும் சரி ஒரு ஆர்டராகவே இருக்கும்.

அப்படியிருக்கையில் இவனை இங்கே கூட்டி வந்ததால் அனைவரும் ஆச்சரியம் அடைந்தார்கள்.

"என்ன கேஸுப்பா...?" ஒரு விஷயத்தை அறிந்து கொள்ளும் ஆர்வம் தொனித்தது அவர்கள் குரலில்.

"நம்ம சார் வண்டியில் வந்து மோதிட்டார்... அது மட்டும் இல்லை..." மேலும் எதையோ சொல்ல வந்தவர், சட்டென தன்னை மீட்டுக் கொண்டார். அந்த அலுவலகத்தில் நந்தினியின் மேல் எத்தனை பேர் அபிமானம் கொண்டிருந்தர்ர்களோ... அதே அளவு துவேஷமும் கொண்டிருந்தார்கள்.

எனவே எந்தச் செய்தியும் பரவுவதை அவர் விரும்பவில்லை. "என்னது... சார் வண்டியிலேயே மோதிட்டானா....?" சில குரல்கள் அதிர்ந்து ஒலிக்க, சில குரல்களோ....

"சார் சும்மாவா விட்டாங்க..." அதைவிட அதிர்ச்சியாக ஒலித்தது.

"அதெல்லாம் நமக்கு எதுக்குப்பா... சரி, நீங்க எல்லோரும் வேலையைப் பாருங்க...." சொன்னவர், ரைட்டரிடம் திரும்பி, "தம்பியோட விவரம் வாங்கிக்கோ..." சொல்லிவிட்டுத் திரும்பி நடந்து விட்டார்.

அவர் சொன்னதை பிரதீப்பும் கேட்டுக் கொண்டு தான் இருந்தான். அவரைப் பார்த்து சிநேகமாகச் சிரிக்க, அதே புன்னகையை அவரும் உதிர்த்து விட்டுத் திரும்ப நடந்தார்.

கந்தனின் பேச்சில் இருந்த மறைபொருளை உணர்ந்த அவரும், "தம்பி வாங்க... உங்க பேர்...?"

"ப்ரதீப்... பிரதீப் குமார் சுபாஷ் சந்திரபோஸ்..." அவன் சொல்ல, அவன் பெயரை எழுதிக் கொண்டிருந்த அவர் கைகளோ சட்டென நின்று போனது.

"தம்பி நீங்க..." அவர் கேட்க வருவது புரிந்து, 'ஆம்' என்பது போல் தலையசைக்க, மேலே ஒரு எழுத்துக் கூட எழுதாமல் எடுத்து வைத்து விட்டு, எழுந்து வந்து அவன் கரங்களைப் பற்றிக் கொண்டார்.

அவர் கண்கள் கலங்க, ஆதரவாக அவர் கரங்களை அழுத்தினான். அதன்பிறகு அவனைப் பற்றிய விவரங்களோடு, அவன் என்ன செய்கிறான்... இங்கே எப்படி வந்தான்... எதற்காக வந்தான்... இப்படியான விஷயங்களைக் கேட்க, தந்தை மகன்போல் அவர்கள் உரையாடத் துவங்கினர்.

இடையில் அவர்களைக் காண வந்த கந்தனின் பார்வையிலும் அந்தக் காட்சி பதிய, கலங்கிய தன் கண்களைத் துடைத்துக் கொண்டு பணிக்குத் திரும்பினார்.

மனம் முழுக்க 'நந்தினி, ப்ரதீப் இருவரும் சேர வேண்டும்... இருவரின் வாழ்வும் சிறக்க வேண்டும்!' என்ற வேண்டுதல் மட்டுமே இருந்தது. அதன் பிறகு நந்தினியுடன் அவர் சென்று விட... இங்கே ராஜ உபச்சாரம் நடந்தது ப்ரதீப்புக்கு.

அந்த நேரம் அவனது அலைபேசிக்கு அழைப்பு வர, "நான் பேசலாமா...?" அவன் கேட்க,

"என்ன தம்பி இப்படிக் கேட்டுட்டீங்க... சுபாஸோட மகனுக்கு இங்கே இல்லாத சுதந்திரமா...? நீங்க தாராளமாகப் பேசுங்க தம்பி...!" வேகமாக அனுமதி அளித்தார்.

தன் அலைபேசியை எடுத்து, அதில் ஒளிர்ந்த சரவணனின் எண்ணைக் கண்டவன், மெல்லிய சிரிப்புடன், "சொல்லுடா சரவணா...? என்ன, நீயும் ஆபீஸ் போகலையா...?" ஒருவிதச் சிரிப்புடன் வினவினான்.

ப்ரதீப்பின் குரலில் சிரிப்பை உணர்ந்தவன், "வேணாம்டா... என்னை ரொம்ப வெறுப்பேத்தாதே... காலையிலே ஒரு ஆட்டோவை எங்கிருந்தோ எடுத்துட்டு வந்துட்டு... என்னமோ காதல் வாகனம் ஓட்டுறது கணக்கா தூக்கிட்டுப் போனே...

"போனவன் போனவன்தான்... மணி ஒண்ணாகுது... எனக்கு ஏதாவது தகவல் கொடுக்கணும்னு உனக்குத் தோணவே இல்லையாடா... எங்கேடா இருக்கே....?" சரவணன் கடுப்பானான்.

"நான் இப்போ இருக்கிற இடத்தைச் சொன்னால்... அதைவிடக் கடுப்பாகி விடுவியேடா... நான் என்ன செய்யட்டும்...?" சோகம் போல் சொன்னான்.

"டேய்! ஏற்கெனவே நான் மண்டை காய்ஞ்சுபோய் உக்கார்ந்திருக்கேன். நீ வேற வெறுப்பேத்தாமல் ஒழுங்கா உண்மையைச் சொல்லு... இல்லைன்னா விடு, நானே பாத்துக்கிறேன்..." சரவணன் அலைபேசியை வைக்கப் போனான்.

"டேய் டேய்...! எதுவும் செஞ்சு வச்சுடாதேடா... நானே சொல்லுறேன். இப்போ நான் ஜ.ஜி. ஆபீஸில் இருக்கேன்...!" விசாரணைக் கைதிகள் இருக்கும் இடத்தில்

இருப்பதாகச் சொல்லவில்லை. அப்படிச் சொன்னால் சரவணன் கோபமாகி விடுவான் என்பதாலேயே அவ்வாறு செய்தான்.

நண்பன் சொன்னதில் இருந்து மீதி விஷயத்தை உணர்ந்து கொண்ட சரவணன், "நீ அங்கேயே இருடா... நான் இப்போ வரேன்..." ப்ரதீப் சொல்வதைக் கேட்க அவன் தயாராக இல்லை. அலைபேசியை வைத்தவன், உடனடியாகக் கிளம்பி விட்டான்.

ப்ரதீப் மறுபடியும் அழைத்த அழைப்புக்களை அவன் எடுக்கவே இல்லை. ஏற்கெனவே தான் நந்தினியை விரும்புவதை அவ்வளவாக அவன் விரும்பவில்லை. அப்படியிருக்கையில்... தான் இந்த இடத்தில் இருப்பதை உணர்ந்தால்... அவன் எதையாவது செய்து வைத்து விடக் கூடாதே என அஞ்சினான்.

"சார்... என் பிரெண்ட் ஒருத்தன் இன்னும் அஞ்சு நிமிஷத்தில் வந்துடுவான்... நான் அவனைப் பார்க்கணும்..." வேகமாகச் சொன்னான்.

"நீங்க இங்கேயே இருங்க... நீங்க வெளியே போவதை சார் பார்த்தால் பிரச்சினை ஆயிடும். எப்படியும் உங்க பிரெண்ட்டால் ஐ.ஜி. ஆபீஸுக்குள்ளே போக முடியாது. அதனால் நீங்க இங்கேயே வெயிட் பண்ணுங்க..." அவர் சொல்லவே, வேறு வழி இல்லாமல் அங்கேயே அமர்ந்து கொண்டான்.

அடுத்த ஐந்தாவது நிமிடம்... வாயிலின் அருகில் யாரோ சத்தம் போடுவது கேட்கவே, ப்ரதீப் வேகமாக

வாயிலுக்கு விரைந்தான். சரவணனை இரண்டு காவலர்கள் மடக்கியிருப்பதைப் பார்த்தவன், வேகமாக அவர்களை நெருங்கினான்.

"வாடா... இதுதான் நீ...!" எதையோ சொல்லத் துவங்கியவன் அதை நிறுத்தி விட்டு,

"கிளம்புடா போகலாம்... யார் என்ன செய்யுறாங்க என்பதையும் பார்க்கலாம். யார், யாரை எங்கே வைக்கிறது. ஒரு நியாயம் வேண்டாம். இப்போ நீ கிளம்பல... என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது...!" கடும் கோபத்தில் கத்தினான்.

அவன் கோபத்தைக் கண்ட ப்ரதீப்புக்கே திகைப்பாக இருந்தது என்றால்... சுற்றியிருந்த காவலருக்கோ அதைவிட ஆச்சரியமாக இருந்தது.

"ஹலோ... நீங்க நிற்கிறது ஐ.ஜி. ஆபீஸ். அது தெரியுதா...?" ஒரு காவலர் கேட்க...

"ஐ.ஜி. ஆபீஸ் முன்னாடி நிக்கிறது யாருன்னு முதல்ல உங்களுக்குத் தெரியுதா...?" விரல் நீட்டிக் கேட்டவாறு அவர்களை நெருங்க, குறுக்கே புகுந்து தடுத்தான் பிரதீப்.

"சார்... நான் கிளம்புறேன்... இன்னும் கொஞ்ச நேரத்தில் நானே இங்கே வந்துடுறேன்..." பொதுவாக உரைத்தவன், நண்பனை இழுத்துக் கொண்டு வெளியேறினான்.

அவர்களைத் தடுக்க முயன்ற காவலர்களை... ரைட்டர் தடுத்து விட்டார். எப்படியும் அவர்தான் பதில்

சொல்ல வேண்டும் என்பதால் மற்றவர்களும் கலைந்து சென்றார்கள்.

வெளியே சென்ற சரவணனோ, ஒரு உயர்தர ஹோட்டலில் நுழைந்தவன் ப்ரதீப்பைக் காய்ச்சி எடுத்து விட்டான். ப்ரதீப் சொல்ல வந்த எதையும் காது கொடுத்துக் கேட்கும் நிலையில் அவன் இருக்கவில்லை. இறுதியில்...

"இந்த மாதிரிப் பைத்தியக்காரத்தனம் எதையாவது மறுபடியும் செய்யணும்னு நினைச்ச... நான் மனுஷனாவே இருக்க மாட்டேன்... ஆமா... காலையில் நீ ஆட்டோவோட நின்னதையே என்னால் ஜீரணிக்க முடியலை. இதில் செல்லுல..." அதே நேரம் சர்வர் வரவே, தன் வேகத்தைத் தணித்தவன், அவன் விலகிச் சென்றவுடன்,

"உன்னோட உயரத்துக்கு இதெல்லாம் தேவையாடா... என்னதான் காதலா இருந்தாலும்... நீ செய்யுறது என்னவோ எனக்கு முழு முட்டாள்தனமாத் தோணுதுடா..." கோபமாய்த் துவங்கி, ஆற்றாமையில் முடித்தான்.

நண்பனின் முன்னால் தண்ணீர் டம்ளரை வைத்தவன், "நாய் வேஷம் போட்டால் குரைத்துத்தான் ஆகணும் சரவணா... அதை விட்டுட்டு... நான் சிங்கம், கர்ஜிக்கத்தான் செய்வேன்னா... வேஷம் ஒட்டாமலே போய்டும்... நாமளும் கேலிக்குரியவங்களா ஆயிடுவோம்.

"ஏற்கெனவே உனக்குச் சொன்னதுதான்... என் நந்தினியை அடைய நான் என்ன வேண்ணா செய்வேன்... முடிந்தால் எனக்கு உதவி செய்...

இல்லையா, விலகி இரு...” காதலின் முன்னால் நண்பன் செல்லாக்காசாகிப் போனான்.

அதை உணர்ந்த சரவணனும் அமைதியானான். “பொல்லாத காதல்...!” அவனது முணுமுணுப்புத் தன்னை எட்டியும், எதுவும் சொல்லாமல் அமைதியாகவே இருந்தான்.

“எந்த எண்ணத்தில் வேஷம் போட்டேனோ... அதோட முதல் படியை எட்டி வச்சுட்டேன்... யாரையுமே கிட்ட நெருங்க விடாத நந்தினியின் வண்டியில்... அவளோட ஒண்ணா ஜ.ஜி. ஆபீஸ் போனேன்னு சொன்னால் நீ என்னடா சொல்லுவ...!” ப்ரதீப் ஆச்சரியமாகக் கேட்க,

‘இது அவ்வளவு பெரிய விஷயமா....?’ என்பது போல், நண்பனை அனுதாபமாகப் பார்த்தான் சரவணன். அவனுக்கும் நந்தினியைப் பற்றித் தெரியுமே...! எனவே பிரதீப் சொன்னதில் கொஞ்சம் ஆச்சரியமும் அடைந்தான். ஆனால், அதை அவனுக்குக் காட்டாமல் நாசூக்காக மறைத்தவன், முதல் பார்வையை மாற்றவில்லை.

அவன் பார்வையை உணர்ந்து, “உனக்கு ஆதாரத்தோட நிரூபிக்கிறேன்டா... அப்போ நம்புவேல்ல...” கண்கள் மின்னச் சொன்னவன், ஆர்டர் செய்த சாப்பாடு வரவே வேகமாக உண்டான்.

நண்பனின் நம்பிக்கையும், உற்சாகமும் பொய்த்துப் போகக் கூடாது என்ற வேண்டுதலைத் தவிர வேறு ஒன்றும் இல்லை அவனிடம்.



எனக்குத் தெரியாமல்
என்னுள் நீ...!
ஏற்றுக் கொள்ள முடியவில்லை...!
என் முகத்திரையை விலக்கவா...?

சாயங்காலம் மணி நான்கை நெருங்கவே... அட்டென்டர் நந்தினிக்கு டீ எடுத்துச் செல்ல... அவனை எரிக்கும் பார்வை பார்த்தவள், "நான் இப்போ உன்கிட்டே டீ கேட்டேனோ...?" அவனிடம் எரிந்து விழுந்தாள்.

"சார்... இது வழக்கமா நீங்க டீ குடிக்கும் டைம்... அதான்...!" கைகள் நடுங்க டீ கப்பை கைகளில் ஏந்தியவாறு பதிலுரைத்தவன், மென்று முழுங்கினான்.

"என்னது...! என்னைக்காவது காலையில் நான் ரெண்டு கப் டீ குடிச்சு இருக்கேனா...?" விட்டால் அவனை அடித்துத் துவம்சம் செய்யும் வெறியில் இருந்தாள் அவள்.

"சா...ர்... இப்...போ மணி நா... நாலு..." வார்த்தைகள் கொஞ்சம் தந்தியடிக்க அவன் உரைக்க, விலுக்கென நிமிர்ந்து எதிரில் இருந்த சுவரைப் பார்த்தாள். அது நேரம் நான்கைக் காட்ட.. நம்பிக்கையில்லாமல் தன் மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தாள்.

அதன் பிறகு அவள் அமைதியாகிவிட... விட்டால் போதுமென்று வெளியே ஓடினான் அவன்.

'ஸ்...சப்பா... இந்த சார் பேசாமல் இருந்தாலே, அவங்க ரூமுக்குப் போனால் உள்ளுக்குள் வேர்க்கும். இதில் கத்தி மாதிரி கேள்வியை வீசினால் என்னதான் செய்யிறது...?' வியர்வை வழியும் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

ஆக மொத்தத்தில் நந்தினியின் மாற்றம் அனைவரையும் மேலும் கலவரமாக்கியது என்பதுதான் உண்மை. அவள் ஒரு வார்த்தை பேசாமல் இருந்தாலே அதில் ஆயிரம் அர்த்தங்கள் இருக்க, அவள் பேசும் மொழிகளில் என்ன அணுகுண்டு இருக்கிறதோ என்று கவலைப் பட்டார்கள்.

அன்றைய பேச்சு முழுவதிலும் நந்தினியின் மாற்றமே பெரிதாகப் பேசப்பட்டது. மதிய சாப்பாட்டுக்குச் சென்றிருந்த கந்தன் திரும்பி விட, கூடியிருந்த அவர்களைக் கண்டு புருவம் உயர்த்தினார்.

"என்னப்பா... ஏதாவது ஹாட் நியூஸா...? புதுசா ஏதாவது கேஸ் சிக்கியிருக்கா என்ன...? கும்பலா இருக்கீங்க...!" வழக்கமாகப் புதிதாக ஏதாவது வித்தியாச மான கேஸ் வந்தால்தான் கூடி நின்று விமர்சிப்பார்கள். அதுபோல் ஏதாவதோ என்று எண்ணியே அவ்வாறு கேட்டார்.

"அது இல்லண்ணே... எல்லாம் நம்ம சார் பத்தி தான்..." குரலைத் தாழ்த்திச் சொன்னார்கள்.

"நம்ம சார் பத்தியா...?" புருவம் சுருக்கிச் சந்தேகமாக அவர் வினவினார்.

"ஆமாண்ணே... நேத்து வரைக்கும் பேசவே தெரியாதுன்ற மாதிரி இருந்தவங்க, இன்னைக்கு வாயைத் தொறந்தாலே பட்டாசாப் பொரியுறாங்க... வழக்கமா உள்ளே டீ கொடுக்கப் போனால் அனல் மட்டும்தான் அடிக்கும். இப்போ என்னன்னா... எரிமலையே அடிக்குது!"

கலவரமாகவே பதில் சொன்னான்.

கந்தனும் காலையில் நடந்தவை அனைத்தையும் யோசித்துப் பார்த்தார். நந்தினியிடம் ஏதோ ஒரு மாற்றம்... ஆனால், அதை எதிர்மறையாக அவரால் எண்ண முடியவில்லை. எப்பொழுதும் இறுக்கமாக இதழ் மூடி இருக்கும் அவள்... வார்த்தைகளை வெளியிடுவதை நல்ல விஷயமாகவே எண்ணினார்.

ஆனால், அதை அவர்களிடம் சொல்லாமல், "ஏம்ப்பா... அவங்க ஏதாவது டென்ஷன்ல இருப்பாங்களா இருக்கும். நாமளும் சில நாள் இப்படி இருக்குறது இல்லையா...? இதைப் போய் பெருசா எடுத்துக்கிட்டு... போங்கப்பா... போய் வேலையைப் பாருங்க...!" அவர்களை விரட்டினார்.

"அண்ணே... அது மட்டும் இல்லை. இன்னைக்கு சார் ஒருத்தனை கூட்டி வந்தாங்க... அவனைச் சாப்பிட வெளியே அனுப்பி இருக்காங்க... நம்ம சார் ஒருத்தனை கூட்டி வந்ததே பெரிய விஷயம்ன்னா... அவனை இவங்க வெளியே அனுப்பி இருக்காங்கன்னா... அவன் எவ்வளவு பெரிய ஆளா இருப்பான்..." வம்பு வளர்த்தார்கள்.

கந்தனுக்குப் பிரதீப்பைப் பற்றிய விஷயங்கள் தெரியுமாகையால்... இதை இப்படியே வளர விடுவது சரியில்லை என்பதை உணர்ந்தார். அதிலும் தன்னைப் பற்றி நம்பிக்கையானவர்கள் தவிர யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று அவன் சொன்ன பிறகு... அவனைப் பற்றிப் பேசுவதே ஏதாவது விவகாரத்தைக் கிளப்பும் என்பதால்... அனைவரையும் கலைந்து செல்லுமாறு அழுத்திச் சொன்னார்.

அவர்கள் கலைந்து சென்ற மறு நிமிடம், அங்கே வந்தார்கள் பிரதீப்பும், சரவணனும்.

"என்ன தம்பி... சாப்பிட்டு வர்றீங்களா...? சரி, நீங்க கிளம்புங்க... உங்களை அவங்க பார்த்தால் இன்னும் டென்ஷன் ஆவாங்க..." தன் போக்கில் சொன்னார்.

"என்னண்ணே... அவங்கதான் என்னை அங்கே இருக்கச் சொன்னாங்க... இப்போ நான் இல்லைன்னா ஏதாவது நினைச்சுக்க மாட்டாங்க... எதுக்கும் நான் போகும் முன்னாடி அவங்களை ஒரு எட்டுப் பார்த்துட்டுப் போய்டுறேன்..." சொன்னவன், அவள் அறையை நோக்கி நடக்கத் துவங்கினான்.

"தம்பி... சொல்லுறேன்னு தப்பா நினைக்காதீங்க... உங்களைப் பார்த்தாலா... இல்ல எதேச்சையாவா... தெரியலை... சாரோட நடவடிக்கையில் அப்படி ஒரு மாற்றம். ஏற்கெனவே ஏதோ குழப்பத்தில் இருக்கிறவங்க... உங்களைப் பார்த்தால் இன்னும் கோபப்படுவாங்க...

அதனால்...” அவர் இதற்கு மேல் எப்படிச் சொல்லவென்று தெரியாமல் நிறுத்தினார்.

“என்ன சார் சொல்லுறீங்க...?” ஆர்வம் கொப் பளித்தது அவன் குரலில்.

அதே நேரம் அவன் கண்கள் சரவணனையும் காணத் தவறவில்லை.

“எதுவும் இல்ல தம்பி... நீங்க கிளம்புங்க...!” அவனைக் கிளப்புவதிலேயே குறியாக இருந்தார்.

அப்பொழுது சட்டென அவரை ஒதுக்குப் புறமாக அழைத்துச் சென்றவன்... தான் எதற்காகக் கேட்கிறான் என்பதை விளக்க... ஏற்கெனவே நந்தினியின் செய்கை யில் கவலை கொண்டிருந்தவரின் கண்கள் பனித்தது.

ப்ரதீப்பின் கரங்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டவர், “நீங்க நிஜமாத்தான் சொல்லுறீங்களா?” ஆச்சரியமாகக் கேட்டவரின் குரலும் தளுதளுத்தது.

“நீங்க சொன்னது மட்டும் நடந்துட்டா... இந்த உலகத்திலேயே அதை நினைத்துச் சந்தோஷப்படும் முதல் ஆள் நானாகத்தான் இருப்பேன்.

“ஏன்னா... சார் எனக்கு இன்னொரு மக மாதிரி... என்னோட பொண்ணுங்களைப் பார்க்கும் போதெல்லாம்... இவங்க முகம்தான்... என் கண்முன் வந்து நின்னு கலங்க வைக்கும். அதுக்கு ஒரு விடிவு வரப் போகுதுன்னா... உங்களை நான் தடுக்கலை... நீங்க போங்க...” சந்தோஷ மாக அவனை வழி அனுப்பினார்.

"இந்த ஜென்மத்தில் அவதான் என்னோட மனைவி... இது நடக்கும் வரை நான் ஓய மாட்டேன். ஆனா எனக்கு உங்களோட உதவியும், ஒத்துழைப்பும் ரொம்ப முக்கியம். செய்வீங்கதானே...!" அவன் உறுதியாய்க் கேட்க,

"அவங்களுக்கு ஒரு நல்லது நடக்கும்னா... என்னால் முடிந்த எல்லா உதவியும் நான் செய்யுறேன்..." அழுத்தமாகச் சொன்னவர்,

"கொஞ்சம் பார்த்து நடந்துக்கோங்க தம்பி... ஏன்னா..." அவர் சொல்லும் முன்னர் அவர் வாயை மூடியவன்,

"எல்லாம் நான் பார்த்துக்கிறேன்... அவ அடிச்சால் கூட வாங்கிக்கிறேன், போதுமா..." அவன் புன்னகையுடன் சொல்ல... கந்தன் நெகிழ... சரவணன் முறைத்தான்.

"இப்போ சொல்லுங்க... அப்படி என்ன வித்தியாசமா நடந்துக்கிட்டா...?" அவன் ஒருமையில் அவளை அழைத்ததைக் கவனித்தாலும் காட்டிக் கொள்ளாமல்... தனக்கு வித்தியாசமாகத் தோன்றிய நடத்தை முதல், அட்டென்டர் புலம்பிய விஷயம் துவங்கி... மதியம் சாப்பிடக் கூட அவள் போகவில்லை என்பது வரை அனைத்தையும் சொன்னவர்... இறுதியாக நான்கு மணிக்கு நடந்ததையும் சொல்ல மறக்கவில்லை.

"ஹையோ... நிஜமாத்தான் சொல்லுறீங்களா....? இதுக்கு முன்னாடி அவ இப்படி நடந்துக்கிட்டதே இல்லையா...?" நம்ப முடியாமல் கேட்டான்.

"நான் அவங்ககிட்ட வந்து ரெண்டு வருஷம் ஆகுது... இந்த இரண்டு வருடத்தில், அவங்க இவ்வளவு பேசியது இன்னைக்குத்தான்..." உறுதியாகச் சொன்னார்.

'அப்போ... நான் ஏதோ ஒரு விதத்தில் அவளைப் பாதிக்கிறேன். அந்த விபத்தா...? இல்லையென்றால் நான் விபத்துப் பற்றிச் சொன்னேனே அதுவா... இல்லன்னா வாய் ஓயாமல் புலம்பினேனே அதுவா...?' தனக்குத் தானே புலம்பியவன்,

இருவரையும் கண்டு கொள்ளாமல் நந்தினியின் அறைக்கு விரைந்தான். ப்ரதீப் செல்லும் முன்னர்... நந்தினி அவளது இருக்கையில் திகைத்துப் போய் அமர்ந்திருந்தாள். அவள் முன்னால் இருந்த டீயோ... ஆறிப் போய் இருந்தது.

நெற்றிப் பொட்டில் பெருவிரலால் அழுத்தி... விரல்களால் நெற்றியைத் தேய்த்தவளின் யோசனை முழுவதும் இன்றைய நாளைப் பற்றியதாகவே இருந்தது.

நேரம் நான்கைக் கடந்து விட்டது என்பதை அவளால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. 'இது எப்படி... நேரம் போனது தெரியவில்லை என்பது ஒரு பக்கமென்றால்... எப்படி நேரம் போனது?' என்பது அதைவிடப் பெரிய கேள்வியாக இருந்தது.

'இன்று என்ன செய்தோம்...? உருப்படியாக எதை யும் செய்யவும் இல்லை. சாப்பிடவும் போகவில்லை. அப்போ கந்தன்...' நடந்தவற்றை யோசிக்கத் துவங்கும்

வேளையில், அவள் அறைக் கதவு மெலிதாகத் தட்டும் ஓசை கேட்டது.

"எஸ்..." சட்டென தன் சிந்தனைகளை ஒதுக்கி விட்டு... மூச்சை இழுத்து வெளியிட்டவள், இருக்கையில் நிமிர்ந்து அமர்ந்தாள். கண்களில் கேள்வியோடு நிமிர்ந்து வாயிலைப் பார்க்க... அங்கு நின்றவனைக் கண்டு புருவம் சுருக்கினாள்.

'இவன் எங்கே...?' இப்படி யோசிக்கத் துவங்கியவள், 'இவன் எப்படி வெளியே... என்ன நடக்குது இங்கே...?' சீற்றத்தோடு உறுத்து அவனை விழித்தாள்.

அவள் பார்வையை அலட்சியம் செய்தவன்... "மே ஐ..." அவன் வார்த்தையில் பணிவு இருந்ததே தவிர... அவன் குரலிலோ பார்வையிலோ அது சிறிதும் இருக்க வில்லை.

அவன் கேள்விக்குத் தலையைக் கூட அசைக்காமல் அவள் அமர்ந்திருக்க, "உங்களைப் பார்க்க வேண்டி... கெஞ்சிக் கூத்தாடி வந்தேன்..." அவன் சொல்ல... உள்ளுக்குள் புகையத் துவங்கிய மனதை, முகத்தில் காட்டாமல் அமர்ந்திருந்தாள்.

'எப்படி இருக்கா பாரேன்... திட்டவாவது செய்வா... இல்ல கத்தவாவது செய்வான்னு பார்த்தால்... இவ இப்படி இருந்தால்... நானும் என்னதான் செய்யுறது...?' தனக்குள் புலம்பியவன்... அவளை எப்படிப் பேச வைக்கவென்று தெரியாமல் திணறினான்.

ஆனாலும் தனக்குள்ளேயே கேள்விகளைப் புதைத்துக் கொண்டு, "இன்னைக்கு நான் ஒண்ணு கேள்விப்பட்டேன்... அது உண்மையா...?" பீடிகையாகத் துவங்கினான்.

'நீயே சொல்...' என்பதுபோல் பார்த்தாளே தவிர, எதுவும் பேசவில்லை.

அவள் அமைதியை உணர்ந்து, "என்னன்னு கேட்க மாட்டீங்களே... சரி, விடுங்க... உங்களுக்குத் தெரிஞ்சுக்க வேண்டாம்னா எனக்கு மட்டும் என்ன வந்தது...?" சொன்னவன், தோளைக் குலுக்கி விட்டு, இருக்கையில் இருந்து எழுந்தான்.

பொதுவாகப் பெண்களிடம் இப்படிச் சொன்னால்... அந்த விஷயம் என்னவென்று தெரிந்து கொள்ள ஆவல் கொள்வார்கள். ஆனால், நந்தினியின் குணம் அவனைத் தலையால் தண்ணீர் குடிக்க வைத்தது என்பதுதான் உண்மை.

ஏதோ ஒரு விஷயத்தில் முன்னேறுகிறோம் என்று சந்தோஷப்பட்டால்... அது இல்லையென்று அழிக்கும் விதமாக இருக்கும் அவளது நடத்தை... அவனது நினைப்பிற்கு அப்பாற்பட்டவளாக அவள் இருப்பதைத் திகைப்பாய் உணர்ந்தான்.

இதழ்கள் அவளோடு உரையாடினாலும்... மனமோ, 'ஒரு வார்த்தையாவது என்னிடம் பேசேன்... திட்டவாவது செய்யேன்...' எனக் கெஞ்சிக் கொண்டிருந்தது.

தன் தோல்வியை ஏற்க முடியாமல்தான் உடனடி யாகக் கிளம்பினான். "உன்னை யார் வெளியே வர அனுமதித்தது...?" அவளது கேள்வி அவனைத் தேக்கியது.

கண்கள் மின்ன அவள் புறம் திரும்பியவன், "நீங்கதான் பெரிய ஆபீசர் ஆச்சே...! கண்டுபிடிங்க..." அவள் தன்னிடம் பேசி விட்டாள் என்ற உற்சாகம் குரலில் கொப்பளிக்க பதில் சொன்னான்.

அவனது உற்சாகத்தைப் புருவம் சுருக்கிப் பார்த்தவள், நொடியில் தாடை இறுகக் கோபமாக அவனை முறைத்தாள். 'நான் கொண்டு வந்து ஒப்படைத்தவன்... என் முன்னால் வெளியே வந்து விட்டேன் என்று பேசுகிறான் என்றால்... இது எதனால் வந்த தைரியம்... யாரால் வந்த தைரியம்...?' இமைகளைச் சிமிட்டாமல் அவனைப் பார்த்தாலும்... மூளை கேள்விக் கணைகளை அடுக்கியது.

"யாரோட தைரியத்தில் இப்படி ஆடுறேன்னு கண்டுபிடிக்க எனக்கு ஒரு நிமிஷம் ஆகாது...!" மேஜை மேல் இருந்த பேனாவை எடுத்து... விரல்களுக்குள் சுழற்றியவாறே நிதானமாகச் சொன்னாள்.

"ஹா... ஹா... ஹா...! இதை நான் சவாலாகவே எடுத்துக்கிறேன்... உங்களால் முடிந்தால்... என்னைப் பற்றிக் கண்டுபிடிங்க பார்க்கலாம்...!" அவனும், சவா லாகவே சொன்னான்.

"நீயென்ன அலாவுதின் பூதமா...?" எள்ளலாகக் கேட்க,

"அது கூடிய சீக்கிரம் உங்களுக்கே தெரிஞ்சுடும்..." அதை விடக் கேலியாக அவன் சொல்ல... இவ்வளவு நேரம் அவளிடம் இருந்த இலகுத்தன்மை தொலைந்து போனது.

டேபிள் மேல் இருந்த அழைப்பு மணியை தன் ஆத்திரம் தீரும் அளவில் ஓங்கி அடிக்க... அதன் அலறலில் அட்டன்டரும் கந்தனும் விரைந்து வந்தார்கள்.

அவர்கள் வரவே, "இவனோட கேஸ் ஹிஸ்டரி இன்னும் ரெண்டு நிமிஷத்தில் என் டேபிள் மேலே இருக்கணும்..." வார்த்தைகளைக் கடித்துக் குதறி அவள் சொல்ல, இருவரும் விட்டால் போதுமென்று அங்கிருந்து ஓடினார்கள்.

பத்து நிமிடங்கள் கழிந்தும் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் போகவே... இன்டர்காமில் இப்பொழுது அழைத்தாள். ஆனால், அவனது பெயரைத் தவிர வேறு விவரம் இல்லை என்று சொல்லவே... கொதிக்கும் எண்ணெயில் நீர் ஊற்றியதைப் போல் கொந்தளித்துப் போனாள்.

தொலைபேசியை ஓங்கி அதன் இடத்தில் வைத்தவளின் முகமோ இரும்பென இறுகியது. அவன் முன்னால் தன் கோபத்தைக் கூட வெளியிட மறுத்தவள்... தன் அறையிலிருந்து அவனை வெளியேறிச் செல்லச் சொல்வதற்குக் கூட முடியாமல், அவனையே பார்த்தவாறு அமர்ந்திருந்தாள்.

அவளது நான்கு வருட போலீஸ் வரலாற்றில் முதல் தோல்வி. அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை அவளால். அதே நேரம்... அவனை விலக்கித் தள்ளவும் முடியாமல், அவள் தன்மானம் அவளைத் தடுத்தது.

அவள் நிலைமையைப் பார்த்து அவனுக்குத்தான் பாவமாகப் போனது. அவள் தன்னிடம் பேச வேண்டும்... கோபப்பட வேண்டும் என்று விரும்பினானே தவிர... தன் பேச்சோ செய்கையோ அவளது தன்மானத்தைக் கிளறுவதை அவன் விரும்பவில்லை.

ஆனாலும் அவளைப் பேச வைக்க,. இந்த ஒரு வழியைத் தவிர வேறு வழி இல்லை என்பதை உணர்ந்து அவனும் உள்ளுக்குள் கலங்கினான்.

அவளது நிலை உணர்ந்து, "நான் வேண்...ணா..." துவங்கிய அவனைக் கை காட்டித் தடுத்தாள்.

"எனக்கு எப்பவும் யார் தயவையும் எதிர்பார்ப்பது பிடிக்காது...!" கிட்டத்தட்ட வெடித்தாள்.

அவளது இந்தப் பதில்... இந்தச் சூழ்நிலைக்காக மட்டும் சொல்லப்பட்டதில்லை என்பதைப் புரிந்து கொண்டான்.

"அதுக்கு ஏன் இவ்வளவு கோபம்... உங்களுக்கு வேண்டாம்னா எனக்கும் வேண்டாம்... ஆனால், நான் சொல்லாமல் என்னைப் பற்றிய எந்த விவரமும் உங்களுக்கு தெரிய வராது என்பதுதான் உண்மை..." அழுத்தம் திருத்தமாக, அவள் கண்களுக்குள் உற்றுப்

பார்த்து அவன் சொல்ல... உள்ளுக்குள் கொந்தளித்தது அவளுக்கு.

அவன் பார்வையின் பொருளை அறிய முயன்று தோற்றாள். கைதிகளின் கண்களைப் பார்த்தே அவர்களின் எண்ணவோட்டத்தை புரிந்து கொள்ளும் அவளால்... ப்ரதீப்பின் பார்வையின் பொருளைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அதில் கள்ளத்தனமோ, ஆணவமோ... செருக்கோ... மமதையோ... திமிரோ எதுவும் இருக்கவில்லை. மாறாக வேறு ஏதோ ஒன்று... இதை சிந்திக்கும் வேளையில்... அவளது கோபம் கூட சற்று மட்டுப்பட்டிருந்தது.

அது ஒரு நிமிடம் மட்டுமே! அடுத்த நிமிடம்... "ஓ... அப்படியா... அப்போ உனக்கு யார் பின்னாடியாவது... எதன் பின்னாலாவது ஒளிந்து கொள்ளத்தான் தெரியுமா...?" அவனைத் தூண்டிவிட முயன்றாள்.

அவள் முயற்சியை நொடியில் கண்டு கொண்ட வனின் இதழ்கள் மெல்லிய புன்னகையில் விரிந்தது. "ஒளிந்து கொள்வது... மறைப்பது... திரை போடுவது... இதெல்லாம் எனக்குத் தெரியாது. அதைச் செய்யுறவங்க சொன்னால் தெரிஞ்சுக்க வேண்டியதுதான்..." இலகுபோல் சொன்னான்.

அவனது பதிலுக்கு... அவளிடம் ஒரு புருவச் சுழிப்பைத் தவிர வேறு எந்தப் பிரதிபலிப்பும் இருக்க வில்லை. அவனிடம் வாதாடுவது பிடிக்காதவளாகப்

பேச்சைப் பாதியில் நிறுத்தவும் முடியாமல், அடி வயிற்றில் இருந்து ஒரு எரிச்சல் கிளர்ந்து அவள் தேகம் முழுவதும் பரவியது.

அதே நேரம் அவனை 'வெளியே போ...' என்று சொல்ல ஒரு நொடி கூட அவளுக்கு ஆகாது. ஆனால், அவனுக்குப் பயந்து... அவனுக்கு பதில் சொல்ல முடியாமல்... தான் இப்படிச் சொல்வதாக அவன் எண்ணிவிடக் கூடாது என்பதில் அவள் உறுதியாக இருந்தாள்.

எனவேதான் இவ்வளவு நடந்த பிறகும் அவள் இதழ்கள் அப்படி ஒரு வார்த்தையை மட்டும் உதிர்க்க வில்லை. பிரதீப்போ... அவளிடமிருந்து அப்படி ஒரு வார்த்தை வராதா என ஏங்கிக் கொண்டிருந்தான்.

உன்னால் எனக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று அவள் காட்ட முயல்வதை, அவளது இறுக்கத்தை, அவளது பிடிவாதத்தை ஒரு நொடி கூடத் தளர்த்தாமல்... இழுத்துப் பிடித்து அவள் போராடுவது அவனுக்குக் கவலையை அளித்தது.

இவ்வளவு பிடிவாதமாக இருப்பவளுக்குத் தன் காதலை, நேசத்தை, தன்னை எப்படிப் புரிய வைக்கப் போகிறோம் என்பதை எண்ணும் வேளையில் கலக்கமாக இருந்தது.

'இவ்வளவு பிடிவாதமா...? என்னிடமா...? நீ எப்பொழுது இப்படி மாறினாய் நந்து...?' அவளுக்குள்

துக்கப் பந்து கிளர்ந்தெழுந்து வந்து தொண்டையை அடைத்தது.

அவள் தன் பிடிவாதத்தை விட்டுக் கொடுக்க மாட்டாள் என்பது தெளிவாகப் புரிய, "இன்னைக்கு... இந்த முழு நாளில்... என்னை ஒரு நிமிடமாவது மறந்திருந்ததாக நீ எண்ணினால்... நான் தோற்றுப் போனதாக எண்ணிக் கொள்கிறேன் நந்தினி.

"ஆனால், நீ உன் ஐ.பி.எஸ். என்ற முகமூடியைக் கழட்டி வைத்து விட்டு, நந்தினியாக மட்டும் சிந்தித்துப் பார். நாளைக்கும் நான் வருவேன். அப்போ நேர்மையாகப் பதில் சொல்... நீ உண்மையைச் சொன்னால் நானும் என்னைப் பற்றிச் சொல்கிறேன்...!"

இவ்வளவு நேரமும் அவளிடம் எதைச் சொல்ல வேண்டாம் என்று எண்ணியிருந்தானோ அதை அவனது இதழ்கள் அவனது அனுமதி இன்றியே மொழிந்தது.

'என்ன...' அவள் மேலே எதையும் கேட்கும் முன்னர், அங்கிருந்து வெளியேறினான்.

எதற்காக இப்பொழுது அதைச் சொன்னோம் என்று அவன் சிந்திக்க... தன்னால் அவள் பாதிக்கப்பட வில்லை என்பதை ஒத்துக்கொள்ள தன் ஈகோ இடம் கொடுக்கவில்லை என்பதை உணர்ந்து திகைத்துப் போனான். ஆனாலும் அதைச் சொன்ன பொழுது அவள் முகத்தில் மின்னல் போல் மின்னி மறைந்த அதிர்ச்சி, அவன் அடி மனதில் தித்தித்தது.



என்னை அறியாமல்... எனக்குள் பூகம்பம்...! என்னவென்று சொல்ல...?

வீட்டிற்கு வந்த நந்தினியால், வழக்கமாகச் செய்யும் எதையும் செய்ய முடியவில்லை. ஹால் சோபாவில்... தலையைக் கைகளில் தாங்கியவாறு அமர்ந்திருந்த நந்தினியைப் பார்த்த ரோஸுக்கு மனதைப் பிசைந்தது.

'காலையில் பெயருக்குச் சாப்பிட்டு விட்டுச் சென்றவள்... மதியம் சாப்பிடக் கூட வீட்டுக்கு வரவில்லை. அப்படி என்னதான் வேலையோ...?' தனக்குள் அலுத்தவள், அவளை நெருங்கவும் அஞ்சினாள்.

ரோஸ் அவளைப் பற்றிக் கவலைப்பட, நந்தினியோ தனக்குள் நொந்து கொண்டிருந்தாள். ஒரே நாளில் தனது செய்கையிலும், பேச்சிலும் ஏற்பட்ட மாற்றம் அவளால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

முதலில் கவனிக்காமல் இருந்தவள், ப்ரதீப் சொல்லி விட்டுச் சென்ற வார்த்தைகளைக் கேட்ட பிறகு நிதான மாகச் சிந்திக்கையில் அனைத்தும் புரிந்தது.

'ஒரு வார்த்தை என்னை அடியோடு மாற்ற முடியுமா...? அவ்வளவு பலவீனமானவளா நான்...?' இதை எண்ணும்பொழுதே அவள் கோபம் இன்னும் அதிகரித்தது.

'ஒருவன் என்னை நொடியில் பாதிக்கும் அளவா நான் இருக்கிறேன்...?' இந்த இடத்தில் யோசனையை

நிறுத்த, 'அவன் என்னைப் பாதிக்கவில்லை... அவனது வார்த்தைகள்தான் பாதிக்கிறது...'

அவள் எவ்வளவுதான் கோபமாக எண்ணினாலும்... அவளையும் மீறி அவனது வார்த்தைகளை விரும்பு கிறாள். அந்த வார்த்தைகள் நொந்து போன தன் மனதுக்குக் கொடுக்கும் ஆறுதலை அவள் உள்மனம் விரும்பியது.

இந்த உண்மை அவளை மேலும் தாக்கியது. உடனடியாகத் தனது பாக்ஸிங் விங்குங்குச் சென்று... தன் ஆத்திரம் தீரும் மட்டும் பஞ்சிங் பேக்கை உதைத்தால் தான் அந்த ஆத்திரம் அடங்கும் போல் இருந்தது. ஆனால், காலையில் சாப்பிட்ட உணவைத் தவிர வேறு எதுவும் அன்று முழுவதும் உண்ணாததால்... மிகுந்த களைப்பாக உணர்ந்தாள்.

அவ்வளவு களைப்பிலும்... மனம் பிரதீப்பைப் பற்றிச் சிந்திக்க மட்டும் மறக்கவில்லை. 'அவன் யார்...? எங்கிருந்து வந்தான்...? அவன் எப்படி வெளியே வந்தான்....?' ஆத்திரமாகச் சிந்திக்க,

'அவன் அப்படி என்ன தப்பு செய்தான் என்று அவனை உள்ளே வைத்தாய்...?' மனச்சாட்சியின் கேள்விக்கு,

'என்னைப் பற்றிய எந்த விஷயமும் மாறுவதை நான் விரும்பவில்லை. அப்படியிருக்க... அவன் எப்படி அதை மாற்ற முயலலாம்...' மனச்சாட்சியிடம் கேட்டாள்.

'சரி, அதை விடு... உன் டிபார்ட்மென்ட் ஆட்களே உனக்கு எதிராக இருக்கிறார்களே...! அவனைப் பற்றிய எந்த விஷயத்தையும் அவன் சொல்லவில்லையா... இல்லையென்றால் அவன் சொன்னதை அவர்கள் சொல்லவில்லையா...?' எங்கு சுற்றினாலும் மூளையைக் குடையும் கேள்வி மட்டும் அவளை விடவில்லை.

'இதற்கு எதையாவது செய்தே ஆக வேண்டும். நாளை அவன் வருவதாக வேறு சொல்லியிருக்கிறானே. என்ன பதில் சொல்வது...?' அவள் நினைக்க,

'அவனுக்கு ஏன் நான் பதில் சொல்ல வேண்டும்...?' மனம் குரங்காக ஆட்டம் காட்டியது.

'நாளை அவன் வந்தால்... அவனைப் பிடித்து ஜெயிலில் போட வேண்டியதுதான்...!' மனம் குதர்க்கமாகச் சிந்திக்க,

'உன் உயரத்துக்கு இது நல்லதா....?' தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

'அவன் எப்படி என் ஈகோவைத் தூண்டலாம்...? அவன் யாரென்று அறியும் வரை விடக் கூடாது...!' இதை எண்ணிய பிறகுதான் கொஞ்சம் நிம்மதியாக உணர்ந்தாள்.

'அது மட்டும்தான் காரணமா...?' இந்தக் கேள்விக்கு மனச்சாட்சியாக இருந்தாலும் கூட, அதற்குப் பதில் சொல்லும் நிலையில் அவள் இருக்கவில்லை.

'இனிமேல் எதையும் யோசிக்காதே...' மனதுக்குக் கட்டளையிட்டவள்... காலை டீப்பாயில் தூக்கி வைத்து விட்டுத் தலையை சோபாவில் சாய்த்துக் கொண்டாள்.

'இனிமேல் நீ நீயாகவே இரு... எதற்காகவும், யாருக்காகவும் உன் தனித்தன்மையை இழக்காதே. உறுதியாக இரு... அந்தப் பிரதீப்பை நெருங்க விடாதே...!' முடிவெடுத்தாள். இவ்வளவு குழப்பத்திலும், அவனை ஏன் நினைக்கிறோம் என்பதைச் சிந்தித்திருந்தால்...

இருக்கும் மனநிலையில் தன்னையே எதையாவது செய்திருப்பாளோ என்னவோ... அதைப் பற்றிக் கவலைப் படவே இல்லை அவள். நந்தினியின் கருவிழிகள் இமைகளுக்குள் சுழல்வதை வைத்து, அவள் மனக் குழப்பத்தில் இருப்பதை உணர்ந்து கொண்டாள் ரோஸ்.

ரோஸின் அச்சத்தையும், நந்தினியின் மேல் அவள் வைத்த பாசம் கடக்க வைத்தது. மெதுவாக அவளை நெருங்கினாள். ரோஸ் தன்னை நெருங்குவது புரிந்தாலும், இமைகளைப் பிரிக்க மறுத்து அசையாமல் இருந்தாள்.

"அக்கா...! இன்னைக்கு என்னவோ ரொம்ப களைப்பாத் தெரியறீங்க... போய் குளிச்சுட்டு வாங்க, சாப்பிடலாம்..." ஒரு பெரிய பூகம்பத்தை எதிர்பார்த்து, மெதுவாகச் சொன்னாள்.

இமைகளை மெதுவாகப் பிரித்தவள், "ரொம்ப டயர்டா இருக்கு... சாப்பாட்டை எடுத்துட்டு ஒரு ஸ்பூன் போட்டு இங்கேயே கொண்டு வா..." சொல்லி விட்டு இமைகளை மூடிக் கொண்டாள்.

ஒரு நிமிடம் தன்னை மறந்து அவளை வெறித் தவள், இறுதியில் தன் கையைக் கிள்ளிப் பார்த்துக்

கொண்டாள். அக்கா என்று அழைத்ததற்கே எகிறி அடிப்பாள் என்று எதிர்பார்க்க, சாப்பாட்டை ஹாலுக்கே கொண்டு வரச் சொன்னது மற்றொரு ஆச்சரியம், அதையெல்லாம் விடப் பெரிய ஆச்சரியம்... அவள் இவ்வளவு பொறுமையாகப் பேசி அவள் கேட்டதே இல்லை.

ரோஸின் அதிர்ச்சியையோ, ஆராய்ச்சியையோ கவனிக்கும் நிலையில் நந்தினி இருக்கவில்லை. தன் அதிர்ச்சியைக் கைவிட்ட ரோஸ்... வேகமாகக் கிச்சனுக்குச் சென்று சாப்பாட்டைத் தட்டில் போட்டு எடுத்து வந்தாள்.

தட்டை நந்தினியின் கரத்தில் கொடுக்காமல்... ஸ்பூனால் கிண்டியவள், நந்தினியின் வாயின் அருகே கொண்டு செல்ல, வெடுக்கென அவள் கையில் இருந்த பாத்திரத்தைத் தட்டிவிட்டு எழுந்து சென்றாள்.

செல்லும் முன்னர், "என்னை நிம்மதியாவே இருக்க விடாதீங்க...!" அவளிடம் கத்தியவள், விடுவிடுவென்று அறைக்குச் சென்று மறைந்தாள்.

ரோஸ் பெரிதாக அதிர்ந்து விடவில்லை. மாறாக... நந்தினி சாப்பிடாமலே சென்று விட்டாளே என்ற வருத்தம் மேலோங்கியது. அறைக்கு வந்த நந்தினிக்குத் தன் செய்கையில் தன் மீதே ஆத்திரம் வந்தது.

ரோஸிடம் அவள் நடந்து கொள்ளும் முறை ஒன்றும் புதிதல்ல. ஆனாலும் இன்று முழுதும் நடந்த குழப்பத்தால்... அனைத்தையும் சாதாரணமாக அவளால் எடுக்க முடியவில்லை.

அவள் குழப்பத்தில் இருக்கும் அதே நேரம்... அவளது அலைபேசி அவளை அழைத்தது. ஒரு நொடி கூடத் தாமதிக்காமல் அதை ஆன் செய்து காதில் வைத் தாள்.

"சார்! நான் பாலா..." அந்தப் பக்கம் அவன் தயக்கமாக இழுக்க...

"ம்ம்..." ஒற்றை வார்த்தையை அவனுக்குப் பதிலாக அளித்தாள்.

அவனுக்கு அதுவே போதுமானதாக இருக்க, "சார்... அந்தக் கோபால் கேஸ் சி.பி.ஐ.க்கு மாத்தப் போறதா ஒரு நியூஸ் வந்துது. அதான் அதை உங்ககிட்டே சொல்லிட லாம்னு..." இதைச் சொல்லும் பொழுதே அவன் குரல் உள்ளே போய் விட்டது.

"என்ன...?" அந்த வார்த்தையில் அவள் வெளிப் படுத்திய அதிர்ச்சியை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவன் அமைதியாகி விட, நொடியில் தன்னை சமாளித்தவள், "எப்போ மாத்துறாங்களாம்...?" ஒருவித இறுக்கத்தோடு அவள் வினவ...

"இன்னும் ஒரு மாதத்தில்... வந்துடுவாங்கன்னு... இங்கே கட்சி வட்டத்தில் பேசிக்கிறாங்க...!"

"அதுக்கு நான் விட மாட்டேன்...!" அவன் முடிக்கும் முன்பே அவள் மொழிந்தாள்.

"அப்போ நான் வைக்கிறேன்..." அவள் பதிலை எதிர்பாராமல் அவன் வைத்து விட்டான்.

நந்தினிக்குத்தான் இந்த செய்தி பெரும் அதிர்ச்சியை அளித்தது. அவளது நான்கு வருட கமிஷனர் வாழ்க்கை யில் ஒரு கேஸ் கூட அவள் கையை விட்டு சி.பி.ஐ.க்குப் போனதில்லை.

எவ்வளவு பெரிய சவாலான கேசாக இருந்தாலும்... பத்தே நாட்களுக்குள் குற்றவாளியை அடையாளம் கண்டு விடும் அவளுக்கு, இந்தக் கோபால் கேஸ் பெரிய சவாலாகவே இருந்தது.

அவளும் தொடர்ந்து முயன்று கொண்டுதான் இருக்கிறாள். ஆனால், பலன் மட்டும் பூஜ்யமாக இருக்கிறது. ஆனாலும் விடுவதில்லை என்று அவளும் தொடர்ந்து முயன்று கொண்டுதான் இருக்கிறாள். அப்படியிருக்கும் வேளையில்... கேஸ் சி.பி.ஐ.க்குப் போகிறது என்றால்... தனது டிபார்ட்மென்ட்டுக்கே அவமானம்.

தான் இருக்கையில், தனது டிபார்ட்மென்ட்டுக்கு இப்படி ஒரு அவமானம் வருவதைத் தன்னால் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. அதுவும் தன் கையில் இருக்கும் கேசை வாங்கி... வேறு ஒரு காவல் அதிகாரியின் கையில் கொடுத்தாலே அவளால் தாங்கிக் கொள்ள முடியாது.

அப்படியிருக்கையில் சி.பி.ஐ.யிடமா...? அவள் தேகம் முழுவதும் ஆத்திரத்தில் கொந்தளித்தது. நாளை

இதை என்னவென்று பார்த்தே ஆக வேண்டும். இதுவரை இருந்த களைப்பு ஓடிப்போய் ஒளிந்த இடம் தெரிய வில்லை.

இதற்கு மேல் எதையும் சிந்திக்க முடியாது என்பது போல் அவள் மூளை மரத்துப் போனது. ஒரே நாளில் வாழ்க்கை தலைகீழாகப் போனதாக உணர்ந்தாள்.

ஏதாவது செய் என மூளை கட்டளையிட, செயல் படுத்த முடியாமல் கை கால்கள் சோர்ந்து போனது. உடை கூட மாற்றாமல்... படுக்கையில் விழுந்து கண்களை மூடிக் கொண்டாள்.

உள்ளத்தில் களைப்பா...? உண்ணாத களைப்பா...? ஏதோ ஒன்று அவளை ஆக்கிரமிக்க, உறக்கம் அவள் கண்களைத் தழுவியது. நந்தினியைச் சாப்பிட வைக்கலாம் என்று தேடி வந்த ரோஸ்... நந்தினி உடை கூட மாற்றாமல் உறங்குவதைக் கண்டு கண்கள் பனிக்க அங்கிருந்து அகன்றாள்.

அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தவாறு, புலம்பிக் கொண்டிருக்கும் நண்பனை அலுப்பாகப் பார்த்தான் சரவணன்.

"அது எதுக்கு முதல்ல வாயை விடணும்... பிறகு இப்படிப் புலம்பணும்...? உனக்கே இதெல்லாம் நல்லா இருக்காடா...? நான் மதியம் சாப்பிட்டதுடா... இப்போ ராத்திரி ஆச்சு... சாயங்காலம் வந்ததில் இருந்து புலம் பிட்டு இருக்க...

"நீயும் நிறுத்துவ... நாமளும் சாப்பிடப் போகலாம்னு பாத்தா... நான்ஸ்டாப்பா இப்படிப் புலம்புறியேடா... இப்போ நிறுத்துற ஐடியா இருக்கா, இல்லையா...? இல்லைன்னா சொல்லிடுடா... ப்ரிஜ்ஜில் இருக்கிற எதையாவது எடுத்துத் தின்னுட்டு கட்டையைச் சாச்சுக்கிறேன்..." பெரிதாகக் கொட்டாவி விட்டவாறே சொன்னான் சரவணன்.

"என்னது...? கட்டையைச் சாய்க்கப் போறியா...? உன்னை அப்படியே கட்டையால் அடிச்சே கொன்னுடுவேன்... நான் எவ்வளவு ஃபீலிங்கா பேசிட்டு இருக்கேன்... உனக்கு நக்கலா இருக்கா...?" கடுப்பானான் பிரதீப்.

"ஆடு நனையுது, ஓ.கே... ஆட்டுப்புழுக்கை எதுக்குடா நனையணும்...?" சரவணன் அதே குரலில் சொன்னான்.

"இது என்னடா பழமொழி. அது... எள்ளுதான் எண்ணெய்க்கு காயுது... எலிப்புழுக்கை எதுக்குக் காயணும்னுதானே வரும்..." பிரதீப் சந்தேகம் கேட்க...

"இப்போ என்னடா... புழுக்கையை மாத்துனதுதான் உன் பிரச்சினையா...?" பிரதீப்பிடம் சண்டைக்குப் போனான்.

"நான் என்ன சொல்ல வந்தால்... நீ என்னடா சொல்லுற...?" அப்பாவியாகக் கேட்டான்.

"பின்ன என்னடா... மதியத்துக்குப் பிறகு பச்சைத் தண்ணி கூட கண்ணுல காட்டாமல்... காது ஜவ்வு கிழியிற வரைக்கும் பேசுனது நீ. எனக்கு மயக்கமா வருது... அரை மயக்கத்தில் எல்லாம் தெளிவா எல்லாம் பேச முடியாது...

"முடிஞ்சா அட்ஜஸ் பண்ணிக்கோ... இல்லையா படுத்துத் தூங்கு... ஒரு புழுக்கையை மாத்துனதுக்கு இம்புட்டுப் பாடு..." சொன்னவன், போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்து விட்டான்.

அவனது செய்கையைப் புரியாமல் பிரதீப் பார்க்க, 'ஆத்தாடி... என் பாட்டியை விட மோசமானவனா இருக்கானே... புலம்பியே காதை ஓட்டை ஆக்கிட்டான். இவன்கிட்ட இருந்து தப்பிக்க என்னவெல்லாம் பிளான் பண்ண வேண்டி இருக்கு...!' கிர்ரென தலையை உதறிக் கொண்டவன், போர்வையை விட்டு வெளியே வரவே இல்லை.

சிறிது நேரம் அசையாமல் நின்ற பிரதீப், "ப்ச்... என்னதான் இருந்தாலும் நான் நந்து கிட்ட அப்படிப் பேசியிருக்கக் கூடாதுடா...!" சரவணனின் அருகில் அமர்ந்தவாறு மெல்லியதாகப் புலம்ப...

"மறுபடியும் முதல்ல இருந்தா...?" அலறியவாறே எழுந்து அமர்ந்து விட்டான்.

"விளையாடாதேடா..." அவன் முதுகில் அறைந்த வாறு சொன்னான்.

"சத்தியமாச் சொல்லுறேன்டா... பிச்சைக்காரனுக்குப் பிரெண்ட்டா கூட இருந்துடலாம்டா.... ஆனா இந்த லவ் பண்ணுறவனுக்கு மட்டும் பிரெண்ட்டாவே இருக்கக் கூடாதுடா... புலம்பியே சாவடிக்கிறடா...!" தலையிலேயே அடித்துக் கொண்டான்.

"உனக்கும் காதல் வந்தால் தெரியும்டா...!" பிரதீப் சொல்ல,

"எது... இந்த மணியடிச்சு... காதல்... கண்டதும் காதல்... காணாமல் காதல்... உனக்கு...!" மேலே சொல்லப் போன அவன் வாயை அடைத்தான்.

"வேணாம்டா... எதையாவது சொல்லி என் மனசைக் காயப்படுத்தாதே. நீ சொல்வது போல் கடமைக்காக வந்த காதலாகக் கூட இருக்கட்டும். ஆனா... என் அம்மா எனக்காகப் பார்த்து வைத்த தேவதை அவள். அவளை நான் விடுவதாக இல்லை...!" அழுத்தமாகச் சொன்னான்.

"அடேய்... அதான் இவ்வளவு தெளிவா இருக்கல்ல... பிறகு என்ன...? எதையோ செய்து சீக்கிரம் அவளைக் கல்யாணம் செஞ்சுக்கிற வழியைப் பாரு... அதை விட்டுட்டு... இப்படிச் செஞ்சுட்டேன்... அப்படி செஞ்சுட்டேன்னு சொல்லி என் காதைப் பஞ்சர் ஆக்காதே...

"தாங்க முடியலை... ஏற்கெனவே பசி மயக்கத்தில் காது வேற அடைக்குது. நிம்மதியாவும் சாப்பிட விடமாட்டே.. இப்போ தூங்கவும் விடமாட்டேன்னா என்ன அர்த்தம்...? மவனே கடுப்பானேன்... பிறகு கடிச்சு வச்சுடுவேன்... ஆமா..." விரல் நீட்டி எச்சரித்தான்.

மாலையில் வந்தது முதல்... இரவு ஒன்பது மணி வரைக்கும் புலம்பினால்... பாவம் அவனும் என்னதான் செய்வான்.

"சரவணா... எனக்கு ஒரு ஹெல்ப் பண்ணுறியா...?" அவன் குரலில் இருந்த தீவிரம், சரவணனைக் கவனிக்க வைத்தது.

"என்னன்னு சொல்லுடா... உடனே செய்யுறேன்... ஆனா தயவு செய்து... அந்த லேடி வால்ட்டர் வெற்றிவேல் கிட்ட மட்டும் லவ் லெட்டர் கொடுக்கிறதைத் தவிர..." சரவணன் சிரிக்காமல் சொல்ல, பிரதீப்புக்குத்தான் கோபம் வந்தது.

"இப்போ நான் சொல்லுறதைக் கேக்கப் போறியா... இல்ல மறுபடியும் புலம்பவா...?" பிரதீப் மிரட்ட...

"இதுக்கு அந்த லவ் லெட்டரே பரவாயில்லை..." வாய்க்குள் முனகிக் கொண்டே அவனைப் பார்க்க, பிரதீப் அவனை முறைத்தான்.

"சும்மாடா... நீ என்னன்னு சொல்லு..."

"எனக்கு அர்ஜென்ட்டா ஒரு போன் வேணும்..."

"ஏன்டா... இன்னும் ப்ரொபோஸ் பண்ணவே இல்லை... அதுக்குள்ளே கிப்டா... உனக்கே இது ஓவரா இல்ல..." நக்கலாகக் கேட்க... பிரதீப்பின் கண்ணில் தெரிந்த கொலைவெறியில் கலவரமானான்.

"என்ன மாடல் போன்டா மாப்ள வேணும்... ஆப்பிள் எஸ்5 வே வேணும்னாலும் வாங்கித் தரேன்டா... உனக்கு வாங்கித் தராமல் யாருக்கு வாங்கித் தரப் போறேன், சொல்லு...!" அவன் தாடையைப் பிடித்துக் கொஞ்சி ஐஸ் வைத்தான்.

அவனது ஜஸில் சிரித்தவன், "உன் ஆசையை ஏன் கெடுப்பானேன்... ஆப்பிள் எஸ்6 வாங்கித் தாடா..." அவனும் பெருந்தன்மையாகச் சொன்னான்.

"என் நாப்பதாயிரம் காலியா... ம்ம்... சரி, இப்போ எதுக்கு உனக்குப் போனுன்னு சொல்லு..."

விஷயத்துக்கு வந்தான்.

"போன் மட்டும் போதாது... அதோட ஒரு சிம்மும் வேணும்... அதுவும்..."

"என்ன அது நந்தினியோட பிறந்த நாள் தேதியில் இருக்கணுமா...? காதலிச்சாலே இப்படி ஏதாவது கிறுக்குத்தனம் செய்யணும்னு ஏதாவது இருக்காடா... அவளுக்கே அவ பொறந்த தேதி நினைவிருக்காது. இதில் இவன் வேற..."

ப்ரதீப்பைப் பேசவே விடாமல் குறுக்கே புகுந்து பேசினான்.

அவன் பேசி முடிக்கும் வரை பொறுமை காத்தவன், "ஏன்டா, அவசரத்துக்குப் பொறந்தவனே... நான் சொல்ல வர்றது எதையுமே முழுசா கவனிக்க மாட்டியாடா...?

"மவனே... நீயும் ஒரு பொண்ணு பின்னாடி லோலோன்னு சுத்தி... அவ காதலுக்கு வேண்டித் தவம் கிடக்கல... அப்போ பாருடா... எதையெல்லாம் நீ பைத்தியக் காரத்தனம்னு சொல்லுறியோ... அதையெல்லாம் ஜொள்ளு விட்டுச் செய்யல... இல்ல, செய்வடா... என் சாபம் உன்னைச் சும்மா விடாதுடா..."

அவன் வாக்கு பலிக்கப் போவது அப்பொழுது அவனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைதான். பாவம், சரவணன்.

"போடா... கண்ணகிக்குக் கசின் ப்ரதர்ன்னு உனக்கு நினைப்பா... உன் சாபமெல்லாம் என்னை எதுவும் செய்யாது. முதல்ல என்னன்னு சொல்லு..." தோளைக் குலுக்கி விட்டுக் கேட்டான்.

ப்ரதீப் சொன்னதைக் கேட்ட சரவணன் திகைத்துப் போனான். "ப்ரதீப்... நீ தெரிஞ்சுதான் சொல்லுறியா...?" அதிர்ச்சி விலகாமல் கேட்டான்.

"தெரியாமல் சொல்லுறதுக்கு நான் ஒன்றும் பச்சைப் பிள்ளை இல்லை சரவணா. நாம எதுக்காக இங்கே வந்திருக்கிறோம். நமது நடவடிக்கை... நம்ம வேலை எல்லாத்துக்கும் சம்பந்தப்படுத்தித்தான் நான் இதைச் சொல்லுறேன்..."

"நீ அதுக்கு மட்டும்தான் சொல்லுறேன்னு நான் நம்பிட்டேன்...!" நண்பனை ஆழ்ந்து பார்த்துச் சொன்னான்.

"என்னால் நந்தினியைத் தனியா போராட விட முடியாது சரவணா. எப்பொழுதும் அவளோடவே நான் இருக்கணும்.. அதுக்கு நீ இதை செய்தே ஆகணும்... இதனால் பின்னாடி எவ்வளவு பெரிய பிரச்சினை வந்தாலும் நான் பார்த்துக்கிறேன்...!" அழுத்திச் சொன்னான்.

'இது எங்கே போய் முடியும்?' என்று எண்ணுகையில் சரவணனுக்குக் கவலையாக இருந்தது. ஆனால், இந்த முடிவை எடுத்த பிறகுதான்... நந்தினியின் அருகிலேயே இருபத்தி நான்கு மணி நேரமும் இருக்கப் போகிறோம் என்று அறிந்து நிம்மதியாக இருந்தான்.

நந்தினி விலக நினைக்க... நெருங்கிச் செல்லும் இவன் எண்ணம் ஈடேறுமா...?



விலக நினைக்கும் உள்ளம்
விலகிச் சென்றால் தவிப்பதேன்...?
விந்தையான மனநிலை...!
விளங்கவில்லை எனக்கு...!

நந்தினி எவ்வளவு குழப்பத்தில், தாமதமாக உறங்கியிருந்தாலும், வழக்கமாக எழும் ஐந்து மணிக்குச் சரியாக விழிப்பு வந்து விட்டது. அன்றைய விடியல் வழக்கமாகவே விடிந்தது. அவளது நடவடிக்கையிலோ... அன்றாடச் செயல்களிலோ எந்த மாறுதலும் இருக்கக் கூடாது எனத் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

காலை ஓட்டத்துக்கு வழக்கமான மிடுக்குடன் இறங்கி வந்த அவளை... விழி விரியப் பார்த்தாள் ரோஸ். காலை வணக்கத்தை உதிர்த்து விட்டு, கந்தன் ஸ்டார்ட் செய்த வண்டியில் ஏறி அமர்ந்தாள்.

"கந்தா... ஆபீஸ்ல என்னதான் நடக்குது...? நான் உள்ளே வைத்தவன் வெளியே வந்து என் முன்னாடியே

நிக்கிறான்... அவனோட டீட்டெய்ல் கேட்டேன்... பதிலே இல்லை... எதுவுமே சரியா இல்லையே...!" அவனை ஆழம் பார்த்தாள்.

"சார்... எனக்கு எதுவும் தெரியாது... உங்களுக்குத் தெரியாததா...?" பூசி மெழுகினார்.

அவரது பதிலில் கிளர்ந்த எரிச்சலை முகத்தில் காட்டியவள்... இதற்கு மேல் பேசினால் தனக்கு நல்லதல்ல என்பதுபோல் அமைதியானாள். அமைதியாக இருப்பதாகக் காட்டிக் கொண்டாலும், கோபால் விஷயம் மனதை அரித்துக் கொண்டே இருந்தது.

அவளது அமைதியை எப்பொழுதும் போல்... அவரால் பார்க்க மட்டுமே முடிந்தது. நேற்றைய அவளது மாற்றம் தொடரும் என அவர் எதிர்பார்க்க, பழைய நந்தினியாக அவள் மாறியிருப்பது... அவருக்குக் கவலையை அளித்தது.

துவங்கிய இடத்தில் இருந்து... இன்னும் ஒரு அடி கூட முன்னேறாதது அவளுக்குப் பெரிய தலைவலியைக் கிளப்பியது.

கோபால்... ஒரு மத்திய மந்திரி... மிகவும் நேர்மையானவர். அவரது சொந்த விஷயமாகச் சென்னைக்கு வந்தபொழுது... ஒரு விபத்தில் சிக்கி மரணமடைந்து விட்டார். அதைச் சாதாரண விபத்து என்று ஏற்றுக் கொள்ள முடியாதவாறு... அவரது வாகனத்தின் பிரேக் ஒயர் அறுந்து இருந்தது.

அதோடு நில்லாமல்... மந்திரியின் வாகனம் செல்லும் வேளையில்... அவரது வண்டிக்கு முன்னால் சென்ற வாகனங்களை விட்டு விட்டு, சரியாக மந்திரியின் காரை அந்த லாரி குறி வைத்துத் தாக்கியது சந்தேகத்தை அதிகரித்தது.

லாரியை மடக்கி விட்டார்கள். ஆனால், அது திருட்டு லாரி என்பது விசாரணையில் தெரிய வந்தது. அதை ஓட்டியது யார் என்பதையோ, அதற்குக் காரணமானவர் யார் என்பதைக் கண்டறியவோ முடியாமல் திணறி னார்கள்.

எவ்வளவோ வழிகளில் முயன்றும்... பலன் மட்டும் பூஜ்யமே. விபத்து நடந்த இடத்தில் கிடைத்தது ஒரு பர்ஸ் மட்டுமே. வாகனத்தைச் சோதனை செய்ததில்... ஒரு போட்டோவும்... சில பில்களும் இருந்தது. அதைப் பற்றி விசாரிக்கையில், அது சில வருடங்களுக்கு முன் காணாமல் போன ஒருவனின் புகைப்படம் என்று தெரிந்தது.

அவனைப் பற்றி விசாரிக்கையில், அவன் மாய மாகவே இருந்தான். வேறு தகவலும் இல்லாமல்... கோபாலின் அரசியல் விரோதிகள் பின்னாலும் அலைந்து திரிந்ததுதான் மிச்சம்... எதுவும் முன்னேற்றம் இருக்க வில்லை. நந்தினி சென்னைக்கு வந்தவுடன் கையில் எடுத்த முதல் கேஸ் இது.

பாதைகள் அடைக்கப்பட்டு... இருட்டு அறையில் அடைத்தது போல்... எந்தப் பக்கம் செல்லவென்று தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறாள்.

ஏதாவது ஒரு சிறிய துப்பாவது கிடைக்குமா என்று அவள் ஆராய... அவளது விசாரணையே முடியும் முன்னர்... கேஸை சி.பி.ஐ.யிடம் ஒப்படைப்பதை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இவ்வளவு குழப்பத்துக்கு மத்தியிலும், வழக்கமான அவளது பணிகள் செவ்வனே முடிய... அவள் அலுவலகம் கிளம்பும் வேளையில்... அவளது அலை பேசிக்கு ஒரு அழைப்பு வந்தது.

புது எண்ணாக இருக்கவே சிறு யோசனையோடே எடுத்தாள். அந்தப் பக்கம் சொன்னதைக் கேட்டவளின் ரத்தம் கொதித்தது.

"பஸ் இப்போ எங்கே போயிட்டு இருக்கு...? ஓ...! அடுத்த பத்து நிமிஷத்தில் நான் அங்கே இருப்பேன்..." இறுக்கமாகச் சொன்னவள், யூனிஃபார்ம் அணியும் எண்ணத்தைக் கைவிட்டவள், ஒரு புடவையை அவசர மாக அணிந்து கொண்டு... அடுத்த நிமிடம் வண்டிக்கு விரைந்தாள்.

நந்தினியின் முக இறுக்கத்தில் இருந்தே... விஷயம் பெரியது என்பதைப் புரிந்து கொண்ட கந்தன், நந்தினி கூறிய இடத்துக்கு வாகனத்தை விரட்டினார். அதைவிட அவளது உடை மாற்றம்... குற்றவாளியை நேரடியாகப் பிடிக்கப் போவதை உணர்த்தியது.

ஒரு பஸ் ஸ்டாப்பிற்குச் சற்றுத் தூரத்தில் இறங் கியவள்... கந்தனை ஒரு பார்வை பார்க்க... அவள்

பார்வையின் பொருள் உணர்ந்து வண்டியை மறை விடத்தில் விடச் சென்றார்.

அவள் பஸ் நிறுத்தத்தை அடைய... அங்கே நின்று கொண்டிருந்தவர்களின் பார்வையைச் சட்டை செய்யாமல்... பஸ் வரும் திசையைப் பார்த்தவாறு நின்றாள்.

பஸ் வந்தவுடன் அதில் ஏறியவளின் கண்கள் அவசரமாகத் துழாவ... பஸ்சின் நடுப் பகுதிக்கு விரைந் தாள்.

அங்கே சில கல்லூரி மாணவிகள் அவளை ஆர்வமாகப் பார்க்கவே... அவர்களுக்குப் பார்வையால் தைரியம் அளித்தவள்... அவர்களின் நடுவில் சென்று நின்றாள்.

அதற்கு முன்பே கண்டக்டரிடம் எதையோ உரைத்தவாறே சென்றாள். அவளது இந்த உடை மாற்றத்தால் பொதுமக்களுக்கோ... அங்கே கல்லூரி மாணவிகளைக் கேலி செய்து கொண்டிருந்த குற்றவாளிகளுக்கோ அவளை அடையாளம் காண முடியவில்லை.

அவள் தானாக அங்கே செல்லவே, "ஏய்... ஒரு கோழி தானா வந்து வலையில் சிக்குதுடா...!" ஒருத்தன் கூட்டத்தில் குரல் கொடுக்க...

"மாப்ள... அப்படியே இங்கேயும் தள்ளுடா..." கோரசாக மற்றவர்கள் கத்த... அந்த இடத்தில் சிறு குழப்பம் நிலவியது.

பொதுமக்கள் சிலரோ, "காலம் கலிகாலம் ஆயிடுச்சு...",

"கலி முத்திப் போச்சு...",

"ச்சே... ச்சே... பஸ்ஸிலேயே என்ன இது...?"

அவளைத் தவறாகப் புரிந்து கொண்டு பேச,

அதைக் கேட்ட அவள் தன் நிலையில் மாறாமல் இருக்க, அதைக் கேட்டுக் கொண்டிருந்த ப்ரதீப்புக்கு ரத்தம் கொதித்தது.

அவனும் நந்தினிக்கு அடுத்த ஸ்டாப்பில்தான் பஸ்ஸில் ஏறினான். ஏறியவுடனே... நந்தினி ஏறியிருக்கக் கூடாது என்றுதான் அவன் வேண்டினான். ஆனால்... அவனுக்கு முன்பே அவள் ஏறியது அவனுக்கு வருத்தத்தை அளித்தது.

அதைவிட... அவன் காதில் விழுந்த பேச்சுக்கள்... அவனை மிகுந்த வருத்தத்துக்கு உள்ளாக்கியது. ஒரு பெண்ணால் ஐந்து ஆண்களுக்கு மத்தியில் நிற்கும் பொழுதும், கொஞ்சம் கூட அச்சமே இல்லாமல் நிற்க முடியுமா...? வியந்தான்...

அதை விட... சுற்றி இருந்தவர்களின் பேச்சை... ஒரு சாதாரணப் பெண் கேட்டால்... கூனிக் குறுகிப் போவாள். அப்படியிருக்கும்போது... நந்தினியின் அமைதி அவனைத் தாக்கியது.

சுற்றி இருக்கும் அந்தத் தடியர்களின் அத்து மீறல்களைச் சட்டை செய்யாமல் அவள் இருக்க... ப்ரதீப்

இதற்கு மேல் முடியாது என்பதுபோல்... வேகமாக அவர்களை நெருங்கினான். அவனை அந்த நேரம் அங்கே எதிர்பார்க்காமல்... ஒரு நொடி திகைத்தவள்.. அவன் செய்யப் போவதை உணர்ந்து அவனைப் பார்வையால் தடுக்க முயல்கிறாள்.

அவனோ அவளைக் கண்டு கொள்ளாமல் நேராகச் சென்றவன்... அவர்களில் இருவரை அறைய... பிரச்சினை வெடிக்கிறது.

"ஸ்டாப் தி பஸ்..." நந்தினியின் குரலில், அடுத்த நிமிடம் பஸ் நின்றது.

ஏற்கெனவே பஸ் கமிஷனர் அலுவலகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்ததால், நகரத்தின் நெருக்கத்தை விட்டு விலகி இருந்ததால்... பஸ் வழியில் நின்றது பெரிய போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்த வில்லை.

பஸ் நின்று விடவே... பொதுமக்கள் அனைவரும் வேகமாக இறங்கி விட்டார்கள்... நந்தினியும் அவர்களும் மட்டுமே பஸ்ஸில் எஞ்சி இருந்தார்கள். நந்தினி தடுக்கும் முன்பே...

அவர்கள் பிரதீப்பின் மேல் பாய்ந்திருந்தார்கள். சரவணன் அவனுக்குத் துணைக்கு வந்தான். அவர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிட... நந்தினிக்குக் கோபம் தலைக்கேறியது.

'இவனை யார் இங்கே அழைத்தது...?' எரிச்சல் குமுற... அவர்களைத் தடுக்கும் எண்ணம் கூட

இல்லாமல்... அவனைப் பார்வையில் எரித்தாள். அவளைப் பார்க்கும் எண்ணமில்லாமல், சண்டையிடுவதிலேயே அவர்கள் குறியாக இருக்க... இறுதியில் போலீஸ் வாகனத்தைக் கொண்டு வந்து விட...

ஜீப்பில் இருந்த போலீசார் அனைவரையும் விலக்கினார்கள். பிரதீப்பை அவர்களால் எவ்வளவு தடுத்தும் தடுக்க முடியவில்லை. அவர்களது பிடியில் திமிறியவன், கொலைவெறியில் மற்றவர்களை அடித்தான். அவன் முகத்தில் கனன்ற கோபத்தை ஒரு நிமிடம் ஆழ்ந்து நோக்கியவள்...

அடுத்த நிமிடம், "எல்லோரையும் உள்ளே ஏத்துங்க..." அவளது உத்தரவில் கந்தன் விழித்தார்.

"சார்..." அவர் தயங்கியவாறு அழைக்க... விறுவிறுவென்று சென்று... தனது வாகனத்தில் ஏறி அமர்ந்து கொண்டாள். ப்ரதீப், கோபமும்... ஆத்திரமும் குறையாதவனாக நின்று கொண்டிருக்க... அவளது ஆணை அவனை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை.

சுமோவில் இருக்கும் அவளையே இமைக்காமல் அவன் பார்த்திருக்க... அவனது பார்வையை உணர்ந்த வளால்... எவ்வளவு முயன்றும் முடியாமல் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவனது அந்தக் கோபமும் அவள் மனதை அசைத்தது. அதைவிட... அவன் கண்களில் தெரிந்த ஆழ்ந்த வருத்தம் அவளை எதுவோ செய்தது. 'ஏன்

இப்படிப் பார்க்கிறான்...?' காலையில் எடுத்த உறுதியான முடிவிற்கு மாறாக... மனம் அவனைப் பற்றிச் சிந்தித்தது.

அதை உடனடியாகத் துடைத்தெறிந்தவள், 'இவன் யார் என் வேலையில் மூக்கை நுழைக்க...?' மூளை கட்டளையிட, மனதின் பேச்சை அது நசுக்கியது.

ஜீப் அவளது சுமோவைப் பின் தொடர... அதில் அமர்ந்திருந்த பிரதீப்பின் மனமோ, 'நந்தும்மா... நந்தும்மா... ஏன் இப்படி இருக்கே...? உன்னால் எப்படி முடியுது...? ஹையோ... என்னால் உன்னை இப்படிப் பார்க்க முடியலையே...' அவளைக் கண்ட நாள் முதல் அவன் மனதை அரிக்கும் விஷயம் இன்றும் அவனை செல்லரிக்கச் செய்தது.

சரவணனோ, 'அவங்களுக்குத்தான் உதவி செய்யப் போனோம்... அந்த ஒரு விஷயத்துக்காகக் கூட இல்லாமல்... எங்களையும் இவனுங்களோட ஜீப்பில் வர வச்சுட்டாங்களே... எல்லாம் இவனால்...!' அவள் மேல் கோபம் இருந்தாலும்... அவளை ஒருமையில் அழைக்க அவனால் முடியவில்லை. அவள் மேல் அவ்வளவு மதிப்பு வைத்திருந்தான் அவன்.

அவன் பிரதீப்பைப் பார்க்க... நண்பனின் மனம் படும் வேதனையை அவன் முகம் பிரதிபலிக்க... அவன் கரத்தைப் பிடித்து அழுத்தினான்.

சரவணனை இமை திறந்து பார்த்தவன்... ஜீப்பில் தலை சாய்த்து அமர்ந்து கொண்டான்.

கமிஷனர் அலுவலகம் வந்து விட... வாகனத்தில் இருந்து இறங்கும் முன்னர், "எல்லோரையும் ரெண்டு செல்லில் போடுங்க...." போகும் போக்கில் சொல்லி விட்டு இறங்கிச் சென்றாள்.

அவளது ஆணையை வியப்பாய்ப் பார்த்தவர், 'இவங்களை புரிஞ்சுக்கவே முடியலையே...?' எண்ணி யவர்... எதையும் சொல்லாமல் அந்த ஜீப்புக்கு விரைந்தார்.

"இவனுங்களை எல்லாம் செல்லுக்குள்ள வைங்க... இவங்களை நான் பார்த்துக்கிறேன்..." அவர்களை அனுப்பி விட்டு, ப்ரதீப்பை அழைத்துக் கொண்டு ஓய்வு அறைக்குச் சென்றார்.

"என்ன... சார் எங்களை மட்டும் ஸ்பெஷலா கவனிக்கச் சொன்னாங்களோ...?" சரவணன் நக்கலாகக் கேட்டான்.

கந்தன் பதில் சொல்லுமுன்... "அண்ணே! நீங்க போங்க... நாங்க இங்கேயே இருக்கோம்...!" அவரை அனுப்பினான்.

அவர் அங்கிருந்து சென்று விட, "இருந்தாலும் அவங்களுக்கு இவ்வளவு ஈகோ இருக்கக் கூடாதுடா... அப்படி என்னடா தப்பு செஞ்ச... எல்லாம் உன்னைச் சொல்லணும்... அதான் அவங்களே சமாளிச்சுப்பாங் கன்னு தெரியுமே... பிறகு ஏன்டா குறுக்கே போனே...?" கோபமாகக் கேட்டான்.

"ப்ளீஸ் சரவணா... என்னைக் கொஞ்சம் தனியா விடேன்...!" கெஞ்சும் குரலில் கேட்டான்.

"என் தலையெழுத்து... அவங்க என்னன்னா ஆம்பளை மாதிரி முறுக்கிட்டு அலையுறாங்க... நீ என்னன்னா... அவங்க விஷயத்தில் மட்டும் கெஞ் சிட்டு அலையுற... இதெல்லாம் எங்கே போய் முடியும்னு தெரியலைடா...

"உன்னோட சேர்ந்ததுக்கு எனக்கு இன்னும் வேணும்... என்னவோ பண்ணித் தொலை... என்னை நிம்மதியாத் தூங்க விடு... இங்கே நாள் முழுக்க உக்காந்து வேற என்னதான் செய்யுறது...?"

புலம்பியவாறு அங்கிருந்த சோபாவில் சென்று படுத்துக் கொண்டான்.

ப்ரதீப் அங்கிருந்த ஒற்றை சோபாவில் அமர்ந்தவன், விழிகளை சோர்வாக மூடிக் கொள்ள... நினைவுகள் அனைத்தும் பின்னோக்கிச் சென்றது.

பிரதீப்... அவனுக்கு விவரம் தெரிந்த நாள் முதல்... அவனது தாய் வீட்டை விட்டு வெளியே எங்கும் சென்று கண்டதில்லை. அவன் வெளியே செல்ல வேண்டு மென்றால்... அவனது பாட்டியோ அல்லது தாத்தாவோ உடன் இருந்தார்கள்.

அவனது தாயை வெளியே அழைக்கும் வேளை களில் எல்லாம்... அவனது தாத்தாவும் பாட்டியும்... எதையாவது சொல்லித் தாயைத் தீட்டுவதைக் காணவே... தாயை வெளியே அழைப்பதை விட்டு விட்டான்.

அவனது தந்தையைப் புகைப்படத்தில் மட்டுமே கண்டிருக்கிறான். அவன் தாயின் சொந்தங்கள்... அவனது மாமா... ஆயா... தாத்தா... யார் வந்தாலும் வீடு போர்க்களமாக மாறிவிடும். அவர்கள் பிரதீப் மற்றும் அவனது தாயைத் தங்களுடன் அழைத்துச் செல்ல முயல... அதற்கு அவனது தாத்தா பாட்டி அனுமதிக்கவே இல்லை.

அவனது தாய் கலைவாணியே ஒரு கட்டத்தில் அவர்களை வர வேண்டாம் என்று சொல்லிச் சத்தமிட்டு விட... அன்று அழுது கொண்டு சென்றவர்கள், அதன் பிறகு திரும்பி வரவே இல்லை.

கலைவாணியின் வாழ்க்கை ஒரு அறைக்குள் ளேயே முடங்கி இருந்தது. அவருக்கு இருக்கும் ஒரே ஆறுதல்... அவரது அறையில் இருக்கும் ஒற்றை ஜன்னலே. காலை விடிந்தது முதல்... இரவு உறங்கச் செல்வது வரை... ஜன்னல் வழியாக வேடிக்கை பார்ப்பது மட்டுமே அவரது பொழுது போக்கு.

அதிலும் எந்தவித ஆர்வமும் இல்லாமல்... சிந்தை முழுவதும்... இருட்டாகிப் போன தன் எதிர்காலத்தை நினைத்துக் கலங்கியவராகவே இருப்பார். தன் மகனை, அவனது உணர்வுகளை, ஆசைகளை நிறைவேற்ற முடியாமல், பெயருக்கு அம்மாவாக இருக்கும் நிலையை நினைத்துக் கலங்குவார். ஆனால், அவர் நினைத்தாலும் அவரால் அந்த அறையை விட்டு வெளியே வர முடியாது. அப்படியே வந்தாலும்... கிச்சன் வரை மட்டுமே அவரது சுதந்திரம் இருந்தது.

ப்ரதீப் அவர் வயிற்றில் இருக்கும் பொழுதே... அவரது கணவன் ஒரு கலவரத்தில் காலமாகிவிட... இளம் விதவையான அவரை... பழமையில் ஊறிப் போன சுபாஷின் பெற்றவர்கள்... விடியா மூஞ்சி என்று அவளை அடக்கியே வைத்தார்கள்.

வீட்டை விட்டு வெளியில் செல்லவோ... மற்றவரிடம் பேசுவதையோ கூட அனுமதிக்கவில்லை. விதவை என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அவளை அடக்கியே வைத்தார்கள். அவர்களை மீறிச் செல்லும் எண்ணமில்லாமல்... அமைதியாகவே இருந்தாள் கலைவாணி.

அதைவிட திருமணமான புதிதில்... எந்தச் சூழலிலும் அவள் தன் வீட்டையோ... பெற்றவர்களையோ விட்டுப் போகக் கூடாது என்ற சுபாஸின் கோரிக்கையே அவளைக் கட்டி வைத்தது. அவளைக் கூட்டிச் செல்ல முயன்ற பெற்றவர்களையும், சகோதரனையும் விலக்கி வைத்தாள்.

"வாழ்க்கை இப்படியே போய் விடுமோ...? என்ன வாழ்க்கை இது ...? எதற்காக நான் வாழ்கிறேன்... யாருக்காக நான் இருக்கிறேன்...?" எனக் குழம்பித் தவித்தவரின் செவிகளில்... ஒரு பச்சிளம் குழந்தையின் அழுகுரல் விழுந்தது.

முதலில் அதைச் சாதாரணமாக எடுத்துக் கொண்ட அவருக்கு... அதைத் தொடர்ந்து கேட்ட ஒரு வயதான பெண்மணியின் குரல் இதயத்தை அழுத்தியது.

அதிலும்... 'என் மகனுக்கு எமனாகப் பொறந்துட்டு... உனக்கு பசி ஒரு கேடா...?' என ஒலித்த அந்த வார்த்தையில் இருந்த வன்மம் அவரை ஆட்டி வைத்தது.

பிறந்த குழந்தைக்கு என்ன தெரியும்...? ஹையோ எனக்கு முப்பது வயதில் துவங்கிய கொடுமை... அதற்கு முப்பது நாளிலேயா... துடித்துப் போனார். அதன் பிறகு அந்தக் குழந்தைக்காக வேண்டுவதே அவரது முதல் வேலையாகிப் போனது.

அதன் பசியைப் போக்க முடியாத நிலையில் தான் இருப்பதை நினைத்து முதல் முறையாக வருந்தினார். எப்படியாவது அவள் பசியைப் போக்க முடியுமா என்று வழி தேடினாள்.

அதற்கு முதல் வாய்ப்பு அவளது ஒன்றரை வயதில் அமைந்தது. அவள் வீட்டில் யாரும் இல்லாமல்... பசியில் அழுத வேளையில்... ப்ரதீப்பை அழைத்து ஒரு டம்ளர் பால் கொடுத்து அனுப்பினார்.

தாயை வித்தியாசமாகப் பார்த்த ப்ரதீப், மறு பேச்சு இல்லாமல்... தாய் சொன்னதைச் செய்தான். அதிலும்... தன் பாட்டி தாத்தாவிற்குத் தெரியாமல் செய்ய வேண்டும் என்பதைச் சரியாகப் புரிந்து நடந்து கொண்டான். அதிலும் தாய் முதல் முறையாக... தன்னிடம் ரகசியமாகப் பேசிச் செய்வதால்... அவனும் அதில் சுவாரஸ்யம் கொண்டான்.

ஒல்லியாக... கண்களில் உயிரைத் தேக்கி அமர்ந்திருந்த நந்தினி... முதல் முறை அவனைக்

கண்டபொழுது மிரளவே செய்தாள். ஆனால், அதன் பிறகு அவன் கையில் பாலைக் கண்டவள்.. ஆவலாக அவனை நெருங்கி... அவன் கையிலிருந்து பாலை வாங்கிக் குடித்தாள்.

தொடர்ந்த நாட்களிலும் அவனது சேவை தொடர... அவனைக் காணும் வேளைகளில் எல்லாம்... அவள் முகம் மலர்ந்து போகும். சொல்லப்போனால்... அவனைக் காணும் வேளைகளில் மட்டுமே அவள் அவ்வளவு மலர்ந்து போவாள் என்பதை அறியும் வயது அவனுக்கு இல்லை.

அதைவிட... தாய் எதற்காக அவளுக்கு உணவு கொடுக்கச் சொல்கிறார் என்பதை ஆராயும் வயது அவனுக்கு இல்லை. எனவே தாய் சொல்லைத் தட்டாமல்... தனக்கு விளையாட்டுத் தோழியாக... ரகசியத் தோழியாக ஒருத்தி இருப்பதை அவன் விரும்பினான்.

தன்னைக் கண்டவுடன் மலரும் அவளது முகம் அவனுக்கு மிகவும் பிடிக்கும். தாயிடம் சொல்லிச் சொல்லிச் சந்தோஷப்படுவான்.

ஆனால், அவனது உற்சாகம் அவரைத் தொற்றுவ தற்குப் பதிலாக... தனிமையில் தவிக்கும் அவளது நிலையை எண்ணி வருந்துவார்.

அதை மகனிடம் மறைத்தவாறே... தன் வேலை யைத் தொடர்வார். முதல் முறையாக அவள் தன்னைப் பெயர் சொல்லி அழைத்த தருணம் அவனுக்கு இன்றும் நினைவில் நிற்கிறது.

அன்று கிருஷ்ண ஜெயந்தி என்பதால்... ப்ரதீப்பிற்குக் கிருஷ்ணன் வேஷம் போட்டு விட... அதை நந்தினிக்குக் காட்டவென்று அவன் சென்றான். அவள் அவனைக் கண்டவுடன் ஓடி வந்து அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

"இது என்ன...?" அவன் கையில் இருந்த புல்லாங்குழலைக் காட்டி அவள் கேட்க, "இது புல்லாங் குழல்... ஊதினால் சத்தம் வரும்..." அவளுக்குத் தெரியாதது, தனக்குத் தெரிகிறது என்று பெருமை யாகச் சொன்னான்.

பேச்சு எதன் பக்கமோ திரும்ப... "உன் பேர் என்ன...?" அவள் கேட்க...

"ப்ரதீப்..." என்றான் அவன்.

அந்தப் பெயரை அவளுக்குச் சொல்ல வராமல்... "பெப்பி..." என்று அழைத்தாள். அதன் பிறகு அவனது செல்லப் பெயர்... அவன் தாய் அவனை அழைக்கும் பெயர்... நந்தினியின் சந்தோஷ நாமம் அனைத்திலும்... "பெப்பி..." என்ற பெயர் நிலைத்தது.

"பெப்பி..." என்று அழைத்தவாறு... ஓடி வந்து தன் கழுத்தைக் கட்டிக் கொள்ளும் குட்டி நந்தினியின் முகமும், குரலும்... அவன் காதில் இப்பொழுதும் துல்லியமாக ஒலிக்க...

கனவிலிருந்தும் . பழைய நினைவிலிருந்தும் கலைந்து எழுந்தான் பிரதீப் என்னும் பெப்பி.



இரும்புத்திரைக்குள் நானிருக்க...
உருக்க நினைக்கிறாய்...!
உருகிடுவேனா...?

பழைய நினைவுகளில் இருந்து கலைந்து எழுந்தவன்... சுற்றிலும் பார்க்க... இருக்கும் இடம் அப்பொழுது தான் நினைவுக்கு வந்தவனாக... நந்தினியைப் பார்ப்பது என்ற முடிவுடன் அறையை விட்டு வெளியேறினான்.

அவன் வெளியேறவே, அவன் பின்னால் வந்த சரவணன், "ப்ரதீப்... இப்போ நீ அவசியம் போயே ஆகணுமா...?" நந்தினியின் கோபத்தைப் பற்றித் தெரியுமாதலால் கேட்டான்.

"ஏன்டா...?" சலிப்பாகக் கேட்டான்.

"எனக்கு ஒரு சின்னச் சந்தேகம்டா... அவங்கதான் பத்துபேர் வந்தாலும் பந்தாடுவாங்களே... அவனுங்க அஞ்சு பேர்தானே இருந்தானுங்க... நீ ஏன்டா குறுக்கே புகுந்தே..." அவனை விடச் சலிப்பாகக் கேட்டான்.

சரவணனை முறைத்தான் பிரதீப்.

"இந்த முறைப்புக்கெல்லாம் குறைச்சலில்லை... நானே எங்கே அவங்க குறுக்கே புகுந்து... என் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கிடுவாங்களோன்னு எவ்வளவு கவலைப்பட்டேன் தெரியுமா...?" அதிர்ச்சி விலகாமல் சொன்னவன்... தேகத்தைச் சிலிர்த்துக் கொண்டான்.

"என்னடா குழப்புற..." புரியாமல் கேட்டான்.

"எங்கே கொஞ்சம் நல்லா யோசிச்சுப் பாரு... முதல்நாள் நாம எப்போ எப்படி நந்தினியைப் பார்த்தோம்னு..." அவன் நிறுத்தி நிதானமாகச் சொல்ல... பிரதீப்பின் முகத்தில் மெல்லிய சிரிப்பு.

"உனக்குச் சிரிப்பா இருக்கா... அம்மாடியோ...!" சொன்னவனின் நினைவு, நந்தினியை முதல் நாள் பார்த்த தினத்துக்குச் சென்றது.

நந்தினி சென்னையில் இருக்கிறாள் என்பதை அறிந்து, அவளைக் காண ஆவலாக ஓடி வந்தான் ப்ரதீப். அதிலும் அவள் ஐ.பி.எஸ். ஆபீஸர் என்பதை கேள்விப் பட்டது முதல்... அவள் போலீஸ் உடையில் எப்படி இருப்பாள் என்பதையும்... அந்தக் குட்டிப் பெண் எப்படி செயல்படுகிறாள் என்பதையும் கண்கூடாகக் காண வேண்டி உற்சாகமாக வந்தான்.

அப்படி அவளை நேருக்கு நேர் காணும்பொழுது... எப்படித் தன்னை அறிமுகப்படுத்த வேண்டும் என்பது வரை... கண்ணாடி முன் ஒத்திகை பார்த்திருந்தான்.

"இதெல்லாம் ரொம்ப ஓவர்டா...!" நண்பனின் அலம்பல் கண்டு சொன்னான் சரவணன்.

அவனைக் கண்டு கொள்ளாமல்... தான்தான் அவளது பெப்பி என்று சொல்லும் வேளையில்... அவளது பிரதிபலிப்பு என்னவாக இருக்கும் என்பதைக் கற்பனை செய்து மகிழ்ந்தான்.

தான் பெப்பி என்று சொன்னால் அவளுக்குத் தெரியுமா என்ற சந்தேகம் ஒரு பக்கம் இருந்தாலும்... அதையெல்லாம் ஒதுக்கி விட்டு, அவளைக் காண ஆவல் கொண்டான். அவள் தன்னை முதல் முதலாக நேரில் கண்டு தெரிந்து கொள்வதைப் போல்... தானும் அவளை நேரில்தான் முதலில் காண வேண்டும் என்று விரும்பினான்.

எனவே அவள் புகைப்படத்தைக் கூடக் காணாமல் வந்திருந்தான். அன்று அவளைக் காண கமிஷனர் அலுவலகத்துக்கு வரும் வேளையில்... வழியில் சிறு கூட்டத்தைப் பார்த்து என்னவென்று காண விரைந்தான்.

அங்கே காக்கிச் சட்டையில் ஒரு பெண்... ஒற்றை ஆளாக... பத்து பேரைச் சமாளித்துக் கொண்டிருந்தாள். அவளது அடி மூவ்களில் ஒரு நேர்த்தி இருந்ததைக் கண்டான். தற்காப்புக் கலைகள் பல கற்றவள் என்பதும்... பாக்ஸிங் அவளுக்குக் கை வந்த கலை என்பதும்... வர்மக்கலை கூட கொஞ்சம் தெரிந்தவள் என்பதையும் நொடியில் உணர்ந்து கொண்டான்.

அவள் ஒற்றையாகப் போராடுவதைக் கண்டவன்... அவளுக்கு உதவலாம் என்ற எண்ணத்தில்... அவள் அருகில் செல்லப் போனான்.

அவனை வேகமாகத் தடுத்த சரவணன், "எங்கடா போறே..." அவன் கரத்தைப் பிடித்துத் தடுத்தான்.

"டேய்... உன் கண்ணு என்ன பின்னாடியா இருக்கு... ஒரு பொண்ணைப் போய் இத்தனை பேர்

அடிக்கிறானுங்க... பாத்துட்டு சும்மா இருக்கச் சொல்றியா...?" அவன் கரத்தைத் தட்டி விட்டுச் செல்ல முயன்றான்.

"உன் கண்ணுதான்டா பின்னாடி இருக்கு. நல்லா பாரு... எல்லாருக்கும் ப்ரீயா ஆபரேஷன் பண்ணி விட்டுட்டு இருக்கா... இவன் வேற போய்த் தானா சிக்கப் பார்க்கிறான்... இருடா... இப்போ தான் உன் நந்தினியைப் பார்க்கவே வந்திருக்க... புள்ளக்குட்டிப் பெத்துக்கணும்னு ஆசை இருக்குல்ல... அப்போ பேசாமல் இரு..." நக்கலாகச் சொன்னான்.

"என்னடா லூசு மாதிரி...!" அவன் சொல்வதை முழுதாகக் கேட்காமல் திமிறினான்.

"அங்கே பாருடா.... எல்லாருக்கும் போச்சு...." சரவணன் சொல்ல... அப்பொழுது தான் சரியாகப் பார்க்கவே... அங்கே நடந்ததைப் பார்த்தவன் அமைதியாகி விட்டான். இமைக்கக் கூட மறந்து அவளையே வெறித்தான்.

"அப்பா... என்ன அடிடா...! அவனுங்க வாங்குறது எனக்குப் பொறி கலங்குதுடா... இவங்க பொண்ணே இல்லைடா...!" அவளது நடவடிக்கையில்... மரியாதை தானாக வந்தது. அன்று முதல் இன்றுவரை அவனால் அதை மாற்ற முடியவில்லை.

ப்ரதீப்போ அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் உள்ளுணர்வு சொன்னது... இதுதான்

அவளது நந்தினி என்று. ஆனால் ஊரில் இருக்கும் அனைத்துத் தெய்வங்களையும் வேண்டினான்... அப்படி இருக்கக் கூடாது என்று.

ஆனால், அவனது வேண்டுதல் உடனடியாக நிராகரிக்கப்பட்டதை... அவளது நேம் பேட்ஜ் தெறித்து வந்து அவன் காலடியில் விழுந்து... அதில் தெரிந்த பெயரையும்... பதவியையும் பார்த்தவனுக்குப் புரிந்தது.

அத்தோடு, அப்பொழுது வந்த போலீசார் அவளை சார் என்று அழைத்த அழைப்பிலும்... அவளது சண்டையிலும்... அவளது நிமிர்விலும்... தளர்ந்து... தகர்ந்து போனான்.

அடுத்த சில மணி நேரங்களிலேயே சரவணன் அவளைப் பற்றி விசாரித்துச் சொன்ன எந்த விஷயமும்... அவனது காதலுக்குச் சாதகமாக இருக்கவில்லை. அன்று முதல் அவள் நிழலாகத் தொடர்வதே அவன் வேலை. ஆனால், அவளை நெருங்கும் வழி அறியாமல் இருந்தான்.

யதார்த்தமாகவோ... கடவுளின் துணையாலோ... அவளை நேருக்கு நேர் கண்டு... நெருங்கும் வாய்ப்பு கிடைக்க... அதை இழக்க மனமில்லாமல்... அவளை நெருங்கும் வழியைத்தான் இப்பொழுது ஆராய்ந்து கொண்டிருக்கிறான்.

"இப்போ நீ அங்கே போயே ஆகணுமாடா..." சரவணனின் குரலில் சிந்தை கலைந்தவன்,

"ப்ளீஸ் சரவணா... என்னால் நிம்மதியா ஒரு நிமிஷம் கூட இருக்க முடியலை... போயே ஆகணும்...!" சொன்னவன், அவன் மறுத்துச் சொல்லுமுன் அங்கிருந்து நகர்ந்தான்.

'இவன் முழுசா வருவானா...?' யோசித்தவன், 'ஆண்டவா... நந்தினி நல்ல மூடில் இருக்கணும்...' கடவுளிடம் மனு போட்டு விட்டு... நண்பனுக்காகக் காத்திருக்கத் துவங்கினான்.

தன் அறைக்கு விரைந்த நந்தினியோ... முதல் வேலையாகத் தன் உடையை மாற்றியவள்... இருக்கையில் அமர்ந்து ஆழ மூச்செடுத்தாள். பஸ்சில் நிகழ்ந்த நிகழ்வில் பிரதீப்பின் மேல் கோபம் கட்டுக்கடங்காமல் பெருகியது.

ஆனால், அதே நேரம்... அவனைக் கைது செய்யச் சொன்னபொழுது அவன் கண்களில் தெரிந்த வேதனை அவளை என்னவோ செய்தது.

நந்தினி டிபார்ட்மென்ட்டில் சிம்ம சொப்பனம்தான்.... யாரையும் தன்னை நெருங்கவே விடாமல் நெருப்பாகக் காய்பவள்தான்... உடலையும் மனதையும் இறுக்கமாகவே வைத்துக் கொள்பவள்தான். ஆனால் அவளுக்குள் இருக்கும் இன்னொரு நந்தினியோ...

யாராவது ஒரு துளி பாசத்தையும்... உரிமையையும்... நெருக்கத்தையும்... காட்ட மாட்டார்களா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறாள். ஆனால், அவளைத் தப்பித்

தவறிக் கூட வெளியே வரவோ... தலைகாட்டவோ அனு மதிக்க மாட்டாள்.

எந்த நந்தினியைக் கழுத்தைப் பிடித்து நெரித்துத் தனக்குள் சமாதி கட்டிவிட்டதாக அவள் எண்ணிக் கொண்டிருந்தாளோ... அவள் இந்த இரண்டு நாட்களாக மறுபிறப்பு அளித்தது போல்... எழுந்து உலாவுவதைத் தடுக்க முடியாமல் தவித்தாள்.

ஒரு பக்கம் கேஸ் கழுத்தை நெரிக்க... மறுபக்கம் தன் மனம் சலனப்படுவதைத் தடுக்க முடியாமல் தடுமாறினாள். ஏதோ ஒரு விதத்தில் தான் ப்ரதீப்பால் தடுமாறுவதை உணர்ந்து திகைத்தாள். 'இதை வளர அனுமதிக்கவே கூடாது.'

மீண்டும் மீண்டும் இதையே தனக்குள் உருப்போட்டாள். ஆழ்ந்த மூச்சுக்கள் எடுத்து... தன்னைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள். பழைய நினைவுகள் ஒரு பக்கம் மேலெழுந்து அழுத்த... தான் எடுத்த முடிவு சரிதான் என்பதை அழுந்தத் தனக்குள் பதித்துக் கொண்டாள்.

அதே நேரம் அறைக் கதவு தட்டப்படவே... நிமிர்வாகவே அறை வாயிலை நோக்கினாள். உள்ளே நுழைந்தவனைக் கண்டு, இன்று அவ்வளவு அதிர்ச்சியோ ஆச்சரியமோ எழவில்லை.

இதை எதிர்பார்த்தவள் போல் அமைதியாக இருந்தவள், அதன் பிறகு நினைவுக்கு வந்தவளாக... இவ்வளவு நேரம் மறைந்திருந்த கோபம் கிளர்ந்து எழுந்தது.

அவனை உறுத்து விழித்தவள், தன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவனைப் பார்த்தாள். அவள் கோபம் உணர்ந்தவன் போல் அமைதியாகவே இருந்தான்.

அவளோ... காலையில் அவன் கண்களில் தெரிந்த வேதனை தெரிகிறதா என்று... தன்னை மீறி ஒரு நிமிடம் அவனை ஆழ்ந்து நோக்கினாள். அவனும் அதே நேரம்... காலையில் தன்னைத் திரும்பிப் பார்த்த பொழுது... அவள் கண்ணில் தெரிந்த சிநேகம் கலந்த கோபம் தெரிகிறதா என்று ஆராய்ந்தான்.

ஆனால், மறுபடியும் அவள் இறுகிவிட்டதை அவள் கண்கள் அவனுக்கு உணர்த்தியது. அத்தோடு... அவள் கண்களில் தெரிந்த ஆராய்ச்சியும் அவன் கண்களுக்குத் தப்பாமல் போகவே... அவளிடம், 'நீ இப்படி இருப்பது எனக்குக் கஷ்டமாக இருக்கிறது!' எனச் சொல்ல வந்தவன்... தன் முடிவை மாற்றிக் கொண்டான்.

தன்னை அவள் ஆராய முயல்வதே அவனுக்கு ஒருவித நம்பிக்கையை அளிக்க... தன் கவலையை விட்டு விட்டு... 'அவளை எப்படிப் பேச வைக்கலாம்... தன்னைப் பற்றி நினைக்க வைக்கலாம்...?' என எண்ணினான்.

அவனது அமைதி அவளை இன்னும் கிளற... "என்ன பெரிய ஹீரோன்னு நினைப்பா...?" பல்லைக் கடித்துக் கொண்டு கேட்டாள்.

"ஏன்... என்னைப் பார்த்தால் ஹீரோ மாதிரி தெரியலையா...?" ஒற்றைப் புருவம் தூக்கி அவன் வினவ... உள்ளுக்குள் கொதித்தது அவளுக்கு.

"என் வேலையில் யார் தலையிட்டாலும் எனக்குப் பிடிக்காது... என் வேலை நேரத்திலும்தான்...!" அழுத்திச் சொல்லி அவனைக் குறிப்பாய்ப் பார்த்தாள்.

மறைமுகமாக அவள் தன்னை வெளியே போகச் சொல்வதை உணர்ந்து உள்ளுக்குள் சிரித்துக் கொண்டவன், "பின்னாடி பேச்சு மாறக் கூடாது..." ஒரு மாதிரி குறும்பாகச் சொன்னவன், சட்டென அங்கிருந்து வெளியேறினான்.

'இவன் என்ன சொல்றான்...' குழம்பியவள், அவன் எவ்வாறு நொடியில் வெளியே வந்து விடுகிறான் என்பதன் மர்மம் புரியாமல் குழம்பியவள், தற்பொழுது அது முக்கியமில்லை என்பது புரிய... அதை விடுத்துக் கோபால் கேஸைக் கவனிக்கத் துவங்கினாள்.

அங்கிருந்து வெளியேறிய பிரதீப்போ... 'நந்தினியை இன்னும் எப்படித் தோல்லை செய்யலாம்...?' என எண்ணத் துவங்கினான். அதன் பிறகு நந்தினி அன்று முழுவதும்... அவனைப் பார்க்கவே இல்லை.

'எங்கே சென்றான்...?' என்ற கேள்வி மனதின் ஓரத்தில் இருந்தாலும், அதைக் கண்டு கொள்ளும் நிலையில் அவள் இருக்கவில்லை.

இறுக்கமாகப் போன நண்பன்... புன்னகை முகமாக வந்ததைப் புருவம் சுருக்கிப் பார்த்தவன், "என்னடா மாப்ள... முகத்துல பல்பு எரியுது...!" ஆர்வமாகக் கேட்டான்.

"எல்லாம் விஷயமாகத்தான். இனிமேல் நமக்கு இங்கே வேலை இல்லை. வா போகலாம்...!" அவனை இழுத்துக் கொண்டு வெளியேறினான்.

"என்னடா... அடி ரொம்பப் பலமோ...?" அந்த 'ம்' மில் அழுத்தம் கொடுத்துக் கேட்க... புரியாமல் குழம்பிய வன்...

"என்ன மூளை கலங்கிடுச்சோன்னு பார்த்தியா...? அதெல்லாம் இல்லை... இது வேற...!"

"வேறன்னா...? அப்போ எங்கேதான்டா வேலை...?" அவனது இழுப்புக்கு இசைந்தவாறே கேட்டான்.

அவன் சொன்னதைக் கேட்டவனின் கால்கள்... அடுத்து ஒரு அடி கூட எடுத்து வைக்கவில்லை.

"இந்த விபரீத விளையாட்டுக்கு நான் ஆள் கிடையாது. நீயே பார்த்துக்கோ, என்னை ஆளை விடு..." கையெடுத்துக் கும்பிட்டான்.

"என்னைப் பகைச்சுக்கிட்டால் என்ன ஆகும்னு தெரியும்ல... ஒழுங்கா வர்றே... அவ்வளவுதான்...!" சரவணனின் தயக்கத்தைக் கண்டு கொள்ளாமல்... முன்னால் நடந்தான்.

"எனக்கு எங்கேயோ கட்டம் சரியில்லை போல... என் ஜாதகத்தை நல்ல ஜோசியக்காரன் கிட்ட காட்டணும்..." சத்தமாகவே புலம்ப... பிரதீப் வாய் விட்டுச் சிரித்தான்.

"உனக்குச் சிரிப்பா இருக்கா... எனக்குப் பயப்பந்து இங்கே இருந்து கிளம்பி... இங்கே வந்து சிக்கி நிக்கிது..."

அவன் அடிவயிற்றிலிருந்து... தொண்டைக் குழியைத் தொட்டுக் காட்ட... அதற்கும் சிரிப்பையே பதிலாக்கினான் பிரதீப்.

அவனது அந்தச் சிரிப்பின் காரணம் புரியாமலும்... அவனது நோக்கம் புரியாமலும் குழம்பிப் போனான் சரவணன். அது புரிய வந்தபொழுது... அதிர்ச்சியில் அவன் மூர்ச்சையாகாமல் இருந்தது ஆச்சரியம்தான்.

சரவணன் இவ்வளவு அதிர்ந்து இருக்க... சிங்கத்தின் குகையில் அதைச் சந்திக்கத் தயாரானவனோ... உற்சாகம் குறையாமல் இருந்தான்.

சிங்கம் பதுங்குமா? பாயுமா...?



தொல்லை என்பது நீயென்றால்
அந்தத் தொல்லையை நான் ரசிக்கிறேன்...!
நேசம் என்பது நீயென்றால்
உன்னை நான் சுவாசிக்கிறேன்...!

"ஹப்பா... வந்தாச்சு... வாடா... போய் கொஞ்சம் கதவைத் தட்டு... எனக்கு டயர்டா இருக்கு..." காரிலிருந்து இறங்கி... நெட்டி முறித்தவாறு சொன்ன பிரதீப்பைக் கொலை வெறியோடு பார்த்தான் சரவணன்.

"காரை ஓட்டி வந்தது நான்... இதில் உனக்கு டயர்டா இருக்கா...? எல்லாம் நேரம்தான்...!" அவனிடம் அலுத்துக் கொண்டவன்...

"எதுக்கும் இன்னொரு தடவை யோசிச்சுக்கோ ப்ரதீப்..." தயங்கியவாறு சொன்னான்.

"ப்ச்... இப்போ நீ என்கிட்ட அடிதான் வாங்கப் போற... முதல்ல போய்க் கதவைத் தட்டு..." அவனைப் பிடித்துத் தள்ளினான்.

"மாப்ள... கதவு திறந்த வேகத்தில்... எதுவும் குறிபாத்து வந்து விழுந்துடாதே...!"

பாவமாகக் கேட்டான்.

"அடச்சீ...! எப்போப் பார்த்தாலும் உனக்கு இதே பேச்சுத்தானா... அதெல்லாம் ஒண்ணும் ஆகாது... அப்படியே ஆனாலும் நான் பார்த்துக்கிறேன்."

"க்கும்... அடி வாங்குனவனுங்க மூஞ்சியைப் பார்த்திருந்தால் என் கவலைக்கு அர்த்தம் புரிஞ்சிருக்கும்... இங்கேதான் அடி கொடுக்குறவங்களை விட்டுப் பார்வையைத் திருப்புறதே கிடையாதே... பிறகு எங்கிருந்து புரிய..." மனதுக்குள் புலம்பியவன்,

வெளியே, "எதைடா பார்த்துப்ப... நான் ஆஸ்பத்திரியில் இருக்குறதையா...? நல்ல எண்ணம்டா. அதெப்படித்தான் உனக்குக் கொஞ்சம் கூட பயமே இல்லையோ... எதுக்கும் நான் என் குலதெய்வத்தை வேண்டிட்டே போறேன்...!" புலம்பியவாறே சென்றவன்,

வாயில் காவலனிடம் பேசி விட்டு உள்ளே சென்று அழைப்பு மணியை அழுத்தினான். அவன் பின்னால் சென்ற பிரதீப்... சுற்றியிருந்த தோட்டத்தை நோட்ட

மிட்டான். கண்கள் அங்கே இருந்தாலும், நினைவுகள் நந்தினியிடமே இருந்தது.

இரவு உணவுக்கான தயாரிப்பில் இருந்த ரோஸ்... அழைப்பு மணியின் ஓசையில் ஆச்சரியமானாள். பொதுவாக அவர்கள் வீட்டின் அழைப்பு மணியை விட போன் மணிதான் அதிகம் ஒலிக்கும்.

வீட்டிற்கு யார் வந்தாலும்... வெளியிலிருந்து இன்னார் வந்திருப்பதாக வாயில் காவலன் தொலை பேசியில் தெரிவிப்பார்கள். அதன் பிறகே ரோஸ் சென்று கதவைத் திறப்பாள்.

அப்படியிருக்கையில், நேரடியாக அழைப்பு மணி ஒலிக்கவே... 'யாராக இருக்கும்...?' யோசனையோடு கதவைத் திறந்தாள்.

திறந்தவள் திகைத்தாள். வாசல் வெறுமையாகக் காட்சி அளித்தது. அவளுக்குக் கொஞ்சம் குழப்பமாக இருந்தது.

"இப்போ பெல் அடித்தது தானே...!" தனக்குத் தானே சத்தமாகக் கேட்டுக் கொண்டாள்.

'என்னடா இது... பூகம்பம் கிளம்பும்னு பார்த்தா... தென்றல் வீசுது...' எண்ணியவன்... தூணின் மறைவில் இருந்து, அந்தக் குரலுக்குரியவளைக் காணும் ஆவலில் சட்டென வெளியேறினான்.

அதே நேரம்... வெளியில் வந்து எட்டிப் பார்க்க வந்த ரோஸும்... திடீரென தன் முன் ஒருவன் வந்து

நிற்பான் என்பதை எதிர்பாராமல் திகைத்து, அதிர்ச்சியில் கத்தப் போனாள்.

ஏற்கெனவே நந்தினியின் மேல் இருந்த பயத்தால்... எங்கே அவள் கத்தி... வாசலில் இருக்கும் காவலன் தவறாக எண்ணி விடுவானோ என்ற எண்ணத்தில் பாய்ந்து வந்து அவள் வாயை அடைத்தான். அவனது அந்தச் செய்கையே அவளது பயத்தை அதிகரிக்க...

"கா...ப்பா...த்துங்க... யாரா...வது வா...ங்க.... ஹரி..." அதிர்ச்சியில் அவளால் கோவையாகக் கத்தக் கூட முடியாமல் திணறினாள்.

"ஐயோ... கொஞ்சம் கத்தாமல் இரேன்... நான் திருடன் இல்லை..." அவனது பேச்சைக் கேட்கும் நிலையில் அவள் இருக்கவில்லை.

அவனது இதழ்கள் மட்டுமே பதட்டமாக மொழிந்ததே தவிர... அவளை விடுவிக்க அவன் முயற்சி செய்யவே இல்லை. முதன் முதலாக ஒரு பெண்ணின் நெருக்கம்... அவனை வெகுவாகப் பாதித்தது. மருண்டு விழித்த அவளது முட்டைக் கண்கள்... பயத்தையும்... ஆராய்ச்சி யையும் ஒருங்கே வெளிப்படுத்த... அவள் விழிகளுக்குள் விழுந்தான் அவன்.

அவன் கைகளும் தேகமும் உணர்த்திய அவளது மென்மை, அவனைத் தடுமாற வைத்தது. இதழ் விரித்து அவள் கூச்சலிட... அவளது கூச்சல் அவனை எட்டாமல்... அவள் இதழ்களின் அசைவு மட்டுமே கண்களுக்கு

நெருக்கமாகத் தெரிய... இனம் புரியாத உணர்வுகளில் கட்டுண்டான்.

அவனது இந்த உணர்வுகளில்... நந்தினியைப் பற்றிய பயம் கூடப் பின்னால் தள்ளப்பட்டது. ரோஸோ... அவனிடமிருந்து விடுபடப் போராடியவள்... அவனிட மிருந்து பதில் இல்லாமல் போகவே... அவன் கையை விலக்கித் தள்ளியவாறு அவனைப் பார்க்க...

அவன் பார்வையின் வீச்சில் அவள் தேகம் நடுங்கியது. அது பயத்தால் வந்ததா... இல்லையென்றால் அவன் பார்வையின் தாக்கத்தால் ஏற்பட்டதா என்று அவளால் இனமறிய முடியவில்லை.

ரோஸுக்குப் பயம் மேலெழ... "முதல்ல என்னை விடுங்க..." பதட்டமாகச் சொன்னாள். அவளது அந்தக் குரலும் சரவணனை அசைக்கவில்லை. அவள், அவனிடமிருந்து விடுபடப் போராட... அவனை அறியாமலேயே அவளைத் தன் அணைப்புக்குள் இருத்திக் கொள்ள முயன்று கொண்டிருந்தான் சரவணன்.

அவளது குரலும், சரவணனின் குரலும் பிரதீப்பை வந்தடைய... பதட்டமாக ஓடி வந்தான். வந்தவன் கண்ட காட்சியில் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது அவனுக்கு.

இடக்கையால் ரோஸை வளைத்திருந்த சரவணன்... வலக்கையால் அவள் வாயை மூட முயன்று கொண்டி ருந்தான். ரோஸோ... அவன் பிடியில் திமிறியவள்...

அவன் வலக் கையை விலக்கி, உதவிக்கு யாரையாவது அழைப்பதிலேயே குறியாக இருந்தாள்.

ஆக மொத்தம்... சிறு போராட்டமே நடந்து கொண்டிருந்தது. வேகமாக அவர்களை நெருங்கினான் பிரதீப்.

"டேய்... என்னடா இது... விடுடா அவளை...!" சரவணனைப் பிடித்து இழுத்தான். ப்ரதீப்பின் குரலைக் கேட்ட பிறகுதான் நடப்புக்குத் திரும்பினான் சரவணன்.

இருக்கும் சூழலும்... இருக்கும் இடமும் நினைவுக்கு வர... மனதில் மெல்லிய பயம் எட்டிப் பார்த்தது.

ப்ரதீப் வரவே... முதலில் மிரண்டாலும்... அவன் பேச்சைக் கேட்ட பிறகு கொஞ்சம் தைரியம் வந்தது ரோஸுக்கு. எனவே கத்துவதை நிறுத்தி விட்டாள்.

"மாப்ள... இவளைக் கத்தாமல் இருக்கச் சொல்லுடா... உள்ளே இருந்து புல்லட்டு கிளம்பி வெளியில் வந்துடப் போகுது...!" பதட்டமாகச் சொன்னான்.

"டேய்... அவ வீட்டில் இல்லடா...! நீ முதல்ல அவளை விடு...!" பிரதீப் சொல்லவே... அப்பொழுதும் சமாதானம் ஆகாமல்...

"நான் உன்னை எதுவும் செய்ய மாட்டேன்... கத்தாதே... ஓ.கே... ஓ.கே..."

அழுத்திச் சொல்லி, அவளது சம்மதமான தலையசைப்பைப் பெற்ற பிறகே... அவளை விடுவித்தான்.

"யார் நீங்க...? உங்களுக்கு என்ன வேணும்...? நீங்க எப்படி உள்ளே வந்தீங்க....? ஹரி கேட் கிட்ட இல்லையா...?" முதல் கட்ட அதிர்ச்சி விலக... அடுக்கடுக் காகக் கேட்டாள். சரவணனைப் பார்த்துக் கேட்காமல்... ப்ரதீப்பைப் பார்த்துக் கேட்டாள்.

"நீயென்ன புல்லட்டுக்கு உறவா...? இப்படிப் பொரியுற...?" சரவணன் அவளிடம் கேட்டான்.

அவனை முறைத்தவள், "முதல்ல நீங்க யாரு...? உங்களுக்கு என்ன வேணும்னு சொல்லுங்க... எதுக்குத் தேவையில்லாமல் பேசுறீங்க...?" கோபமாகக் கேட்டாள். நந்தினியைக் குறை சொல்வதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே கத்தினாள்.

சரவணன் அவளிடம் வம்பு வளர்ப்பதைப் பார்த்து, உஷாரான பிரதீப்... "தங்கச்சி... நாங்க நந்தினியைத் தேடி வந்தோம்... அவ இருக்காளா...?" என்று கேட்கும் முன்னர்,

"டேய் மச்சான்..." என்ற கூவலுடன்... தாவி வந்து நண்பனை அணைத்துக் கொண்டவன்,

"தேங்க்ஸ் டா மச்சான்...!" என்று சொன்னவாறு அவன் கன்னத்தில் முத்தமிட்டான்.

அவனது செய்கையை வித்தியாசமாகப் பார்த்த வர்கள், "அடச்சீ... என்னடா ஆச்சு திடீர்னு..?" அவன் முத்தமிட்ட கன்னத்தைக் கர்ச்சீப்பால் துடைத்தவாறு பதறி பிரதீப் கேட்க... சரவணனின் பார்வையோ ரோஸிடம் நிலைத்திருந்தது.

அவனது செய்கையில் அவள் முறைக்க, அவளது முறைப்பைக் கண்டு கொள்ளாமல்... சுவாரசியமாக அவளைப் பார்த்தான். அவன் பார்வையில் மேலும் கோபம் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சரவணனின் செய்கையை ஒரு நிமிடம் புரியாமல் பார்த்தவன், அவர்களது நடவடிக்கையைக் கண்டு 'பையன் விழுந்துட்டான் போல...' தனக்குள் எண்ணியவன், சரவணனைப் பார்த்து தலையை ஆட்ட.. அழகாக வெட்கப்பட்டான் சரவணன்.

"போதும்டா... விடுற ஜொள்ளில் பொண்ணு பதறிடப் போகுது...!" அவன் காதில் சொன்னவன்...

"ந்ந்தினி இருக்காளாம்மா...?" அந்தச் சூழலை முடிவிற்குக் கொண்டு வர முயன்றான்.

ப்ரதீப், நந்தினியை ஒருமையில் அழைப்பதைக் கண்டு விழி விரித்தவள்... "உங்களுக்கு அவங்களை முன்னாடியே தெரியுமா...? அப்போ ஏன் இவ்வளவு நாளா வராமல் இருந்தீங்க...? எங்கே போயிருந்தீங்க...? ஆனா..."

அவனிடம் கேள்விகளை அடுக்கியவள், இறுதியில் நம்பிக்கையில்லாமல் இழுத்தாள்.

அவர்களைச் சந்தேகமாகப் பார்த்தாள். அவளது புத்திசாலித்தனத்தை மனதுக்குள் மெச்சியவன், "நாம உள்ளே போய்ப் பேசலாமே...!" கொஞ்சம் அழுத்தமாகச் சொன்னதாக அவளுக்குத் தோன்றியது.

அவள் சந்தேகமாக அவனை நிமிர்ந்து பார்க்கும் முன்னர்... "ஆமா ஆமா... அப்படியே ஏதாவது சாப் பிட்டுட்டே..." சரவணன் ஆர்வமாக வேகமாகச் சொல்ல... பிரதீப்பும் ரோஸும் அவனை எவ்வளவு முடியுமோ அவ்வளவு முறைத்தார்கள்.

இருவரும் முறைத்த பிறகே தன் தவறை உணர்ந்தவன், "சரி, வேணாம்.... இப்படியே நின்னுட்டே பேசலாம்...!" சாதாரணமாகத் தோளைக் குலுக்கியவாறு சொல்ல, அதற்கும் முறைத்தார்கள்.

"டேய்... இனிமேல் வாயைத் தொறந்த... என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது..." வெளியே சிரித்தவாறு... அவன் காதுக்குள் கடுமையாக அழுத்த மாகச் சொல்ல...

"ஓ...! அப்படியா...? அப்போ சரி...!" அவன் கடிந்து கொண்டதைக் கண்டு கொள்ளாமல்... அவனும் சிரித்தவாறே பதில் சொல்ல... இருவரையும் கண்டு கொள்ளாமல்... வீட்டுக்குள் செல்லத் திரும்பினாள் ரோஸ்.

"ரோஜா! ஒரு நிமிஷம்..." ப்ரதீப்பின் குரல் அவளைத் தேக்க... அவன் தனது நிஜப் பெயரைச் சொல்லி அழைக்கவே, அவனைக் குழப்பமாகப் பார்த்தாள். நந்தினியைத் தவிர இங்கே யாருக்கும் அவள் ரோஜா என்று தெரியாது. எனவேதான் அப்படிப் பார்த்தாள்.

அத்தோடு... 'ஒரு வேளை நந்தினிதான் சொல்லி யிருப்பாளோ... இல்லாமல் எப்படி...?' என்ற அவளது

எண்ணம் அவள் முகத்தில் வெளிப்பட... அந்தக் குழப்பத்தைப் பயன்படுத்தி...

"எனக்கு எப்படி உன் பேர் தெரியும்னு பாக்குறியா....? அது மட்டும் இல்லை... உன்னோட அம்மா, அப்பா, நீ, மூணு பேரும் கிராமத்தில் இருந்து வந்த அன்னைக்கே விபத்து நடந்தது... தனியாக இருந்த உன்னை அவங்களோட இறுதிச் சடங்கு முடிந்தவுடன்.... கையோட வீட்டுக்குக் கூட்டி வந்தது எல்லாம் தெரியும்....

"அதைவிட... அந்தச் சம்பவமே கந்தன் சாரை அவள் மேல் ஒரு நல்ல அபிப்பிராயத்தை விதைக்க வைத்ததும்... அவளுக்கு ஒரு நல்லது நடக்கணும்னு விரும்புவதும் எனக்குத் தெரியும்...." தன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமே என வேகமாகச் சொன்னவன்,

"ஒரு ரெண்டு நிமிஷம் நாங்க சொல்லுறதைக் கேளும்மா... இப்படி வெளியே இருந்து பேசினால் எல்லாரும் என்னன்னு பார்ப்பாங்க... நாம உள்ளே போயிடலாம்..." ப்ரதீப் சொன்னான்.

ரோஸோ... தன் தயக்கம் முழுதும் விலகாமல் மேலும் தயங்கினாள். வேறு வழியில்லாமல், ப்ரதீப், சரவணனைப் பார்க்க... புரிந்ததற்கு அடையாளமாக... ஒரு விசிட்டிங் கார்டை அவளிடம் நீட்ட... புருவம் சுருக்கிக் கேள்வியாக அவர்களைப் பார்த்தவள்....

அவன் நீட்டிய கார்டைப் பார்த்த பிறகு... அரை மனதாக என்றாலும் அவர்களை உள்ளே அனுமதித்தாள்.

அவளுக்கு மிகவும் குழப்பமாக இருந்தது. 'இவர்களை நம்பி உள்ளே அழைக்கலாமா...?' என்பது ஒரு பக்க மென்றால்...

'நந்தினி என்ன சொல்வாள்... இதை எப்படி எடுத்துக் கொள்வாள்?' என்பதை அவளால் கற்பனை செய்து கூடப் பார்க்க அச்சமாக இருந்தது. மூன்று வருடங்களாக அவளுடன் இருக்கும் தன்னையே.. ஒரு இஞ்ச் கூட நெருங்க விடாதவள்... வீடு வரைக்கும் ஒரு ஆள் வருவதை இதுவரை அனுமதித்ததில்லை.

'அப்படியிருக்கையில்... இவர்களை எப்படி வீட்டுக்குள் அழைக்க...?' என்று அவள் வெகுவாகத் தயங்கினாள். அவளது தயக்கம் உணர்ந்து...

"எந்தப் பிரச்சினை வந்தாலும் நான் பார்த்துக் கிறேன்... நந்தினியின் கோபம் உட்பட...!" அவளுக்குத் தைரியம் சொல்ல முயன்றான்.

"அது இல்லை... அவங்க வீட்டில் வேற இல்லை... அவங்க இருந்தாலாவது பரவாயில்லை..." அவள் இழுக்க... அவன் சொன்னதைக் கேட்டு,

"கிழிஞ்சுது..." சரவணன் சத்தமாகப் புலம்ப...

"அவன் கிடக்கான்... நீ உள்ளே வாம்மா..." அவளை எதிர்பார்க்காமல் வீட்டுக்குள் நுழைந்து விட்டான்.

"நில்லுங்க..." அவள் தடுக்கும் முன்பே... வீட்டுக்குள் நுழைந்து... ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்து விட்டான்.

அவள் மனம் முழுக்கப் பயத்துடன் அவன் பின்னால் செல்ல... சரவணனோ... வலது காலை எடுத்து வைத்து உள்ளே நுழைந்தான்.

அவன் செய்கையைப் பார்த்த பிரதீப் பல்லைக் கடிக்க... "சீக்கிரம் பேசி முடிடா...!" பிரதீப்பின் அருகில் அமர்ந்தவாறு சரவணன் சொல்ல...

"எதைடா...?" சந்தேகமாகக் கேட்டான் பிரதீப்.

"என்ன மச்சான் இப்படிக் கேட்டுட்ட... நீ எதையோ பேசத்தானே இங்கே வந்தே... அதைத்தான்டா சொன்னேன்..." சரவணன் சொல்ல... அவனை நம்பாத பார்வை பார்த்தான் பிரதீப்.

அவன் பார்வையில் சந்தேகத்தைக் கண்டவன்... "நம்புடா..." அப்பாவியாகச் சொன்னான்.

"நம்புற மாதிரி இல்லையேடா உன்னோட நடத்தை... என்னமோ பொண்ணு பார்க்க வந்த மாப்பிள்ளை மாதிரி வலது காலை எடுத்து வச்சி வர்ற... அதைவிட அதென்ன... புதுசா மச்சான்...?"

"அ...து..." அவன் சிக்கிக் கொண்ட உணர்வில் தவிக்க,

அவர்கள் இருவரும் சின்னக் குரலில் பேசிக் கொண்டிருக்க... "உங்களுக்குள்ளேயே பேசிக்கத்தான் இவ்வளவு தூரம் வந்தீங்களா...?" எரிச்சலும் பயமும் கலந்து கேட்க, அவளது குரலில் தங்களது பேச்சை முடித்துக் கொண்டார்கள் அவர்கள்.

'ஹப்பா... தப்பிச்சேன்டா சாமி...' நிம்மதியாக மூச்சு விட்டான் சரவணன்.

ஒரு நிமிடம் அங்கே எதற்கென்றே தெரியாமல் அமைதி நிலவியது. ரோஸ் இருவரின் முகத்தை மாற்றி மாற்றிப் பார்க்க, சரவணன் அவளை கொஞ்சம் சுவாரசியமாகவே பார்த்தான். அவன் பார்வையைக் கண்டு கொள்ளாமல்... ப்ரதீப்பையே அவள் பார்த்தாள்.

'நந்தினியோட காத்து இவளுக்கும் கொஞ்சம் அடிச்சிருக்குப் போலவே...!' மனதுக்குள் புலம்பினான்.

"உன்கிட்டே எப்படிச் சொல்லன்னு தெரியலை... நந்தினியோட மீதியிருக்க நாட்கள் அனைத்திலும் நான் அவளோட இருப்பேன். அது அவளுக்கு விருப்பமாக இருந்தாலும் சரி... இல்லையென்றாலும் சரி...!" ஒருவித அழுத்தத்துடன் சொன்னவன்... அதன் பிறகு எதையும் பேசவில்லை.

அவன் பேச்சு புரிவது போலவும் இருந்தது... புரியாதது போலவும் இருந்தது. குழப்பமான மனநிலை யோடு அவனையே பார்த்திருந்தாள். அதே நேரம் வெளியே நந்தினியின் ஜீப் வரும் ஓசை கேட்டது. ரோஸ் மிகுந்த பதட்டமானாள்.

"அண்ணே... அவங்க வர்றாங்க..." அதே பதட்டத்தோடு சொன்னாள். சரவணனும் கொஞ்சம் திகைக்கவே செய்தான். ஆனால், அந்த நிலையிலும் மாறாமல் இருந்தவன் பிரதீப் மட்டுமே.

சுமோவில் இருந்து இறங்கிய நந்தினி... வாசலில் இருந்த செருப்புகளைப் பார்த்தவுடனே... 'அவனா...?'

ஒரு நொடியில் தன்னை மீறி யோசித்தவள்... கோபமாக வீட்டுக்குள் வந்தாள்.

"ரோஜா..." அவளது அழைப்பில் வெலவெலத்துப் போனாள் ரோஸ். ஏனென்றால் அவள் மிகுந்த கோபமாக இருக்கும் போது மட்டுமே அவளை அப்படி அழைப்பாள்.

அவளது கூச்சலில்... சரவணன் தானாக எழுந்து நின்று விட்டான்.

"சார்...." அவள் வாய் தானாகவே மரியாதைக்குத் தாவியிருந்தது.

"இது என்ன புதுப் பழக்கம்...?" வந்திருந்தவர்களைப் பார்த்தவாறு அவளிடம் கேட்க, எச்சில் கூட்டி விழுங்கினாள் ரோஸ்.

"நீங்க... உங்களுக்கு... உங்களை..." அவள் பேச்சு தந்தியடித்தது.

அவளது நடுக்கத்திலும் இளக்கமே இல்லாமல் நின்றவள், "நான் கீழே இறங்கி வரும்போது இந்த இடம் கிளீனா இருக்கணும்..." பிரதீப்பைத் தீப்பார்வை பார்த்தவள்... படிகளில் ஏறி மறைந்தாள்.

கையைப் பிசைந்தவாறு ரோஸ் அவர்களைப் பரிதாபமாகப் பார்க்க, மெல்லியதாகச் சிரித்தவன், "நான் மேலே போயிட்டு வாரேன்..." அவர்களது நிலையைப்

பற்றியோ... நந்தினியின் கோபத்தைப் பற்றியோ சிறிதும் கவலையே இல்லாமல் சொல்லி விட்டு எழுந்து சென்றான்.

நந்தினியின் கோபத்தில் வெலவெலத்துப் போயிருந்தவர்கள்... நிதானத்துக்கு வரும் முன்னர்... அவன் சென்றிருந்தான். அவனைத் தடுக்கும் எண்ணம் கூட இல்லாமல்... சிலையாக இருந்தனர் இவர்கள்.

அறைக்கு வந்த நந்தினி, தனது தொப்பியைக் கோபமாக விசிறியடித்தாள். அது போய் கட்டிலின் மேல் விழ... 'இப்போ எதுக்கு இங்கே வந்திருக்கான்... இங்கேயும் என் நிம்மதியைக் குலைக்கவா...?' ஆத்திரமாக எண்ணியவள்... இங்கும் அங்கும் நடந்தாள்.

'அவனது செருப்பை வைத்தே அவன்தான் என்பதை எப்படிச் சரியாகக் கண்டு பிடித்தேன்...? அந்த அளவா அவனைக் கவனிக்கிறேன்...?' இந்த நினைப்பு அதைவிட எரிச்சலை அளித்தது.

'இல்லை... இல்லை... இப்போ எதுக்கு என் வேலையைப் பார்க்காமல்... தேவையில்லாமல் அவன் நினைப்பு...' எண்ணியவள்... உடைகளைக் களைந்து விட்டு... ஷவரின் அடியில் போய் நின்றாள்.

எதையுமே நினைக்காமல் குளிக்க வேண்டும் என்று அவள் நினைக்க... மனமோ... 'எதுக்கு வந்திருப்பான்... போயிருப்பானா...? போயிருப்பானோ...?' அவள் அனுமதியின்றியே கேள்விகள் அவளைக் குடைந்தது.

'ஹையோ...' தன்னையே வெறுத்தவள்... கீழே சென்று ஒரு டீ குடிக்கலாம் என எண்ணி... வேகமாக ஒரு

கேசுவல் பேன்ட், டீஷர்ட்டுக்கு மாறியவள்... அறையை விட்டு வெளியே வர... அறைக்கு வெளியில் இருந்த ஹால் சோபாவில் அமர்ந்திருந்த ப்ரதீப்பைப் பார்த்துக் கோபத்தின் உச்சிக்கே சென்றாள்.

ஆத்திரமாக அவனை நெருங்க... அவனோ...



நெருங்கி வரும் என்னை விட்டு
விலக நினைக்கும் உன் எண்ணம்...
வலியை மட்டுமே விதைக்கிறது...!

ப்ரதீப், நந்தினியைக் காண அவள் பின்னால் சென்று விட... ஒரு நிமிடம் திகைத்து நின்றிருந்த சரவணனும் ரோஸும், அடுத்த நிமிடம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

இருவருமே என்ன நடக்குமோ என்பது போல்... மாடியையே பார்த்தவாறு நின்றிருந்தார்கள். என்ன சத்தம் வருமோ... என்ன கலவரம் நடக்குமோ... நந்தினி அவனை அடித்து விடுவாளோ... இருவரின் எண்ணமும் கிட்டத்தட்ட ஒன்றாகவே இருந்தது.

முதலில் அதில் இருந்து கலைந்தவன் சரவணன் தான். "க்கும்...." தொண்டையை லேசாகச் செருமினான்.

அவனது செருமலில் கலைந்தவள்... அவனை ஒரு நொடி பார்த்தவள்... திரும்பி நடந்தாள்.

"ரோஸ்...." எங்கே அவள் பெயருக்கு வலிக்குமோ என்பது போல் அவன் அழைக்க...

"என்ன...?" வெடுக்கெனக் கேட்டாள்.

"இல்ல... கொஞ்சம் தண்ணி..." அவன் இழுக்க... உள்ளே சென்றவள், கையில் சிறிய செம்புடன் வெளியே வந்தாள்.

அவளைப் பார்த்தவாறே அவன் மிடறு மிடறாகக் குடிக்க... உள்ளுக்குள் பல்லைக் கடித்தாள். 'பார்வையைப் பாரு...' எண்ணினாலும்... அவள் கவனம் முழுவதும் மாடியிலேயே இருந்தது.

'இவ என்ன... என்னைக் கண்டுக்கவே மாட்டேங்குறா...?' மனதுக்குள் அலுத்துக் கொண்டான். எப்படியும் அவளிடம் பேசிவிட வேண்டும் என்று மட்டும் எண்ணினான்.

"நீ எப்படி இங்கே...? அவங்களுக்கு உறவா...?" என்னவோ நெடுநாள் பழகிப் பிரிந்தவளைக் கண்டவன் போல் உரிமையோடு கேட்டான்.

அவன் பேச்சில் கலைந்தவள்... "இப்போ உங்களுக்கு என்னதான் வேணும்...?" அலுப்பாகக் கேட்டாள்.

"இல்ல... இங்கே இருக்குறது நாம ரெண்டு பேர்... நான் மட்டும் தனியாவே பேசிட்டு இருந்தால் அது நல்லாவே இல்லை... அதான்...!" கண்களில் குறும்பு மின்னச் சொன்னான்.

ஆர்வமும்... குறும்பும்... ஆசையும் போட்டி போட... தன்னிடம் பேச விரும்பும் அவனை ஒரு நிமிடம் திகைப்பாய்ப் பார்த்தவள், "உங்களுக்கு நந்தினி சார் கிட்ட அடி வாங்கணும்னு ஏதாவது ஆசை இருக்கா...?" திடீரெனக் கேட்டாள்.

அவன் இல்லையென மறுப்பாகத் தலையாட்ட... "அப்போ வந்த வேலையை மட்டும் பாருங்க..." வேகமாகச் சொல்லிச் சென்றாள்.

அவள் பின்னாலேயே எழுந்து ஓடியவன், அவள் முன்னால் சென்று நின்றான். அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்க்க... "நான் எந்த வேலையைப் பார்க்க வந்தேன்னு எனக்கு ஞாபகம் இல்லை... ஆனா... இனிமேல் பார்க்க வேண்டிய வேலை என்னன்னு எனக்குத் தெரிஞ்சுடுச்சு... கூடிய சீக்கிரம் உனக்கும் தெரிஞ்சுடும்..." பேசப் பேச ஒவ்வொரு அடியாக அவன் முன்னேற... எதற்காகப் பின்னடைகிறோம் என்று தெரியாமலேயே... அவள் கால்கள் தானாகப் பின்னால் சென்றது.

இறுதியில் பின்னால் இருந்த சோபா தடுக்க... மேலே செல்ல முடியாமல் அவள் அப்படியே நிற்க... "நான் சத்தம் போட்டு சாரைக் கூப்பிடுவேன்..." அவனை மிரட்டினாள்.

அவளை நேருக்கு நேர் பார்த்தவன், "என்னைப் பார்த்தால் உனக்குக் கொஞ்சம் கூடப் பாவமாகவே தெரியலை இல்ல... சரி, நீ போ..." ஒருவித செல்லக்

கோபத்தோடு அவன் சொல்ல... அவனது செய்கையில் திகைத்துப் போனாள்.

அவன் விலகிச் சென்று சோபாவில் அமர்ந்த பிறகும்... அங்கிருந்து நகர முடியாமல் கால்கள் பிணைத்துக் கொண்டது போல் இருந்தது. அதே நேரம்...

வீட்டிற்கு வந்த ப்ரதீப்பை... ரோஸிடம் அனுப்பச் சொல்லிச் சொல்லி விட்டு, அறைக்கு வந்த நந்தினியின் நினைவுகள் அவனைச் சுற்றியே வந்தது. அது தாங்காமல்... அவன் போயிருப்பான் என்ற எண்ணத்தில் அறையை விட்டு அவள் வெளியே வர... அங்கே இருந்த பிரதீப்பைப் பார்த்துக் கோபத்தின் உச்சிக்கே சென்றாள்.

ஏற்கெனவே அவனது நினைப்பு கொஞ்சம் கொஞ்சமாக மனதை ஆக்கிரமிப்பதைத் தடுக்க முடியாமல் போராடியவள்... தான் சத்தமிட்டதால் சென்றிருப்பான் என்று நினைக்க, அதற்கு மாறாக அவன் மாடிக்கே வந்தது அவளை மேலும் கோபப்படுத்தியது.

தனது கோபமும், எரிச்சலும், பாராமுகமும் அவனைப் பாதிக்காமல்... மாற்றாமல் இருப்பதை எண்ணி வெகுண்டாள். யாரும் தன்னை நெருங்கக் கூடாது என்பதில் அவள் பிடிவாதமாக இருக்க... தன் கோட்டைச் சுவர்களைத் தகர்த்து முன்னேறும் அவனைத் தடுக்க முடியாமல் போய் விடுமோ எனத் தவித்தாள்.

எனவே மொத்தக் கோபத்தையும் திரட்டியவள்... "ஏய்... நீ இங்கே என்ன செய்யிற...? உனக்கு எவ்வளவு

தைரியம்...?" அவனை அடித்து விடும் வேகத்தில் கையை நீட்டியவாறு அவனை நெருங்க... இருந்த இடத்தில் இருந்து அசையாமல் அவளைப் பார்த்தான்.

அவனது அந்த தோற்றமே அவளது வேகத்தைத் தணிக்க... "ச்சே...!" தன்னையே நொந்தவள்...

"அதான் காலையிலேயே சொன்னேனே... என்னைத் தொந்தரவு செய்யுறது எனக்குப் பிடிக்காதுன்னு..." ஒருவித அழுத்தத்தில் அவள் சொன்னாள்.

"உனக்குப் பிடிக்காது என்பதால்தான் இங்கே வந்தேன்..." சாதாரணமாகச் சொன்னான்.

'இதுக்கு அர்த்தம்...' என்பது போல் கடுமையாக அவனைப் பார்க்க,

"நீதானே சொன்னே... வேலை நேரத்தில் உன்னைத் தொந்தரவு செய்யுறது உனக்குப் பிடிக்காதுன்னு. அதான்..." மெல்லிய சிரிப்பை உதட்டில் தவழ விட்டு அவன் பேச... அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

'இதெல்லாம் ஒரு பேச்சா?' என்பதுபோல் அவனை முறைக்க... அதற்கும் சளைக்காமல் அவளைப் பார்த்தான்.

"என் அனுமதி இல்லாமல்... என் பெர்சனல் ஸ்பேசுக்குள் வர்றது எனக்குப் பிடிக்கலை..."

என்னை விட்டு எட்டியே இரு, என்பது போல்... வார்த்தையால் அவனைச் சாடினாள்.

அவளை ஆழமாக ஒரு பார்வை பார்க்க... அவன் பார்வை அவளைத் தாக்கினாலும்... இளக மாட்டேன் என்பது போல் இரும்பாக அவனை முறைத்தாள்.

அவனுக்குத்தான்.. தான் அவள் முன்னால் தோற்றுப் போகும் உணர்வு. அந்த உணர்வை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதை அவளிடம் வெளிப்படுத்த மனமில்லாமல்...

"ஓ.கே..." இருக்கையிலிருந்து எழுந்தவன், தோளைக் குலுக்கிவிட்டு அவளிடம் சாதாரணமாகச் சொன்னவன்... தன் தோல்வியை அவளிடம் வெளிப் படுத்தாமல் வெளியேறினான். வெளியேறும் முன்னர்... அவளைத் திரும்பிப் பார்த்தவன்,

"ஆனால்... மறுபடியும் வருவேன்..." சாதாரண மாகவே சொல்லி விட்டுச் சென்றான். ஆனால் அவன் திரும்பிப் பார்த்த வேளையில்... அவன் கண்களில் ஒரு நொடி மின்னி மறைந்த ஒருவித வலி... நந்தினியை அசைத்தது.

ஆனால், அடுத்த நொடியே அவனது முகம் சாதாரணமாக இருந்ததை எண்ணி ஆச்சரியம் அடைந் தாள். அதே நேரம்... 'ஏன்டா இப்படிப் பார்க்கிறே...? உனக்குள்ளே என்ன இருக்கு...?' அவள் மனம் அவ னிடம் கேள்வி கேட்டு முடித்திருந்தது.

அவனை விட வேகமாக அதை மறைத்தவள், அடுத்த நொடியே அதை மறந்தும் போனாள். அவள்

கண்களின் முன்னால்... அவளது பேச்சைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டு, தோளைக் குலுக்கிய ப்ரதீப் வந்து போக... அவள், தான் தோற்றுப் போனதாக உணர்ந்தாள்.

சரியாக அதே நேரம் ப்ரவீன் கீழே இறங்கி வர... சரவணனும்... ரோஸ்மும் அவன் முகத்தைப் பார்த்தார்கள். பிரதீப்பின் முகம் இருண்டிருந்ததாக இருவருக்கும் தோன்றியது.

அவர்களைத் திரும்பியும் பாராமல் அவன் வெளியேற... அவன் பின்னால் எழுந்து ஓடினான் சரவணன். அவ்வளவு அவசரத்திலும் ரோஸிடம் ஒரு சிறு தலையசைப்புக் கொடுக்க அவன் மறக்கவில்லை.

அவனது காலடியோசை தேய்ந்து மறையும் வரை அசையாமல் அதே இடத்தில் நின்றவள்... நெகிழவிருந்த மனதை இழுத்துப் பிடித்தவள்... எதுவும் நடவாதது போல் கீழே இறங்கிச் சென்றாள்.

அமைதியாக டைனிங் ஹாலில் வந்தமர்ந்த நந்தினியைக் கண்டு, உள்ளுக்குள் குளிரடித்ததால் கிச்சனுக்குள் சென்று புகுந்து கொண்டாள் ரோஸ்.

டீயைக் கொண்டு கொடுக்கக் கூட பயந்தவளாக நின்று கொண்டிருக்க... "இப்போ டீ வருமா வராதா...?" எரிச்சலாக வந்த நந்தினியின் குரலில்... அடுத்த நொடி அவள் முன்னால் டீக்கோப்பை இருந்தது.

'எல்லாத்துக்கும் நீதானே காரணம்...' என்பது போல் அவளை முறைத்தாள்.

"இல்ல... நான்... அவங்க..." வார்த்தைகள் தந்தியடித்தது.

"இனிமேல் இப்படி நடந்தது..." சொன்னவள் சென்று விட்டாள்.

அதுவரை இழுத்து வைத்திருந்த மூச்சை வேகமாக வெளியேற்றினாள் ரோஸ். அந்த மாலைப் பொழுது நால்வருக்கும் எப்படித் துவங்கி... எப்படி முடிந்தது எனக் கேட்டால்... அவர்களிடம் விடை இருக்கவில்லை.

அன்றைய இரவும் நால்வரையும் தாக்கியது. மனதுக்குள் ஏதோ சுகமாகவும்... வலியாகவும்... அவஸ்தையாகவும்... கோபமாகவும்... இப்படிப் பல விதமான உணர்வுகளோடு போராடினார்கள்.

"டேய் மச்சான்... உனக்குக் காதல் வந்தப்போ... அப்படியே எங்கேயோ பறக்குற மாதிரி இருந்துதாடா...?" சரவணன் இரவில் பக்கத்துப் படுக்கையில் படுத்தவாறு கேட்க...

"என்னடா... இன்னைக்குப் புதுசா தண்ணியடிச்சியா... என்ன...?" நக்கலாகக் கேட்டான்.

"நான் என்ன கேட்கிறேன்... நீ என்ன பதில் சொல்லுற..." கடுப்பானான் சரவணன்.

"பின்ன என்னடா... அவன் அவன்... நாலு மாசமா தலை கீழா நின்னு தண்ணி குடிக்கிறான்... இவருக்கு அப்படியே பறக்குற மாதிரி இருக்குதாம்... கொன்னுடுவேன்... ஒழுங்கு மரியாதையா தூங்குற... இல்ல...

பறக்குறதுக்கு இறக்கை இல்லாமல் பண்ணிடுவேன்..." அதைவிடக் கடுப்பாகப் பதில் கொடுத்தான் ப்ரதீப்.

ப்ரதீப் ஏதோ கோபத்தில் இருப்பதை உணர்ந்து கொண்ட சரவணன், அமைதியாகி விட்டான். பிரதீப்போ... தூங்க முடியாமல் தவித்தான்.

'நந்தும்மா... உன்னோட கூட்டை நான் எப்படி உடைக்கப் போகிறேன்...? உனது அந்தக் கூட்டை நான் உடைக்க முயலும் ஒவ்வொரு நொடியும்... எனக்கு ஏமாற்றமும்... வலிகளும் மட்டுமே மிஞ்சுகிறது. உன்னை எப்படி நான் மாற்றப் போகிறேன்...?

'உன் மனக் காயங்களை எப்படி ஆற்றப் போகிறேன்...? உன்னை... உன் மனதை நான் எந்த விதத்திலும் தீண்டவே இல்லையா...?" இந்த எண்ணமே அவனைத் தூங்க விடாமல் செய்தது.

'எப்படி இருந்தாலும்... உன்னை நான் அணுகாமல் விட மாட்டேன்... உனக்கு என் நேசத்தைப் புரிய வைப்பேன். உன்னை மாற்றுவேன்...!" தனக்குத் தானே உறுதி எடுத்துக் கொண்டான்.

ஆனால் நந்தினியோ... மனதை இரும்பாக்கிக் கொள்ள... பாக்ஸிங் விங்கில் தன் முழு வேகத்தையும் காட்டி... அலுத்துப் போய்... உறக்கத்தின் பிடியில் மூழ்கியிருந்தாள்.

காலையில் எழுந்தவுடன்... வழக்கம் போல பீச்சில் ஓடச் செல்ல... எப்பொழுதும் தொலைவிலிருந்தே

அவளைக் காணும் ப்ரதீப்... அன்று அவளை நெருங்கிச் சென்றான்.

எப்பொழுதும் ஒருவித எச்சரிக்கை உணர்வுடனே ஓடும் நந்தினி, அன்றும் அவ்வாறே செயல்பட... யாரோ தன்னை நெருங்கும் உணர்வில், சட்டென அவனை விட்டு விலகி... அவனை அடித்து விடும் எண்ணத்தில் கையை நீட்டியவள்... அங்கே பிரதீப்பைக் காணவே... படக்கென்று கையைப் பின்னால் இழுத்துக் கொண்டாள்.

அவள் செய்கையில் திகைத்தது அவன் மட்டுமல்ல... அவளும்தான். அதுநாள் வரை யாராக இருந்தாலும் அவள் கை பேசிய பிறகே வார்த்தைகள் பேசும். அப்படியிருக்க... இன்று உயர்ந்த அவள் கை... அவனுக்காகக் கீழே இறங்கியதைக் கண்டு திகைத்தாள்.

"அப்போ இன்னைக்கு எனக்கு குட்மார்னிங் தான்..." அவள் செய்கையைக் கண்டு புன்னகைத்தவாறே அவன் கேட்க, அவன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் விலகி ஓடினாள்.

அவளுடனே அவனும் ஓடி வர... அவனிடம் கோபமாக எதையோ பேசப் போனவள்... பிறகு அதை விடுத்து... அவனைக் கண்டு கொள்ளாமல் சென்றாள்.

அவளது பாராமுகத்தைக் கண்டு கொள்ளாமல்... அன்றைய ஓட்டம் முழுவதிலும் அவன் உடன் இருந்தான். அவள் காரில் ஏறும்பொழுது... அவளுக்காக அவன் கதவைத் திறக்க... "ப்ச்..." ஒரு சிறிய ஆட்சேபனையுடன் ஏறி அமர்ந்து கொண்டாள்.

அவள் ஏறி அமரவே... கதவைச் சாத்தும் முன்னர், "நந்து... உன்கிட்ட ஒரு விஷயம் கேக்கணும்..." பீடிகையாக அவன் சொல்ல... அவள் நிலையில் எந்த மாற்றமும் இருக்கவில்லை.

"சரி... நீ எப்போ அது என்னன்னு கேட்கிறியோ... அதுவரைக்கும் உன்னை நான் தொல்லை செஞ்சுட்டே இருப்பேன்..." சொல்லிவிட்டு விலகிக் கதவை அடைத்தான்.

"அண்ணே... பாத்துப் போங்க..." சொன்னவன்... அவள் கார் கண்ணுக்கு மறையும் வரை பார்த்துக் கொண்டு நின்றான்.

அதன் பிறகு... தினமும் அவளது காலை விடியல் முதல்... இறவு உறக்கம் வரை... அவனது பிரசன்னம் ஏதாவது ஒரு ரூபத்தில் அவளுடன் இருந்தது. தவிர்க்க நினைத்தாலும் முடியாத நிலையில் அவள் இருந்தாள்.

ஆனாலும் என்னவென்று அவனிடம் கேட்க முடியாமல்... அவளது மனம் அவளைத் தடுத்தது. ஒரு கட்டத்தில்... சில மணி நேரங்கள் கூட... அவன் இல்லாமல் இருக்க அவளால் முடியவில்லை. வெளியில் அவள் நிலையில் எந்த மாற்றமும் இல்லாமல் இருந்தாலும்... உள்ளுக்குள் அவனது இருப்பை அவள் மனம் விரும்பியது.

வெளிமனம் அதை வெறுக்க... உள்மனமோ முரண்டு பிடித்தது. தினமும் ஒரு வேளையாவது...

"நந்து..." என அழைத்து... "உன்னிடம் ஒரு விஷயம் கேட்கணும்..." எனப் புலம்புவான்.

ஆனால், ஒரு வேளை கூட... அவளை அறியாமல் கூட என்னவென்று கேட்கவில்லை. அதையே சாக்காகக் கொண்டு... அவனும் விடாமல் அவள் பின்னால் அலைந்தான்.

கமிஷனர் வளாகம் முழுவதும் ப்ரதீப்பைப் பற்றியும்... அவன் அவள் பின்னால் சுற்றுவதைப் பற்றியும் பேச்சுக் கிளம்பியது. அதனால் நந்தினி கோபம் கொள்வாளோ என ப்ரதீப் பயப்பட... அதற்கு அவசியமே இல்லை என்பது போல் அவள் நடந்து கொண்டாள்.

நந்தினி ஒரு புரியாத புதிராகவே அவனுக்கு இருந்தாள். நந்தினியோ... தான் என்னவென்று கேட்டால், அதன் பிறகு, அவன் தன்னைப் பார்க்க வர மாட்டானோ என்று ஒரு பக்கம் எண்ண... மற்றொரு மனமோ... அவனிடம் தான் இறங்கிப் போவதா என முரண்டியது.

ஆனால், உண்மையாக அவள் என்னதான் நினைக்கிறாள் என்பது அவளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாக இருந்தது. அவளை... அவள் மனதை அறிந்து கொள்ள... அந்த நாள் அவளுக்கு உதவியது. ஆனால், அவளுக்குத் தெரிய வந்த உண்மை... அவளை விலகியிருக்கவே வழி செய்தது.

அன்று அவளுக்கு வந்த ஒரு கடித உறையைப் பார்த்தவள்... அசுவாரசியமாக அதைத் தள்ளி வைத்தாள்.

அது, வருடா வருடம்... அவர்களது டிபார்ட்மென்ட்டுக்குள் நடக்கும் பாக்ஸிங் காம்பெட்டிஷனின் அறிவிப்பு அறிக்கையே.

கடந்த மூன்று வருடங்களாக அவள்தான் அந்தக் கோப்பையைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறாள். இந்த வருடம் ஏனென்று தெரியாமலேயே... அவள் மனம் செல்ல விரும்பவில்லை. அந்த அறிக்கையைப் பார்த்தவுடனே அவள் மனதில் தோன்றிய எண்ணம் ஒன்றுதான்...

'பத்து நாட்கள் இங்கே நான் இல்லையென்றால்... என் வேலையை யார் பார்ப்பார்கள்...?' இதற்கு முன்பும் மூன்று வருடங்களாக அவள் பத்து நாட்கள் தொடர்ச்சியாக வேலைத் தளத்தில் இல்லாமல் இருந்திருக்கிறாள்தான்.

இந்த வருடம் மட்டும் இப்படி ஒரு எண்ணம் உதிக்கவே... கோபால் கேசின் பின்னால் சுற்றுவதாலேயே தனக்கு இப்படி ஒரு எண்ணம் எழுந்தது என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டாள். ஆனால், அது அப்படி இல்லை என்பதை அடுத்த நாளே உணர்ந்து கொண்டாள்.

காலையில் எழுந்து, பீச் மணலில் ஓடும்பொழுது... அவளது தலை திரும்பி, தனக்குப் பின்னால் அவன் வருகிறானா என்று இரண்டு மூன்று முறை பார்த்த பிறகுதான்... தான் பிரதீப்பைத் தேடுகிறோம் என்பதையே உணர்ந்தாள்.

அதன் பிறகு கவனமாக... தன் செயலில் ஈடுபட... அவன் உடன் இல்லாத அந்த நிமிடங்களை ஏற்க முடியாமல் தடுமாறினாள். 'காலையில் உறங்கி யிருப் பான்... வந்து விடுவான்...' என்று அவள் தன் மனதைச் சமாதானம் செய்யும் வரை... அவளால் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

அப்படித் தன்னைத் தானே சமாதானம் செய்த நிலையை எண்ணி மனதுக்குள் மருகினாள். காலை உணவும் இறங்கவில்லை... பத்து மணி வரை நேரத்தைத் தள்ளியவள்.. அதுவரை அவனைக் காணாமல் தவித்தவள்... அதன் பிறகு அந்த அறைக்குள்ளேயே இருக்க முடியாமல் தவித்தாள்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அனைவரிடமும் எரிந்து விழுந்தாள். அவள் முகத்தில் விழிக்கவே முடியாத அளவு... ரவுத்திரம் தாண்டவமாடியது. அவளை நெருங்கவே முடியாமல் சூரியனாகக் காய்ந்தாள். இவ்வளவு நாட்களாக நிழலாகத் தொடர்ந்தவன்... மாயமானதை அவளால் ஏற்க முடியவில்லை.

அவளை அறியாமலேயே அவள் மனம் முழுக்க... அவன் வியாபித்திருப்பதை அன்று உணர்ந்து கொண்டாள். 'எனக்கு யாரும் வேண்டாம்... எப்பொழுதும் நான் தனி மனுஷிதான்... நாய்க்கு முழுத்தேங்காய் எப்படி ஒட்டாதோ... அதே போல் எனக்கும் உறவுகள் ஒட்டாது...' இதயம் வலிக்க வலிக்க... தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

வலிகள் அவளுக்குப் பழக்கம்தான் என்றாலும்... பழைய ஆறிய காயத்தின் மேல்... புதிதாக ஏற்படும் காயம்... மரண வலியைக் கொடுத்தது. ப்ரதீப்பின் மேல் வன்மையான கோபம் கிளர்ந்தெழுந்தது.

முதல் வேலையாக... அந்தக் காம்பெட்டிஷனில் பங்கு பெறுவதாக ஒப்புதல் கடிதம் அனுப்பினாள். அவள் மனதில் மலர்ந்த நேசத்தை எவ்வாறு பிரதீப் உணரவில்லையோ... அதேபோல்... அவள் வலியையும்... அவன் மேல் கிளர்ந்த கோபத்தையும் உணரவில்லை.

அவன் உணர்ந்து கொள்வானா...?



பனிப்பாறையை நான்...
சூரியனாய் நீ....
மேல்மட்டம் உருகினாலும்...
உள்ளுக்குள் இரும்பாய்...!

இரண்டு வாரத்திற்குப் பிறகு அன்று ப்ரதீப் நந்தினியைத் தேடி வந்தான். அவனைப் பார்த்த கந்தனின் கண்கள்... ஒரு நிமிடம் சந்தோஷத்தில் விரிந்து... அடுத்த நிமிடம் கவலையில் சுருங்கியது.

யோசனையாக அவனைப் பார்த்தவர்... "வாங்க தம்பி... என்ன ஒரு வாரமா உங்களை ஆளையே காணோம்... நீங்க எப்படி வந்தீங்களோ... அதே மாதிரி காணாமலும் போயிட்டீங்கன்னு நினைச்சேன்...!" அவர்

குரலில்... கொஞ்சம் கோபம் கலந்திருந்ததாகத் தோன்றியது.

அவரைக் கேள்வியாகப் பார்த்தவன்... "என்னண்ணே இப்படிச் சொல்லிட்டீங்க...? அதான் நான் ஏற்கெனவே சொல்லி இருக்கேனே... நந்தினியை என் சொந்தமாக்கும் வரைக்கும் நான் எங்கேயும் போக மாட்டேன்...

"கொஞ்சம் அவசரமா முடிக்க வேண்டிய வேலை இருந்தது... அதான். சரி, அதையெல்லாம் விடுங்க... எங்கே நந்தினி... என் தொல்லை இல்லாமல் நிம்மதியா இருக்காளா...? இருங்க, நான் போய் அவளைப் பார்த்துட்டு வந்துடுறேன்..." சொன்னவன், அவர் பதிலை எதிர்பாராமல் அங்கிருந்து நகர்ந்தான்.

"தம்பி... அவங்க இங்கே இல்லை...!" அவசரமாக அவனைத் தடுத்தார்.

"இங்கே இல்லையா...? அப்போ தனியாவே வெளியே போயிருக்கா... நீங்க கூடப் போகல..." நம்பிக்கையில்லாமல் கேட்டான்.

அதை உணர்ந்தவர் போல், "நான் எதுக்குத் தம்பி உங்க கிட்ட பொய் சொல்லப் போறேன்... என்னவோ பத்து நாள் வர மாட்டேன்... நீங்க என்னைக் கூப்பிட வர வேண்டாம்னு சொன்னாங்க... எனக்கு அவ்வளவுதான் தெரியும். அதற்கு மேல் அவங்க கிட்ட எதையும் என்னால் கேட்க முடியாது...

"இந்த ரெண்டு வாரமா அவங்க கிட்ட கூட யாராலேயும் போகவே முடியலை... இன்னும் முசுடாயிட்ட மாதிரி இருக்குது... நீங்களும் என்னவோ சொன்னீங்க... நானும் என்னவோ நடக்கும்னு எதிர்பார்த்தேன்... ஆனா எல்லாம் கனவாகத்தான் போயிடும் போல...

"என்னவோ தம்பி.. சார் மனசுக்குள்ளே என்ன இருக்குன்னே ய்ாருக்கும் தெரிய மாட்டேங்குது... ஏற்கெனவே அவங்க வேலையில் ரொம்பவே சின்சியர்னு தெரியும்... ஆனா இப்போ வேலை செய்யுறதுக்குன்னே பிறப்பெடுத்த மாதிரி நடந்துக்கிறாங்க...

"மனசுக்குக் கஷ்டமா இருக்கு தம்பி.. யார்கிட்ட சொல்லிப் புலம்பன்னு தெரியாமல் உங்க கிட்ட சொல்லிட்டு இருக்கேன்... நீங்க போயிட்டு ஒரு வாரம் கழிச்சு வாங்க தம்பி...!" நந்தினியின் வாழ்க்கை இப்படித்தான் போகுமோ என்ற கவலையில்... அவனிடம் புலம்பினார்.

"ஒரு வாரமா...?" திகைத்தான் பிரதீப்,

"சரிண்ணே... நான் இப்போ வந்துடுறேன்..." அவரிடம் சொன்னவன்... நந்தினியின் அறைக்குச் சென்றான்.

ஏற்கெனவே அவளைக் காணாமல் இரண்டு வாரமாகத் தவித்தவன்... இன்று அவளைக் காண லாம் என ஓடி வந்திருக்க... அவள் இல்லாத அந்த அலுவலகம்... தெய்வம் இல்லாத கோயிலாக... வெறுமை யாக அவனுக்குக் காட்சியளித்தது.

அறையிலிருந்து வெளியேறியவன்... அவள் எங்கே சென்றிருப்பாள் என்பது தெரியாமல் கலங்கினான். தான் இல்லாத நாட்களில்... தன்னைத் தேடினாளா என்பதை அறிந்து கொள்ள ஓடோடி அவன் வர...

அவள் தன்னைப் பற்றிய எண்ணம் இல்லாமல் சென்று விட்டாள் என்பதை எண்ணித் தவித்தான்.

'இதுக்கு முன்னாடி என்னவோ அவ உன் மேல் பாசத்தைப் பொழிந்து... நீயில்லாமல் இருக்கவே முடியாது என்று உருகியதாக... ரொம்ப சீன் போடு கிறாயே...!' என்று அவன் மனச்சாட்சி குரல் கொடுக்க...

'அவ என் மேல் பாசத்தைப் பொழியவில்லை என்றால் என்ன... நான் அவள் மேல் உயிரையே வைத்திருக்கிறேன். அவள் உயிராக நான் இருப்பேன்...'

இன்னும் உறுதியுாக எண்ணியவன்... அவள் எங்கே சென்றிருப்பாள் என்பதை அறிய முற்பட்டான்.

முதல் வேலையாக அவன் ரோஸைத் தேடிச் செல்ல... அவளது பதிலும் கந்தனது பதிலாகவே இருந்தது.

அதைவிட, "நல்லா யோசிச்சுப்பாரு... உனக்குத் தெரியாமல் இருக்காது... எனக்குத் தெரியும்...!" அந்த நேரத்திலும் சரவணன் ரோஸிடம் வழிய முயற்சிக்க, வெறுத்துப் போனான்.

வேறு யாரிடமும் கேட்கவென்றும் தெரியவில்லை.

அவனது நிலை கண்டு... தன் கவனத்தைத் திருப்பிய சரவணன், அவனிடம் சொன்ன யோசனையை உடனே மறுத்தான் பிரதீப்...

"ஏன் மாப்ள... அவங்க எங்கேயாவது ரெஸ்ட் எடுக்கப் போயிருப்பாங்களோ...?" அவன் கேட்க... ரோஸும் சேர்ந்து அவனை முறைத்தாள்.

"அவங்க அப்படியெல்லாம் எங்கேயும் போக மாட்டாங்க...!" வேகமாகப் பதில் கொடுத்தாள்.

"அடேய்... உருப்படியா எதையாவது சொல்லலேன்னாலும் பரவாயில்லை... தயவு செய்து கடுப்படிக்காதே..." எரிச்சலாகச் சொன்னான். ரோஸின் மூலம் அவன் அறிந்த விஷயம் அவனை அவ்வளவு கவலைக் குள்ளாக்கி இருந்தது.

"அவங்க கொஞ்ச நாளா சரியாவே சாப்பிடலை... ஏன்னே தெரியலை... ஒண்ணு ரெண்டு நாள்... நடு ராத்திரி மாடியில் உலாத்திட்டு இருந்ததையும்... சில நாள் பாக்ஸிங் அறையே கதியென்று இருந்ததையும் பார்த்துட்டு ரொம்பவே பாவமா இருந்தது.

"ஏற்கெனவே அவங்க அப்படியொன்றும் பாசமா பேச மாட்டாங்கதான்... ஆனா என் முகத்தைப் பார்க்காமல் எதையும் பேச மாட்டாங்க... இப்போ என்னன்னா என்கிட்ட ஒரு வார்த்தை கூடப் பேசவே இல்லை... போகும்போது கூட...

"நான் வர பத்து நாள் ஆகும்... பத்திரமா இருந்துக்கோன்னு சொல்லிட்டுப் போயிட்டாங்க...

என்னவோ மனசு கிடந்து அடிச்சுக்குது...!" கண்கள் கலங்க அவள் சொன்னபொழுது... சுற்றியிருக்கும் தங்கள் நேசத்தையும் அன்பையும் புரிந்து கொள்ளாமல்... அவளுக்கு அப்படியென்ன பிடிவாதம் என்ற கோபம் அவனுக்கு எழுந்தது.

ஆனால், அது கோபப்படும் நேரமில்லையே... நந்தினியின் இந்த மாற்றங்கள் அனைத்தும் இப்பொழுது நேர்ந்தவை என்பதால்... தான் இல்லாதது அவளை ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கிறது என்பதை லேசாக உணர்ந்து கொண்டான்.

அதையும் உறுதியாக அவனால் நம்ப முடிய வில்லை. எப்படியும் அவள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான்.

அவளது அலைபேசிக்கு முயற்சிக்க... அது அணைத்து வைக்கப்பட்டிருந்ததில் மேலும் குழம்பினான். அவளுக்குக் கீழ் வேலை பார்ப்பவர்கள் யாருக்குமே... அவள் எங்கே சென்றிருக்கிறாள் என்பது தெரியவில்லை.

இறுதியாக அவளது தொலைபேசி அழைப்பு எந்த எண்ணுக்குச் சென்றிருக்கிறது என்பதை ஆராய... ட்ராவல் ஏஜென்சிக்குச் சென்றிருக்கிறது. அவர்களிடம் விசாரித்து... ஒரு வழியாக அவள் டெல்லி சென்றிருக்கி றாள் என்பதை அறிந்து கொண்டார்கள்.

அதன் பிறகு மற்றவற்றை விசாரிப்பது அவனுக்கு அவ்வளவு கடினமாக இருக்கவில்லை. உடனடியாகக்

கிடைத்த விமானத்தில் ஏறி அவனும் டெல்லி சென்று இறங்கினான்.

மனம் உடனே அவள் முன் சென்று நிற்கத் துடித்தது. போட்டி நடக்கும் இடத்திற்குச் செல்ல ஆன ஒரு மணி நேரமும்... ஒவ்வொரு யுகமாகக் கடந்தது அவனுக்கு.

போட்டி நடக்கும் இடத்தில்... வெளி ஆட்களுக்கு அனுமதி இல்லை. வாயில் காவலர்களைத் தாண்டி உள்ளே செல்வது என்பது இயலாத காரியமாகவே இருந்தது. இவ்வளவு தூரம் வந்த பிறகு தோல்வியடைந்து திரும்புவதென்பது அவனால் இயலாத காரியம்.

வாயிலின் அருகில் இருக்கும் ஒவ்வொரு நொடியும்... அவளைக் காண வேண்டும்... அவள் அருகில் இருந்தும் அவளைக் காண முடியாமல் இருக்கின்றோமே என்று வெதும்பினான்.

இறுதியில் ஒரு முடிவுடன் தன் அலைபேசியை எடுத்து நண்பனை அழைத்தவன்... அவன் வந்தவுடன்... போலீஸிடம் அவனைப் பேச்சுக் கொடுக்க வைத்தவன்... அவர் பார்வையில் மண்ணைத் தூவியவாறு உள்ளே நுழைந்து விட்டான்.

நந்தினி எங்கே இருக்கிறாள் என்று பார்வையைச் சுழல விட்டவாறு அவன் நுழைய... அவனது தயக்கமும் பார்வையும் அங்கிருந்த காவலர்களின் கண்களில் விழ... அவனைத் தடுக்க விரைந்தார்கள்.

காவலர்களின் கவனம் தன்பக்கம் திரும்பியதை உணர்ந்து கொண்ட ப்ரதீப்... வேகமாக அங்கிருந்து நகர்ந்து விரைந்தான். ஓடினால்... அங்கிருக்கும் அனைத்துக் காவலர்களின் கவனத்தையும் கவர்ந்து விடுவோம் என்பதை உணர்ந்தவன்... வேகமாக நடந்தான்.

பின்னால் அவர்கள் வருகிறார்களா என்பதைப் பார்த்தவாறே... கண்களைச் சுழற்றியவனின் பார்வையில்... பாக்ஸிங் விங்கில் இருந்த நந்தினி விழுந்தாள். போட்டி நடந்து கொண்டிருப்பதால்... நந்தினிக்கு மூச்சு வாங்கிக் கொண்டு இருந்தது.

எதிரில் இருந்த எதிரியின் குத்துக்களைச் சமாளித்துக் கொண்டிருந்தாளே தவிர... அவளை அடிக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. அவளைக் கண்டவுடன் பிரதீப்பின் வேகம் குறைந்தது.

காவலர்கள் நெருங்கி விட்டதை உணர்ந்தாலும்... விலகிச் செல்ல முயலாமல்... அவள் அருகில் செல்ல முயன்றான். பாக்ஸிங்கில் கவனமாக இருந்த நந்தினி, எதேச்சையாக... எதிரியின் குத்தில் இருந்து விலகி நிமிர்ந்தவளின் பார்வையில் விழுந்தான் பிரதீப்.

சட்டென பார்வையைத் திருப்பியவள்... பிரதீப் தன் பார்வையில் விழுந்தானோ... என்ற சந்தேகம் தோன்ற... பாக்ஸிங்கில் ஒரு நிமிடம் கவனமில்லாமல்... அவன் இருந்த திக்கில் பார்க்க... அவளது கவனம் இங்கே இல்லை என்பதை உணர்ந்த அவளது எதிரி... அவள் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டாள்.

நந்தினி குத்து வாங்கப் போகிறாள் என்பதை உணர்ந்த பிரதீப்... "நந்தும்மா... பார்த்து..." குரல் உயர்த்திக் கத்துவதற்கும் அவனைக் காவலர்கள் நெருங்கவும்... அவள் எதிரியிடம் குத்து வாங்குவதற்கும் சரியாக இருந்தது.

குத்து வாங்கியதை நிதானமாகத் தள்ளியவள்... ப்ரதீப்பை இரண்டு காவலர்கள் நெருங்கி... அவன் தோளைத் தொட்டு இழுத்துச் செல்ல முயல்வதைக் கண்டவள்... என்ன செய்வதென்று ஒரு நிமிடம் திகைத்தாள்.

முதலில் பிரதீப்பைக் காப்பது ஒன்றே பிரதானமாகப் பட... கோபமாக நிமிர்ந்தவள்... எதிரியை ஓங்கி ஒரு குத்து விட... அது சரியாக எதிரியின் விலாவில் இடியென இறங்க... தூரமாகச் சென்று சுருண்டு விழுந்தாள் அவள்.

அவள் விழவே, நடுவர் வேகமாகச் சென்று அவளைப் பார்வையிட... அவளால் எழ முடியாமல் வலியில் துடித்தாள். அவளது துடிப்பே... எப்படியும் இரண்டு எலும்பாவது முறிந்திருக்கும் என்பதை உணர்ந்தவர்... உடனடியாக ஸ்ட்ரெச்சர் வர வைத்தார்.

அவள் சென்றவுடன்... "நந்தினி வின்னர்..." என்று நடுவர் அறிவிக்க... அங்கு நடந்த எதையுமே கவனிக்கும் நிலையில் அவள் இருக்கவில்லை. அங்கிருந்து நொடியில் ஓடியவள்... "லீவ் ஹிம்..." கிட்டத்தட்டக் கத்தினாள்.

அவளது கோபத்தில் திகைத்தவர்கள்... விறைப்பாக சல்யுட் அடித்தவாறு இரண்டு அடி விலகி நின்றார்கள்.

"மேடம்... பெர்மிஷன் இல்லாமல் உள்ளே வந்திருக்கார்..." ஆங்கிலத்தில் நிலைமையை விளக்க முயன்றார்கள்.

"அவர் என்னோட வந்திருக்கார்... நீங்க போங்க..." அவர்களது விளக்கத்திலும்... துளிகூட கோபத்தில் மாற்றம் இல்லாமல் அவள் சொல்ல... மற்றொரு சல்யூட்டுடன் அவர்கள் விலகிச் சென்றார்கள்.

திகைப்பும்... நம்பமுடியாத தன்மையுடனும் அவன் அவளை விழி விரித்துப் பார்க்க... தான் செய்த செயலின் வீரியம் அப்பொழுதுதான் அவளுக்குப் புரிய... எப்படி இந்த நிமிடத்தைச் சமாளிக்க என்று நினைத்தவள்...

"என்கிட்ட ஏதோ விஷயம் சொல்லணும்னு ஏற்கெனவே சொல்லிட்டு இருந்தல்ல... என்ன அது... அதுக்குத்தான் என்னைத் தேடி வந்தியா...? என்னை இந்தக் கேள்வியைக் கேக்க வைக்கணும்னு நீ இவ்வளவு செலவு பண்ணி இங்கே வந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை... சரி, சொல்லு... என்ன விஷயம்...?"

கையில் இருந்த க்ளவுசைக் கழட்டியவாறு சாதரணமாக அவள் கேட்க... முதல் முறையாக அவள் மேல் கோபம் கிளர்ந்தது அவனுக்கு.

தாடை இறுக அவள் பின்னால் சென்றவன்... அவள் ஒரு அறைக்குள் நுழையவே... அறைக்கதவை வேகமாகத் தாளிட்டவன்... அவளை நிதானமாகப் பார்த்தான்.

அவன் பார்வையை அவள் சளைக்காமல் எதிர் கொள்ள... "நந்து... நீ கேட்ட இந்த விஷயத்தால்... உன்னோட பிடிவாதமும்... ஈகோவும் ஜெயிச்சிடுச்சுன்னு நீ நினைத்தால்..." இடைவெளி விட்டவன்,

"ஆமா... நீ ஜெயிச்சுட்ட... ஆனா..." இந்த இடத் திலும் அவன் இடைவெளி விட... என்ன என்பது போல் அவனைப் பார்த்தாள்.

"இப்போ என் முன்னாடி இருக்கிற இந்த நந்தினியை விட, ஒரு நாலு நிமிஷத்துக்கு முன்னாடி... எனக்காக ஓடி வந்தா பார் ஒரு நந்தினி... அவளைத்தான் நான் நம்புறேன்... அதுதான்... அதுதான் உண்மை யான நந்தினி..." அழுத்திச் சொல்லி அவளை உற்றுப் பார்த்தான்.

அப்பொழுதும் அவள் நிலையில் மாற்றம் இல்லாமல் போகவே, "இதோ... இப்போ இந்த நிமிஷம்... இப்படி அழுத்தமா... முகத்தில் ஒரு உணர்ச்சியையுமே காட்டாமல் விறைப்பா நிக்கிறியே... இது இல்லை நீ... இந்த முகத்துக்குப் பின்னாடி...

"திரை போட்டு மறைச்சு வச்சிருக்கியே ஒரு முகம்... அதுதான் நீ. ஒரு நிமிஷம் வந்து போனாலும்... அந்த நந்தினி எனக்குத் தரும் நம்பிக்கை பெருசு. அந்த நந்தினியை மீட்டு வெளியே எடுத்துடுவேன்னு... எனக்கு நம்பிக்கை இருக்கு...!"

சொன்னவன் அடிமேல் அடி வைத்து அவளை நெருங்கினான்.

"ஆனா... எப்படி இருந்தாலும்... என் நந்துவை எனக்கு ரொம்பப் பிடிக்கும்... நான் இப்போ வேண்டாம்னு நினைச்சேன்... என்னை சொல்ல வச்சுட்டே... ஐ லவ் யூ நந்தும்மா..."

மூச்சுக்காற்று சுடும் நெருக்கத்தில் இருவரும் இருக்க... அவனை விட்டு இம்மியும் அசையாமல் நின்றிருந்தாள்.

இமைகளை சிமிட்டக் கூட இல்லாமல்... அவன் சொன்னதன் தாக்கம் நெஞ்சை நிறைத்தாலும்... அவன் மேல் இருந்த கோபமே பிரதானமாக இருக்க... அசைய மாட்டேன் என்பதுபோல் அவனைப் பார்த்திருந்தாள்.

அவ்வளவு நெருக்கத்தில்... வியர்வை வழியும் அவள் முகமும்... அழுத்தமான இதழ்களும்... பிடிவாத மான பார்வையும்... விறைப்பான அவள் தோற்றமும்... அவனுக்குக் கோபத்தை மூட்டுவதற்குப் பதில்... இரக் கத்தையே ஊட்டியது.

அவளை அப்படியே தழுவிக் கொண்டு, 'ஏன் இப்படி இருக்கிறாய்...? உனக்கு நான் இருக்கிறேன்...' என்று சொல்ல வேண்டும் என்ற வேகம் வழக்கத்தை விட அதிகமாக ஊற்றெடுக்க... அவன் கரம் உயர்ந்து அவள் முகத்தை வருட முயன்றது.

நந்தினி அவன் கரத்தையும் அவனையும் உக்கிரமாய்ப் பார்க்க... அவன் கரத்தை விலக்கிக் கொள் ளாமல்... அவள் முக வடிவை அளப்பவன் போல்... அவள் முகத்துக்கு நெருக்கமாக அவளைத் தொட்டு

உணர்பவன் போல்... கையை அளந்தவன்... கரத்தை நிதானமாக எடுத்து... தன் பேன்ட் பாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டான்.

"என்னை விட்டு விலகிட முடியும்னு கற்பனை கூடச் செய்யாதே... அது உன்னால் முடியாது... யூ ஆர் மைன்..." சொன்னவன்... வாயைக் குவித்து வியர்வை வழிந்த அவள் முகத்தில் ஊதினான்.

'யூ ஆர் மைன்...' என்ற அந்த வாக்கியம் நந்தினியைப் பலமாகத் தாக்கியது. அந்த வார்த்தையில் அவள் மனம் பாகாக உருக...

'நீ எங்களுக்கு வேண்டான்டி... எங்கேயாவது போய் செத்து ஒழியேன்... நீ கூட இருந்தாலே அது விளங்காது...' ஒரு குரல் காதின் அருகில் கூச்சலிட, உருகிய அவள் மனம் இரும்பாக இறுகியது.

"என்னை விட்டு தள்ளியே இரு... அதுதான் உனக்கு நல்லது. இன்னொரு முறை என்கிட்ட இப்படிப் பேசினால்... சொல்ல மாட்டேன், செய்வேன்..." அவனிடம் கர்ஜித்தவள்... தன் சட்டையை அணிந்தவாறு அங்கிருந்து விரைந்தாள்.

அவள் கண்களுக்குள் வந்து போன உணர்வுகளைப் படிக்க முயன்று தோற்றவனாக நின்று கொண்டிருந்தான் பிரதீப். ஆனாலும்... அவள் தன்னைக் கை நீட்டி அடிக்காததே பெரிய விஷயமாகத் தோன்ற...

அந்த ஒற்றை விஷயம் அவனது காதலுக்கு மிகப்பெரிய அஸ்திவாரத்தை அளித்தது.

அதேபோல்... அவன் அறையை விட்டு வெளியேறிய பொழுது... அவன் தங்குவதற்கான அறை தயாராக இருக்கிறது என்று சொல்லி... வந்து நின்ற காவலர்களைக் கண்டபொழுது... அந்த அஸ்திவாரம் இன்னும் பலப்பட்டது.

இங்கே இவன் தன் காதல் பலப்படுவதில் நிம்மதி கொள்ள... தான் பலவீனமானதை எண்ணித் தவித்தாள் நந்தினி. இரண்டு வாரம் முன்பு தான் எடுத்த உறுதி மொழி என்ன... இன்று தான் நடந்து கொண்ட முறை என்ன...?

'அவனைப் போலீஸ் கைது செய்தால் எனக்கென்ன... இல்லையென்றால் பாராட்டினால் எனக்கென்ன... நான் ஏன் அப்படி ஓடினேன்...?' தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள்.

அவன் மேல் கோபம் இருந்தாலும்... அவனைப் பார்த்த அந்த நொடி... அவள் வாழ்நாளில் அப்படி ஒரு சந்தோஷமான தருணம் வருமென்று அவள் கனவில் கூட நினைத்தறியாத நிமிடம் அது.

என்ன இருந்தாலும் இதை வளர விடுவது நல்லதற்கல்ல... இந்த உறவுகள் ஒரு பொழுதும் எனக்கு நிம்மதியைத் தரப் போவதில்லை... வேண்டாம் விட்டுட லாம்... மனதுக்குள் அவனை வரவேற்காமல் இருப்பதே நல்லது...

அவன் என்னை மாற்ற நான் அனுமதிக்கப் போவ தில்லை... முகத்திரையை இழுத்துப் போர்த்திக் கொண் டாள்.

அவளது இந்தத் திரையை அகற்றும் பணியின் முதல் படியை எடுத்து வைக்க ஆயத்தமாகிக் கொண்டி ருந்தான் பிரதீப். படியில் ஏறுவானா....? சறுக்குவானா...?



என்னை அறியாமல்
எனக்குள் உறைகிறாய்...!
எதிர்க்க முடியாமல் நான்...!

நந்தினி ஏற்கெனவே அரையிறுதிக்குத் தகுதி பெற்றிருந்ததால், மறுநாளும் அடுத்த நாளும் நந்தினிக்கு பாக்ஸிங் போட்டி இருக்கவில்லை. அந்த இரண்டு நாட்களும் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டி நேரம் ஒதுக்கியிருந்தாள்.

ப்ரதீப் அவளுடனே இருந்தான். அவன் மேல் கோபமாக இருப்பதாகக் காட்டிக் கொண்டாலும்... மற்றவர் முன் அதை அவள் வெளிப்படுத்த விரும்பவில்லை. எவ்வளவு முயன்றாலும்... அவன் அருகாமையை மனம் விரும்புவதைத் தடுக்க முடியவில்லை.

உணவு அருந்தும் வேளையும்... பயிற்சியின் பொழுதும் அவன் உடனிருந்தான். இத்தனை வருடமாகத் தனிமையிலே இருந்து பழகியவளுக்கு... தன்னுடனே

ஒருவன் தனக்காக இருப்பதை எண்ணி மனம் இளகவே செய்தது.

"உனக்கு வேற வேலையே இல்லையா...?" ஒரு முறை அவனிடம் எரிந்து விழுந்தாள்.

"இதைவிட முக்கியமான வேலை எதுவும் இல்லை..." அவன் சாதாரணமாகச் சொல்ல... அவன் பதிலில் அவளுக்குக் கண்கள் கசிவது போல் இருந்தது.

அவன் கூடவே இருக்கும் நேரங்களில்... அவனிடம் பாராமுகமாக இருந்தாள். எரிந்து விழுந்தாள். கோபமாகக் கத்தினாள். இப்படி ஒருவன் இருப்பதையே கண்டு கொள்ளாமல் தன் போக்கில் தன் வேலையைச் செய்தாள். அவள் எப்படி இருந்தாலும்... ப்ரதீப் அவளை விட்டு விலகவில்லை.

இவ்வளவு முகங்களை அவனிடம் காட்டினாலும்... கோபமாகப் பேசினாலும்... ஒரு முறை கூட அவனை... 'என்னை விட்டுப் போய் விடு...' என்றோ...

'வெளியே போ...' என்றோ,

'உன்னை எனக்குப் பிடிக்கவில்லை...' என்றோ,

ஒரு வார்த்தை கூட அவள் சொல்லவில்லை.

அவளை அறியாமல் கூட அந்த வார்த்தையை அவள் உதிர்க்கவில்லை. ப்ரதீப்பும் அதை உணர்ந்து கொண்டாலும்... அதை அவளிடம் வெளிப்படையாகக் கேட்கவில்லை.

அதற்குக் காரணம் அவளது ஈகோ தூண்டப்பட்டு விடுமோ என்ற பயமல்ல... மாறாக, 'எங்கே என்னை இங்கிருந்து போகச் சொல் பார்ப்போம்...?' என்று அவன் சவால் விடும் வேளையில்... அதைச் சொல்ல முடியாமல் அவள் சங்கடப்படும் நிலையையோ... அவளது பலவீனத்தைத் தான் உணர்ந்து கொண்டேன் என்று அவள் சங்கடப்படுவாளோ என்பதாலேயே அதை அவன் செய்யவில்லை.

இருவரும் அமர்ந்து உணவருந்தும் வேளையில்... "நந்து... டெல்லியை சுத்திப் பார்க்கப் போலாமா...? இங்கேயே இருக்கப் போர் அடிக்குது..."

அவளுடன் வெளியே செல்ல வேண்டும் என்ற ஆர்வத்தை அப்பட்டமாக முகத்தில் தாங்கி அவன் கேட்க... அவளுக்கு வாய்க்குள் இருந்த உணவு தொண்டைக் குழியில் சிக்கிக் கொண்டது.

நொடியில் தன்னைச் சமாளித்தவள், "நான் ஒண்ணும் ஊர் சுத்திப் பார்க்க வரலை..." முகத்தை கடுகடுவென்று வைத்துக் கொண்டு சொன்னாள்.

அதை அவன் கண்டு கொண்டதாகவே பாவிக்கா மல், "உன்னோட சேர்ந்து ஆக்ரா போகணும் நந்து... இவ்வளவு தூரம் வந்துட்டு... ஆக்ரா போகாமல்... ப்ளீஸ்..."

கெஞ்சலாக அவன் கேட்க... இதற்கு மேல் அவன் முன்னால் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை யற்றவளாய்...

தன் இளக்கத்தை அவனுக்குக் காட்டாமல்... இருக் கையிலிருந்து வெடுக்கென எழுந்தவள், "நிம்மதியா சாப்பிடக் கூட விட மாட்டியா...?" சொன்னவள், விருட்டென அங்கிருந்து நகர்ந்தாள்.

'பொதுவாக இப்படிச் சொன்னால்... எல்லாப் பெண்களும் அதுக்கு வேற ஆளைப் பாருன்னு சொல்லுவாங்க... உன்னால் பேச்சுக்குக் கூட அப்படிச் சொல்ல முடியலை இல்ல நந்து...' உற்சாகம் குமிழியிட அவன் எண்ண... இதையே எண்ணிய நந்தினி...

'ஏன் என்னால் அப்படிச் சொல்ல முடியவில்லை...?' எனக் குமுறினாள்.

அவளது அந்தக் குமுறல் அவளது பயிற்சியிலும் வெளிப்பட்டது.

"நந்து... யார் மேல் என்ன கோபம் உனக்கு...? எதுக்கு இவ்வளவு வெறி... நீ செய்யுறதைப் பார்த்தால்... பயிற்சி எடுக்குற மாதிரி தெரியலை... ரிலாக்ஸ்..." அவளை நெருங்கிக் கனிவாகச் சொன்னான்.

அவனை வெறுப்பாகப் பார்த்தவள்... அவனை விட்டு விலகி நடந்தாள். அவள் விலகிச் செல்லவே... வேகமாக அவள் முன் போய் நின்றவன்,

"உனக்குப் பிடிக்காதது எதையாவது பேசியிருந் தால்... நான் வேண்ணா சாரி கேட்டுக்கிறேன்..." சுற்றி யிருக்கும் அனைவர் முன்பும் காட்சிப் பொருளாக வேண்டாமே என்பதால்... அவளுடன் நடந்தவாறே சொன்னான்.

அவன் வெளியில் செல்ல வேண்டும் என்று அழைத்து... செல்ல முடியவில்லையே என்று ஒரு பக்கம் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தவள்... அவன் மன்னிப்பு வேண்டவும்... இன்னும் தவித்தாள். தன்னைச் சுற்றி யிருப்பவர்களுக்குத் தன்னால் எப்பொழுதும் துன்பம் மட்டுமே கிடைக்கும் என்பதை எண்ணியவள்,

'என்னை ஏன்டா இப்படிப் பாடா படுத்துற... நீ இல்லன்னா நான் நானாக இருப்பேன்... என் கண் முன்னாடி இருந்து போயிடு... நான் நிம்மதியா இருப்பேன்... நீயும்தான்...'

மனதுக்குள் எண்ணியவளின் எண்ணம்... அவள் மனதைத் தாண்டி வெளிப்படவில்லை.

அவனிடம் சொல்ல முடியாத தன் பலவீனத்தை எண்ணியவள்... அதை மறைக்க... "எல்லாம் உன்னாலதான்..." கையில் இருந்த க்ளவுசைக் கழட்டி... அவன் மேல் விட்டெறிந்து விட்டுச் சென்றாள்.

அவளது க்ளவுசை கேட்ச் பிடித்தவன்... செல்லும் அவளது முதுகை வெறித்தான். 'நந்தும்மா... உன் மனசுக்குள் என்னதான் இருக்கு...?' கவலை கொண்டான்.

ஏதோ ஒரு விதத்தில், தான் அவளை தொல்லை செய்வதை உணர்ந்தவன், சிறிது நேரம் விலகியிருக் கலாம் என்று முடிவு செய்தான். அன்று மதியத்திற்குப் பிறகு... மறுநாள் அவளுக்குப் போட்டி துவங்கும் வரை... அவள் பார்வையில் விழவில்லை.

ஒரு வேகத்தில் அவனிடம் கோபமாகப் பேசிவிட்டு வந்தவள்... வழக்கம் போல் அடுத்த பத்தாவது நிமிடம்... அவள் கண்கள் அவனைத் தேடியது. அவன் வரவில்லை என்றவுடன்... 'இவன் மனசுக்குள் என்னதான் நினைச்சுட்டு இருக்கான்...? போகட்டுமே... அவன் இல்லையென்றால் என்னால் இருக்க முடியாதா என்ன...?'

வீம்பாக எண்ணிக் கொண்டாள்.

அவளது பிடிவாதம்... இரவு தனியாக உணவு அருந்த அமர்ந்த பொழுது கொஞ்சம் ஆட்டம் கண்டதென்றால்... இரவு அறைக்குச் சென்ற பொழுது... பாதி ஆட்டம் கண்டது. ஆனாலும் அதை ஒத்துக்கொள்ள மனம் இல்லாமல்... வீம்பாகப் படுத்துக் கொண்டாள்.

அதிகாலையில் வழக்கமான நேரத்துக்கு எழுந்த பொழுது... அறைக்கு வெளியே அவனது காலடி யோசைக்காக மனம் ஏங்குவதைத் தடுக்க முடியாமல் தடுமாறினாள்.

இயந்திரமாகக் காலைக் கடன்களை முடித்தவள்... பாக்ஸிங் பயிற்சியையும் அவ்வாறே செய்தாள். காலை பத்து மணிக்கு இறுதிப் போட்டி என்பதால்... அதற்குத் தயாராகி பயிற்சிக் கூடத்தில் இருந்து வெளிப்பட்டு... போட்டி நடக்கும் இடத்துக்குச் சென்றாள்.

தான் தனியாக இருப்பதை புதிதாக உணர்பவள் போல்... மனம் வலித்தது. அந்த வலியையும் மீறிய ஒரு கோபம் மனதை ஆக்கிரமித்தது. அங்கே இருப்பவர்களில்

தான் மட்டும் தனியாக இருப்பதை உணர்ந்தாள். அந்த தனிமையைப் போக்க... ப்ரதீப் வேண்டுமென்று மனம் முரண்டியது.

மனதின் கோபமும்... இயலாமையும்... தனிமையும் அவளை அழுத்த... இருக்கையில் சென்று அமர்ந்தாள். இருக்கையில் அமர்ந்து... தலையைக் குனிந்திருந்தவள் க்ளவுஸ் போட்ட கரங்களை முட்டி... முட்டிப் பிரித்தவாறு... தன் யோசனையைத் தடுக்க முயன்று கொண்டிருந்தாள்.

"ஆல் தி பெஸ்ட் நந்து..." காதுக்கருகில் கேட்ட அவன் குரலில்... அவள் மனதில் இருந்த அனைத்துத் துயரங்களும் நொடியில் வடிந்து விட... சட்டென குரல் வந்த திக்கில் பார்த்தாள்.

அவளது ஆர்வம் சுமந்த கண்கள்... படிப்படியாகக் கோபத்துக்கு மாற... அதை உணர்ந்தவன், "ப்ளீஸ், சாரி..." அவள் கோபத்துக்கான காரணத்தை அவன் தவறாகப் புரிந்து கொண்டு பேச்சைத் துவங்க...

"இடியட்..." தன்னை மீறி அவனிடம் கத்தி விட... அதிர்ச்சியாய் அவளைப் பார்த்தான்.

அவன் அதிர்ச்சியைப் பார்த்தவள் எதையோ சொல்லத் துவங்கும் வேளை... போட்டிக்கான அழைப்பு வரவே... எழுந்து சென்று விட்டாள். அவளது நடை யிலிருந்தே அவள் கோபத்தை உணர்ந்தவன்...

அந்தச் சூழலில் எதையும் செய்ய முடியாமல் அமைதியானான்.

அவளது நடத்தைக்கு அர்த்தம் புரியாமல் திகைத்து அமர்ந்திருந்தான். தனக்குள் அவள் வேண்டும்... அவளை விட்டு விலகுவதை நினைக்கக் கூட அவனால் முடியவில்லை. அப்படியிருக்கையில்... ஒரு பெருமூச் சொன்று அவனிடமிருந்து பிறந்தது.

அதே நேரம்... நந்தினி இப்படி வருந்துவதையும்... தவிப்பதையும் அவனால் காண முடியவில்லை. அவள் மனதுக்குள் என்ன இருக்கிறது என்பது அறிய முடியாமல் தவித்தான். இதுவரை அவளது கோபத்திலும்... பாராமுகத்திலும் எந்த மாற்றமும் அவன் உணரவில்லை.

மாறாக அவளது வார்த்தைகள் கூட அவனை எட்டியிருக்கவே சொல்கிறது. முடிவெடுக்க முடியாமல் தினறினான் என்று சொல்வதை விட... அவள் என்ன நினைக்கிறாள் என்பது புரியாமல்தான் அதிகம் தினறினான்.

தன் குழப்பத்தில் மூழ்கியவன்... நந்தினியின் போட்டியைக் கவனிக்கத் தவறினான். நந்தினியும் போட்டியில் கவனம் செலுத்த முடியாமல்... அவனைத் தான் இடையிடையே கவனித்தாள்.

அதனால் அவளது புள்ளிகள் ஏறுமுகத்தைக் காணாமல்... இறங்குமுகத்தைக் கண்டது.

அப்பொழுது... மைக்கில் வந்த அறிவிப்பில் கலைந்தவன், அது என்னவென்று கவனித்தான். மூன்று வருடமாகப் பதக்கத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கும்

நந்தினி... இந்த வருடம் அதை தக்கவைத்துக் கொள் வாரா... இல்லையென்றால்... அவரது எதிரி முதல் பதக்கம் வெல்வாரா... எனக் கேட்டுக் கொண்டிருந்தான்.

சட்டெனத் தன் நினைவைக் கலைத்தவன்... நந்தினியைப் பார்த்தான். முதல் ரவுண்ட் முடிவடைந்து... ஓய்வெடுக்க அவள் சென்று அமர... வேகமாக அவளை நெருங்கினான். அவளுக்குத் தண்ணீர் கொடுக்க வந்த பையனைத் தவிர்த்து... தானே அவளுக்குத் தண்ணீர் கொடுத்தான்.

மறுப்பின்றி அருந்தியவள், அமைதியாகவே இருந்தாள். அவளிடம் பேசவா வேண்டாமா என்ற குழப்பத்திற்கு ஆளானவன்... பேச வாய் திறக்கும் பொழுது பெல் அடிக்கவே, நந்தினி எழுந்து சென்றாள்.

போட்டியில் நின்ற நந்தினிக்குக் கண் முன்... ப்ரதீப்பின் மன்னிப்பு வேண்டலே நிழலாடியது. அத்தோடு அவனது யோசனையான முகமும்... வேதனையைச் சுமக்கும் பார்வையும் அவளை என்னவோ செய்தது.

ஆனாலும் தன் நிலையிலிருந்து இறங்க முடியாமல்... அவள் பிடிவாதம் அவளைத் தடுத்தது. அவள் மனம் ஒரு நிலையில் இல்லாத காரணத்தால்... அவளால் சரியாக விளையாட முடியவில்லை. இதே நிலையில் சென்றால்... அவள் தோற்று விடுவாள் என்பது அவனுக்குப் புரிந்தது.

கீழே இருந்து எதுவும் செய்ய முடியாமல் தவித்தான். அவனது தவிப்பைக் கண்டவள்... கவனம் முழுவதும்

அவனிடம் இருக்க... அடிக்காமல்... அடிப்பதைத் தடுப் பதிலேயே குறியாக இருந்தாள்.

அவன் கீழே இருந்து... அடி என்பது போல் சைகை செய்ய... அதைக் கண்டு கொள்ளாமல் அவனையே பார்த்திருந்தாள். அங்கிருந்த அனைவருக்குமே... அவளது கவனம் அங்கில்லை என்பது புரிந்தது.

ஒரு விதத்தில் ப்ரதீப்பின் தவிப்பு அவளுக்குப் பிடித்தது. பிறந்தது முதல் பிரதீப் அவளது வாழ்வில் வரும் அந்த நிமிடம் வரை... அவளுக்காக யாரும் தவித்தது கிடையாது. அவள் யாருக்கும் முக்கியமான வளாக, அன்பிற்குரியவளாக இருந்தது இல்லை.

அப்படியிருக்கும் பொழுது அவளுக்கான அவனது தவிப்பு... அவளுக்கு ஒருவித ஆர்வத்தை அளித்தது. ஒரு கட்டத்தில் எதிரி அடிப்பதைத் தடுக்கக் கூடச் செய்யாமல் கையை விலக்க... அவள் விட்ட குத்து... நந்தினியின் முகத்தைப் பதம் பார்த்தது.

"நந்தும்மா..." அவள் வலியில் துடித்ததை விட... அவன்தான் அதிகமாகத் துடித்தான்.

பாக்ஸிங் விங்குக்குள் செல்ல முயலவே... நடுவர் அவனைத் தடுத்தார். இப்பொழுது அவன் வெளிப்படை யாகத் தவிக்க... இப்பொழுது நந்தினி ஒருவிதத் திருப்தியுடன் எதிரியிடம் குத்து வாங்கினாள்.

அவள் அடிபடவே 'தன் மேல் இருக்கும் கோபத்தில் வாங்குகிறாளா... இல்லையென்றால் வேண்டுமென்றே

செய்கிறாளா...?' என்பது தெரியாமல் தவித்தான். அவள் முகத்தில் சில இடங்களில் ரத்தம் கட்டிக் கொள்ள... ப்ரதீப்பிற்குக் கண்களில் ஈரம் குளம் கட்டியது.

அந்த நேரம், தான் ஒரு ஆண்மகன் என்பது அவனுக்கு மறந்து போனது. அங்கே அடி வாங்குபவள் தனக்கு உயிரானவள் என்பது மட்டுமே நினைவில் நிற்க... விங்குக்குள் செல்ல முடியாமல்... சோர்ந்து போய்க் கீழே இறங்கினான்.

அப்பொழுது பெல் அடிக்கவே... அவள் ஓய்வு எடுக்க வரவே... அவளிடம் கேட்டு விடுவது என்ற முடிவுடன் வேகமாக அவள் அருகில் வந்தான். உதவி செய்யும் பையனின் கையில் இருந்து டவலை வாங் கியவன்... அவள் முகத்தைத் துடைத்தான்.

அவனது பணிவிடையில் நெஞ்சம் விம்மியது. அவள் தோள் மேல் ஆதூரமாகச் சாய்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை அவளுக்குள் முளைவிட்டது.

அவளுக்குத் தண்ணீரைப் புகட்டியவன், "ஏன் இப்படி...?" எனக் கேட்க வாயைத் திறக்க,

அவளோ அவனை முந்திக் கொண்டு, "தேங்க்ஸ்..." என்றாள். அவன் கண்களுக்குள் குளம் கட்டியிருந்த கண்ணீரைக் கண்டவள்... அந்தக் கண்ணீரில் கரைந் தாள்.

'எனக்காக ஒருவன் இப்படித் துடிப்பான் என்றால்... எவ்வளவு வலியையும் நான் தாங்கத் தயார்...!'

மனதுக்குள் எண்ணிக் கொண்டாள். அவளது நன்றியை எதற்கென்று புரியாமல் அவன் பார்க்க... உடல் வலியில் சோபையாகச் சிரித்தாள்.

அவளது சிரிப்பில், அவளுக்குத் தன்மேல் கோபமில்லை என்பதை உணர்ந்தவன்... அதன் பிறகுதான் அதன் பின்னணியை ஆராய முயன்றான். மனம் கலங்கியிருக்கும் வேளையில் யோசிக்கக் கூட அவனால் முடியவில்லை.

'நான் இப்போ தடுமாறக் கூடாது...' முயன்று தன்னைக் கட்டுப்படுத்தியவன் சிந்திக்க... நொடியில் அவள் மனநிலை அவனுக்குப் புரிந்தது. இருக்கும் சூழலில்... உனக்காக நான் இருக்கிறேன் என்பதை வார்த்தையாகக் கூடச் சொல்ல முடியாமல்... அவள் மனநிலை அவனைத் தாக்கியது.

'அம்மா... இப்பொழுது இந்தச் சூழலை எப்படிச் சமாளிக்க...?' என்று இறந்த அவன் தாயைத் துணைக்கழைத்தான். தாய் சொன்ன சொற்கள் நினைவிலாட... நொடியில் யோசனை பளிச்சிட்டது.

அவளுக்கு நான் இருக்கிறேன் என்று சொல்வதை விட... அவள் மனநிலையை மாற்றி... அவளை ஜெயிக்க வைப்பது ஒன்றே பிரதானமாகத் தோன்றியது.

"ஏன் நந்து... நான் இல்லாத பொழுது மூன்று வருடமாக நீ தக்க வைத்திருந்த கோப்பை... நான் வந்த இந்த வருடம் உன் கையை விட்டுப் போகப் போகுதே...

நான் உன்னோடு இருந்தால்... உன்னால் வெற்றிபெற முடியாதோ...

"என்மேல் அவ்வளவு கோபமாகவா இருக்கே... அப்போ... நான் இங்கே இல்லேன்னா நீ சரியா விளையாடுவியா...? நான் உனக்கு ராசியில்லையோ...!"

"ஷட் அப்..." அவன் கேட்டு முடிக்கும் முன்னர்... அடிக்குரலில் உறுமினாள்.

அவள் கத்தி முடிப்பதற்கும்... பெல் அடிப்பதற்கும் சரியாக இருக்க... அடுத்து நடந்த சுற்றில்.. எதிரியை நாக் அவுட் செய்து வெற்றியைத் தக்க வைத்தாள்.

அவள் விளையாட்டில் இருந்த வேகத்தையும்... வெறியையும் கண்ட ப்ரதீப் மலைத்து நின்று விட்டான். மூன்றே நிமிடங்களில் அவள் ஆட்டத்தை முடிவிற்குக் கொண்டு வர... துள்ளிக் குதித்தான். மேடையில் நடுவர்... அவள் வெற்றி பெற்றதற்கு அடையாளமாக அவள் கையை உயர்த்திய பொழுது... அவள் பார்வை... ப்ரதீப்பின் சந்தோஷ முகத்திலேயே நிலைத்திருந்தது.

அவனது உற்சாகம் அவளையும் தொற்றிக் கொண்டது. அடுத்த அரைமணி நேரத்தில், வெற்றிக் கோப்பை அவள் கையில் கொடுக்கப்பட... அதைப் பெற்றுக் கொண்டவள்... மேடையிலிருந்து இறங்கி வந்து அவன் கரத்தில் கொடுத்தாள்.

அவள் செய்கையை விழி விரித்து ஆச்சரியமாகப் பார்த்தவன்... கை நீட்டி வாங்கிக் கொண்டான். "நீதானே

ஆசைப்பட்டே... உனக்காகத்தான் ஜெயிச்சேன்...!" அவள் சொன்னபொழுது... அப்படியே அவளை இறுகக் கட்டிக் கொள்ள வேண்டும் என்ற வேகம் பிறந்தது.

ஏற்கெனவே அரசல் புரசலாக... அவர்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தவர்கள்... நந்தினியின் இந்த செய்கையில்... அவர்களுக்குள் எந்த மாதிரி உறவு என்பதை உறுதி செய்தார்கள்.

மூன்றாம் மனிதர்களாகிய அவர்களுக்கே இப்படி என்றால்... ப்ரதீப்பைக் கேட்கவும் வேண்டுமா...!

தங்களுக்கு எப்பொழுது தனிமை கிடைக்கும் என்று ஏங்கினான்.

அனைத்துக் காவலர்கள்... உயரதிகாரிகளின் வாழ்த்தை அவள் பெற்றுக் கொண்டிருக்க... அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

"நந்தினி... உங்களுக்குக் கல்யாணம் முடிவான விஷயத்தை எங்ககிட்ட சொல்லவே இல்லை... எனிவே... கங்ராட்ஸ்..."

சொன்னவாறு கை கொடுக்க... அப்பொழுது தான் நிலைமையின் தீவிரம் அவளுக்குப் புரிந்தது.

அவரின் வாழ்த்தைக் கேட்ட நந்தினியின் முகம் சுருங்குவதைக் கண்ட ப்ரதீப் தவித்தான். அவளது இந்த இளகிய நிமிடத்தை சரியான விதத்தில் பயன்படுத்திக் கொள்ள அவன் விரும்பினான். ஆனால், நிலைமை தீவிரமடைவதை அவன் விரும்பவில்லை.

ஒரு வழியாக அனைவரின் வாழ்த்துக்களையும் பெற்றுக் கொண்டு... மாலையில் பார்ட்டியில் சந்திக்கலாம் என்று சொல்லி விடைபெற்றாள் நந்தினி. இங்கிருந்து வெளியேறி... அவள் அறைக்குச் சென்று விட்டால், அங்கே அவளைக் காண்பது கடினமென்பதை உணர்ந்த ப்ரதீப்...

அன்று அவனை அழைத்துச் சென்ற அவளது உடைமாற்றும் அறையைக் கடக்கும் வேளையில்... அவளது கைபிடித்து இழுத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தான்.

அவனது செய்கையை எதிர்பார்த்திருந்தவள் போல்... அவனது இழுப்பிற்குச் சென்றவள்... அசையாது அவனையே பார்த்தாள்.

அவள் பார்வையில் ஒட்டாத தன்மையைக் கண்ட ப்ரதீப்... தன்னை அவளுக்கு உணர்த்திவிடும் வேகத்தில்... அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

"நந்தும்மா... ஐ லவ் யூ... நான் எப்பொழுதும் உன்னோடவே இருப்பேன்டா..." சொன்னவன், தன் நேசத்தை அவளுக்குப் புரியவைக்க, அவள் இதழ்களோடு தன் இதழ்களைப் புதைத்துக் கொண்டான்.

நந்தினி இமை மூடி இருக்க... தன் வேகம் தணிந்தவன்... அவளை விட்டு விலகியபொழுது... அவள் செய்த செய்கையில்... அவன் முகம் அவமானத்தால் கறுத்தது.



உன்மேல் நான் கொண்ட நேசம்
கடலலையைப்போல்...!
காற்று ஓயும் வரை
அலை இருப்பது போல்...
என் மூச்சு உள்ளவரை
நானும் இருப்பேன்... உன்னுடன்!

நந்தினிக்குத் தன்னையும்... தன் நேசத்தையும் உணர்த்திவிடும் வேகத்தில் அவன் செய்த செயலுக்கு எதிர்வினையாக... நந்தினி செய்த செய்கையில்... முகம் அவமானத்தில் கன்ற... வேகமாக அவளை விட்டு விலகியவன்... அவளைத் திரும்பியும் பாராமல் அங்கிருந்து வெளியேறினான்.

ப்ரதீப் முகம் கறுத்து... தன்னை நிமிர்ந்தும் பாராமல் சென்ற அந்தத் தோற்றம்... நந்தினியின் மனதை அறுத்தது. அவன் அடைந்த துன்பத்தை விட அதிகமாக அவள் வேதனை அடைந்தாள்.

இதற்கு மேல் ஒரு நிமிடம் கூட டெல்லியில் இருக்க முடியாது என்று எண்ணியவள், அடுத்த விமானத்தில் சென்னை திரும்பினாள். அவளது வெற்றிக் கோப்பையைக் கூட எடுக்காமல் கிளம்பி விட்டாள்.

சென்னை வந்து இறங்கிய நந்தினி.. வீட்டில் வந்து படுக்கையில் விழும் வரை... 'என்ன செய்கிறோம்... எங்கிருக்கிறோம்... சரியாக நடந்து கொள்கிறோமா...?'

என்ற எந்தவிதமான தெளிவும் இல்லாமல்... குழம்பித் தவித்தாள்.

எப்படிச் சரியாக வீடு வந்து சேர்ந்தாள் என்று கேட்டால்... அவளுக்குத் தெரியாது. ப்ரதீப்பின் முன்னால்... தைரியமாக நடந்து கொண்டாலும்... அவன் செய்கையில் உருகிக் கரைந்தாள் என்பதுதான் உண்மை.

அவள் பிறந்தது முதல்... பாசமான அணைப் பையோ... அரவணைப்பையோ... முகத்தையோ அவள் பெற்றதில்லை. குழந்தையாக இருந்தபொழுது... தனது தம்பிக்கும்... தங்கைக்கும் கிடைக்கும் தாயின் மடியும்... அணைப்பும்... ஏன் தனக்குக் கிடைக்கவில்லை என்று ஏங்கி இருக்கிறாள்.

விவரம் தெரிந்தபொழுது... ஏன் யாருக்கும் தன்னைப் பிடிக்கவில்லை என்று மருகி இருக்கிறாள். குளிக்க வைக்கக் கூட... தன்னைத் தொடாத பெற்றவளை எண்ணி... எத்தனையோ நாள் கண்ணீர் வடித்திருக்கிறாள். தான் உடல் நலமில்லாமல் இருந்தபொழுது... பாசமான ஒரு வார்த்தைக்காக, அக்கறைக்காகத் தவித்திருக்கிறாள்.

ஆனால், இன்று அனைத்தும் ஒருவனின் மூலமாகக் கிடைக்க... அதை ஏற்க முடியாத தன் நிலையை எண்ணி, விரக்தியாகப் புன்னகைத்தாள்.

அதையும் தாண்டி, ப்ரதீப்பின் அணைப்புக்குள் தான் உணர்ந்த கதகதப்பு... பாதுகாப்பு... அரவணைப்பு... நெருக்கம்... பாசம் என அனைத்தையும் எண்ணி வியந் தாள்.

தன் வாழ்நாளிலேயே முதல் முறையாகத் தான் பெற்ற முத்தம்... அவள் உயிர் வரை தீண்டியது. முத்தம் காமத்தைச் சேர்ந்தது இல்லை என்பதை அவள் உணர்ந்த அந்த நிமிடம்... அவனது உச்ச அன்பை வெளிப்படுத்த அவன் கொடுத்த அந்த முத்தத்தை... ஆழ்ந்து அனுபவித்தாள்.

அவனை மனதுக்குள் முழுவதுமாக ஏற்றுக் கொண்டதாலேயே... அவனை விட்டு இம்மி கூட அசையாமல்... அவன் செய்கைக்கு உடன்பட்டாள். ஒரு முத்தம்... தான் வாழ்நாளில் அனுபவித்த அத்தனைத் துன்பங்களுக்கும் மருந்தாக முடியும் என்பதை அந்த நொடி உணர்ந்து கொண்டாள்.

ஆனால், இருபது வருடங்களாக அவள் கேட்ட விஷயங்களும், இப்பொழுது அவள் மனதுக்குள் வளர்ந்து விருட்சமாகிவிட்ட அவளது எண்ணங்களும்... அவனை ஏற்க அனுமதிக்கவில்லை என்பதுதான் உண்மை.

அவன் தன்னை அணைத்திருந்ததற்குக் குறையாத அணைப்பை... அவளுக்கும் வழங்க வேண்டும் என்ற ஆசையும் வேகமும் மலையளவு இருந்ததுதான். மனம் எவ்வளவு குழைந்ததோ...! ஆனால், அதைச் செயல்படுத்த முடியாமல் வெளியே இறுகிப் போனாள்.

அத்தோடு நில்லாமல்... 'அவன் தன்னை நெருங்கிய வேளையில்... விலகாமல் இருந்த தன்னைப் பற்றி அவன் என்ன நினைத்திருப்பான்...? இவளை வளைப்பது சுலபமென்று ஏளனமாக எண்ணியிருப்பானோ...?' என்று

அவள் சிந்தையில் எழுந்த அந்த வினா... அவள் மொத்த மனநிலையையும் மாற்றியது.

அவனை விலக்கித் தள்ள அவளுக்கு ஒரு நொடி கூட ஆகி இருக்காது. ஆனால், இந்த உலகிலேயே தனக்காக... தன் மேல் நேசம் கொண்ட ஒரே உயிரான அவனை... 'போ...!' என்று வெறும் வார்த்தையால் சொல்லக் கூட அவளால் முடிந்ததில்லை.

அப்படியிருக்கையில்... அவனை விலக்கித் தள்ளுவதென்பது... தன் உயிரையே வெறுப்பதற்குச் சமம் என்பதை உணர்ந்தாள். அதை அவளால் எந்தக் காலத்திலும் செய்ய முடியாது.

அதே நேரம்... தன் மனதை அவனிடம் திறந்தால்... அவன் தன்னைவிட்டு விலகிச் செல்லமாட்டான் என்பதாலேயே... அவன் வேகம் தணிந்த வேளையில்... தன் முகத்தையும் மனதையும் கடினமாக்கிக் கொண்டாள்.

அவள் என்னவோ தன் நிலையைத் தக்க வைத்துக் கொள்ளவே அவ்வாறு நடந்து கொண்டாள். ஆனால், அவன் முகம் கன்ற விலகிச் சென்ற அந்த நிமிடம்... அவளது பாதி உயிர் போய் விட்டது. அங்கிருந்து அவனது வேதனை சுமந்த முகத்தைப் பார்க்கும் சக்தி அற்றவளாகவே அங்கிருந்து கிளம்பி விட்டாள்.

அத்தோடு... அவன் தன்னைத் தேடி வராமல் போகும் அந்த நிமிடத்தை எதிர்கொள்ளும் சக்தி அவளுக்கு இருக்கவில்லை. எதிலிருந்தோ தப்பி ஓடுபவள்

போல் ஓடி... வீடு வந்து சேர்ந்த பிறகும்... கண்ணுக்குள் இருக்கும் ப்ரதீப்பின் பிம்பத்தை அவளால் விரட்ட முடியாமல் தடுமாறினாள்.

'எங்கே இருந்தாலும் வந்துடுடா...' உள்மனம் அவளையும் மீறிக் கதறித் துடிக்க... வெளியே இருந்த நந்தினியோ... ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வடிக்க மாட்டேன் என்று இறுகியிருந்தாள்.

அங்கே நந்தினியை எதிர்கொள்ளும் தைரியம் இல்லாமல் தவித்த ப்ரதீப்... இரவில் பார்ட்டியில் அவளைத் தேட... அவள் கிளம்பி விட்டாள் என்பதை அறிந்து கவலை கொண்டான்.

அவள் விட்டுச் சென்றிருந்த கோப்பையை எடுத்துக் கொண்டு அவனும் சென்னை வந்து இறங்கினான். உடனடியாக அவளை எதிர்கொள்ளும் மனவலிமை அவனிடம் இருக்கவில்லை.

கையில் கோப்பையோடு வந்திறங்கிய நண்பனை உற்சாகமாக வரவேற்றான் சரவணன்.

"டேய் மச்சான்... என்ன... அவங்க கோப்பை உன்கிட்டே... ராசி ஆயிட்டீங்களா...? எப்போ கல்யாணம்?" கேலியும் சந்தோஷமும் போட்டி போட, ப்ரதீப்பிடம் கேட்டான்.

"ப்ச்... நீ வேற... போடா..." அலுப்பாகச் சொன்னவன், கோப்பையை டீப்பாயில் வைத்தவன், பேக்கைக் கீழே வைத்து விட்டு... சோபாவில் சோர்வாகப்

படுத்துக் கொண்டான். ப்ரதீப்பின் முகம்... அடைந்த அவமானத்தை எண்ணிச் சுருங்கியது.

ப்ரதீப்பின் சோர்வை உணர்ந்து... அவனுக்கு டீ தயாரிக்க உள்ளே சென்றான். சரவணன் உள்ளே செல்லவே... ப்ரதீப்பின் நினைவுகள்... நடந்தவற்றை எண்ணிப் பார்த்தது.

நந்தினியை நெருங்கி... அவளை அணைத்து... அவள் இதழ்களில் தன் இதழ்களைப் புதைத்த பொழுது... இந்த உலகையே வென்ற உணர்வில் திளைத்தான். அது ஒரு நொடிதான்... அடுத்த நொடியே... அவளிடம் துளி எதிர்ப்புக் கூட இல்லாததை உணர்ந்தவனுக்கு... எதுவோ சரியில்லை என்ற எண்ணம் எழுந்தது.

வேகமாக அவளை விட்டு விலகி... அவள் முகத்தைப் பார்க்க... அது இரும்பாக இறுகி இருந்தது. அவன் அவளிடம் பேசத் துவங்கிய வேளையில்... "உனக்கு எப்பவும் என்னிடமிருந்து எந்தப் பிரதிபலிப்பும் இருக்காது. அது எந்த விஷயமாக இருந்தாலும் சரி..." முகத்திற்கு இணையாகக் குரலும் இறுகியே வெளிவந்தது.

அவன் செய்த செயலுக்கு... அவளது எதிர்ப்பைக் காட்டியிருந்தாலோ... அவனை விலக்கித் தள்ளியிருந் தாலோ... ஓங்கி இரண்டு அடி அடித்திருந்தாலோ கூட... இப்படி அவமானப் பட்டிருக்க மாட்டான். மாறாக... உனது செய்கை என்னை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை... நீ எந்த விதத்திலும் என்னைத் தீண்ட முடியாது என்பதை அவள் உணர்த்திய விதம்...

ஒரு ஆண் மகனான அவனுக்கு மிகுந்த அவ மானத்தை அளித்தது. தான் நேசிக்கும் ஒரு பெண் ணுக்குத் தனது நெருக்கம் எந்த விதத்திலும்... சிறு சலனத்தைக் கூட விதைக்கவில்லை என்றால்... அது தனது ஆண்மைக்கு எவ்வளவு பெரிய அவமானம்...?

அந்த எண்ணமே அவனை அழுத்திப் புரட்டிப் போட்டது. அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்கவும் முடியாமல்... முகம் கறுத்துப் போய்... அவ்விடத்தை விட்டு அகன்ற அந்த நிமிடம்... தன் காதல் தோற்றுப் போனதாக உணர்ந்தான்.

'ஒரு நிமிடம் என்னை நெருங்குவதாகத் தோன் றியது. அடுத்த நிமிடமே... நீ யாரோ என்பது போல் எப்படி அவளால் நடக்க முடிந்தது?' நினைக்க நினைக்க... வேதனை மட்டுமே மிஞ்சியது.

நினைவுகளை உதறித் தன்னை மீட்டுக் கொள்ள முயன்றான். ஆனால், அது முடியாமல்... மனம் அதிலேயே உழன்றது.

சரவணன் டீ கொண்டு வந்து கொடுத்தவன், "என்னடா ஆச்சு...? ஏன் ஒரு மாதிரி இருக்கே...? நந்தினி கோபப்படுவதோ... கண்டுகொள்ளாமல் இருப்பதோ புதுசா என்ன...? அதையே நினைச்சுட்டு இருக்காமல்... டீயைக் குடிச்சிட்டுப் போய் வேலையைப் பாருடா...!" ஆதரவாகப் பேசினான்.

'என்னால் முடியலைடா...!' என்பது போல் பார்க்க, ஆதரவாக நண்பனின் தோளை அழுத்தினான்.

"நீ இவ்வளவு வருத்தப்படுற மாதிரி என்னதான் நடந்தது பிரதீப்? சொன்னால் உன் மன பாரம் குறையும்னா சொல்லு...!"

அவன் குரலில் நண்பனின் கவலையைப் போக்கிவிட வேண்டும் என்ற வேகம் தெரிந்தது.

"பட்ட வலியை வெளியே சொல்லலாம். ஆனால், அவமானத்தை...!" சொன்னவன்... சரவணனின் முகம் பாராமல் திருப்பிக் கொண்டான்.

"என்னடா சொல்லுற...? உன்னை அவமானப் படுத்தினாங்களா...? யார், நந்தினியா...?" அவன் குரலில் நம்பமுடியாத தன்மை.

"என் காதல் தோத்துப் போச்சு சரவணா. நான் நந்தினியிடம் தோத்துப் போய்ட்டேன்...!" அவன் குரலில் அவ்வளவு வலி.

"என்ன நடந்ததுன்னு முதல்ல சொல்லுடா...!" நண்பனின் வேதனையைக் காணச் சகிக்காமல், அவனைப் பிடித்து உலுக்கினான்.

ப்ரதீப்பிற்கும் இந்த மன அழுத்தத்தைத் தாங்க முடியாமல்... அவனிடம் கொட்டினான்.

"அவ எதைச் செய்திருந்தாலும் எனக்கு இவ்வளவு வலித்திருக்காது. அவ்வளவு ஏன்...? அவ கையில் எப் பொழுதும் வைத்திருக்கும் துப்பாக்கியை எடுத்துச் சுட்டிருந் தால் கூட இவ்வளவு வருத்தப்பட்டிருக்க மாட்டேன்...

"ஆனால்... கடைசியாக அவள் சொன்ன வார்த்தையும்... பார்வையும்... அசராமல் நின்ற நிலையும்... அப்படியே...!" அவன் உணர்வுகளை வார்த்தையில் வடிக்க முடியாமல் தடுமாறினான்.

"டேய் மச்சான்... சாதிச்சுட்டடா... கங்க்ராட்ஸ் டா...!"

பிரதீப்பின் வேதனை புரியாமல்... உற்சாகம் குமிழியிட... அவனை அணைத்தவாறு சொன்னான்.

"ஏன்டா...! நான் அவமானப் பட்டதுக்கா வாழ்த்துச் சொல்லுற... உனக்கும் என் வேதனை கேலியாகப் போச்சு இல்ல...!" வருத்தம் மாறாமல் சொன்னான்.

"என்னோட காதல்... உனக்குப் பிடிக்காதுன்னு தெரியும்... அதுக்காக இப்படியா...?" அவனை விலக்கிவிட்டு எழுந்து சென்றான்.

"டேய் மச்சான்... கொடுத்த முத்தத்தோட போதை இன்னும் தலையில் இருந்து இறங்கலையா...?" கண்ணடித்துக் கேட்டான்.

"என்னைக் கொலைகாரனா மாத்தாதே சரவணா..." விரல் நீட்டிக் கடிந்து கொண்டான்.

"சரி விடு... இப்போ நீ விளையாடுற மூடில் இல்லை போல... ஏன்டா... உனக்கு உண்மையாவே புரியவே இல்லையா...?" ஆச்சரியமாகக் கேட்டான்.

புத்திசாலியான தன் நண்பன், காதல் விஷயத்தில் களிமண்ணாக இருப்பதை வியப்பாய் உணர்ந்தான்.

"உனக்குத் தான்டா நான் சொன்னது புரியலை. போடா...!" பல்லைக் கடித்தான்.

"என்னடா இது...? சந்தோஷப்பட வேண்டிய நேரத்தில் இப்படி..." அவன் மேலே சொல்லும் முன்... பாய்ந்து சென்று அவன் கழுத்தைப் பிடித்தான்.

"ஹையோ... கொலை, கொலை...!" அவன் போலியாக அலற... அலுப்புடன் கையை விலக்கிக் கொண்டான் பிரதீப்.

ப்ரதீப்பைக் கைப்பிடித்து இழுத்து வந்தவன், சோபாவில் அமர வைத்து விட்டு, உள்ளே சென்று இரண்டு கூல்ட்ரிங்ஸை எடுத்து வந்தவன், ஒன்றை அவனிடம் கொடுத்து விட்டு... மற்றதைப் பருகினான்.

ப்ரதீப் குடிக்காமல் வைத்திருப்பதைப் பார்த்தவன், "டேய்... நான் சொல்லப் போறதைக் கேட்டு குதிக்கவாவது உடம்பில் தெம்பு வேணுமில்ல... அதுக்காகவாவது குடி...!" அழுத்திச் சொல்லி அவனைக் குடிக்க வைத்தான்.

ப்ரதீப் ஒரு மிடறு குடித்த பிறகு, "ஏன் பிரதீப்... உன் இடத்தில் வேறு ஒருவன் இருந்திருந்தால், அவங்க கிட்டயாவது போயிருக்க முடியுமா...?" கேட்டுவிட்டு குளிர்பானத்தை அவன் குடிக்கத் துவங்கவே...

ப்ரதீப் அவன் சொன்னதைக் கேட்டவாறே... குளிர்பானத்தைக் குடிக்கப் போனவனின் கரங்கள் அப்படியே நின்றது. பின்னர் ஒரே மூச்சில் அதைக் குடித்து முடித்தவன்... பாய்ந்து சென்று அவனைக் கட்டிக் கொண்டான்.

"டேய்... டேய்... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கழுத்தைப் பிடிச்ச... இப்போ கட்டிப் பிடிக்கிற... இது நல்லாவே இல்லைடா... சொல்லிட்டேன்..." கேலியில் இறங்கினான்.

அவனது கேலியை உணர்ந்து கொண்டவன், "நீ சொன்ன பிறகு தான்டா எனக்குப் புரியுது. அவ வேண்டுமென்றே என்னைத் தவிர்க்கவும்... தவிக்கவும் வைக்கிறா... இப்போ மட்டும் நீ சொல்லாமல் இருந்தி ருந்தால்... ரொம்பத் தேங்க்ஸ் டா...!" ஆத்மார்த்தமாகச் சொன்னான்.

"இதில் என்ன இருக்கு...? இப்போ நான் சொல்லாமல் விட்டிருந்தால்... உன்னோட குழப்பம் எல்லாம் தீர்ந்தவுடன், நீயே இதை யோசிச்சு இருப்பே. ஆனா எனக்கு ஒண்ணு மட்டும் உறுதியாத் தெரியுது. நந்தினி மனசுக்குள்ளே நீ இருக்கே.

"ஆனால், ஏதோ ஒரு காரணத்துக்காக அவங்க உன்னைத் தவிர்க்கணும்னு நினைக்கிறாங்க... அந்த விஷயத்தை மட்டும் நீ கண்டு பிடித்து விட்டால்... அவங்க மனசை நீ ஜெயித்து விடலாம்...!" நம்பிக்கையாகச் சொன்னான்.

"எனக்கு அது என்னன்னு தெரியும் சரவணா. விடு, இனிமேல் எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன். இதுவரை அவ மனசுக்குள் நான் இருக்கேனா இல்லையா... என்ற கேள்வி பெருசா இருந்தது. இந்த நிமிஷத்தோட எனக்கு அந்தச் சந்தேகம் தீர்ந்துடுச்சு.

இனிமேல் என்ன ஆனாலும்... அவளை நான் விடுவதாக இல்லை... நாளைக்கே அடுத்த அடியை எடுத்து வைக்க நான் தயாராயிட்டேன்...!" அவன் குரலில் அப்படி ஒரு உறுதி.

இங்கே நந்தினியோ... ஊண் உறக்கம் இல்லாமல் தவித்துத் துடித்தாள். இனிமேல் அவனைக் காண முடியுமா என்று ஏங்கினாள். அவளது ஏக்கத்தைப் போக்கும் விதமாக... காலையில் அவன் படுக்கையின் அருகில் இருந்தான் அவன்.



எனக்காகப் பிறந்தவள் நீ...!
எத்தனைத் தடைகள் வந்தாலும்
எல்லாம் படிக்கற்கள்தான் எனக்கு...!

வழக்கமான விடியல்தான். ஆனால், அவ்வளவு அழகாக இருக்குமென்று அவள் கனவிலும் எண்ண வில்லை. தன் படுக்கையின் அருகில்... இமைக்கக் கூட மறந்து தன்னையே பார்த்தவாறு அமர்ந்திருந்த ப்ரதீப்பைக் கண்டவள் திடுக்கிட்டாள்.

ஒரு நொடி... தான் கனவுதான் காண்கின்றோமோ என்று கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள்.

அனிச்சையாகவே அவள் கரங்கள் போர்வையை இழுத்துப் போர்த்தியது. பெண்களுக்கே உரிய தற்காப்பு எண்ணம் மேலோங்குவதைக் கண்டு திகைத்தாள்.

இதுவரை நான் இப்படித்தான் என்று விறைப்பாக இருந்தவள்... முதல் முதலாகத் தன்னை மாற்ற முயன்றாள்.

அவனோ எதையும் கண்டு கொள்ளாமல்... "குட்மார்னிங் நந்து. சீக்கிரம் கிளம்பு, வாக்கிங் போகலாம்...!" கொண்டவன் போல் சுட்டமாகத் தன் அறைக்குள் அமர்ந்து கொண்டு உரிமையாகச் சொன்ன அவனை விழி விரித்துப் பார்த்தாள்.

இனிமேல் எந்தத் தனிப்பட்ட உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என்பதை அவள் ஏற்கெனவே முடிவு செய்திருந்தபடியால்... பழைய நந்தினியாக அவனைப் பார்த்தாள்.

"ஏய்... நீயெப்படி என் ரூமுக்குள்ளே...? இந்த ரோஸ் என்ன செய்யுறா...? அவளை..." கோபமாகச் சொன்னவள்,. படுக்கையில் இருந்து இறங்கினாள். வேகமாக அவள் முன்னால் சென்று அவளைத் தடுத்தவன், "நந்து... நான் வந்தது யாருக்கும் தெரியாது. இப்போ வெளியே போய் எல்லோருக்கும் சொல்லப் போறியா...? அப்போ சரி. போ...!" வேகமாகத் துவங்கியவன், முடிக்கும் பொழுது நிதானமாக முடித்தான்.

"என்ன சொல்லுற...?" கோபம் குறையாமலே கேட்டாள்.

"நான் உன் கிட்ட பொய் சொல்லுவேன்னு நீ நம்புறியா...?" அவள் கண்களை நேராகப் பார்த்து அவன் கேட்க...

"நான் என்ன கேக்கிறேன்... நீ என்ன பதில் சொல்லுற..." ளிச்சலாகக் கேட்டாள்.

"சரி... இப்போ நீ வெளியே போகும் மூடில் இல்லை போல... நீ அப்படி உக்காரு, நான் இப்படி உக்காருறேன். ரெண்டு பேரும் பேசிட்டே இருக்கலாம்..." அவன் சட்ட மாக இருக்கையில் அமர... வேறு வழியில்லாமல் அவனை முறைத்தவாறு பாத்ரூமுக்குள் சென்று புகுந்து கொண்டாள்.

அவள் வெளியே வந்தபொழுது, அவன் அங்கே இருக்கவில்லை. அவன் இல்லாததைக் கண்டு திகைத் தவள்... அதைக் கண்டுகொள்ளாமல் காலை ஓட்டத் துக்குத் தயாரானாள்.

அதன் பிறகு அவள் என்ன சொன்னாலும்... அவன் அவளை விட்டு விலகவில்லை. அவனைத் தவிர்க்கும் வழி தெரியாமல் தடுமாறினாள். அதே நேரம்... அவன் மேல் தனக்கு இருக்கும் நேசத்தை, அவள் வெளிப்படுத்தவும் இல்லை.

அலுவலக நேரத்தில் அவ்னது வரவு... அவளது வேலையில் கவனத்தைச் சிதறச் செய்வதை அவள் விரும்பவில்லை. அன்று அவன் வந்தபொழுது...

"நான் போட்டிருக்கும் உடைக்கும்... நான் செய்யும் வேலைக்கும் நான் உண்மையா இருக்கணும்னு விரும்புறேன்...!" சம்பந்தமே இல்லாமல் சொன்னாள்.

அதையே அவனும் நினைத்தவன், "நான் இதுவரை உன்னிடம் எனக்காக எதையும் செய்யச் சொல்லிக்

கேட்கவே இல்லையே நந்து..." அவள் குரலில் இருந்த மாறுபாட்டை உணர்ந்ததால், அவனும் சீரியஸாகவே கேட்டான்.

வேலை நேரத்தில் கூட... அவன் வரும் நேரம் உணர்ந்து... அந்த நேரங்களில் அவனை மனம் தேடுவதையும்... அவன் வரத் தவறும் நாட்களில்... அதன் பிறகு அவளால் இயல்பாக எதையும் செய்ய முடியவில்லை என்பதையும்... அவனிடம் நேரடியாக எப்படிச் சொல்லவென்று தெரியாமல்... அமைதியாக இருந்தாள்.

"நான் இங்கே வருவது உனக்கு, உன் வேலைக்கு இடையூறாக இருப்பதாக நீ நினைக்கிறாயா...?" அவன் அழுத்தமாக வினவ... அவளது அமைதியே... ஆம் என்று சொல்ல... அங்கிருந்து வெளியேறினான்.

அதன் பிறகு... அவளது அலுவலக நேரத்தில்... அவளை வந்து பார்ப்பதை அடியோடு விட்டு விட்டான். இரண்டு நாட்கள் அவனைக் காண முடியாமல், வித்தியாசமாக இருந்தது. அதன் பிறகு அவளுக்குப் பழகிவிட்டது.

ஆனால், எப்படி இருந்தாலும்... அவள் வெளியே செல்லும் இடங்களிலோ, வீட்டிலோ அவளைக் காண்பதை வழக்கமாக்கிக் கொண்டான். அவளுக்குத் தான் எவ்வளவு முக்கியமானவன் என்பதை அறிய ஆவல் கொண்டாலும்... அவளது நடத்தையில் இருந்தோ... பேச்சில் இருந்தோ அவனால் எதையும் உணர முடியவில்லை.

கோபால் கேஸ் அவளுக்கு மிகப் பெரிய தலைவலியாகவே இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அவள் அதன் பின்னால் ஓடத் துவங்கவே... அவளது நேரங்கள் அனைத்தையும் அதுவே விழுங்கியது. எப்படி இருந்தாலும்... ஒரு நாள்... ஒரு முறையேனும் ப்ரதீப்பைக் காணாமல் அவள் இருந்ததில்லை.

ஒரு நாள், "உனக்கு வேற வேலையே இல்லையா...? என் பின்னாடியே சுத்திட்டு இருக்கே...?" கோபமாகக் கேட்டாள்.

"ஹப்பா... இந்தக் கேள்வியை நீ எப்போ கேட்பேன்னு காத்துட்டு இருந்தேன். நான் ஒண்ணே ஒண்ணு... கண்ணே கண்ணுன்னு முதல் முதலா லோன் போட்டு வாங்கிய என்னோட ஆட்டோ... முதல் நாளே அப்பளமா நொறுங்கிடுச்சு...

"எனக்கு வண்டி ஓட்டுறதைத் தவிர வேற எந்த வேலையும் செய்யத் தெரியாது. அது இருந்தாலாவது பரவாயில்லை... இப்போ வேலையும் இல்லாமல், ஆட்டோவுக்கு டியூவும் கட்ட முடியாமல் திண்டாடிட்டு இருக்கேன். இதில் நான் எங்கிருந்து வேலைக்குப் போறது...?" கவலையாகச் சொன்னான்.

அவனது பதிலில்... என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்தவள், "அந்த ஆட்டோவுக்குத்தான் கேஸ் எதுவும் போடலையே... அதை ரிப்பேர் செய்து ஓட்ட வேண்டியதுதானே...!" விட்டேற்றியாகச் சொன்னாள்.

"ஆமா... நல்லா இருக்க ஆட்டோவுக்கே ஆள் வர்றது கஷ்டம்... இதில் ஒட்டுப் போட்ட ஆட்டோ ஓட்டுறதுக்கு சும்மாவே இருக்கலாம். அதான் நான் சும்மாவே இருக்கேன்...!" அவனும் அவளைப் போலவே பதில் கொடுத்தான்.

"வேலை செய்யாமல் இருக்க இப்படி ஒரு சாக்கு...!" வெடுக்கெனச் சொன்னவள், அவள் வேலையைப் பார்க்கத் திரும்பினாள்.

"யாரு... நான் வேலை செய்ய சோம்பேறித்தனம் படுறேனா...? எங்கே... நீயே ஒரு புது ஆட்டோ வாங்கித் தா... நான் என்ன ஓட்ட மாட்டேன்னா சொல்லுறேன்...!" சாதாரணமாகச் சொல்பவன் போல், அவளை ஆழம் பார்த்தான்.

அதற்கு அவள் பதில் சொல்லாமல் போகவே... தொடர்ந்து அவளைத் தொல்லை செய்தான். கோபால் கேஸ் பின்னால் செல்வதால், அவன் செய்யும் இடையூறு களால் அவளால் வேலை செய்ய முடியவில்லை.

எந்த நேரமாக இருந்தாலும்.. அவள் முன் வந்து, "எனக்கு எப்போ வண்டி எடுத்துத் தரப் போற...?" பிடிவாதமாக அவன் நிற்கும் வேளையில், அவளால் வேறு எதிலும் கவனம் செலுத்த முடியாமல் போனது.

"ப்ச்... உனக்கு ஒரு முறை சொன்னால் புரியாது...!" கடுகடுத்தாள் அவனிடம்.

"உனக்குத்தான் புரியலை..." அவன் பிடிவாதமாக இருந்தான்.

ஒரு கட்டத்தில் அவனது பிடிவாதம் ஜெயிக்கவே... "கந்தா... அதை என்னன்னு பாருங்க...!" தனது கிரெடிட் கார்டை எடுத்து அவரிடம் கொடுத்தாள்.

அந்தக் கார்டைப் பிடுங்கி அவளிடமே கொடுத்த வன், "நான் உன்கிட்ட தானே கேட்கிறேன். முடிந்தால் நீ செய். இல்லையா, எனக்கு வேண்டாம்..." உறுதியாகச் சொல்லி விட்டுச் சென்று விட்டான்.

"இந்த ஜென்மத்தில் நீ வண்டி ஓட்ட மாட்ட...!" நந்தினியின் கத்தல் அவனைத் தொடர்ந்தது.

அதன் பிறகு அவளிடம் ஆட்டோ வாங்கிக் கேட்பதையே நிறுத்தி விட்டான். ஆனால், அவன் தோற்றத்தில் ஏற்பட்ட மாற்றம் அவளைக் கலங்க வைத்தது. அத்தோடு... கந்தனிடம் அன்று அவன் உரையாடுவதை எதேச்சையாகக் கேட்ட பிறகு... தன் பிடிவாதத்தில் இருந்து இறங்கினாள்.

அன்று அவள் அலுவலகத்தில் இருந்து வெளி யேறிய பொழுது... கந்தனும் பிரதீப்பும் உரையாடுவதைக் கண்டாள்.

'அப்படி என்ன பேசுகிறார்கள்...?' என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வம் உந்த... அவர்களை நெருங்கினாள்.

அப்பொழுது... "என்ன தம்பி... ரொம்ப டல்லா யிட்டீங்க...?" கந்தனின் கேள்விக்கு,

"வேற என்னண்ணே செய்ய...? நானென்ன உங்களை மாதிரி மாசம் பொறந்தால் சம்பளம்

வாங்குறவனா... எங்களை மாதிரி ஆட்களுக்கு உழைத் தால்தான் காசு...” அதற்கு மேல் அவன் பேசுவதைக் கேட்க... அங்கே அவள் இருக்கவில்லை.

இவ்வளவு நாளும்... தன் பிடிவாதத்தில் இருந்த வள்... அன்று மாலையில்... அவன் வந்தபொழுது... “கந்தா... அவனை டாடா ஷோ ரூமுக்குப் போய்... வண்டியை எடுத்துக்கச் சொல்லுங்க...!” அவன் முகம் பாராமல் சொன்னாள்.

“அப்படியொண்ணும் வேண்டா வெறுப்பா எல்லாம் யாரும் எனக்கு வண்டி வாங்கித் தரவேண்டாம்ண்ணே...” முறுக்கிக் கொண்டான்.

‘வேண்டாம்னா போ...!’ என்று அவனிடம் கத்த வேண்டும் போல் இருந்தது. ஆனால், ஏதோ ஒன்று அவளைத் தடுக்க...

“இப்போ என்னதான் வேணும் உனக்கு...?” ஆத்திரமாகக் கேட்டாள்.

“நீ வந்து வாங்கிக் கொடு...!” சாதாரணமாகச் சொன்னான்.

கையை இறுக மூடித் தன் கோபத்தைக் கட்டுப் படுத்தினாள். அதையும் மீறி... எங்கே தன் ராசி அவனைத் தாக்கி விடுமோ என்று அஞ்சியவளாய் நின்று கொண்டி ருந்தாள்.

முடிவில் அவனது பிடிவாதம் வெல்ல... அவனது வண்டியை அவளே சென்று வாங்கிக் கொடுத்தாள்.

அவள் கையால்தான் பணம் கொடுக்க வேண்டும் என்பதில் துவங்கி... அவள் கையால்தான் சாவியை வாங்குவேன் எனத் தொடர்ந்து... அவள் ஸ்டார்ட் செய்தால்தான் வண்டியை ஓட்டுவேன் என்பதில் முடித்தான்.

ஷோரூமில் வைத்து ஒரு காட்சிப் பொருளாக மாறுவதை விரும்பாமல், அவனது விருப்பத்துக்கு ஆடினாலும்... அடிமனதில் முரசு ஒலிக்கும் ஓசையை அவளால் தடுக்க முடியவில்லை.

அவனிடம் சொல்லவும் முடியாமல்... மெல்லவும் முடியாமல் தவித்தவள், ஊரில் இருக்கும் அனைத்துத் தெய்வங்களிடமும்... நீண்ட வருடங்களுக்குப் பிறகு... அவனுக்காக வேண்டிக் கொண்டாள்.

அவன் எவ்வளவு வற்புறுத்தியும் அவனது ஆட்டோவில் ஏற மறுத்து விட்டாள். இதற்குமேல் அவளைக் கட்டாயப்படுத்துவது நல்லதல்ல என்று தோன்றவே... அவளது விருப்பத்திற்கு விட்டு விட்டான்.

ஆனால், அவள் அவனது ஆட்டோவில் ஏறும் சூழலும் உருவானது. அன்று அலுவலகத்துக்குச் செல்லும் வழியில்... அவளது சுமோ பழுதாகி நின்று விட... ஏதாவது வண்டி கிடைக்குமா என்று பார்த்தார்கள்.

அதே நேரம் பிரதீப் அங்கே வரவே... கந்தன் தயக்கமாக நந்தினியைப் பார்க்க, "வேற வண்டி பாருங்க...!"

அவர் எண்ணம் புரிந்து வேகமாகச் சொன்னாள்.

"ஆமா... அவங்களுக்கு ஏதாவது கால் டாக்ஸி வருதான்னு பாருங்க. அவங்க தகுதிக்கு இந்த ஆட்டோவிலோ... இல்லை இந்த ஆட்டோக்காரன் கூடவோ வருவாங்களா...? அவங்க எல்லாம் ஆட்டோவில் ஏறுவதை கௌரவக் குறைச்சலா நினைப்பாங்க...!" அவன் சொல்லி முடிக்கும்பொழுது நந்தினி அவன் ஆட்டோவில் இருந்தாள்.

சிரித்தவாறே ஆட்டோவைக் கிளப்பியவன், கந்தனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியவாறே சென்றான். அதைக் காற்றில் விட்டவர், நந்தினி பிரதீப்பைப் புரிந்து கொள்ள வேண்டுமே என்ற எண்ணத்தில்... கவலையாக நின்றவர்... சிறிது நேரம் கழித்து வண்டியைக் கிளப்பிக் கொண்டு சென்றார்.

நந்தினியை அவளது ஆபீஸில் இறக்கி விட்டவன்... அவள் விருட்டென இறங்கிச் செல்லவே, "ஹலோ மேடம்... ஆட்டோவுக்குக் காசு யார் கொடுப்பாங்க....?" அவன் குரல் அவளைத் தேக்க.. சென்ற வேகத்தில் திரும்பி வந்தவள்... இரண்டு நூறு ரூபாயை அவனிடம் எடுத்துக் கொடுத்தாள்.

திரும்பிச் செல்லப் போன அவளை, "மீதி காசு வேண்டாமா...? நானெல்லாம் ரொம்ப ஆசைப்பட மாட்டேன்...!" சொன்னவன் அவளது முறைப்பைக் கண்டு கொள்ளாமல் மிச்ச காசைக் கொடுத்தான்.

அவனிடமிருந்து பிடுங்கியவள்... அவனைக் கண்டு கொள்ளாமல் அறைக்குள் சென்று மறைந் தாள். மாலையில் வீடு திரும்பும் வேளை வரை...

ப்ரதீப்பிடமிருந்து ஒரு போன் அழைப்பு கூட இருக்க வில்லை.

'எங்கே போனான்...? வண்டியில் விபத்து ஏதாவது...?' இந்த நினைவு எழுந்த பிறகு அவளால் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

எதற்கென்றே தெரியாமல் கந்தனை அழைத்தவள்... "வெளியே போயிருந்தீங்களா...?" மொட்டையாகக் கேட்டாள்.

இந்தக் கேள்வி எதற்கென்று தெரியாமல் குழம்பியவர், "சாப்பிடப் போயிருந்தேன்...!" அவரும் அதே போல் பதில் கொடுத்தார்.

"ஓ...! வழியில் எதுவும் பிரச்சினை இல்லையே...! சரி, போங்க...!" நந்தினி எதையோ கேட்க வந்து... பிறகு மாற்றியது அவருக்குப் புரிந்தது.

எனவே, "உங்களுக்கு ஏதாவது தெரிஞ்சுக்கணுமா சார்...?" தயங்கியவாறே கேட்டார்.

நந்தினி, பிரதீப்பின் விஷயத்தில் மட்டுமே மாறி யிருந்தாளே தவிர... மற்றவர்களுக்கு இன்றுமே அவள் சார்தான்.

"நான் உங்களைப் போங்கன்னு சொல்லி ரொம்ப நேரமாச்சு...!" அவள் குரலில், மாறவே மாட்டேன் என்ற பிடிவாதம் தெரிந்தது.

"ஓ.கே. சார்..." ஒரு சல்யூட்டோடு அங்கிருந்து அகன்றார்.

அவர் சென்ற பத்தாவது நிமிடம்... ப்ரதீப் அவள் முன்னால் இருந்தான். அவள் ஆச்சரியமாக அவனைப் பார்க்க... "ஒரு எட்டு மணிக்கு வீட்டுக்கு வந்து உன்னைப் பார்க்கிறேன். ஆட்டோவில் சவாரி வெயிட்டிங்..." சொன்னவன், அவள் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் அங்கிருந்து அகன்றான்.

அவன் வந்து சென்ற பிறகு... ஒருவித நிம்மதி மனதில் புக... அதற்கு மேல் எதையும் சிந்திக்காமல், வேலையில் கவனம் செலுத்தினாள்.

வீட்டிற்குச் செல்லும் வேளையில்... அவள் கண்கள் கடிகாரத்தை எத்தனை முறை பார்த்தது என்பதை அவளே அறிய மாட்டாள்.

'வீட்டிற்கு வரவேண்டும் என்று முடிவெடுத்தவன்... பிறகு ஏன் அவ்வளவு அவசரமாக எதற்காக என்னை வந்து பார்த்து விட்டுச் சென்றான்...?' யோசனையோடே அனைத்து வேலைகளையும் செய்தாள்.

ரோஸ் கூட கொஞ்சம் சுவாரசியமாகவும்... ஆச்சரியமாகவும் அவளைப் பார்த்தாள். அவள் பார்வையை உணர்ந்து, "என்ன...? உள்ளே வேலை எதுவும் இல்லையா...?" தன் கெத்தை விடாமல் கேட்டாள்.

"இருக்கு..." சொன்னவள்,கொஞ்சம் தயங்கி விட்டு...

"நீங்க எப்பவும் இப்படியே சந்தோஷமா இருக்கணும்... அண்ணா வர்றேன்னு சொன்னாங்களா?" ஆர்வமாகக் கேட்டாள்.

அவள் கேள்வியில் இளகிய நந்தினி, அதை மறைத்தவாறே, "உனக்கு வாய் ரொம்ப ஜாஸ்தி ஆயிடுச்சு...!" கோபம் போல் சொன்னவள்...

'அவ்வளவு வெளிப்படையாகவா தெரிகிறது...?' தன்னையே கேட்டுக் கொண்டவள், 'கண்ணாடி இருந்தால் நன்றாக இருந்திருக்கும்...!' என்று முதல் முறையாகச் சிந்தித்தாள்.

அவள் யோசனையைக் கலைக்கவென்றே... அழைப்பு மணியின் ஓசை கேட்டது. ரோஸ் தயக்கமாக நந்தினியின் முகத்தைப் பார்த்து விட்டு... வேகமாகச் சென்று கதவைத் திறந்தாள்.

அவள் திறக்கவும், "ஹாய் டார்லிங்... என்னைக் கண்டுக்கவே மாட்டேங்கிறியே... இன்னைக்கு நான் உன்னை விடுறதா இல்லை. எனக்கு நீ பதில் சொல்லியே ஆகணும்...!" சொன்னவன், வாசலின் அருகிலேயே சட்டமாக அமர்ந்தவன்,

"நீ மட்டும் இன்னைக்குப் பதில் சொல்லலை... உன்னை என்ன செய்வேன்னே தெரியாது. உன்கிட்ட காதலைச் சொல்லி எவ்வளவு நாள் ஆகுது...? எப்போ கேட்டாலும் நந்தினிகிட்டே மாட்டி விட்டுடுவேன்னு சொல்லியே என்னை ஏமாத்திட்டு இருக்க...

"இன்னைக்கு நந்தினி வரட்டும்... நானே அவங்க கிட்டே உன்னைப் பொண்ணு கேட்டுடுறேன். அப்படி அவங்க முடியாதுன்னு சொல்லட்டும்...!" கையை ஒருவாறாக முறுக்கியவன்,

"அவங்க காலில் விழுந்தாவது சம்மதம் வாங்கிடு வேன்..." அவன் வீராவேசமாக எதையோ சொல்லப் போகிறான் என்று அவள் எதிர்பார்க்க... அவன் சொன்ன விதத்தில் களுக்கெனச் சிரித்து விட்டாள்.

அத்தோடு இல்லாமல், "சு... சு..." அவனை அடக்க முயன்றாள்.

"நீ சு...ன்னு சொன்னாலும் சரி... செருப்புன்னு சொன்னாலும் சரி... இன்னைக்கு விடுறதா இல்லை. நானும் பூ கொடுத்துப் பார்த்துட்டேன்... கிரீட்டிங் கொடுத்துப் பார்த்துட்டேன்... கிச்சன்ஸ் ஹெல்ப் கூட செஞ்சு பார்த் துட்டேன்... எதுக்குமே அசரவே மாட்டேங்குறியே...!"

அவன் ஒவ்வொன்றாகச் சொல்ல... ரோஸ் கைகளைப் பிசைந்து கொண்டாள். ஒரு பக்கம், இப்படிப் புலம்புகிறானே என்று இருக்க... மறு பக்கமோ, நந்தினி என்ன செய்வாளோ என்று பயமாக இருந்தது. பயமும், கலவரமும், சங்கடமும் கலந்த கலவையாக அவள் நின்று கொண்டிருந்தாள்.

நந்தினியோ உணர்வுகளைத் தொலைத்த முகத்தோடு... ரோஸின் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் கவலையாக வந்து போகும் உணர்வுகளையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

நந்தினியின் முகம் கவலையைப் பிரதிபலித்தது. அவளது வருத்தம் ரோஸையும் பாதித்தது. அவளது கவனத்தைச் சரவணனின் தொடர்ந்த புலம்பல் கலைத் தது.

"அப்போவே சொன்னான்... அவனோட சாபம்தான் என்னை இப்படிப் பாடாப் படுத்துது... எனக்கு நல்லா வேணும்...!" தன் போக்கில் புலம்பியவன், தலையில் கை வைத்துக் கொண்டான்.

"இருந்தாலும் எனக்குக் கொஞ்சூண்டு கருணை காட்டக் கூடாதா...? நீ இப்படியே செய்தேன்னு வையேன்...! இன்னைக்கு நந்தினி, அவங்க வரும் வரைக்கும் இங்கேயேதான் இருப்பேன்... உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவேன்...!" வீராவேசமாகப் பேசிக் கொண்டிருந்தவனின் பேச்சு, ப்ரதீப்பின் வருகையால் தடைப்பட்டது.

அவனைப் பார்த்து விழித்தவன், "நீ எங்கேடா மச்சான் இங்கே...? உனக்குத் தான் முக்கியமான வேலை இருக்குன்னு சொன்னியே...! மணி எட்டாகப் போகுதுடா... நந்தினி காத்துட்டு இருப்பாங்க...! நீ போடா... நான் இன்னைக்கு நல்ல மூடில் இருக்கேன்... என் மூடைக் கெடுக்காதே...!"

சொல்லிவிட்டு அவன் புலம்பலைத் துவங்கப் போனான்.

"என்னடா உளர்ற...?" புரியாமல் கேட்டான் பிரதீப்.

"இப்போ உனக்கும் நான் பேசுறது புரிஞ்சு இருக்காதே...! இந்த வீட்டோட ராசி போல... ஒரு ஆள் பேசுறது மத்தவங்களுக்குப் புரியாமல் போறது. அது லேயும்... காதல்னு சொன்னா மட்டும் காது கூட கேட்காமல் போயிடும் போல...!" கடுப்பானான்.

"நீ அடி வாங்காமல் இங்கே இருந்து போக மாட்டடா..." நந்தினியை அவன் கவனித்து விட்டதால் அவ்வாறு சொன்னான்.

"வாடா... உன் சாபம்தான் என்னை இப்படி இவ பின்னாடி தொங்க வைக்குது...! இதில் அடி வாங்குறது ஒண்ணுதான் குறைச்சல். நல்ல வேளைடா... நந்தினி இவளுக்கு அந்த ஒண்ணை மட்டும் கத்துக் கொடுக்கலை போல... அதனால் நான் தப்பிச்சேன்... இல்ல, நானும் எப்போவோ குறி பார்த்து..." பாய்ந்து சென்று அவன் வாயை மூடினான் பிரதீப்.

அத்தோடு நில்லாமல், "நந்தினி வீட்டில் தான்டா இருக்கா...! அதுவும் உன்னோட கோமாளித்தனத்தை எல்லாம் பார்த்துட்டே இருக்கா...!" அவன் காதில் சொல்லவே...

"விளையா..." பார்வையைச் சுழல விட்டவாறே துவங்கியவனின் வார்த்தைகள் காற்றோடு கலந்து... நொடியில்... அவன் தொண்டைக்குழியில் இருந்த காற்றும் நீரும் வற்றிப் போனது.



என்னை எனக்கே அறிமுகம் செய்கிறாய்...!
என்னை மாற்ற முயல்கிறேன்...
மாற்ற முடியாமல் தவிக்கிறேன்...
குழப்பம் மட்டும் மிச்சமாய்...!

நந்தினியின் வீட்டிற்கு வந்த சரவணன், அவள் வீட்டில் இருப்பதை அறியாமல், தன் போக்கில் ரோஸிடம் புலம்ப... அந்த நேரம் அங்கே வந்த பிரதீப்பின் மூலம் நந்தினி வீட்டில் இருப்பதை அறிந்து கொண்டான்.

அவளைப் பார்த்தவுடன், சப்த நாடியும் ஒடுங்க... அவள் இருந்த திக்கைக் கலவரமாகப் பார்த்தான். அவளைப் பார்த்துவிட்டு ரோஸின் பக்கம் திரும்பி, ஒரு கண்டிக்கும் பார்வை பார்க்க... அவளோ... நான் அப்போவே சிக்னல் கொடுத்தேன்... என்பதுபோல் ஒரு பார்வை பார்த்தாள்.

இனிமேல் என்ன நடக்குமோ என்று அனைவருமே நந்தினியைத்தான் பார்த்தவாறு இருந்தார்கள். அவளோ இருக்கையில் இருந்து எழுந்தவள், ஒரு வார்த்தை கூடப் பேசாமல், மாடிக்கு விரைந்தாள்.

அங்கிருந்தவர்கள், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"என்னடா இது...? நான்தான் நிதானமா பேசிக்க லாம்னு சொன்னேனே...!" அலுப்பாகச் சொன்னான் பிரதீப்.

"நீ சொன்னடா... எனக்கு என்னவோ... ரோஜாவோட பதில் தெரிஞ்சே ஆகணும்போல் இருந்தது. அதான்..." தயக்கமாக இழுத்தான்.

"இப்போ கிடைச்சிருக்குமே...!" நக்கலாகக் கேட் டான்.

"வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சாதே மச்சான். ஏதாவது செய்டா...! எல்லாம் இவளால் வந்தது. பிடிச்சிருக்கா இல்லையான்னு ஒரு வார்த்தை சொல் லுன்னுதான் சொல்றேன்... அதுக்குக் கூட வாயைத் தொறக்காமல் இருக்காடா. அப்படி இருக்கும் போது நான் என்னன்னு நினைக்கட்டும். இப்போ கூட எப்படி நிக்கிறா பாரு...!" கடுப்பானான் அவன்.

"அண்ணே... என்னையவே குத்தம் சொல்ல வேண்டாம்னு சொல்லுங்க. நானும் சு... சுன்னு சொல் றேன்... அதைக் கண்டுக்காமல், ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துட்டு இருக்கார். இவர் செய்ததுக்கு நான் பழியா...?" அவளும் சிடுசிடுத்தாள்.

"ஏய்... நீ பேசாதே...! நாங்க ரெண்டு பேரும் நாய்க்குட்டி மாதிரி உங்களையே சுத்தி வர்றோம்... பொம்பளைங்க ரெண்டு பேரும் மனசுக்குள் என்ன நினைச்சிட்டு இருக்கீங்கன்னு எங்களுக்குத் தெரிய வேண்டாம்...?

"எப்போ என்ன கேட்டாலும்... மண்ணு மாதிரி ஒரு லுக்கு விட்டால் நாங்களும் என்னதான் செய்யுறது...? இந்தப் பொண்ணுங்களே இப்படித்தான் மச்சான்... அமுக்குணிங்க மாதிரி இருந்துட்டு நம்மளைக் கொல்லுவாங்கடா.

"அவகிட்ட கேளுடா... அவ என்னை காதலிக் கிறாளான்னு கூடக் கேட்கலை... அவளுக்கு என்னைப் பிடிக்குமான்னுதான் கேட்கிறேன்... அதுக்கு மட்டும் பதில்

சொல்லு... எனக்கு அது போதும். பிடிக்கலன்னு சொல்லச் சொல்லு... அவ வழிக்கே வராமல் போயிடுறேன்...!" பிடிவாதமாக நின்றான்.

சரவணன் இதுவரை இப்படிப் பேசிக் கேட்டதில்லை என்பதால் இருவரும் திகைத்தார்கள். பிரதீப் அவனை அழுத்தமாய்ப் பார்க்க... அதற்கு அசராமல் நின்றான் சரவணன்.

அவன் ஒரு முடிவுடன் இருப்பது தெரிந்ததால், "நீ சொல்லும்மா...!" அவளிடம் கேட்டான்.

"எதுன்னாலும் நீங்க அவங்ககிட்ட தான் பேசணும்...!" தயங்கித் தயங்கி இழுக்க...

"இப்போ கூட எப்படிச் சொல்லுறா பாருடா...!" எகிறினான்.

"உனக்குன்னு ஒரு மனசு இருக்கேம்மா...?" ப்ரதீப் அவளைத் தூண்டினான்.

"அவங்களை மீறி... அவங்களுக்கு விருப்ப மில்லாத எதையுமே நான் செய்ய மாட்டேண்ணா...! எனக்குன்னு இருக்கிறது அவங்க மட்டும்தான். அதே மாதிரி... அவங்களுக்குன்னு இருக்கிறதும் நான் மட்டும்தான். என்னால் அவங்களை விட்டுட்டு இருக்க முடியாது...!" சரவணன் முகத்தைப் பார்க்காமல் சொன்னாள்.

"அப்போ எனக்கு என்ன வழி...?" அவள் முகத்தைத் திருப்பி... அழுத்தமாகக் கேட்டான்.

"இந்த ஜென்மத்தில் எனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடந்தால் அது உங்களோட தான். உங்களைப் பிடிக்காமல்தான்... நீங்க சுத்தி வரும் போதெல்லாம் இந்தக் கதவைத் திறந்து விட்டேனா...? மனசுக்குள் நீங்க இல்லன்னா... உங்களால் இந்தக் காம்பவுன்ட் தாண்டி உள்ளே வந்திருக்க முடியுமா...? முடிவு தெரியணுமாம்... பொல்லாத முடிவு. இப்போ தெரிஞ்சுக்கிட்டீங்கல்ல... சந்தோஷம் தானே...!" அவனிடம் சொன்னவள், அழுகையைக் கட்டுப்படுத்தியவாறு, அவன் கையைத் தள்ளி விட்டு விட்டுக் கிச்சனுக்குச் சென்றாள்.

"ரோஸ்... நான் சொல்வதைக் கேளேன்...! எனக்கு உன் மனசு எப்போவோ தெரியும். நான் சும்மாதான்...!" கெஞ்சியவாறு சரவணன் அவள் பின்னால் செல்ல... அவர்கள் பேசிக் கொள்ளட்டும் என்று அவன் நந்தினியைத் தேடிச் சென்றான்.

நந்தினியோ மாடியில் இருந்த ஹால் சோபாவில் உணர்வுகளைத் தொலைத்த முகத்துடன் அமர்ந்திருந்தாள். பொதுவாகவே அவள் உணர்வுகளை வெளிக்காட்டுபவள் இல்லை என்பதால்... அவளுக்குச் சற்று அருகில் சென்று அமர்ந்தான்.

அவள் என்னவென்று பார்க்க... "நான் அவங்களைப் பத்தி எதையும் பேச வரலை. ஆனா... ஒண்ணு மட்டும் சொல்லுறேன். அவங்க ஒருத்தருக்கு ஒருத்தர் விரும்புறாங்க. நீ மனசு வைத்தால் அவங்க சேருவாங்க...

முடிவு உன் கையில்தான்...!" சொன்னவன், சற்றுநேரம் அவள் பதிலுக்காகக் காத்திருந்தான்.

அவள் பேசப்போவதில்லை என்பதை உணர்ந்து... தன் பாக்கெட்டில் இருந்து கத்தையாகப் பணம் எடுத்து... அவளுக்கு எதிரில் இருந்த டீப்பாயில் வைத்தான். அதையும் அவனையும் அவள் மாற்றி மாற்றிப் பார்க்க...

"நீ சொன்னா நம்புவாயான்னு தெரியலை. ஆனா... இது அவ்வளவும் நான் இன்று ஒருநாள் ஆட்டோ ஓட்டி சம்பாதித்த காசுதான். முதல் சவாரியும் நீதான்... எனக்குக் கை நீட்டி காசு தந்ததும் நீதான்.

"உன்னோட ராசிதான்... உன் கைராசிதான் எனக்கு இவ்வளவு பணம் கிடைக்க வழி செய்திருக்கு. இதை உன்கிட்ட சொல்லத்தான்... அவ்வளவு ஆர்வமா வந்தேன்...!" அவன் உற்சாகமாகச் சொல்லிக் கொண்டே போக... நந்தினியோ மேற்கொண்டு அவன் பேச்சைக் கேட்கும் நிலையில் இருக்கவில்லை.

அவன்... அவளது ராசி பற்றிச் சொன்ன அடுத்த நிமிடமே... அவளது நினைவுகள் பின்னோக்கிச் சென்றது.

நந்தினி பிறந்தது முதல்... அவளை அரவணைக்கவோ... ஆதரிக்கவோ யாரும் இருக்கவில்லை. அவள் பள்ளி செல்லும் வேளைகளில்... அவளைக் கிளப்பி அனுப்பவோ... சாப்பாடு கொடுக்கவோ கூட யாரும் அக்கறை காட்டியதில்லை.

நோய்வாய்ப்படும் வேளைகளில்... தாயின் கவனிப்புக்காக அவள் மனம் ஏங்கும். அது கிடைக்காது என்று தெரிந்தாலும்... ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கையில்... என்றாவது ஒரு நாள் இவை அனைத்தும் மாறும் எனக் காத்துக் கொண்டிருந்தாள்.

ஆனால், நாளுக்கு நாள் அவளது பாட்டியின் சுடு சொற்களும்... உடன் பிறந்தவர்களின் அலட்சியமும்... உதாசீனமும்... அவமானப்படுத்துதலும் தொடர்ந்ததே தவிர, குறையவில்லை.

'வீட்டில் இருக்கிறாயா இரு... சாப்பிடுகிறாயா சாப்பிடு... படிக்கிறாயா படி... ஆனால், எங்களோடு உறவாடாதே...!' என்பது போல் அனைவரும் நடந்து கொண்டார்கள்.

வயதில் சிறியவர்களாகிய... தம்பி தங்கையிடம் சென்றால் கூட, "ஏய்... எங்களைத் தொடாதடி... பிறகு நாங்களும் விளங்காமல் போயிடப் போறோம்...!" என்று சொல்லியே அவளை நோகடித்தார்கள்.

"பீடை... ஏன்டி காலையிலேயே என் முகத்தில் முழிச்ச...? இன்னைக்கு விளங்குனாப்புலதான்...!" பாட்டியின் வசவு இப்படித் துவங்கி... "அப்படி என்னதான் பசியோ... புள்ளைங்க சாப்பிடும் முன்னாடி நீ முழுங்கணுமா...?" என்பதில் தொடர்ந்து...

"சனியனே... அந்த ரூமுக்குள் போய் தனியாத் தூங்கு... யார் கிட்டேயாவது படுத்து... அவங்களுக்கு சிவலோகப் பதவி கொடுத்துடாதே...!" என்பதில் முடியும்.

அப்படியில்லை என்றால்... 'விடியா மூஞ்சி... இப்படித் தூங்கினால் வீடு விளங்குமா...? கொள்ளையில் போறவளே... நாங்க வர முன்னாடி தின்னுட்டுப் போய்த் தொலைந்தால் என்ன...? ஓஹோ... அம்மையாருக்குத் தூங்க தனி ரூம் கேக்குதோ...!'

"அப்படி ஹால்ல ஓரமாப் போய் விழுடி..." நந்தினி செய்யும் ஒவ்வொரு செயலும்... ஒவ்வொரு விதமாக விமர்சிக்கப்பட்டது. 'தான் எப்படி இருக்க வேண்டும்... எப்படி இருந்தால் இந்த வசவுகளில் இருந்து தப்பிக்கலாம்...?' என அவள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் நசுக்கப்பட்டது.

அவளது தாய்க்கு மகளின் பக்கம் பேசும் சந்தர்ப்பம் கொடுக்கப்படவே இல்லை. அப்படிப் பேசினாலோ... அரவணைக்க முயன்றாலோ...

"என்ன...? என் பையன் சம்பாதிச்சு வச்சுட்டான்... இனிமேல் உக்காந்து தின்னால் போதும்... அதனால் அவன் இருந்தால் என்ன... இல்லன்னா என்னன்னு முடிவு பண்ணிட்டியோ...

"உன் மவகூட கொஞ்சிக் குலாவுறதைப் பார்த்தேன்... அதான் கேட்டேன். அப்படி மட்டும் ஏதாவது நடக்கட்டும்... உன் மவளுக்கும் சேர்த்துதான் நான் பிண்டம் வைப்பேன்... ஜாக்கிரதை...!" மாமியாரின் கர்ஜனையில்... தன் மகள் கண் பார்வையில் இருந்தாலே போதும் என ஒதுங்கிக் கொண்டார் அவர்.

அவரது ஒதுக்கம்... நந்தினியின் உணர்வு களையும்... சிறகுகளையும்... மனதையும் நசுக்குவதை அவர் உணரவே இல்லை. அப்படியே உணர்ந்தாலும்... அவரால் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருந்தார். நந்தினியின் ஒரே விளையாட்டுத் தோழன் பெப்பியின் அருகில் மட்டுமே அவள் அவளாக இருந்தாள்.

தன்னுடன் அனைவரும் விளையாட மறுக்கும் நேரத்திலும்... தன்னுடன் மட்டுமே விளையாடும் பெப்பி... அவளுக்கு உயிருக்கும் மேலானவனாக இருந்தான். அவனை எப்பொழுது கண்டாலும்... ஓடிச் சென்று... அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு ஊஞ்சலாடுவாள்.

அவளது பொழுதுகள்... அவனைக் காண்பதற் காகவே... அவனுடன் உரையாடுவதற்காகவே... விளை யாடுவதற்காகவே விடிந்தது அவளுக்கு. அவன் மற்றவருக்குத் தெரியாமல் கொடுக்கும் மிட்டாய்... அவன் கொடுக்கும் பணியாரம்... அவன் கொடுக்கும் வடை... அவன் கொடுக்கும் பாயசம்...

முக்கியமாக... வார்த்தையாலோ... பார்வையாலோ அவளை நோகடிக்காத அந்த பெப்பி அவளுக்கு உயிர். அவனிடம் உரையாடுவது மட்டுமே, ஒரு நாளில் அவள் பேசும் பேச்சாக இருந்தது.

பக்கத்து வீட்டு ஜன்னல் வழியாக... அவளுடன் உரையாடும் அந்த ஆன்ட்டி... பாசமாகத் தலை கோதும் அவரது கரங்கள்...

"தைரியமா இருக்கணும்மா...!" இந்த வார்த்தை களைக் கேட்கவென்றே... ஒளிந்து மறைந்து செல்லும் அவள் கால்கள்.

அந்தப் பக்கத்து வீட்டு ஆன்டியின் முகம் தெரியாது. ஆனால் அவரது பாசம் தெரியும். பெப்பியின் பாசமும், நேசமும் அவளை உயிருள்ள மனுஷியாக உலாவ வைத்தது.

பெப்பியின் தாய்க்குத் தெரிந்த அளவு... அவனுக்கு நந்தினியின் மனக் காயங்களோ... ஊமைக் காயங்களோ... வருத்தமோ... எதுவும் தெரியாது. தன்னைக் கண்டவுடன் மலர்ந்து ஓடி வரும் குட்டி நந்தினியையே அவனுக்குத் தெரியும்.

தான் அவளுடன் இருக்கும் அவ்வளவு நேரமும்... அவனுடனே ஒட்டியவாறு... அவன் கரத்தைப் பற்றிய வாறு... எதை எதையோ பேசியவாறு... அவனது இருப் பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டி... பாடப் புத்தகத்தில் கூட... இல்லாத சந்தேகத்தைக் கேட்டு... அவன் இருக்கும் நேரத்தை நீட்டிக்க விரும்பும் நந்தினியை அவன் மிகவும் நேசித்தான்.

அவளுக்குத் தான் ஸ்பெஷலாக இருப்பதில் அந்த வயதில்... மனம் கொள்ளாத பெருமை உண்டு அவனுக்கு. அதே நேரம்... தாய் தன்னுடன் ரகசியமாகப் பேசும் நேரங்களில் எல்லாம்... அவர் பேச்சில் நந்தினியே பிரதானமாக இருப்பதில் அவனுக்கும் மிகுந்த பொறாமை.

தான் சமைப்பதில் தனக்கு எடுத்து வைப்பதை விட... அவளுக்குக் கொடுத்தனுப்புவது... வாஞ்சையாக அவள் தலை கோதுவது... அவளிடம் பேசும்பொழுது... அவர் குரலில் இருக்கும் குழைவு... வாஞ்சை... சில நேரங்களில் மிகுந்த கோபத்தை அவனுக்கு அளிக்கும்.

அந்த நேரங்களில் எல்லாம்... நந்தினிக்கு எதையாவது கொடுக்கச் சொல்லும்பொழுது, "உனக்கு என்னை விட அவதான் முக்கியமா...? ஒண்ணும் கொடுக்க முடியாது, போ..." என மறுத்து விடுவான்.

"ஏன்டா செல்லம் இப்படிப் பேசுற... உனக்கு அம்மா, பாட்டி, தாத்தா... எல்லோரும் இருக்கோம்டா... ஆனா நந்தினி பாவம்டா... இதை மட்டும் கொடுத்துட்டாவது வந்துடுடா...!" கெஞ்சுவார் அவர்.

"அவளுக்காச்சும் அக்கா... தம்பி... தங்கச்சி... எல்லோரும் இருக்காங்க... நான் தனியா இருக்கேன்... நான் பாவமில்லையா...?" முறுக்கிக் கொள்வான்.

அந்தப் பன்னிரண்டு வயதுப் பாலகனுக்கு என்ன சொல்லிப் புரிய வைக்கவென்பது அவருக்குத் தெரியாமல் தவிப்பார். தாயின் அமைதியைப் பார்த்துத் தன் போக்கில் சென்று விடுவான்.

ஆனால், எப்பொழுது அவன் வருவான் என்று பின்வாசலில் தவமிருக்கும் அந்தக் குட்டி தேவதையைக் கண்டவுடன்... அவன் கோபம் அனைத்தும் பறந்தோடி விடும்.

அவர்களது உலகம் இப்படியே சுழல... காலச் சக்கரம் அதன் வேலையைச் சரியாகச் செய்தது. நந்தினி தன் உலகத்தைப் பெப்பி, அவனது தாய் எனச் சுருக்கிக் கொள்ள... பெப்பியோ... விடலைப் பருவத்தை அடையவே... நந்தினியுடன் விளையாடும் நேரத்தைக் குறைத்துக் கொண்டான்.

அவன் குறைத்துக் கொண்டாலும்... நந்தினியைக் காணாமல்... அவளுக்கு உணவு கொடுக்காமல் அவன் ஒரு நாள் கூட இருந்ததில்லை. நந்தியின் தனிமையையும்... அமைதியையும் அவன் ஒருபொழுதும் உணர்ந்ததில்லை.

அதற்குக் காரணம், அவனைப் பார்த்தவுடன் அவள் மலர்வதாலேயே. அந்தக் கறுப்பு தினம் அவர்கள் வாழ்வில் வரும் வரை, நந்தினி கொஞ்சமாவது உயிர்ப்புடன் இருந்தாள்.

என்று ப்ரதீப்பின் தாத்தாவும் பாட்டியும் சாலை விபத்தில் சிக்கி மாண்டார்களோ... அதன்பிறகு அவர்களின் வாழ்க்கை மாறிப் போனது.

வெளி உலகத் தொடர்பே இல்லாமல் போனது. நந்தினியின் நிலைமையை அறிந்தும்... அவளைக் காக்க முடியாமல் இருக்கும் அவரது நிலை... தனிமை அனைத்தும் சேர்ந்து... ப்ரதீப்பின் தாயைச் சற்று மன நோயாளியாகவே மாற்றி இருந்தது..

நந்தினியின் அழுகுரல் கேட்கும் வேளைகளில் எல்லாம் அவர் சற்றுப் பதட்டமாக நடந்து கொள்வார்.

இதுவே அதுவரை ப்ரதீப், தாயிடம் வித்தியாசமாகக் கண்ட ஒரே நடத்தை.

ப்ரதீப்பின் தாத்தா பாட்டி இறந்து... அவர்கள் காரியம் முடிந்த பிறகு... தங்கையைத் தங்கள் ஊருக்கே அழைத்துச் செல்ல ப்ரதீப்பின் மாமா முயல, "நந்தினியை விட்டு நான் வரமாட்டேன்...!" என்று அவர் பிடிவாதமாக மறுத்த பொழுது, அவர்கள் சற்றே திகைத்தார்கள்.

"உனக்கும் அவளுக்கும் என்ன சம்பந்தம்...? எல்லாம் அவங்க வீட்டில் இருக்குறவங்க பார்த்துப் பாங்க...!" அவரது கண்டிப்போ...

"இதென்ன பிடிவாதம்மா...?" அவரது கெஞ்சலோ....

"இனிமேலாவது நீ சுதந்திரமா... நீயா இருக்கணும்மா...!" அவரது கவலையோ... எதுவும் அவரை அசைக்கவில்லை.

அவரது எண்ணமெல்லாம் நந்தினியைச் சுற்றியே இருந்தது. பிரதீப்பே கூட இதை எதிர்பார்க்கவில்லை.

"அம்மா... நாம மாமா கூடப் போகலாம்மா... இங்கே நாம தனியா இருக்கணுமே...!" கவலையாகச் சொன்னான்.

ப்ரதீப்பின் பேச்சு மட்டுமே அவரைக் கொஞ்சம் அசைத்தது. ஆனாலும், "நந்தினி பாவம்டா...!" அப்பாவியாக அவர் சொன்ன பாவம்... ப்ரதீப்பை இளக்கியது.

"அவளுக்கு நான் இருக்கேம்மா...!" ஏதோ ஒரு வேகத்தில் சொல்லி விட்டான். சொன்னவன், உணர்ந்து

சொன்னானா என்பது தெரியாது. ஆனால், அதைக் கேட்டவரோ... அந்த வார்த்தைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

"நீ அவளை நிஜமாவே பாத்துப்ப தானே...? சும்மா சொல்லலையே...! அவளைப் பார்த்துக்கணும்... அவளை நீதான் பார்த்துக்கணும். நந்தினி உடைஞ்சு போய்டுவா... சின்னப் பிள்ளைடா அவ... நம்மளை விட்டால் அவளை யாரும் பார்த்துக்க மாட்டாங்கடா...!" அவர் சொன்ன வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொன்னார்.

தன் அண்ணன் சொன்ன வார்த்தைகளை விட... தன் மகன் மேல் அதிக நம்பிக்கை வைத்தார். அப்பொழுது ப்ரதீப் மனதில் நினைத்தது ஒன்றுதான்... 'தாய் தேவையில்லாமல் கவலைப்படுகிறார்...!' என்பது. அவனுக்குத் தாயின் கவலையின் வீரியம் புரியவில்லை.

ஆனாலும் தாய் தனது வார்த்தைகளில் ஆறுதலடைகிறார் என்பதை உணர்ந்த பிறகு... அவருக்கு நம்பிக்கையளிக்கும் வார்த்தையைக் கொடுக்க அவன் மறுக்கவில்லை.

அனுபவப்பட்ட அவருக்கே நந்தினியைப் பிரிவது இவ்வளவு துயரத்தைக் கொடுத்தால்... அவர்களையே ஆதாரமாகச் சுழலும் நந்தினிக்கு அது எவ்வளவு பெரிய இடி என்பதைப் பாவம் அவன் உணரவில்லை. உணரும் பக்குவமும் அவனுக்கு அப்பொழுது இருக்கவில்லை.

ஆனால், அவன் உணர்ந்தபொழுது... நிலைமை கைமீறிச் சென்றிருந்தது என்பதுதான் உண்மை.

ஊரை விட்டுக் கிளம்பும் முன்னர்... நந்தினிக்கு இறுதியாக அவன் கொடுத்த டைரிமில்க் சாக்லெட்டை ஆர்வமாக வாங்கிக் கொண்ட நந்தினிக்கு, அப்பொழுது தெரியவில்லை... தன் வாழ்நாளிலேயே தான் இறுதியாக உண்ணப்போகும் இனிப்பு இதுதான் என்று.



சுற்றிலும் உறவுகள்!
ஆனால்...
தனிமையில் நான்...!

பள்ளிக்குக் கிளம்பிக் கொண்டிருந்த நந்தினியை... ப்ரதீப் வழக்கமாக அழைக்கும் முறையில்... அதாவது, "அம்மா நான் விளையாடிட்டு வாரேன்..." என்று சங்கேத மொழியில் அழைக்க...

எப்பொழுதும் மாலையில் வரும் பெப்பி, அன்று காலையிலேயே வரவே... வீட்டில் இருப்பவர்களின் கவனத்தைக் கவராதவாறு, அவள் அப்படித்தான் எண்ணிக் கொள்வாள். ஆனால், அவள் என்ன செய்தாலும் அவளை யாரும் கண்டு கொள்ளப் போவதில்லை என்ற உண்மை... பாவம், அவளுக்குத் தெரியாது.

மற்றவர்களின் கண்ணில் படாதவாறு வெளியே வந்தவள், "பெப்பி... என்ன...?" வீட்டு வாசலில் ஒரு கண்ணை வைத்தவாறே கேட்டாள்.

அவனோ அவள் கேள்விக்குப் பதில் சொல்லாமல்... தன் கையில் இருந்ததை நீட்டினான். ப்ரதீப் கொடுத்த டைரிமில்க் சாக்லெட்டைப் பெற்றுக் கொண்ட நந்தினிக்கு உற்சாகத்தில் தலைகால் புரியவில்லை. கண்கள் அகல அதைப் பார்த்தாள்.

அதிலும்... மிகப்பெரிய சாக்லெட் அது. அதை வாங்கியவள், "முழுசா எனக்கா...?" அவள் கேட்க... அவன் சம்மதமாகத் தலையை அசைக்கவே, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு... தன் சந்தோஷத்தைத் தெரிவித்தாள்.

ப்ரதீப் வளர்ந்து விட்டாலும், நந்தினியின் இந்தச் செய்கையை மட்டும் எப்பொழுதும் தடுத்ததில்லை. அவளது உச்ச சந்தோஷத்தை, அவளுக்குக் குறையாத சந்தோஷத்தோடு பார்த்தான்.

"நந்து... நாங்க ஊருக்குப் போயிட்டு வாறோம்...!" அவன் சொல்ல... அவன் கொடுத்த சாக்லெட் கொடுத்த மயக்கத்தில் இருந்ததாலா... இல்லையென்றால் அதைப் பெரிய விஷயம் என்று அவள் கருதாததாலா, தெரிய வில்லை... இல்லையென்றால் அவன் சொன்னதை சரியாகக் கவனிக்காததாலா... அதைப் பெரிதாக அவள் எடுக்கவில்லை.

அதைவிட... வீட்டிலிருந்து எப்பொழுது தன் பாட்டியின் குரல் கேட்குமோ என்று அவள் கவனம் முழுவதும் அங்கே இருந்ததால்... அவன் சொன்னதை முழுதாக அவள் உள்வாங்கவில்லை.

இல்லையென்றால் அவளது வயதுக்கு அதைப் புரிந்து கொள்ளும் பக்குவம் இல்லையோ...? எதுவும் தெரியவில்லை. தான் ஊருக்குப் போவதாகச் சொன்ன வுடன்... அவள் அழுது அடம் பிடிப்பாள் என அவன் எதிர்பார்க்க...

நந்தினியின் அமைதி அவனைத் திகைக்க வைத்தது.

'இவளுக்கு நாங்கள் இல்லையென்றாலும் பரவா யில்லையா...? இவள் சரியாகத்தான் இருக்கிறாள். இந்த அம்மாதான் தேவையில்லாமல் பயப்படுறாங்க. இதை முதல்ல அவங்ககிட்ட சொல்லணும்...!' எண்ணி யவன், அவளிடம் விடைபெற்றுச் சென்றான்.

"பெப்பி... சாயங்காலம் சீக்கிரம் வா... நான் உனக்கு சாக்லெட் வச்சுட்டே இருப்பேன், சரியா...?" அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில், அவன் முதுகுக்குப் பின்னால் அவள் சொல்ல...

'தான் சொன்னதை அவள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ...?' என்ற சந்தேகம் அவனுக்கு எழுந்தது.

ஆனால், இதைத் திருத்த அவன் முயலவில்லை. அவளை எப்பொழுதும் சந்தோஷமாகவே பார்த்துப் பழகியவனுக்கு... அவள் அழுவதைப் பார்க்கும் மனம் வரவில்லை.

எனவே, 'சரி...' என்பது போல் தலை அசைத்தான்.

அவனது தலையசைப்பைப் பெற்றுக் கொண்டவள்... அந்தச் சாக்லெட்டைத் தன் சட்டைக்குள் மறைத்து வைத்துக் கொண்டு... தன் பெட்டியில் கொண்டு போய் வைத்தாள். அன்று முழுவதும் பள்ளியில் அவளுக்கு எதுவும் ஓடவில்லை.

எப்பொழுது வீட்டிற்குச் சென்று அந்தச் சாக்லெட்டைச் சாப்பிடுவோம் என ஏங்கினாள். 'பெப்பியோடு அமர்ந்து சாப்பிட வேண்டும்... அவங்க அம்மாவுக்கும் கொஞ்சம் கொடுக்க வேண்டும்!' எனத் திட்டமிட்டாள்.

மாலையில் உற்சாகமாக வீட்டிற்கு வந்தவள்... தன் அக்கா... தம்பி.. தங்கை... என அனைவரும் டியூஷன் சென்றவுடன்... அந்தச் சாக்லெட்டை எடுத்துக் கொண்டு பெப்பியைக் காண விரைந்தாள்.

இரு வீட்டுக்கும் பொதுவாக இருக்கும் காம்பவுண்ட் சுவரில்... உயரம் குறைவான பகுதியில் ஏறி... அவர்களது துவைக்கும் கல்லில் குதித்து இறங்கியவள்... வழக்கமாக அவர்கள் அமரும் இடத்தில் சென்று அமர்ந்தாள்.

பெப்பிக்காக அவள் காத்திருக்க... அவன் வரவில்லை என்றவுடன் ஏமாற்றமாக உணர்ந்தாலும்... அந்தச் சாக்லெட்டைச் சாப்பிடாமல் இருக்க அவளால் முடியவில்லை.

ஒவ்வொரு பீசாக... பாதிச் சாக்லெட்டைச் சாப்பிட்டவள்... 'இது பெப்பிக்குத்தான்...' என்ற முடிவுடன் எடுத்து வைத்துக் கொண்டாள்.

இருள் கவிழ்ந்த பிறகும் அவன் வராமல் போகவே... சோர்ந்து போய் தன் வீட்டுக்குச் சென்றாள். அன்று மட்டுமல்ல... அடுத்த நாளும் இதே தொடர... ப்ரதீப்பின் தாய் இருக்கும் அறையின் ஜன்னல் கதவைத் தட்டினாள்.

பதில் இல்லாமல் போகவே, கவலை கொண்டாள். முன்னால் சென்று பார்க்கவும், அவளுக்கு அச்சமாக இருந்தது. ஏனென்றால்... அவளது பாட்டி, நந்தினியின் சகோதரர்களிடம்,

"அந்த வீட்டில் இருக்கும் கிழங்கள் செத்துப் போச்சு... பின்னாடி யாரும் போகாதீங்க... போனால் அவங்க ஆவி உங்களைப் பிடிச்சுக்கும்...!" என்று சொல்லிப் பயமுறுத்தி வைத்திருந்தார்.

எனவே மிகவும் தயங்கினாள். இரண்டாவது நாள் அவ்வாறு செல்ல... மூன்றாவது நாள் முடிவில்... அவள் பயத்தையும் மீறி... பெப்பியைக் காண வேண்டும் என்ற ஆவல் உந்த... வீட்டின் முன்னால் சென்றாள்.

அவளை வரவேற்றது... மிகப்பெரிய பூட்டு. 'பெப்பி எங்கே...? எங்கே போனான்...? எப்போ வருவான்...? யாருக்குத் தெரியும்...? யாரிடம் கேட்க...?' கலங்கினாள். அவளுக்கு அழுகை வரும்போல் இருந்தது.

தொடர்ந்த நாட்கள் பெப்பியின் வரவை எதிர் நோக்கியதாகவே இருந்தது. முதல் ஐந்து நாட்கள் அவன் வருவான் என்ற நம்பிக்கையில் கரைய...

அடுத்த சில நாட்கள், அவன் வர மாட்டானோ... என்ற ஏக்கத்தில் கடக்க... அடுத்த நாட்கள் அவனுக்கு

ஏதாவது ஆயிடுச்சா... பயத்தில் துவள... அவளது நினைவு முழுவதும் பெப்பியே நிறைந்திருந்தான்.

அவனுக்காக எடுத்து வைத்திருந்த சாக்லெட்டைக் கூட அவள் சாப்பிடவில்லை.

அவன் வருவான்... அவனுக்குத்தான் கொடுப்பேன் என எடுத்து வைத்திருந்தாள். அதைக் காணும்பொழு தெல்லாம்... பெப்பியின் நினைவு அதிகமாக எழும்.

மாதங்கள் கடந்த பிறகும் அவன் வராமல் போக... இதற்கு மேல் அவன் வரப்போவதில்லை என்ற உண்மை அவளுக்குப் புரிந்தது. ஆனால், புரிந்த உண்மையை ஏற்றுக்கொள்ள அவளால் முடியவில்லை. 'பெப்பி வேண்டும்...!' அவள் மனம் அடம் பிடித்தது.

பத்து வயதுச் சிறுமி... எதையும் சீக்கிரம் மறந்து விடும் பருவம்தான். ஆனால், அதற்கு அவள் மேல் பாசம் காட்ட ஏதாவது ஜீவன் இருந்தால் மட்டுமே... பழைய பாசத்தையும்... மனிதர்களையும் அவளால் மறக்க முடியும்? ஆனால், அதற்குத்தான் இங்கே வழியே இல்லையே.

அவளது தனிமை பெப்பியை மறக்க விடவில்லை என்றால்... அவளது பசி, பாசமான வருடலுக்கான ஏக்கம்... தாயின் மடியில் உரிமையாக மற்றவர்கள் அமரும் வேளைகளில் எல்லாம்... பெப்பியின் தாயின் தலை கோதலுக்காக அவள் மனம் ஏங்கும்.

தொடர்ந்த நாட்கள் ஏக்கத்திலும்... ஏமாற்றத்திலும்... தன்னிரக்கத்திலுமே கழிந்தது.

பெப்பி இல்லாத தனிமையைப் போக்கத் தன் தம்பி தங்கையுடன் சேர்ந்து விளையாட முயன்றபொழுது...

"அவங்களை ஏன் தொட்ட... அவங்களையும் பரலோகம் அனுப்ப முடிவு பண்ணிட்டியா...?" ஓங்கி முதுகில் அறைந்தவாறு அவள் பாட்டி கேட்க...

அவர் கொடுத்த அறையை விட.. சொன்ன சொற்களை விட... உடன் பிறந்தவர்கள் நக்கலாகச் சிரித்தபொழுது எழுந்த அவமானம், அவளை அதிகமாகப் பாதித்தது. ஓடிச் சென்று அறையில் புகுந்தவள், மூலை யில் அமர்ந்து,

"பெப்பி வந்துடுடா... என் கூட விளையாட யாருமே இல்லடா... எங்கடா இருக்க... எனக்கு நீ வேணும்டா..." வாய்விட்டுச் சொல்ல முடியாமல் அவள் கதறியழ... அவளது மனம் ரணப்படத் துவங்கியது.

அனுபவிக்கும் வேதனை... தனிமை... அவமானம்... அதைப் பகிர்ந்து கொள்ள முடியாத அழுத்தம்... நந்தினி யைத் தனக்குள் இறுகச் செய்தது.

தன்னை வீட்டில் யாருக்கும் பிடிக்கவில்லை என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள முடியாமல் துடித்தது அந்தக் குருத்து. வீட்டில் அனைவருக்கும் அவ்வப்பொழுது கிடைக்கும் புதிய பொருட்கள், பொம்மைகள்... சாப்பாடு... என அனைத்திலும் அவள் ஒதுக்கப்பட, நந்தினி உறவு களுக்காக ஏங்கிப் போனாள்.

அவள் தாய் காயத்ரியால், தன் மாமியாரை மீறி ஒரு துரும்பைக் கூட நகர்த்த முடியவில்லை.

நந்தினியைக் கண்காணிப்பதை விட... தன் மருமகளை அதிகம் கண்காணித்தார். தாலியைக் காட்டி மாமியார் பேசும் வேளைகளில்... தொப்புள் உறவு பெரிதாகத் தெரியவில்லை.

காசிநாதனோ... பணத்தின் பின்னால் ஓடத் துவங்கி விட... வீட்டு நிலவரம் அவரது காதுக்குச் செல்வதே இல்லை. சொல்லப் போனால் காசிநாதன் வீட்டில் இருந்தால்... நந்தினி வீட்டில் இருக்க மாட்டாள். தப்பித் தவறி அவள் தந்தையின் அருகில் சென்றால் கூட... அவர் இல்லாத வேளையில்... பாட்டியின் 'கூடு' தண்ட னையை அனுபவிக்க வேண்டிவரும் என்பதால்... நந்தினி அவர் இருக்கும் திக்கில் கூடச் செல்ல மாட்டாள்.

தனிமை... தனிமை... தனிமை மட்டுமே அவளது உறவாகிப் போக... அவளது நாட்கள் அமாவாசை நாட்களாகவே கடந்தது.

அவளது பதிமூன்றாம் வயதில்... அவளது தம்பிக்குக் காசிநாதன் ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுக்க... நந்தினிக்கு அதைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் எழுந்தது.

யாரும் பார்க்காத வண்ணம்... அனைவரும் உறங்கிய பிறகு... எழுந்து வந்து... ஆவலாக அந்தச் சைக்கிளை வருடினாள்.

அந்த நேரம் தண்ணீர் குடிக்க வந்த அவளது பாட்டி அதைப் பார்த்து விட்டு, "ஏய்... பீடை...! அதை ஏன்டி தொட்ட..." அவரது கூச்சலில் வீடு விழித்துக் கொண்டது.

பயத்தில் உறைந்து போன நந்தினி, நடுங்கியவாறு நிற்க... "என்ன ஆச்சு...? எதுக்கும்மா இப்போ சத்தம் போட்டீங்க...?" காசிநாதன் கேட்க... காயத்ரிக்கு நொடியில் விஷயம் புரிந்து விட்டது.

"நந்தினி, நீ ரூமுக்குப் போம்மா...." மாமியாரின் கோபம் அறிந்து... அவர் அவளை எதுவும் செய்து விடக் கூடாதே என்ற பதைப்பில் வேகமாகச் சொன்னார். மகன் முன்னால் எதையும் சொல்ல முடியாமல் அமைதியானார் அவர். ஆனால், மருமகளைப் பார்வையால் எரிப்பதை நிறுத்தவில்லை.

காயத்ரியோ... வருவதைப் பார்த்துக் கொள்ளலாம் என்ற தைரியத்தில் நின்றார். கடந்த சில நாட்களாக மகள் ஒடுங்கிப் போனதை அவரும் உணர்ந்துதானே இருந்தார்.

அதிலும் பெப்பியின் வீட்டை அவள் சுற்றி வருவதைக் காணும் அவருக்கு... இதயத்தை யாரோ வாள் கொண்டு அறுக்கும் உணர்வு. தான் சரியாக இருந்திருந்தால்... தன் மகள் இப்படி மற்றவரை எண்ணி ஏங்க வேண்டி இருக்காதே!

மகள் பெப்பியைக் காணச் செல்லும் நேரங்களில்... மாமியாரின் கவனம் அவள் பக்கம் செல்லாமல் காப்பவராயிற்றே... இந்த நேரத்தில்... நந்தினி வருந்தினால்... அவளுக்கு ஆறுதல் சொல்ல யாருமில்லை என்பது அவருக்குத் தெரியும்.

எனவேதான் நந்தினியைத் தப்பிக்க வைத்தார். ஆனால், அந்தத் தாயின் கருணை கடவுளுக்கு இல்லை

போல. மறுநாள் சைக்கிள் ஓட்ட எடுத்துச் சென்ற நந்தினியின் தம்பி... சரியாக ஓட்டிப் பழகாததால்.. , விழுந்து வார... அவன் சென்ற வேகத்தில் கை, ஒரு கல்லில் மோத... மூட்டு எலும்பு உடைந்து போனது. கால்கள் சிராய்த்து ரத்தம் வந்தது.

அத்தோடு நெற்றியிலும் கல் குத்தி ரத்தம் வர... அதைப் பார்த்த நந்தினியின் பாட்டிக்கு வந்ததே கோபம்... "எங்கே அவ..." அவர் கேட்ட வேகத்திலேயே நந்தினியின் நிலைமை புரிந்து விட...

"ஹையோ! அத்தை, வேண்டாம்..." ரத்தம் சொட்ட, கை எலும்பு முறிந்ததால் வலியில் துடித்த மகனையும் விட்டுச் செல்ல முடியாத தவிப்பில்... அந்த நேரத்திலும் தன் மாமியாரிடம் கெஞ்ச...

"என்னது, வேண்டாமா...? என் மகனுக்குத்தான் எமனா இருக்கான்னா... இப்போ என் வீட்டு வாரிசு... இவனையும் கொல்லப் பார்த்தாளே...! அவளைச் சும்மா விடுறதா... நீ என் பேரனைப் பாரு..." கூந்தலைச் சுருட்டிக் கட்டியவர்... கோபத்தோடு நந்தினியின் அறைக்குள் நுழைந்தார்.

வேறு வழியில்லாமல்... மகனைத் தூக்கிக் கொண்டு மருத்துவ மனைக்கு விரைந்தார் காயத்ரி.

அவளைத் தேட, அவள் அறைக்குள் இல்லை. இறுதியில் கட்டிலின் அடியில் பார்த்தார். நந்தினி அவள் கட்டிலின் கீழே ஒளிந்திருக்க... அதைப் பார்த்தவரின் கோபம் இன்னும் அதிகரித்தது.

"ஏன்டி சனியனே... பீடை... தரித்திரம்... மூதேவி... என் வீட்டு மனுஷங்களை எல்லாம் கொல்லப் பார்க்கிறியா...?" இந்த வார்த்தையைச் சொல்லும்பொழுது... நந்தினியும் அவர்கள் வீட்டுக் குழந்தைதான் என்பது அவருக்கு மறந்து போனது.

"நீ பொறந்த நேரம் என் பையனை முழுங்கப் பார்த்தே... இப்போ எல்லாரையும் சாகடிக்கிறே... நீ சாக மாட்டேங்கிறியே...

"தரித்திரம், தரித்திரம்... நீ தொட்டா அந்தக் காரியம் விளங்குமா...? அது இவ்வளவு நாள் ஆகியும் உனக்குத் தெரியலையா...? உன்னை இன்னைக்குக் கொல்லாமல் விட மாட்டேன்டி..."

"பாட்டி! நான் அவனை எதுவும் செய்யலை... நான் என் ரூமை விட்டு வெளியே வரவே இல்லை. எனக்குச் சூடு வேண்டாம்... நீங்க வேண்ணா அவன் கிட்ட கேட்டுப் பாருங்களேன்... அம்மா... அம்மா...!" கதறினாள்.

அவளது கதறல்கள் அவரைச் சிறிதும் அசைக்கவே இல்லை. கரண்டியை கேசில் பற்ற வைத்துச் சூடாக்க... அவர் கையிலிருந்து தன் கையை உருவ முயன்ற அவளது முயற்சிகள் பலிக்கவே இல்லை.

இறுதியில் சூடு வைத்தே விட்டார்... "ஆ... ஆ... ஆ... அம்மா... அப்பா... ஆ..." அவளது ஓலம் வாசலை எட்ட... காசிநாதன் காரிலிருந்து இறங்கி வீட்டுக்குள் ஓடினார்.

"அம்மா... என்ன செய்றீங்க...?" ஓடியவர், தாயின் கையில் புழுவாகத் துடித்த மகளை விடுவித்தார். அவள்

உள்ளங்கை இரண்டும் கொப்பளித்துப் போயிருக்க... துடித்துப் போனார்.

"ஐயோ... என்னம்மா இது...?" நின்று பேச நேரமின்றி, மகளைத் தூக்கிக் கொண்டு மருத்துவ மனை விரைந்தார். அவரது பின்னாலேயே காசிநாதனின் ஒன்றுவிட்ட அண்ணனும் வந்து விட்டார்.

நிலைமையைப் பார்த்தவருக்குக் கண்ணெல்லாம் கலங்கி விட்டது. நந்தினியோ மயங்கி விட்டிருந்தாள். மருத்துவர்கள் போட்ட சத்தத்தில்... பெற்றவர்களால் தலை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

"ஐயோ... ஆண்டவா...! என் பொண்ணுக்கு மட்டும் ஏன் இந்தச் சோதனை. அவளை உன்னோடவே எடுத்துக்கோ... அவ படுற துன்பத்தை என்னால் பார்க்க முடியலை...!" கதறித் துடித்தார்.

நந்தினி கண் விழிக்காமல் கிடக்கவே... "கொன்னுட் டாங்களா...? உங்க அம்மா கொன்னுட்டாங்களா...? அவங்களுக்கு அவ உயிர்தான் வேணுமா? நானும் என் மக என் கண் முன்னாடி இருந்தால் போதும்னு இவ்வளவு நாளும் பேசாமல் இருந்துட்டேன்.

"இனிமேல் என்னால் முடியாது. என்னையும் என் மகளையும் தனியா விட்டுடுங்க. நாங்க எங்கேயோ போய் பொழச்சுக்கிறோம்... பிச்சை எடுத்தாவது என் மகளைக் காப்பாத்துறேன்...!" வீறுகொண்டு எழுந்தார் காயத்ரி.

காசிநாதனால் தலை நிமிரவே முடியவில்லை. தனது நடத்தை... தன் மகளைப் பழிவாங்குவதை

உணர்ந்தும்... உண்மையைச் சொல்ல முடியாத கோழையாகிப் போனதை எண்ணி மறுகினார்.

"என்னடா பேசாமலே இருக்க...?" காசிநாதனின் அண்ணன் அவரை உலுக்க,

"இதுக்கு இன்னைக்கே ஒரு முடிவு கட்டு றேண்ணா..." சொன்னவாறு வீட்டுக்குக் கிளம்பினார்.

காசிநாதனின் பின்னாலேயே சென்றார் தேவன்.

"அம்மா..." வீடு அதிர அவர் அழைக்க... கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல் வந்தார் அவன் தாய்.

"ஏம்மா... ஏம்மா, இப்படிப் பண்ணுறீங்க...? அவ சின்னப் பொண்ணும்மா...!" அவரால் பேசக் கூட முடிய வில்லை.

"என்னது... சின்னப் பொண்ணா...? நம்ம வீட்டு எமன்டா அவ... நான் இப்படித்தான். என்னை மாத்த முடியும்னு நினைக்காதே. நான் இருக்கிற வரைக்கும்... அவளோட இடம் அந்த ரூம்தான். அதைத் தவிர வேற எந்த உரிமையும் அவளுக்கு இங்கே கிடையாது.

"அப்படி என்னை மீறி எதையாவது செய்யணும்னு நீ நினைச்சா... அது எனக்குப் பிண்டம் வச்ச பிறகுதான் நடக்கும். உனக்கு வேணும்னா சொல்லு... நான் இப்போவே செத்துப் போறேன்... போகட்டுமா...?" ஆங்காரமாகக் கேட்டார்.

"அம்மா... நான் என்ன சொல்ல வர்றேன்... நீங்க என்ன..."

"நீ எதுவும் சொல்ல வேண்டாம். போ...!" சொல்லி விட்டுச் சென்று விட்டார்.

காசிநாதன் சோர்ந்து போனார். தனது கோழைத் தனத்தின் விலை அதிகம் என்பது புரிந்து போனது. சோர்ந்து போய் அவர் அமர... அவரது தோளை அழுத்தினார் தேவன்.

"அண்ணா..." கலங்கிய குரலில் அழைக்க...

"அவங்களை மாத்த முயற்சி செய்தால்... உடஞ்சுதான் போவாங்க. நான் நந்தினியைப் பார்த்துக் கிறேன்...!" அவர் சொன்ன வாக்கைக் காப்பாற்றினார்.

மருத்துவ மனையில் வந்து... மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு அழ மட்டுமே காசிநாதனால் முடிந்தது. தேவன் நடந்தவற்றைச் சொல்ல... பெட்டில் படுத்திருந்த நந்தினியின் கடை விழியோரம் வழிந்த கண்ணீரை யாரும் அறியவில்லை.

"என் பொண்ணை நான் எங்கேயும் அனுப்ப மாட்டேன்...!" காயத்ரியின் கதறலுக்கு அங்கே முக்கியத் துவம் கொடுக்கப்படவில்லை.

மறுநாளே தேவன், நந்தினியை ஹாஸ்டலில் சேர்க்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். இடம் கிடைக்கவே அவளை அழைத்துச் செல்ல வந்தார்.

மருத்துவ மனையில் இருந்து வீடு வந்த நந்தினி... தாயின் காலைக் கட்டிக் கொண்டு கதறினாள்.

"அம்மா... நான் எங்கேயும் போகலைம்மா...!" கதறிய மகளை வலுக்கட்டாயமாக உதறியவர்...

"போய்த் தொலையேன்டி... சரியான அதிர்ஷ்டக் கட்டை... ஏன்டி என் வயித்தில் வந்து பொறந்த...? தரித்தீரம். போடி..." பிடித்துத் தள்ள... தன் பாட்டி சொன்ன பொழுது வலித்ததை விடப் பல மடங்கு வலித்தது அவளுக்கு.

மறுபேச்சின்றி அறைக்குச் சென்றவள், தன் பெட்டியைத் திறக்க, அதற்குள் அவள் பெப்பிக்காக வைத்திருந்த சாக்லெட்டைக் கண்டவள்... அதைத் தூக்கி ஜன்னல் வழியாக விட்டெறிந்தாள்.

'எனக்கு யாரும் வேணாம்...!' உறுதியாக எண்ணிய வள், தன் பெரியப்பாவுடன் காரில் ஏறி அமர்ந்தபொழுது... வீட்டிலிருந்த யாரையும் திரும்பிப் பார்க்கவில்லை.

"நந்தும்மா..." ப்ரதீப் அவள் தோளை உலுக்க... நினைவுக்குத் திரும்பியவள், அவனைப் பார்த்த பார்வையில் விரவியிருந்த வலியில் துடித்துப் போனாள்.

அவள் கண்கள் தடித்துச் சிவக்க... அவனையும் அந்தப் பணத்தையும் பார்த்தவள், சட்டென எழுந்து தன் அறைக்குள் சென்று மறைந்தாள். கதவை அழுந்தச் சாத்தியவள்... அதன் மேல் சாய்ந்து நின்றாள்.

மூச்சு வேகமாக வெளியேற... அவள் நெஞ்சு விம்மித் தணிய... தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வரப் போராடினாள் நந்தினி. அறைக்கு வெளியே பிரதீப்பின் குரல் கேட்டுக் கொண்டே இருந்தது.



முதல் தடுமாற்றம்...
முடிவுக்கு வருமா...?
முகவுரை ஆகுமா...?
மூச்சு முட்டிப் போகிறேன் நான்...!

மறுநாள் காலை ஓட்டத்துக்குக் கூடச் செல்லாமல் அறைக்குள் முடங்கியவள், காலையில் அலுவலகம் செல்லக் கிளம்பி வெளியே வரும்பொழுது... ஹாலில் டீப்பாயின் மேல் இருந்த பணத்தைப் பார்த்தவளின் நடை தள்ளாடியது.

நிதானமாக அதன் அருகில் சென்றவளின் கரங்கள்... அதைத் தொட நீண்டது. எப்பொழுதும் நடுங்காத அவளது கரங்களில் அப்படி ஒரு நடுக்கம். அந்தப் பணத்தைத் தொடாமல்... கரத்தைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு, விருட்டென்று அங்கிருந்து வெளி யேறினாள்.

கோபமாகச் செல்லும் நந்தினியைப் பார்த்த ரோஸுக்கு மனம் குற்ற உணர்வில் தவித்தது. நேற்று சரவணனின் நடத்தையால்... அவள் தன் மேல் கோபமாக இருக்கிறாளோ என்று தவித்தாள்.

முதல் வேலையாக சரவணனுக்குப் போன் செய்தவள், அழுது தீர்த்தாள். சரவணனுக்கு என்ன சொல்லி ஆறுதல் சொல்வதென்று தெரியவில்லை. அவளைக் காண வருவதாகச் சொல்லவே... அதற்கும் தடுத்து விட்டாள்.

அவள் இருக்கும் மனநிலையில், கோபமாகப் பேசினால் இன்னும் குற்றவுணர்வில் தவிப்பாள் என்பதால், பொறுமையாகப் பேசி... முடிந்த அளவு சமாதானம் செய்துவிட்டு அலைபேசியை வைத்தான். நேராகச் சென்று ப்ரதீப்பிடம் பேசினான். அவனும்... தான் நந்தினியிடம் பேசுவதாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியேறினான்.

அடுத்தடுத்த நாட்களில்... நந்தினி அலுவலகத்திலும்... வீட்டிலும் அவனைச் சந்திக்க மறுத்து அவனுக்குக் கண்ணாமூச்சி காட்டினாள். அவன் நினைத்திருந்தால் வலுக்கட்டாயமாக அவளை அணுகியிருக்க முடியும். ஆனால், அன்று அவளது அப்பட்டமான வேதனையைக் கண்டபிறகு... வலுக்கட்டாயமாக அவளை அணுக அவன் முயலவில்லை.

ஆனால், அவளுக்காக இப்படி ஒருவன் இருக்கிறான் என்பதை அவளுக்கு உணர்த்தியவாறே இருந்தான். அவனது இந்தச் செய்கையே அவளுக்குப் போதுமானதாக இருந்தது.

அவன் தனக்காக வருவது ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தாலும், நடக்கவே முடியாத ஒன்றுக்காக அவன் தன் பின்னால் அலைவது அவளுக்கு வருத்தமாகவும் இருந்தது.

காக்கி உடையில் இருக்கும் வேளைகளில்... அதற்கு உண்மையாக இருக்க வேண்டும் என்று அவள் முடிவெடுத்திருந்தாள். அதையே செயல்படுத்தவும் முயன்றாள்.

கோபால் கேசில் மூக்கை நுழைத்து, இண்டு இடுக்குகளையும் விடாமல் ஆராய்ந்தாள். இறுதியில் ஒரு க்ளூ கிடைக்க... அதைப் பிடித்துக் கொண்டு ஆராய்கை யில், குற்றவாளி இப்படி இருக்கலாம்... என்ற முறையில்... அவனது புகைப்படத்தைக் கணினியில் வரைந்து வெளியிடுகிறாள்.

அவள் அப்படி வெளியிட்ட அடுத்த நாளே அவளது அலைபேசிக்கு மிரட்டல் வருகிறது. அந்த மிரட்டலே... அவள் சரியான பாதையில் செல்வதை அவளுக்கு உணர்த்த... விசாரணையை முடுக்கி விடுகிறாள்.

இக்கட்டான இடங்கள் ஒவ்வொன்றுக்கும் செல்லும் வேளையும், அங்கே அவளுக்கு முன்பாக ப்ரதீப் உதயமாகிறான். அவனிடம் தன் திருப்தியின்மையை வெளிப்படுத்துகிறாள். அவனோ அதையெல்லாம் கண்டு கொள்ளவே இல்லை.

தான் செல்லும் இடங்கள் அவனுக்கு எப்படித் தெரியவருகிறது என்று அறிய முடியாமல் திணறினாள். ஆச்சரியம் கொண்டாள். கந்தன்தான் சொல்கிறாரோ என்ற சந்தேகத்தில்... அவருக்குச் சொல்லாமலே... அவரை அழைத்துச் செல்ல... அங்கும் அவன் உதயமாகிறான்.

ஒவ்வொரு படியிலும் அவன் அவளை நெருங்க முயல... அவளோ அவனைத் தள்ளி நிறுத்தும் முயற்சி யிலேயே இருந்தாள்.

அன்று அவள் அலுவலகத்தில் இருக்கும் வேளை யில்... அவள் விளம்பரப்படுத்திய குற்றவாளி, ஒரு

இடத்தில் ஒளிந்திருப்பதாக அவளுக்குத் தகவல் கிடைக்கிறது.

பரபரப்பான நந்தினி... நொடியில் கிளம்பிச் செல்கிறாள். செல்லும் வேளையில் கந்தனைக் கூட அவள் அழைத்துக் கொள்ளவில்லை. தனி ஆளாகவே செல்கிறாள். அவள் மேல் அவளுக்கு அவ்வளவு நம்பிக்கை இருந்தது. எனவேதான் அவ்வாறு செய்தாள்.

ஆனால், அவள் செல்லும் முன்பே ப்ரதீப் அங்கே சென்று... குற்றவாளியை கட்டிப் போட்டுவிட்டு மறைந்து நின்று கொள்கிறான். அதற்குக் காரணம்... நந்தினியின் கோபத்தை அதிகரிக்க வேண்டாம் என்பதாலேயே.

அந்த ஒதுக்குப்புறமான இடத்தில் அவள், கட்டிப் போட்ட நிலையில் குற்றவாளியைக் கண்டு கொண்ட வேளையில்... அவளுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. அங்கே சிறிது நேரத்திற்கு முன்னர் சிறு சண்டை நடந்திருப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதை அவள் கண்கள் கண்டு கொண்டன.

அப்படியென்றால்... அவள் அறிந்த விஷயம் அவளுக்கு உவப்பானதாக இருக்கவில்லை. 'இவன் எப்படி என் வேலையில் தலையிடலாம்...?' கோபம் கிளர்ந்து எழுந்தது.

அன்று அவன் வீட்டில் அவளைச் சந்திக்க வந்த வேளையில்... மறுக்காமல் அவனைச் சந்தித்தாள். அவனைக் கண்டவள் துணுக்குற்றாள். அதற்குக்

காரணம்... அவன் தலையிலும்... கையிலும் இருந்த கட்டுதான் காரணம்.

அவள் கேட்க வந்த அனைத்தும் தொண்டைக் குழியிலேயே சிக்கிக் கொண்டது. அவள் கண்கள் அலை பாய்ந்து அவன் தேகம் முழுவதையும் ஆராய்ந்தது.

அவள் செய்கையை இமைக்காமல் கண்டு ரசித் தான். அவள் தன்னை ஆராய்வதைத் தான் கண்டு கொண்டதை... மறந்தும் அவளிடம் வெளிப்படுத்த வில்லை.

ஒரு நிமிடம் அவனை ஆராய்ந்தவள்... "நீ உன் மனசுக்குள் என்னதான் நினைச்சுட்டு இருக்க... நீ எனக்கு உதவி செய்னு நான் கேட்டேனா...? உன் உதவி எனக்குத் தேவையே கிடையாது. தேவையில்லாத வேலையில் எல்லாம் மூக்கை நுழைத்து இப்போ..." ஆத்திரமாக அவனிடம் வெடித்தவள், அவனது காயங்கள் அனைத்தும் அவளுக்காக என்பதை எண்ணுகையில்... அவள் குரல் சற்றுத் தடுமாறவே செய்தது.

அதை அவனுக்குக் காட்டாமல் மறைத்தவள், "என் விஷயத்தில்... என் வேலையில் தலையிடுவது இதுவே கடைசியா இருக்கட்டும். நான் எப்பொழுதும் ஒரேபோல் இருக்க மாட்டேன். இதுதான் உனக்குக் கடைசி வார்னிங்.

"நானும் பார்த்துட்டே இருக்கேன்... நீ ரொம்ப ஓவராத்தான் போற. மனசுக்குள்ளே என்ன.. பெரிய ஹீரோன்னு நினைப்பா...? இங்கே நான்தான் ஹீரோ...

நான் ஹீரோயின் கிடையாது, புரியுதா...?" படபடவென்று அவனிடம் பொரிந்தாள்.

அவளது கோபத்தைச் சிறிதும் கண்டு கொள்ளாமல்... "நந்தும்மா... உனக்கு இந்தக் கேஸ் வேண்டாம். இதன் விசாரணையை இத்தோட நிறுத்திடு...!" அவளது கோபத்தைச் சிறிதும் கண்டு கொள்ளாமல், திடீரெனச் சொல்ல... அது அவளது கோபத்தை இன்னும் அதிகரிக்கவே செய்தது.

"என்ன சொன்னே... இந்தக் கேஸை விசாரிக்கிறதை நிறுத்துறதா...! நான் என்ன செய்யணும், எதைச் செய்யக் கூடாதுன்னு நான்தான் முடிவு செய்வேன்..." அவனிடம் கொந்தளித்தாள்.

அவளை நிதானமாகப் பார்த்தவன்... "நீ நிறுத்தலைன்னா... நீ என்ன செய்தாலும்... உனக்கு முன்னாடி நான்தான் இருப்பேன். அது எந்த இடமாக இருந்தாலும் சரி...!" அழுத்தமாகச் சொன்னான்.

அவன் சொன்னதன் பொருள் அவளைத் தாக்க... "நீ எப்படிடா இப்படிச் சொல்லலாம்... எனக்கு யாரும் வேண்டாம். வேண்டாம், வேண்டாம்...!" வெடித்தாள்.

"ஆனால், எனக்கு நீதான் வேணும்...!" அவன் முடிவில் தெளிவாக இருக்க, திகைத்தாள்.

"ஏய்..." கத்தியவாறு அவன் அருகில் வர... அவனோ அவன் நிலையில் மாற்றமே இல்லாமல் நின்றான்.

"ஓ.கே... ஓ.கே.. ரிலாக்ஸ்... இப்போ எதுக்கு இவ்வளவு கோபம்...? நான் உனக்காக ஒண்ணு கொண்டு வந்தேன்... இரு, எடுத்துட்டு வரேன்..." சொன்னவன், அவளைவிட்டு விலகிச் சென்று... டீப்பாயின் மேல் அவன் வைத்திருந்த டெய்ரிமில்க் சாக்லெட்டையும்... பூங்கொத் தையும் எடுத்து வந்து அவள் கரத்தில் கொடுத்தான்.

அதை வாங்காமல்... அவனையே கூர்மையாகப் பார்க்க, "ஹேய்... நீ கேசில் முதல் படியை எடுத்து வச்சு இருக்க... குற்றவாளியையும் கைது செய்திருக்க... உன்னோட முதல் படி... அது மேலும் அப்படியே தொடரத்தான் இந்தப் பூங்கொத்து. வாங்கிக்கோ...!" சொன்னவாறு அவள் கரத்தில் திணித்தான்.

அவனது பூங்கொத்தை விட... அந்தச் சாக்லெட் அவளை மிகவும் பாதித்தது. பழைய நினைவுகள் கிளர்ந்து எழ... ப்ரதீப் அவள் கண்களுக்கு இன்னொரு பெப்பியாகத் தெரிந்தான். தன்னை அவளால் கட்டுப்படுத்திக் கொள் ளவே முடியவில்லை.

இத்தனை வருடங்களுக்குப் பிறகும், அந்த வலியை அவள் உணர... வெறிபிடித்தவள் போல் ஆனாள். என்ன செய்கிறோம் என்று தெரியாமலேயே...

"இது... இது... ஐ ஹேட் திஸ்... அப்போ நீயும் எங்கேயோ போறியா...? அதுக்குத்தான் இந்த இனிப்பா...? எல்லோரும் ஏன் இப்படி இனிப்பைக் கொடுத்தே ஏமாத்துறீங்க...? ஐ ஹேட் திஸ்...!" காட்டுக்

கத்தலாகக் கத்தியவள்... அவன் கையில் இருந்து பிடுங்கி எறிந்தாள்.

"ஏய், கை..." வலியில் லேசாக அலறினான். அதைக் கண்டு தன் கோபத்தையும்... வேகத்தையும் கட்டுப்படுத்தினாள்.

அவள் சொன்ன வார்த்தைகளைக் கிரகிக்கவே பிரதீப்பிற்குச் சற்று நேரமானது. அவள் கூறிய வார்த்தைகள் அவனுக்கு உணர்த்தியது ஒன்றைத்தான்... அது... அவள், தன்னை... பெப்பியை மறக்கவில்லை என்பதைத் தான்.

ஆனால், அதை எண்ணிச் சந்தோஷப்பட முடியாமல்... அது சொன்ன செய்தி... அதில் ஒளிந்திருந்த அவளது ஏமாற்றம்... வலி... இயலாமை... அனைத்தும் அவனைத் தாக்கியது.

தன் முன்னால் ஆங்காரமாக நின்ற அவளை, அப்படியே விட்டுச் செல்ல அவனால் முடியவில்லை. அவளது காயங்கள் ஒவ்வொன்றையும் ஆற்ற வேண்டும் என்று முடிவெடுத்த பிறகு... அதை இனிப்பில் இருந்து துவங்குவதுதான் சரியென எண்ணினான்.

ஒவ்வொரு முறையும் இயலாமையால் தோற்றுத் திரும்புவது அவனுக்கு வலியை அளித்தது. நிதானமாக அவள் வீசியெறிந்த சாக்லெட்டைக் கையில் எடுத்தவன்,

அதை நிதானமாகப் பிரித்தவாறு அவள் அருகில் வந்தான்... "சாக்லெட் பிடிக்காதா... அதுவும் டெய்ரிமில்க் சாக்லெட்..." போலியாக வியந்தவன்,

"நேத்து வரைக்கும் எப்படியோ... ஆனா இனிமேல் உனக்கு இந்தச் சாக்லெட் ரொம்பப் பிடிக்கும்..." சொன்னவன்... கவரைப் பிரித்து... இரண்டு மூன்று துண்டு களை வாயில் போட்டான்.

அதை மெல்லியதாகச் சுவைத்தவாறே அவளைப் பார்க்க... அவனை வெறுப்பாகப் பார்த்தாள் அவள். மேலும் இரண்டு துண்டங்களை வாயில் போட்டவன், அவள் என்ன நடக்கிறது என்பதை உணரும் முன்பே அவளைத் தன் கையணைப்புக்குள் கொண்டு வந்தவன், தன் முரட்டு இதழை... அவள் பூவிதழோடு இணைத்தான்.

சாக்லெட்டின் தித்திப்பை அவள் உணர... அவனை விலக்க அவள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியையே தழுவியது.

"ம்... ம்..." அவளது ஒலி கோபத்தில் ஒலித்ததா என்பதை அவனால் இனம் காண முடியவில்லை.

அவளோ அவன் ஏற்கெனவே கை வலியில் கத்தியிருந்ததால்... முழு மூச்சாக அவனை உதற முடி யாமல், தேங்கினாள். இறுதியில் அவளது எதிர்ப்புகள் தொலைந்து போக... நிதானமாக அவளை விட்டு விலகி னான்.

அவன் விலகவே... "பொறுக்கி ராஸ்கல்... ஒரு பொண்ணுகிட்ட எப்படி நடந்துக்கணும்னு தெரியாது...?" கை நீட்டி அவனை அடிக்க வந்தாள்.

அவள் கையைப் பிடித்துத் தடுத்தவன், அவள் இடையில் கை கொடுத்துத் தன்னோடு இறுக்கிக் கொண் பான்.

"பொண்ணா... அது யாரு... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி யாரோ... நான் ஹீரோயின் இல்லை... ஹீரோன்னு சொன்னாங்க...!" புருவம் தூக்கி அவன் வினவ...

"இனிமேல் கிட்ட வா... உன்னைக் கொன்னுடு றேன்..." முகம் முழுக்கப் பொய்க் கோபத்தைப் பூசியவாறு சொன்னாள்.

"இப்போ கூட நீ நினைத்ததைச் செய்யலாம்..." கிசுகிசுப்பாக அவள் காதுக்குள் அவன் சொல்ல, கோபமாக அவனை உதறியவள், தன் அறைக்குள் புகுந்து கொண்டாள். கட்டிலில் விழுந்தவளுக்கு...

இனிப்பின் தித்திப்பு அவள் அடி நாக்கில் தித்தித்தது. அதேபோல்... நீண்ட காலங்களுக்குப் பிறகு மனம் அமைதியாக இருப்பதை உணர்ந்தாள்.

ஆனால், அதையும் மீறி... அவளது அடி மனதில் ஒரு தாக்கம்... ப்ரதீப்பின் கையில் இருந்த கட்டு... அது அவள் சந்தோஷ மனநிலையை அடியோடு புரட்டிப் போட்டது.

விலுக்கெனப் படுக்கையில் எழுந்து அமர்ந்தாள். 'இதை எப்படி மறந்தேன்...?' தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

கண்கள் கலங்கும் போல் இருக்க... வலுக்கட்டாய மாக அதிலிருந்து மனதைத் திருப்பியவள்... வேலையில் கவனம் செலுத்த முயன்றாள்.

இங்கே ப்ரதீப்போ உற்சாகத்தில் மிதந்தான். தன் நந்தினி தன்னை ஏற்றுக் கொண்டது அவனுக்கு மிகப் பெரிய நம்பிக்கையை அளித்தது. வாய் வார்த்தையால் சொன்னால்தானா...? அவளது மௌன மொழி சொல்லா ததையா அவளது வார்த்தைகள் சொல்லி விடும்...?

இனிமேல் தன் காதலுக்கும்... திருமணத்திற்கும் எந்தவொரு தடையுமில்லை என்று எண்ணினான். அதே உற்சாகத்தோடு வலம் வந்தான்.

அந்தோ பரிதாபம்...! அவள் மீண்டும் தன் கூட்டுக்குள் முடங்கியதை, பாவம் அவன் அறியவில்லை.

மறுநாள் சந்தோஷ மனநிலையில்... அவளைக் காணச் செல்ல... அவளோ அவனைக் காண மறுத்தாள்.

ப்ரதீப்பிற்கு முதல் முதலாக அவள் மேல் கோபம் வந்தது. 'அவ என்னதான் நினைச்சுட்டு இருக்கா...?' அவனால் தன்னைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

அன்று ஆத்திரமாக அவள் வீட்டிற்குச் சென்றவன்... அந்த ஆத்திரம் குறையாமலே அவள் முன் நின்றான்.

'என்ன...?' என்பது போல் அவனை அவள் பார்க்க... மீண்டும் அவள் மௌனக் கூட்டுக்குள் முடங் கியதை ஏற்க முடியவில்லை அவனுக்கு.

அவளிடம் எதை எதையோ கேட்க வேண்டும் என்று வந்தவன், எதுவும் முடியாமல், "நீ என்னைக்குத்தான் என்னைப் புரிஞ்சுப்ப நந்து... ரொம்ப வலிக்குது...!" சொன்னவன், அங்கிருந்து வெளியேறினான்.

செல்லும் முன்னர், "நான் உன்கிட்ட ஒரு விஷயத்தைப் பத்திப் பேசணும். ரோஸ் – சரவணன் பத்தி நீ என்ன முடிவெடுத்துருக்கேன்னு எனக்குத் தெரிஞ் சாகணும். இப்போ என்னால் அதை முழுசா தெரிஞ்சுக் கிற பொறுமை இல்லை..." சொன்னவன், வேகமாக வெளியேறினான்.

மறுநாள் அவள் அலுவலகத்தில் இருக்கும் வேளையில் அவளைக் காணச் சென்றான். முகத்தில் எதையும் காட்டாமல் அவனை வரவேற்றவள், இருக்கை யில் அவனை அமரச் சொல்கிறாள்.

அவன் அமரும் வேளையில் அவளது அலைபேசி அதன் இருப்பை அறிவிக்க... அவனது அலைபேசியோ அதிர்கிறது.

தன் அலைபேசியை செவிமடுத்த நந்தினியின் முகம் பரபரப்பாகிறது. "இதோ நான் இப்போவே வர்றேன்..." சொன்னவள்,அலைபேசியை பேன்ட் பாக் கெட்டில் போட்டவாறு இருக்கையில் இருந்து எழுந்தாள்.

"நான் போகணும்...!"

அவனிடம் உரைத்தவள், அங்கிருந்து வெளியேற முயன்றாள்.

அவள் முன்னால் நின்று... அவள் வழியை அடைத்தவன்... "நீ போகக் கூடாது நந்து...!" அவளைத் தடுத்தான்.

"விளையாட நேரமில்லை ப்ரதீப்... நான் போயே ஆகணும். கேஸ் பத்திய விஷயம் இது...!" கோபத்தை அடக்கியவாறு சொன்னாள்.

"அது 'பேக்' கால் நந்து. அதை நம்பாதே...!"

"ஏய்... என்ன விளையாடுறியா...? ஆமா... என் கேசைப் பத்தி உனக்கென்ன தெரியும்...? வழியை விடு...!" அவனை விலக்க முயன்றாள்.

"அப்போ சரி... நானும் உன்னோடவே வருவேன்..." அவன் பிடிவாதமாகச் சொல்ல,. அவனை வெறுப்பாகப் பார்த்தவள், தன் சுமோவுக்கு விரைந்தாள்.

சென்றவள்... கந்தனைத் தடுத்து விட்டு... ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்து காரை விருட்டென எடுத்துச் சென்றாள். அவளது இந்தச் செய்கையை எதிர்பாராத ப்ரதீப் திகைத்தான்.

"நந்து..." அவன் குரல் கேட்டும் அவனைக் கண்டு கொள்ளாமல், வாகனத்தை அசுர வேகத்தில் செலுத்தி னாள்.

திகைத்து நின்றவன்,. ஓடிச் சென்று தன் ஆட்டோவை எடுத்துக் கொண்டு அவளைப் பின் தொடர்ந்தான். ஆனாலும் சுமோவின் வேகத்துக்கு

அவனால் செல்ல முடியவில்லை. அதோடு... போலீஸ் வாகனம் என்பதால் ட்ராபிக் அவளுக்கு வழி விட... அவனது ஆட்டோவோ செல்ல முடியாமல் தடுமாறியது.

ஒரு கட்டத்தில் அவளை நெருங்கும் வேளையில்... அவள் எதிரில் ஒரு லாரி அசுர வேகத்தில் வர... "நந்து பார்த்து..." அவன் குரல் அவளை எட்டும் முன்னர்... லாரி அவள் சுமோவின் மேல் விசையோடு மோதியது.

"நந்து..." அலறியவாறு ஆட்டோவில் இருந்து குதித்தவன், அவள் சுமோவை நோக்கி ஓடினான்.

சுற்றியிருந்தவர்கள் லாரி டிரைவரை மடக்க... பிரதீப்போ, "நந்தும்மா... நந்தும்மா... நான் பேசுறது கேக்குதா... பதில் சொல்லு... கண்ணை மூடாதே... என்னைப் பாரு... எதையாவது பேசு...!" விசையோடு கதவைத் திறந்தவன், அவளைத் தூக்க முடியாமல் தடுமாறினான்.

முகம் முழுவதும் ரத்தம் வழிய, அவனது பரிதவிப்பைப் பார்த்தவாறு இருந்தாள் நந்தனி.

"நந்தும்மா... கால் அசைக்காமல் அப்படியே இரு... ஹையோ... கால் தி ஆம்புலன்ஸ்...!" அவள் முகத்தைத் தோளில் சாய்த்தவாறு... அவள் கன்னத்தைத் தட்டினான்.

அவன் கண்களில் வழிந்த கண்ணீர் அவள் முகத்தில் சாரலாக வழிய... அவனது பரிதவிப்பையும்... துடிப்பையும்... அழுகையையும் பார்த்தவள், முதல் முதலாக... அவ்வளவு வேதனையிலும், விரிந்த புன்னகை யுடன் கண்கள் மூடினாள்.

"நந்தினி..." ப்ரதீப்பின் கதறல் அந்த இடத்தையே நிறைத்தது.



உனக்குள் நான்...!
உணர மாட்டேன் என்று
பிடிவாதம் செய்தால்...
உணர்த்தாமல் போவேனோ...?

மருத்துவ மனையின் ஸ்ட்ரெச்சரில் நந்தினியைக் கூட்டிச் செல்லும் வரை... ப்ரதீப்பின் உயிர் அவனிடம் இல்லை. நந்தினி மயங்கி விட்டாள் என்பது அறிவுக்குப் புரிந்தாலும், மனதுக்குப் புரியவில்லை.

"நந்தும்மா... நந்தினி..." அவள் கரத்தைப் பற்றிக் கொண்டு... ஸ்ட்ரெச்சரோடு ஓடினான்.

ஐ.சி.யூ.வுக்குள் அவளைக் கொண்டு சென்ற பிறகு... வெளியில் தவிப்பாய்க் காத்திருந்தான். என்ன செய்ய... ஏது செய்ய...? எதுவும் தெரியவில்லை. சரவணனுக்கு மட்டும் தகவல் கொடுத்தான். அவனோடு ரோஸும் மருத்துவ மனைக்கு வந்தாள்.

அவர்கள் கேட்ட எந்தக் கேள்விக்கும் அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

"என் நந்தினிக்கு எதுவும் ஆகக் கூடாது...!" ஒரு நேரம் கடினமாகப் புலம்புபவன்,

ஒரு நேரம், "என் நந்துக்கு எதுவும் ஆகாதுல்லடா... இங்கே பாருடா... எவ்வளவு ரத்தம்..." தன் சட்டையையும்... கைகளையும் காட்டி அவன் கலங்கியபொழுது... சரவணனுக்கு, என்ன செய்வது, அவனுக்கு எப்படி ஆறுதல் சொல்வதென்று தெரியவில்லை.

மருத்துவர்கள், அவளுக்கு ஆபரேஷன் செய்தே ஆக வேண்டும் என்று சொல்ல... அவளது மருத்துவ மனைப் படிவங்களில்... அவளது கணவன் என்று எழுதிக் கையொப்பம் இட்டான்.

சரவணன் அவனைத் திகைப்பாய்ப் பார்க்க... செவிலியும் அவனை வித்தியாசமாகப் பார்த்தவாறே அங்கிருந்து அகன்றார்.

"இனிமேல்... இதற்குமேல் தாமதிக்க... என்னால் முடியாதுடா...!" அவன் குரலில் அப்படி ஒரு அழுத்தம்.

நண்பனைப் புரிந்து கொண்டதால் அமைதியானான் சரவணன்.

"டாக்டர்... அவங்க..." சரவணன் கேட்க,

"இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது. கால் ரெண்டும் பிராக்சர் ஆகி இருக்கு. வலது கையிலும் நல்ல அடி... தலையிலும் சின்ன பிராக்சர் இருக்கு...

"தலையில் பட்ட அடியில்... கெட்டதிலும் ஒரு நல்ல விஷயம்... ப்ளட்... மண்டையோட்டுக்கும்... மூளைக்கும் நடுவில் இருக்கும் லேயரில்தான் கிளாட் ஆகி இருக்கு. அதனால் மூளைக்கு எந்தப் பாதிப்பும் இல்லை.

இப்போதைக்கு அதுதான் சந்தோஷப்படுற மாதிரி இருக்கும் ஒரே விஷயம்...” நீளமாக அவர் சொல்லி முடிக்க...

ப்ரதீப்பின் முகம் கலங்கித் தவித்துக் கன்றிப் போனது. இதற்குமேல் எதுவும் கேட்க வேண்டாம் என்று... சரவணனின் கையை அழுத்திச் செய்கை செய்ய... சரவணன் அமைதியானான்.

மருத்துவர் சொன்னதைக் கேட்ட ரோஸ் வாய் விட்டு அலறி... அழுகையிலேயே கரைந்தாள். மருத்துவ மனை வளாகத்தில் இருந்த சிறு கோயிலின் முன்னால் விழுந்து புரண்டு அழுதாள்.

“அவங்களுக்குப் பதிலாக என் உயிரை எடுத் துக்கோ... அவங்களைத் திரும்பத் தந்திடு...!” அவளது அழுகையில், சுற்றியிருந்தவர்கள் கூட நந்தினிக்காக வேண்டினார்கள்.

ரோஸ் வாய் விட்டுப் புலம்ப.. ப்ரதீப் வாய் விட்டு அழ முடியாத துயரத்தில் மனம் வெதும்பினான். அவன் கண்கள் கலங்க மறக்கவில்லை. அதை மற்றவருக்குக் காட்டாமல் மறைத்தாலும்... சரவணன் அவன் நிலையைக் கண்டு கொண்டான்.

சரவணன் வந்த அடுத்து சில நிமிடங்களிலேயே... காவலர்களும்... உயரதிகாரிகளும்... மீடியாவும் மருத்துவ மனையை முற்றுகை இட்டார்கள். அனைவரையும் வெற்றுப் பார்வை பார்த்தானே தவிர... அவனை அப்புறப்

படுத்த முயன்ற காவலர்களிடம், சரவணன் என்ன சொன்னான் என்று தெரியாது... அதன் பிறகு அவனைத் தொல்லை செய்யவில்லை.

ப்ரதீப்பை விட்டு எங்கும் செல்லாமல் அவனுடனே இருந்தான். அவள் ஒரு அதிகாரி என்பதால், ஏற்பாடுகள் அனைத்தும் துரித கதியில் இறங்கியது. அவளுக்கு அறுவை சிகிச்சை நடந்த மூன்று மணி நேரமும்... ஐ.சி.யு.வின் முன் பழியாய்க் கிடந்தான்.

பச்சைத் தண்ணீர் குடிக்கவும் அங்கிருந்து நகரவில்லை. நரகமாகக் கடந்த மணித் துளிகளுக்குப் பிறகு... ஐ.சி.யு.வின் முன்னால் ஒளிர்ந்த சிவப்பு விளக்கு அணைக்கப்பட... சுவரில் சாய்ந்து நின்றிருந்த ப்ரதீப்... வேகமாக அறைக்கு முன்னால் வந்து நின்றான்.

மருத்துவர் வரவே, ஆர்வமும்... படபடப்பும்... துடிப்புமாக அவரைப் பார்த்தான். "நந்தினி..." அவள் பெயரை உச்சரிக்கும் முன்பே... திணறினான்.

"ஷீ இஸ் ஓ.கே..." அவர் சொல்ல...

"பாக்கலாமா...?" அவன் கேள்வியிலேயே, பார்க்க வேண்டும் என்ற பிடிவாதம் தெரிந்தது.

"அவங்க இப்போ மயக்கத்தில் இருக்காங்க... டிஸ்டர்ப் பண்ணாமல் பார்த்துட்டு வாங்க..." அனுமதி யளித்துச் சென்றார்.

அவரது அனுமதிக்காகக் காத்திருந்தவன், அடுத்த நிமிடம் ஐ.சி.யு.வுக்குள் இருந்தான். வேகமாக உள்ளே

சென்றவன், நந்தினியைப் பார்த்து, அதுவரை உயிர் வாழ மூச்சு விடுகிறோமா... இல்லையா என்பதையே உணராமல் இருந்தவன் போன்று... ஆழமாக மூச்செடுத் தான்.

நிதானமாக அவள் அருகில் நெருங்கியவன், அவளைச் சுற்றியிருந்த உபகரணங்களை ஒரு பார்வை பார்த்தான். நந்தினியைத் தலை முதல் கால் வரை ஆராய... தலையைச் சுற்றிப் போடப்பட்டிருந்த கட்டில்... கட்டை மீறி ரத்தம் கசிந்திருந்தது.

வலது கையில் முழங்கையில் இருந்து மணிக்கட்டு வரை கட்டுப் போடப்பட்டு... கழுத்தில் கயிறு கட்டித் தொங்க விட்டிருந்தார்கள். இரண்டு கால்களிலும் கட்டு... வலது காலில்... பாதம் முழுவதுமாகப் பொதியப் பட்டிருந்தது. இடது காலிலும் முழங்காலில் இருந்து, கணுக்கால் வரை கட்டுப் போட்டிருந்தார்கள்.

நிதானமாக அவளை முழுவதுமாகப் பார்வையால் வருடியவன்... அவள் படுக்கையை நெருங்கி... நடுங்கும் தன் வலக்கரத்தால், மிகவும் மென்மையாக அவள் தலையை வருடினான்.

நந்தும்மா... என்மேல் இருந்த கோபத்தால்தானே... இவ்வளவு வேகமா வண்டியை ஓட்டிட்டுப் போன... எல்லாம் என்னால்தான்... உன்னைக் கண்ணுக்குள்ளே வச்சுக் காப்பாத்துவேன்னு சொல்லிட்டு... இப்படி உன்னை ரத்த வெள்ளத்தில் மிதக்க விட்டுட்டேனே...

'என்னை மன்னிச்சிடு நந்து. இப்படி ஆகும்னு தெரிந்ததால்தான்... இந்தக் கேஸ் உனக்கு வேண்டாம்னு சொன்னேன். ஆனா... எனக்குத் தெரிந்தும்... உன்னைக் காப்பாத்த முடியாமல்... விபத்தைத் தடுக்க முடியாமல் போயிடுச்சே...!

'உன்னை இந்த நிலைக்குத் தள்ளியவர்களை நான் சும்மா விடமாட்டேன். ஐ லவ் யூ நந்து...' மானசீகமாக அவளிடம் உரையாடியவன், குனிந்து அவள் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டான்.

அவள் இடக் கரத்தைத் தன் கைகளுக்குள் ஏந்தியவன்... அருகிலிருந்த ஸ்டூலை எடுத்துப் போட்டு, அவள் அருகில் அமர்ந்து கொண்டான்.

ஐ.சி.யு.விற்குள் வந்த செவிலி... அவனை வெளியே போகச் சொல்ல வாய் திறக்கப் போகையில், அவன் அமர்ந்திருந்தத் தோற்றம் அவளையும் உருக்க, அவர்களைத் தொல்லை செய்யாமல் அங்கிருந்து நகர்ந்தாள்.

செவிலி வந்ததைக் கூட உணராமல், நந்தியை விட்டுப் பார்வையைத் திருப்பாமல் அமர்ந்திருந்தான் பிரதீப். அடுத்த இரண்டு மணி நேரங்களில் அவள் கண் விழிக்க... அவள் முதலில் கண்டது, அவளையே இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்த பிரதீப்பைத் தான்.

அவள் கண் விழிக்கவே... இருக்கையிலிருந்து வேகமாக எழுந்தவன், "நந்தும்மா..." அவன் குரல் நெகிழ்வாய் ஒலித்தது.

அவன் குரலில் இருந்த பாவம் அவளை வந்து தாக்க... எதையும் சொல்ல முடியாத நிலையில்... விழிகளைச் சோம்பலாக மூடிக் கொண்டாள்.

அவள் விழிகளை மூடிக் கொள்ளவே... அவள் தலையை வாஞ்சையாகக் கோதினான். அவன் ஸ்பரிசம் உணர்ந்து, அரை மயக்க நிலையிலும் சிரமமாகக் கண் விழித்துப் பார்த்தாள்.

அவனது அருகாமை ஒரு விதத்தில் மிகுந்த ஆறுதலாக இருந்தது.

"ரொம்ப வலிக்குதாடா...?" அவனுக்கு வலிப்பது போல் அவன் கேட்க, அவள் தலை இல்லை என்பது போல் மெதுவாக அசைந்தது.

"நீ தூங்கு... நான் இங்கேதான் இருக்கிறேன். சரியா..." ஆதரவாகச் சொல்லி, அவள் கரத்தைப் பற்றிக் கொண்டான்.

எதுவும் சொல்ல இயலாத நிலையில்... அவனிடம் எதையோ கேட்க வேண்டும் என்று மனம் துடித்தாலும்... ஆழ்ந்த தூக்கத்துக்குச் செல்லத் துடிக்கும் இமைகளைத் திறக்க முடியாமல்... மீண்டும் தூக்கத்துக்குச் சென்றாள்.

அடுத்த நாள் முழுவதும், தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது...? பகலா, இரவா...? எதுவும் தெரியவில்லை. கண் விழிக்கும் பொழுதெல்லாம்... பிரதீப் மட்டுமே அருகில் இருப்பதை உணர்ந்தாள். சில வேளைகளில், செவிலி ஊசி போடுவதையோ, மருத்துவர் பரிசோதிப்பதையோ, ஏதோ ஒன்று மங்கலாகத் தெரிந்தது.

அவர்கள் கேட்ட கேள்விக்கு, வாய் திறந்து பதில் சொல்லக் கூட முடியவில்லை. தலை பாரமாக... விண் விண்ணென்று தெறிக்க... கையைத் தூக்கித் தலை யைத் தொட முயற்சிக்கவே, கையை அசைத்தால் மின்னல் போல் தெறித்த வலியில் முகம் சுருங்க, "ம்..." என சன்னமாக முனகினாள்.

"ரிலாக்ஸ்... எதுவும் ஸ்ட்ரெயின் பண்ணிக்காதீங்க... எதையும் யோசிக்காதீங்க... ரெஸ்ட் எடுங்க...!" சொல்லி விட்டு மருத்துவர் அகல, ப்ரதீப் அவள் அருகில் ஓடி வந்தான்.

"என்னம்மா... தலை வலிக்குதா...? சீக்கிரம் சரியாயிடும்... என்ன...!" பச்சிளம் குழந்தைக்குச் சொல்வது போல் அவன் சொல்ல... இந்தப் பாசத்துக்காகவே எவ் வளவு வலியையும் அனுபவிக்கலாம் என எண்ணினாள்.

எழுந்து அமர வேண்டும் என்று அவனிடம் செய்கை யில் தெரிவிக்க...

"இப்போ வேண்டாம்... இன்னும் ரெண்டு நாள் போகட்டும்...!" தன்மையாக மறுத்தான்.

தன் அதிருப்தியை முகத்தில் வெளிப்படுத்தியவள்.. எழ முயன்றாள். "நந்து... என்ன செய்யுற நீ...? ரெண்டு நாள் போகட்டும்னு சொல்லுறேன் இல்ல..." அவளை எழ விடாமல் படுக்கையிலேயே கிடத்தினான்.

வலது கையிலும்.. தலையிலும் அடிபட்டிருப்பது மட்டுமே அவளால் உணர முடிந்தது. கால்களை அசைக்க

முயல... கால்கள் இரண்டும் மரத்துப் போனதுபோல் இருந்தது.

"ப்ச்... எனக்கு எங்கே எங்கே அடி பட்டிருக்குன்னு தெரிஞ்சுக்கணும்..." தடுமாறி உரைத்தாள்.

"அதைத் தெரிஞ்சுக்கிறது முக்கியம்தான்... நான் இல்லன்னு சொல்லலை. ஆனால், அதுக்கு முதல்ல உன் உடம்பு ஒத்துழைக்க வேண்டாமா...? இப்போதைக்கு நான் சொல்லுறதைக் கேளு... ரெஸ்ட் எடு...!" அவன் பிடிவாதமாகச் சொல்ல... அதற்கு மேல் அவளால் எதுவும் செய்ய இயலாமல் போனது.

மறுநாள் மருத்துவர் வந்தவுடன், ப்ரதீப் இல்லாத சூழலைப் பயன்படுத்தித் தன் உடல்நிலையைப் பற்றிக் கேட்க... அவளைப் பற்றி நன்கு அறிந்திருந்ததால்... அவள் உடல்நிலையைப் பற்றி அவளிடம் விளக்கினார்.

அவர் சொன்னவற்றில்... தான் இன்னும் ஒரு மாதம் நடக்கக் கூடாது என்று சொன்னதைக் கேட்டவளுக்கு... அது பேரிடியாகவே இருந்தது. முதல் கவலை... தான் மற்றவரைச் சார்ந்திருக்க வேண்டும் என்பது... இத்தனை வருடங்களாக... யாரின் துணையுமின்றி வாழ்ந்தவளுக்கு... யாருமற்ற தனிமையில்...

மற்றவரைச் சார்ந்திருப்பதைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை. அன்றாடப் பணிகளுக்கே... ஒரு துணை வேண்டுமென்றால்... மற்றவற்றுக்கு...! இந்த யோசனையே அவளைத் துடிக்கச் செய்தது.

தன் நிலையைத் தன்னிடமிருந்து மறைத்த பிரதீப்பின் மேல் கோபமாக வந்தது. அந்தக் கோபத்தையும் மீறி... இயலாமை நிலை அவளை அழுத்த... வெடித்து அழ வேண்டும் போல் இருந்தது.

அதே நேரம்... செவிலி வந்து, அவளை ஸ்பெஷல் வார்டுக்கு மாற்றப் போவதாகச் சொல்லவே... இமைகளை அழுந்த மூடித் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

ப்ரதீப் எங்கே என்று கண்கள் துழாவ... அவன் அங்கே இல்லை என்பதே அவளை இன்னும் துவளச் செய்தது.

'போய்ட்டான்... என் நிலை தெரிந்தவுடன், என் பாரத்தைச் சுமக்க முடியாதுன்னு விட்டுட்டுப் போயிட்டான்...!' மனம், கலங்கிய குட்டையாகக் கண்டதையும் எண்ணித் தவித்தது.

முதல் கட்ட அதிர்வில் இருந்ததால்... அவளால் இப்படித்தான் சிந்திக்க முடிந்தது. அவன் அவளுக்காகத்தான்... அவள் மனநிலையைக் கருதித்தான்... இத்தனை நாள் அவன் எதுவும் சொல்லவில்லை என்பதையும்... இந்த உண்மைகள் அவனுக்குத் தெரிந்ததால்தான்... இத்தனை நாள் தன் நிழலாக இருந்தான் என்பதையும் வசதியாக மறந்து போனாள்.

அறைக்கு அவளை மாற்றும்போது ரோஸ் அவளுடன் இருந்தாள்.

"நீயும் ஏன் இங்கே இருக்கே...? போக வேண்டியது தானே...?"

அறைக்கு வந்தவுடன் அவள் மேல் எரிந்து விழுந்தாள்.

ரோஸ் திருதிருத்தாள். "சார்..." அதிர்விலிருந்து விடுபடாமல் அவள் வினவ... இவ்வளவு நாள் எப் பொழுதும் அக்கா என்று அழைப்பவள், தன்னை சார் என்று அழைக்கவே, மேலும் கோபம் கொண்டாள்.

"ஓ...! இப்போ சார் ஆயிட்டேனா...?" நக்கலாகக் கேட்க...

ரோஸோ... ப்ரதீப்பை அண்ணா என்று அழைப்ப தால், இப்பொழுதெல்லாம் நந்தினியை மனதுக்குள் அண்ணி என்றுதான் அழைத்துக் கொள்வாள். அவளை அக்கா என்று அழைத்தாலே எகிறுபவள், அண்ணி என்று சொன்னால் தன்னைக் கொன்று போடுவாள் என்ப தாலேயே அவளை அவ்வாறு அழைக்கத் துணிய வில்லை.

அதை மறைத்தவள், "நீங்கதானே... உங்களுக்கு..." வழக்கம் போல் அவள் தடுமாற...

"ஆமா... எல்லாத்துக்கும் ஒரு காரணம் வச்சிருப் பியே...!" அவளிடம் எரிந்து விழுந்தாள்.

ரோஸ் அமைதியாகி விட்டாள். அவள் எதுவும் பேசவில்லை என்றாலும், நந்தினிக்குத் தேவையான

வற்றைச் செய்யவே செய்தாள். ஆனால், நந்தினி அவளைத் தடுத்து விட்டாள்.

ப்ரதீப்பின் மேல் இருந்த கோபம் அவளைக் கண்மூடித்தனமான கோபத்துக்கு ஆளாக்கி இருந்தது.

அதே நேரம்... அவளைக் காண ஐ.ஜி. வந்திருப்ப தாகக் காவலர் வந்து சொல்லவே... தன் கோபத்தை மூட்டைக் கட்டிவிட்டு, அமைதியானாள்.

ஆனால், அவர் சொன்ன விஷயத்தைக் கேட்ட வளின் ரத்த அழுத்தம் எகிறியது. இறக்கி வைத்திருந்த கோபம்... அதன் எல்லையைக் கடப்பது போல் இருக்க... அவரிடம் முகம் மாறாமல் இருக்க அரும்பாடு பட்டாள்.

இத்தனை வருட அனுபவத்தில்... இதைக் கூடச் செய்யாமல் இருந்தால்... அவள் எப்படிக் குற்றவாளி களிடம் இருந்து உண்மையை வாங்க முடியும்...? முயன்று தன்னைச் சமன்படுத்தியவள்... அவருக்குப் பதில் சொல்லாமல் அமைதியானாள்.

அவளிடம் நலம் விசாரித்தவர் சென்ற பிறகு... தன் நிலையை அடியோடு வெறுத்தவள், என்ன செய்வதென்று தெரியாமல், தன் கோபத்தையும்... இயலாமையையும் மறைக்க, அடக்க முடியாமல்... 'இப்படியே படுக்கையில் இருந்தால் சரி வராது!' என எண்ணியவாறு... படுக்கை யிலிருந்து இறங்க முயன்றாள்.

அதிகாரி வந்தவுடன் வெளியே நின்றிருந்த ரோஸ்... உள்ளே வரும்பொழுது நந்தினியின் செய்கையைக் கண்டவள், ஓடிச் சென்று அவளைத் தடுத்தாள்.

"ஐயோ... என்ன செய்றீங்க...? எதுக்கு இப்போ கீழே இறங்குறீங்க...? உங்களுக்கு என்ன வேணும்...? நான் செய்யுறேன்..." அவள் தோளைத் தொட்டாள்.

அடுத்த நிமிடம்... அவளை உதறித் தள்ளியவள்... "கிட்டே வந்தே, கொன்னுடுவேன்..." அவளை எச்சரித்தவள், திடீரென்று எழுந்ததால் ஏற்பட்ட தலைச் சுற்றலையும் பொருட்படுத்தாமல் இறங்க முயன்றாள்.

அவள் காலை கீழே ஊன்றப் போகையில்... புயல்போல் அறைக்குள் நுழைந்த பிரதீப், அவள் கால்கள் கீழே பதியும் முன்பு அலேக்காக அவளைத் தூக்கிப் படுக்கையில் அமர்த்தினான்.

ஏற்கெனவே அவன்மேல் கோபத்தில் இருந்தவள், தன் நிலையை எண்ணி அதிர்ந்திருந்தவள், ஐ.ஜி. சொன்ன விஷயத்தால் கடும் கொந்தளிப்பில் திளைத்தவள், என்ன செய்கிறோம் என்பதையே அறியாமல் அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டாள்.

பிரதீப்பின் பின்னால் வந்த சரவணன், இப்படி ஒரு நிகழ்வை எதிர்பாராமல் திகைத்துப் பின் வெளியேறினான்.

"அக்கா..." ரோஸின் கூச்சல் அறையை நிறைக்க... அறைக்குள் ஒரு அசாத்திய அமைதி. நொடியில் அங்கிருந்து வெளியேறிய ரோஸ்... சரவணனின் தோளில் சாய்ந்து கதறினாள்.

சரவணன் தன் திகைப்பை மறைத்துக் கொண்டு, அவளை அணைத்துக் கொண்டான்.

நந்தினியின் செய்கையில், அவன் மட்டும் திகைக்க வில்லை. நந்தினியே தன் செய்கையை எதிர் பார்க் காதவள் போன்று உறைந்திருந்தாள்.



பழகிய வலிகள்...
புதிய உறவுகளை
ஏற்க விடாமல் தடுக்க...
புதிய உறவுகள்
தவிப்பில்...!
மாறவா...?
கேள்விகள் எனக்குள்...!

சட்டென்று உணர்ச்சி வேகத்தில் செய்து விட்ட செய்கையைத் திரும்பப் பெற முடியாமல் அமைதி காத்தாள் நந்தினி.

'எப்பொழுதும் கட்டுப்பாட்டுடன் இருக்கும் நானா இப்படி நடந்து கொண்டேன்...? ஏந்த உரிமையில் நான் இதைச் செய்தேன்...? எனக்கு என்ன உரிமை இருக்கிறது அவனை அடிக்க...?

'இல்லையென்றால்... உரிமை இருக்கிறது என்ற எண்ணத்தில்தான் இப்படி நடந்து கொண்டேனா..? எனக்கென்று ஒரு உறவு வேண்டுமென்று நான் எண்ணு கிறேனா...?

'காயப்பட்டது போதாதா எனக்கு... இன்னும் அனுபவிக்க வேண்டுமென்று எண்ணுகிறேனா...?' அந்த நிலையிலும் யோசனை அவள் மூளையை மரவண்டாகக் குடைந்தது.

அறையில் இருந்த அசாத்திய அமைதியைத் தாங்க முடியாமல், மெதுவாக நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவள் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து... "என்ன... என் நந்துவுக்குக் கோபம் போயிடுச்சா...? இப்போ யார் மேல் கோபம்...? என் மேலா, இல்லை ஐ.ஜி. மேலேயா...?" அவன் நிதானமாகக் கேட்க...

அவனைப் பார்த்தவாறே அமைதியாக இருந்தாள். அவள் அமைதியைக் கண்டு கொள்ளாமல்...

"ஏதாவது சாப்பிடுறியா நந்து...? இன்னையில் இருந்து உனக்கு நார்மல் புட் கொடுக்கலாம்னு சொல்லிட் டாங்க. ரோஸ் சாப்பாடு கொண்டு வந்துருப்பான்னு நினைக்கிறேன்... இரு, பாக்குறேன்..."

அங்கிருந்த கூடையைத் திறந்து பார்த்தவன், "ம்... இட்லி இருக்கே...! முதல்ல சாப்பிடுறதாலே... லைட்டாவே சாப்பிடு...!" சொன்னவன், ஒரு தட்டில் இரண்டு இட்லி வைத்து சட்னியை ஊற்றி எடுத்து வந்தான்.

"ஸ்பூன் போட்டுத் தரவா...? இல்லை, நானே ஊட்டவா நந்து...?"

அவள் பதிலை எதிர்பாராமல், இட்லியைப் பிட்டு அவள் வாய்க்கருகில் கொண்டு செல்ல...

தன் அதிர்ச்சியில் இருந்து வெளியேறியவள், அவனை நிதானமாகப் பார்த்தாள்.

அவள் பார்வையைக் கண்டு கொள்ளாமல், அவன் தன் காரியத்திலேயே கண்ணாக இருக்க... அவன் கரத்தை விலக்கியவள்...

"நீ எதுக்கு இதையெல்லாம் செய்யணும்...? நீ எனக்கு யார்...? எனக்கு யார் உதவியும் தேவையில்லை. பிறந்தது முதல்... என் வேலையை நான்தான் செஞ்சுட்டு இருக்கேன். பாதியில் வருவது எல்லாம், இறுதி வரை நிலைக்காது. வலியும்... வேதனையும்... ஏமாற்றமும் தான் மிச்சமாகும். எனக்கு இதையெல்லாம் புதிதாக அனுபவிக் கத் தெம்பு இல்லை. தயவு செய்து..." மேலே சொல்ல முடியாமல் பாதியிலேயே நிறுத்தினாள்.

"ப்ச்... இப்போ எதுக்குக் கண்டதையும் யோசிக் கிறே...? முதல்ல சாப்பிட்டு நல்லா ரெஸ்ட் எடு. எல்லாத் தையும் பிறகு பார்த்துக்கலாம்..." அவளை அடக்க முயன்றான்.

அவனது இந்த செய்கையே அவள் கோபத்தைக் கிளற...

"என் முடிவுகளை நான்தான் எடுப்பேன். என் மேல் அதிகாரம் செலுத்தும் உரிமையை நான் யாருக்கும் கொடுக்கவில்லை...!"

அவன் புரிந்து கொள்ளவில்லையே என்ற கோப மும், ஆதங்கமும் அவள் குரலில் வெளிப்பட்டது.

தான் அவனைக் கைநீட்டி அடித்து விட்டோம் என்ற நற்றவுணர்வாலேயே, அவள் அவனிடம் கொஞ்சம் ணிவாகப் பேச முயன்றாள்.

"எதையும் பேச நேரம் காலம் இருக்கு நந்து. இப்போ நீ ஓய்வெடுக்க வேண்டிய நேரம்..." அவனுக்குச் லிப்பாக இருந்தது.

"எனக்கு ஓய்வெடுக்க விருப்பம் இல்லைன்னா..." விதண்டாவாதமாகக் கேட்க, அவனுக்குக் கோபம் எட்டிப் ார்த்தது.

"இப்படித்தான் பேசாதேன்னு சொல்லுறேன். ஏற்கெனவே இந்தக் கேஸ் வேண்டாம்னு சொன்னேன்.... ளங்கேயும் போக வேண்டாம்னு சொன்னேன்... எதையுமே கேட்காமல்... இப்போ பார்..."

"அப்போ... இப்படியெல்லாம் எனக்கு ஆகும்னு உனக்கு முதல்லேயே தெரியும்...! அப்படித்தானே...?"

அவனைப் பேசவிடாமல் குறுக்கே புகுந்து கேட்டாள்.

"நான் என்ன சொல்ல வர்றேன்... நீ என்ன புரிஞ்சுக்குற நந்து...?"

இப்பொழுது வெளிப்படையாகவே அலுத்துக் கொண்டான்.

"ஆமா... எனக்கு எதையுமே சரியாப் புரிஞ்சுக்கத் தெரியாதுதான். இப்போ என்னாங்கிற... நான் இப்படித்

தான்னு முதல்லயே உனக்குத் தெரியாதா...? ஆமா...! தெரிஞ்சிருந்தா என் பின்னாடியே சுத்தியிருக்க மாட்டேல்ல... இப்போ தெரிஞ்சுடுச்சுல்ல... என்ன செய்யப் போறே...?" என்ன பேசுகிறோம் என்றே தெரியாமல் பேசிக்கொண்டே சென்றாள்.

தன் தலையிலேயே கை வைத்துக் கொண்டான். எப்படிச் சொல்லி அவளைச் சமாளிக்கவென்று அவனுக்குத் தெரியவில்லை. அவன் திகைத்து நிற்கும் பொழுதே...

"எனக்குப் புரிஞ்சிடுச்சு...! எனக்கு ஆக்ஸிடென்ட் ஆனவுடன்... இவ எதுக்குமே லாயக்கில்லாதவள்னு முடிவு பண்ணிட்டீங்க இல்ல... அந்த ஐ.ஜி. என்னவோ வரான்... கேசை மாத்தி விட்டுடலாம்னு சொல்லுறான். நீயும் என்னன்னா... இந்தக் கேஸ் உனக்கு வேண்டாம்னு சொல்லுற...

"என்னதான் நினைச்சிட்டு இருக்கீங்க...? இந்த நந்தினி சுயம்பு... எனக்கு யாரும் தேவையில்லை. காலைக் கீழே வைக்கவே கூடாதுன்னா... நான் அப்படியே இருந்துடுவேன்னு நினைக்கிறியா...? நாளைக்கே தனியாக நடந்து காட்டவா...?

"இந்த நந்தினிக்கு மன பலம் அதிகம். என் வேலையை நானே பார்த்துக்கிறேன். எனக்கு யாரோட தயவும் தேவை கிடையாது...!" அவள் குரலில் அப்படி ஒரு நிமிர்வு.

அவ்வளவு நேரம், தன் உடல்நிலையை மீறிப் பசியதாலோ என்னவோ... தலை சுற்றலெடுக்க... ண்கள் இருட்டிக் கொண்டு வர... அத்தோடு வாந்தியும் ருவதுபோல் இருக்க... எழுந்து செல்ல முடியாமல் டுமாறினாள்.

அவள் தடுமாற்றம் உணர்ந்து, தட்டை டேபிளில் வத்தவன், "நந்து, என்ன பண்ணுது...?" அவள் அருகில் டி வர...

அந்த நிலையிலும் அவனைக் கை நீட்டித் தடுக்க யல... பிடிவாதமாக அவளை நெருங்கி... அவள் தாளை அழுத்திப் படுக்கையில் கிடத்தினான்.

அவன் படுக்க வைக்கும் பொழுதே... நந்தினி வாந்தி டுத்து விட... அவளை வேகமாக ஒருக்களித்துப் பிடித்் வன், அவளைத் தரையில் வாந்தியெடுக்க வைத்தான்.

அவன் முன்பு நடந்து விட்ட இந்த நிகழ்வால், அவமானமாக உணர்ந்தாள். 'அவனை எவ்வளவுதான் ன்பப்படுத்துவது... அவன் ஏன் இதையெல்லாம் பார்க்க வண்டும்?' என்ற எண்ணம் தோன்ற...

"என்னைத் தொடாதே...! நீ யார் என்னைத் தாட...? அதைச் செய்ய உனக்கு எந்த உரிமையும் டையாது...!" அவனிடம் வெடித்தாள்.

அவளது இந்த வார்த்தைகளே, அவனை அதிக ாகக் காயப்படுத்தியது. அவள் அந்த வார்த்தைகளை திர்க்கும்பொழுது அதில் தெறித்த வேதனை அவனை வகுவாகப் பாதித்தது.

அவளுக்கு உரிமையுள்ளவனாக மாற வேண்டும் என்ற வேட்கை பிறந்தது.

அவளோ அத்தோடு நில்லாமல், அவனைப் பலம் கொண்ட மட்டும் தள்ளியவள், "வேண்டாம்னு ஒரு முறை சொன்னால் புரியாது. எனக்கு யார்ரும் வேண்டாம்..." அவளது செய்கைகளை மறுக்க முடியாத தன் சூழலை அடியோடு வெறுத்தான் பிரதீப்.

நந்தினியோ... அவனது நெருக்கத்திலும்... அரவணைப்பிலும்... கவனிப்பிலும்... தான் முழுதாக கவரப்படுவதை உணர்ந்து திகைத்துப் போனாள். அவனது நெருக்கமும், உரிமையும், அன்பும்... தனக்கு முழுதாக வேண்டுமென்று துடிக்க... சிறு வயது முதல் அவள் கொண்ட காயங்கள்... அவனை நெருங்க விடாமல் தடுக்கச் சொன்னது.

பிடிவாதமாக அவளை நெருங்கவும் முடியாமல்... விலகிச் செல்லவும் முடியாமல்... நின்ற இடத்திலிருந்து தவித்தான். அவன் முகம் அவனது கொந்தளிப்பையும்... மனதையும் படம் பிடித்துக் காட்ட... அதைப் பார்த்தவளின் மனம் அவனுக்காய்த் துடித்தது.

'நீ ஏன்டா எனக்காக இப்படித் துடிக்கணும்...? இந்த ராசியில்லாதவள் உனக்கு வேண்டாம்...!' மனதுக்குள் அவனிடம் மன்றாடியவள், அதை மறைத்தவாறு, அவனை முறைத்தவாறே அசையாமல் அமர்ந்திருந்தாள். அவள் கூச்சலில் வெளியில் இருந்த அனைவரோடு, செவிலியும் உள்ளே வர...

அங்கிருந்த சூழலைப் பார்த்த ரோஸ், "அக்கா... ன்ன இது...?" வேகமாக அவளிடம் நெருங்க முயல... வளையும் விரட்டினாள்.

செவிலி நெருங்க, "கெட் லாஸ்ட்..." அங்கிருந்த லையணையை எடுத்து அவர்கள் மேல் வீச... யாராலும் வளை நெருங்க முயலவில்லை.

அன்று முழுவதுமே இதே நிலை நீடிக்க... என்ன ய்வதென்று தெரியாமல் தவித்துப் போனான் பிரதீப்.

அறைக்குள் யாரையும் நுழைய அனுமதிக்க ில்லை. எங்கே படுக்கையை விட்டு இறங்கி... எதை ாவது செய்து வைத்து விடுவாளோ என்று வாசலிலேயே வமிருந்தான் ப்ரதீப்.

அவளது பிடிவாதத்தை எப்படி இறக்கவென்னும் ித்தை தெரியாமல்... அனைவரும் விழி பிதுங்கினர்.

வேறு வழியில்லாமல்... அவளைக் கட்டுப்படுத்தி .றங்குவதற்கு மருந்து செலுத்தி அவளை உறங்க வத்தார்கள்.

அவள் உறங்கியவுடன் அவள் அருகில் வந்தவன், னக்கு யாரும் வேண்டாம்னு முடிவே பண்ணிட்டியா ந்து. நான் உனக்கு இருக்கும்போது... நீ எதற்காக இப்படி ருத்தப்படுகிறாய்...

"நீ பேசும் வார்த்தைகளில் இருந்தே... உனக்கென்று ாரும் இல்லையே என்ற ஆதங்கம் தெறிப்பதை

என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறதே...! ஆனால், நீ ஏன் அதை உணரமாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்கிறாய். அப்படி நீ உணர்ந்து கொண்டால்... என் நேசத்தை நீ ஏற்றுக் கொள்ள ஒரு நொடி கூடப் போதாதே!

"ஆனால், புரிந்து கொள்ள மாட்டேன்... உணர்ந்து கொள்ள மாட்டேன்... என்று பிடிவாதமாக இருக் கிறாயே! ஏன்...? மனதுக்குள் இருக்கும் ஏக்கங்களை வெளிப்படுத்தாமல், முகத்தில் கோபத்தை அணிந்து கொண்டு போலியாக உலாவுகிறாயே ஏன்...? உன்னை இப்படியே இருக்க நான் விடமாட்டேன். விடவே மாட் டேன்...!"

அவளுடன் உரையாடியவன்,. ரோஸை அழைத்து, அவளைப் பார்த்துக் கொள்ளுமாறு சொன்னவன், அங் கிருந்து வெளியேறினான்.

அடுத்த இரண்டு நாள்... யுகங்களாகக் கடந்தது நந்தினிக்கு. ப்ரதீப் அவள் இருக்கும் திசைக்கே வர வில்லை.

அவனது நெருக்கம் ஒரு மாதிரிப் பாதிப்பை ஏற்படுத்தியது என்றால்... அவனது பாராமுகம் வேறு விதமாய்ப் பாதித்தது.

'எவ்வளவு அடி வாங்கினாலும்... எனது இந்த எதிர்பார்ப்பு மட்டும் தீரவே தீராதா...?'

மனம் பாரமாய்க் கனத்துப் போனது. ஐ.சி.யு.வில் இருந்த இரண்டு நாட்களும், அவன் தனக்காக உருகி

யது... மருகியது... குழந்தையெனக் கவனித்துக் கொண்ட பாங்கு... அவனது தவிப்பு... என அனைத்தும் கண்களுக்குள் விரிய...

'எனக்கு நீ வேணும்டா...' அவள் மனம் உள்ளுக்குள் கதறியது.

'எனக்கு நீ வேணும்டா!' என்ற அவளது மனதின் தவிப்பில்... அவளுக்கு ஒன்று தெளிவாய்ப் புரிந்தது. தான் பிரதீப்பை உயிராய் நேசிக்கிறோம் என்பதுதான் அது.

அறிந்த உண்மை எவ்வளவு ஆறுதலையும் சந்தோஷத்தையும் அளித்ததோ, அதே அளவு வேதனையையும் வலியையும் ஒருங்கே அளித்தது. புத்தி அவன் வேண்டாம் என்று உரைக்க... மனமோ... உனக்கு எல்லாம் அவன்தான் எனக் கூப்பாடு போட்டது. மனதுக்கும் புத்திக்கும் இடையே தடுமாறினாள்.

அதைவிட... தனக்குக் காதல் என்ற ஒன்றும்... ஒருவனின் நேசமும்... பாசமும்... அரவணைப்பும்... கனவில் கூட கிடைக்காது என்று நினைக்க, இந்தக் காதலின் வலியும்... தவிப்பும் தனக்குள் இறங்குவதைத் துளித் துளியாய் அனுபவித்தாள்.

அவளுக்கு வலிகள் புதிதில்லை என்றாலும்... காதல் வலி, சுகத்தையும்... தாங்க முடியாத துக்கத்தையும் ஒருங்கே அளித்தது. அவனைப் பார்த்த அன்றே தான் சலனப்பட்டு விட்டோம் என்பதும்... அதனால்தான் அவன் என்ன செய்தாலும்... தான் அவனை வார்த்தை

யால் கூட சென்று விடு என்று கூற முடியவில்லை என்பதையும் உணர்ந்து தனக்குள் உருகினாள்.

ஏற்கெனவே தான் அறியாத வயதில் உயிராய் நேசித்த ஒற்றை உறவு விட்டுச் சென்ற துயரத்தையும்... ஏமாற்றத்தையுமே அவளால் இன்னும் மறக்க முடியவில்லை. அப்படியிருக்கையில்... இன்னொரு ஏமாற்றத்தைத் தாங்க முடியுமா...?

புத்தியின் கேள்விக்கு மனதிடம் பதில் இல்லை.

எது எப்படி இருந்தாலும்... ப்ரதீப்பை மறப்ப தென்பது அவளால் முடியாது.

இவ்வளவு வலியிலும்... அவனது நேசம் அடிமன தில் தித்திப்பதை அவளால் உணர முடிந்தது.

அதே நேரம்... 'நீயெல்லாம் கழுத்தில் தாலி வாங் கினால்... அடுத்த நிமிஷமே முண்டச்சி ஆயிடுவடி... அப்படி எந்த அப்பாவியோட உசுரையாவது காவு வாங்க லாம்னு கனா காணாதே!' இந்தக் குரல் காதில் ஒலிக்க...

இதயம் இடி விழுந்த மணல் வீடாய் நிலை குலைய... 'எனக்கு மட்டும் ஏன் இப்படி...?' பழைய அதே கேள்வி பூதாகரமாய்க் கிளம்பி, அவளை அலைக் கழித்தது.

ஓ... வென்று கதறி அழவேண்டும் போல் இருந்தது.

'அவன் நல்லா இருக்கணும். இந்தத் துரதிர்ஷ்டம் பிடிச்சவ என் பிரதீப்புக்கு வேண்டாம்...'

வேண்டாம் என்று நினைப்பது ஒரு வலியென்றால்... அவளது என் பிரதீப் என்ற எண்ணம் அதைவிட வலித்தது.

'இதே நிலை நீடித்தால்... எனக்குப் பைத்தியம்தான் பிடிக்கும். பிடிக்கட்டும், அதுவும் நல்லதுதான்...' முன்பு யாரும் வேண்டாம் என்று தனக்குள் இறுக முடிந்த அவளால்... இந்தக் காதலில் மட்டும் அவன் வேண்டாம் என்று எண்ணவே முடியவில்லை.

இவ்வளவு எண்ணத்திலும்... அவன் தன்னை விட்டுச் சென்று விட்டான் என்று மட்டும் அவளால் எண்ண முடியவில்லை.

தன்னைக் காண வந்தே தீருவான்... இந்த உறுதி அவளை விட்டு இம்மி கூட விலகவில்லை.

ஆனாலும் 'அவன் எப்படித் தன்னை இரண்டு நாட்களாகத் தவிர்க்கலாம்...?' ஒரு செல்லக் கோபம் மட்டும் எழுந்தது. ஆம்... செல்லக் கோபம்தான்.

காதலை உணர்ந்த பிறகு... அவனை வேற்றாளாக அவளால் எண்ண முடியவில்லை.

அவளது யோசனையைக் கலைப்பது போல் அவன் வந்து நிற்க... திகைத்துப் போய் அவனைப் பார்த்தாள். அவளது கண்களுக்கு என்றும் பார்ப்பதை விட, அன்று அழகாகத் தெரிந்தான்.

'இரண்டு நாள் கழித்து அவனைப் பார்ப்பதாலா...? இல்லையென்றால், தன் காதலை உணர்ந்ததாலா...?'

என்பது அவளுக்குப் புரியவில்லை. அவனைத் தனக்குள் நிறைத்துக் கொள்பவள் போல்... இமைகளைச் சிமிட்டாமல் அவள் பார்க்க..

தன்னைப் பார்த்தால் கத்துவாள் என்று அவன் எதிர்பார்க்க... அவளது அமைதி அவனைத் திகைக்க வைத்தது.

தன் நேசத்தை அவனுக்குக் காட்டாமல், "என்ன...? வேலை ரொம்ப ஜாஸ்தி போல...! யாரும் இங்கே தேடலை. தாராளமா உங்க வேலையை நீங்க பார்த்துக்கலாம். நாங்க என்ன உங்களுக்கு ஒட்டா உறவா...? அப்படியொண்ணும் கஷ்டப்பட்டு வர வேண்டாம்...!" முகத்தைத் திருப்பிக் கொண்டு சொன்னாள்.

தன் பேச்சுக்கு அவனிடம் எதிர்வினை எதுவும் இல்லாமல் போகவே, திரும்பி அவனைப் பார்த்தாள். அதே நேரம்... ரோஸும் சரவணனும் கந்தனும் அறைக்குள் வர... அவர்களது முகத் தோற்றம் அவளுக்கு வித்தியாசமாகத் தோன்றியது.

அவர்களையே அமைதியாக அவள் பார்த்திருக்க, ப்ரதீப்பை நெருங்கிய இருவரும், தயக்கமாக நின்றார்கள்.

அனைவரின் சிந்தையும் கடந்த இரண்டு நாளை அலசியது.

நந்தினி அனைவரையும் தவிர்க்கவே... எதையாவது செய்தே ஆக வேண்டும் என்ற வேகம் பிறந்தது பிரதீப்புக்கு. முதல் வேலையாகச் சரவணன், ரோஸ்... நந்தினி

யின் நல்வாழ்வை விரும்பும் கந்தன் அனைவரையும் அழைத்தவன், தன் முடிவை அவர்களிடம் தெரிவித்தான்.

அனைவருக்கும் அவர்கள் நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்ததால்... அதை வரவேற்கவே செய்தார்கள்.

ஆனாலும், நந்தினி என்ன செய்வாளோ என்ற தயக்கம் அனைவரிடமும் இருந்தாலும்... அதை வெளியிடத் தயங்கினார்கள்.

"தம்பி..." கந்தன் தயக்கமாக இழுக்க...

அவர் கேள்வியை உணர்ந்தவன் போன்று... "நந்தினி இதை எப்படி ஏத்துப்பான்னு தெரியாது. ஆனா நீங்க எல்லோரும் எனக்குப் பக்கபலமாக இருந்தால் என்னால் அவளைச் சமாதானம் செய்ய முடியும். அவ மனசுக்குள்ளேயும் நான் இருக்கேன்.

"எனக்கு அது நல்லாத் தெரியும்... அவளை மாற்ற வேண்டும் என்றால், அது என் ஒருவனால்தான் முடியும். ஆனால், அதைச் செய்ய வேண்டும் என்றாலும்... எனக்கு அவமேல் உரிமை வேணும்... அந்த உரிமையை நான் பெறவேண்டும் என்றால்... அது அவள் கழுத்தில் தாலி கட்டினால்தான் முடியும்..."

அவன் குரலே, தன் முடிவு இறுதியானது என்பதைச் சொன்னது.

"தம்பி... நான் சொல்லுறேன்னு தப்பா நினைக்கா தீங்க. இது சட்டுன்னு எடுக்கும் முடிவு கிடையாது. எதுக்கும் ஒரு ரெண்டு நாள் யோசிங்க. அதற்குப் பிறகு நீங்க எடுக்கும் எந்த முடிவுக்கும் என் ஆதரவு உண்டு...!"

அவர் சொன்னதையே சரவணனும் சொல்ல... அதை ஏற்பதாகச் சொன்னான்.

அவர்களது யோசனையைக் கலைத்தது நந்தினி யின் கேள்வி. "என்ன...?"

நந்தினி புரியாமல் அவர்களைப் பார்த்துக் கேட்க, அடுத்து நடந்த செய்கையை நந்தினி துளி கூட எதிர் பார்க்கவில்லை.

"ஏய்...! என்ன செய்யுற..."

அவசரத்தில் தன் வலக் கையை நீட்டி அவனைத் தடுக்கப் போனவள், வலியில் முனக...

"நந்து... வேணாம்..." அந்த நிலையிலும் அவளது உடல் நிலையில் அவன் கவனம் செலுத்த, அதையும் அவள் மனம் குறித்துக் கொண்டது. இந்த வார்த்தை களுக்காகவும்... கவனிப்புகளுக்காகவும் ஏங்கிப் போயிருந்தவளாயிற்றே...!

இடக்கையை உயர்த்தி அவன் செய்கையைத் தடுக்கும் முன்னர்... அனைத்தும் கை மீறிப் போயிருந்தது.

நன் கழுத்தில் இருந்த திருமாங்கல்யத்தை நம்ப முடியாமல் பார்த்தவளின் மனமோ... ஒரு நொடி கும்மாள

மிட்டுத் துள்ளியது. 'தனக்கென்று இனிமேல் யாரும் இல்லை என்ற எண்ணம் வராது. எனக்கு என் பிரதீப் இருக்கிறான்... ஐ லவ் யூ டா...!'

மனதுக்குள் இந்த எண்ணம் ஓடிய அதே நிமிடம்... பாட்டியின் குரல் காதில் ஒலிக்க... 'ஹையோ! என்ன காரியம் செஞ்சுட்டான்...? இவனுக்கு ஏதாவது ஒன்றென்றால்... என்னால் தாங்க முடியுமா...? முடியாது. அதைவிட...!' மனதை இரும்பாக்கியவள், நொடியில் அதை அகற்ற முயன்றாள்.

அவள் செய்கையைத் தடுக்காமல் அவன் நிற்க... ரோஸோ, "அக்கா! வேண்டாம்க்கா... இதை நீங்க செய்யக் கூடாது..!" அவள் காலில் விழுந்து கெஞ்சினாள்.

அவளது கெஞ்சல் கொஞ்சம் கூட அவளை அசைக்கவில்லை. அவள் அவளது முயற்சியைத் தொடரப் போகவே, அவள் கரத்தைப் பிடித்தவன்...

"நந்து... உனக்குப் பிடிக்காதது எதையுமே செய்ய நான் தயாராக இல்லை. உனக்கு என்னைக் கணவனா ஏத்துக்க மனசில்லை, என்னைப் பிடிக்கலைன்னா... தாராளமா நான் கட்டிய தாலியை அறுத்து எறியலாம்...!"

அவன் பேச்சைக் கேட்ட அனைவருமே திகைத் தார்கள்.

அவனையே பார்க்க... நந்துவும் அவனைக் கேள்வி யாக... கோபமும்.. இயலாமையும்... பயமும்... குழப் பமும்... போட்டி போட அவனைப் பார்த்தாள்.

"ஆனா... அதுக்கு முன்னாடி ஒரே ஒரு விஷயம்...!" நிறுத்தியவன்...

"ஒரு பொண்ணோட கழுத்தில் இருந்து... அவளோட திருமாங்கல்யத்தை எப்போ கழட்டுவாங்களோ... அந்தச் சம்பவம் இங்கே நடக்கும்...!"

ஒரு நிமிடம் அவன் சொன்னதன் பொருள் புரியாமல் திகைத்தவள், அடுத்த நிமிடம் தன் தாலியை அழுந்தப் பற்றிக் கொண்டாள்.

முகம் முழுக்க கோபத்தில் தகிக்க... அவனை உக்கிரமாக முறைத்தாள். தன் பாட்டியின் குரல் அவள் காதில் உச்ச ஸ்தாயியில் ஒலித்தது. தாலியைப் பற்றிய அவள் கை நடுங்கியது.

21

நந்தினியைக் காண வராமல் இரண்டு நாட்கள் இருந்தவன்... மூன்றாம் நாள் வந்து அவள் கழுத்தில் தாலியைக் கட்ட, திகைத்துப் போன நந்தினி, அதைக் கழட்டி எறிய முயன்றாள்.

ஆனால், அதைச் செய்ய விடாமல் ப்ரதீப்பின் வார்த்தை அவளைத் தடுக்க, அவன் சொன்னதன் பொருள் புரிய, அவள் முகம் செந்தணலாகத் தகித்தது.

தன் அருகில் நின்ற அவனது சட்டையைக் கொத்தாகப் பற்றியவள், "என்ன சொன்னே...? எங்கே திரும்பச் சொல் பார்ப்போம்... அப்போ... என் கழுத்தில்

தாலி ஏறிய அடுத்த நிமிஷம் நான் முண்டச்சி ஆயிடு வேன்னு என் பாட்டி சொன்னது உண்மைன்னு நிரூபிக்கப் போறியா...?

"நீ... நீ நல்லா இருக்கணும், நூறு ஆயுசோட இருக் கணும்னுதான்... என் மனசைக் கொன்னுட்டு இப்படி ஒரு முடிவெடுக்கத் துணிஞ்சேன். ஆனா நீ... என் கழுத்தில் தாலி கட்டியதாலேயே சாகப் போறியா...?

"ஹையோ... எனக்கு மட்டும் ஏன் இப்படி...? நான் நேசிக்கும் உறவெல்லாம் என்னைப் புரிஞ்சுக்கவே செய்யாதா...? ஆண்டவா! உனக்கு என் மேல் அப்படி என்ன கோபம்...?

"சொல்லுடா... போய்டுவியா நீ...? போய்டுவியா...? அப்போ நான் உண்மையாகவே அதிர்ஷ்டக் கட்டை தானா...?"

அவன் சட்டையைப் பற்றியவாறு அவள் அவனைப் பார்த்துக் கேட்க, நின்ற இடத்தில் உறைந்தான் பிரதீப்.

'என் நந்தினிக்குள் இப்படி ஒரு எண்ணமா...? இந்த எண்ணம் இன்னுமா இருக்கிறது...? அம்மா... நீங்க தீர்க்கதரிசிம்மா...!' தாயிடமும்... தனக்குள்ளும் பேசி யவன்... அடுத்த நிமிடம் அவளை இழுத்துத் தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

"நந்தும்மா... இல்லடா...! அப்படியெல்லாம் எதுவும் இல்லை. நீ என்னை விலக்கி விடுவியோ என்ற பயத்தில் தான் நான் அப்படிச் சொன்னேன்டா. என்னால் உன்னை

விட்டு இருக்க முடியாது நந்து. நீ என் உயிர்டா... உனக்குள் இப்படி ஒரு எண்ணம் இருக்கிறது என்று தெரிந்திருந்தால்...

"இந்த வார்த்தையை நான் சொல்லியே இருக்க மாட்டேன்... உன் காலில் விழுந்தாவது என் நேசத்தை உனக்குப் புரிய வைத்திருப்பேன் நந்து...!"

தனக்குள்ளேயே அவளைப் புதைத்துக் கொள் பவன் போல் அவளை இறுக்கிக் கொள்ள...

அவன் மேல் கோபம் இருந்தாலும்... அடி வாங்கிக் கொண்டு... தாயிடமே ஆறுதல் அடைய முயலும் குழந்தை போல்... தன் வலிக்கான மருந்து அவனிடம் தான் இருக்கிறது என்பதுபோல்... அவளும் அவனோடு ஒடுங்கினாள்.

அவன் சொல்வது காதில் விழுந்தாலும், கருத்தில் பதிய மறுத்தது. தன் பாட்டி சொன்னது போல்... தாலி கட்டிய மறு நிமிடமே... சாகிறேன் என்று சொல்லி விட்டானே...! அப்படியென்றால், இவ்வளவு நாள் தனக்குள் இருந்த துக்கம் அனைத்தையும் தீர்த்துக் கொள்பவள் போலக் கதறித் தீர்த்தாள்.

அவளது அழுகை அவனையும் தாக்க... அவளது கண்களும் கண்ணீர் சிந்தியது.

அவனது கண்ணீர்த்துளி அவள் தலையில் விழ...

"ஏன் அப்படிச் சொன்னே...? நீயும் என்னை விட்டுச் சொல்லாமலே போய்டுவியா...? ஒருத்தன் சாக்லெட்

கொடுத்தான்... நீ இந்தத் தாலியைக் கொடுத்துட்டுப் போகப் போறியா...?" அவளது புலம்பல் நிற்காமல் தொடர...

அவள் பேச்சைக் கேட்டவன் உள்ளம், ஆலையில் சிக்கிய கரும்பாகப் பிசைந்தது.

"ஒரு முறை செய்த தப்பை மறுபடியும். செய்ய மாட்டேன் நந்து..." அவன் குரல் தளுதளுத்து ஒலிக்க, விலுக்கென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவள் பார்வை அவனிடம் கேள்வி கேட்க, "என்ன நந்து அப்படிப் பார்க்கிறே... நான்தான்... உன்னோட பெப்பி..." சொன்னவன், அவளை காற்று கூடப் புக முடியாத அளவு இறுக்கிக் கொண்டான்.

"என்னை மன்னிச்சுடு நந்து... என்னை அறியா மலே நான் உனக்கு இவ்வளவு பெரிய காயத்தைக் கொடுத்துட்டுப் போனேன்னு எனக்குச் சத்தியமாத் தெரியாதுடா... அப்படித் தெரிந்திருந்தால்... உன்னை எப்போவோ தேடி வந்திருப்பேன்.

"கடவுள் உனக்கு என்னைத் திரும்பக் கொடுத்துட்டார் நந்து. நான் இனிமேல் உன்னை விட்டுப் போகவே மாட்டேன். இந்த உடம்பில் இருந்து உயிர் பிரியும் வரைக்கும், உன்னை விட்டு நான் பிரியவே மாட்டேன். அப்படியே உன்னை விட்டுப் போகவேண்டிய நிலை வந்தால்... உன்னையும் கூட்டிட்டுத்தான் போவேன்.

"நீ என் தேவதை நந்து. நீ எப்படி இப்படி ஒரு வார்த்தை சொல்லலாம்...? உன் மனசில் இனிமேல்

இப்படியெல்லாம் நீ நினைக்கவே கூடாது. ஏன்டா அப்படிச் சொன்னே...? யார் உன்னை என்ன சொன்னா...? உன் மனசுக்குள் இப்படி ஒரு எண்ணமா...? என்னன்னு சொல்லு நந்து...!" அவள் முகத்தை நிமிர்த்தி அவளிடம் கேட்டான்.

அவனது பெப்பி என்ற சொல்லிலேயே திகைத்தவள்... அவன் மேலும் பேசப் பேச... உடைந்து அழுதாள்.

"பெப்பி... பெப்பி இவ்வளவு நாள் எங்கே போயிருந்தே பெப்பி...?" ஓவென்று கதறினாள்.

அவள் மனதின் பாரங்கள் அனைத்தும் குறையட்டும் என்று அவளை அழ விட்டான். "சொல்லுடா... உன் மனசுக்குள் என்ன அழுத்திட்டு இருக்கு சொல்லு...! உன் பெப்பி வந்துட்டேன்... சொல்லும்மா...!" அவள் அழுத கண்களைத் துடைத்தவாறு கலங்கிய குரலில் கேட்டான்.

அழுது அழுது ஓய்ந்தவள், "நீ போனதோட... என்னோட சந்தோஷம் எல்லாம் போச்சு பெப்பி... என் ஒட்டுமொத்தச் சந்தோஷத்தையும் திருடிட்டு... உன்னோடவே எடுத்துட்டுப் போயிட்டியே...! நீயும் அத்தையும் இருந்திருந்தால் எனக்கு இப்படியெல்லாம் நடந்திருக்குமா...?" கண்ணீருக்கிடையில் கதறியவள்....

அவன் சென்ற பிறகு நடந்தவற்றை அவனுக்கு விளக்கினாள். அவள் ஹாஸ்டல் சென்ற விதத்தைச் சொன்னபோது, ப்ரதீப்பே கதறி விட்டான்.

"போதும் நந்து... சொல்லாதே...!" அவளது அந்த நாளைய துன்பத்தைப் போக்க முடியாத தன் நிலையை எண்ணி... இன்று கண்ணீர் வடித்தான். இடையே அவள் உடல்நிலை பற்றிய எண்ணம் வரவே...

"நீ படுத்துக்கோ நந்து... ரொம்ப நேரம் உட்கார்ந் திருக்க வேண்டாம்...!" அவளைச் சரித்துப் படுக்க வைக்க முயல... முடியாது என்பது போல் பிடிவாதமாக மறுத்த வள், இடக்கையால் அவனைப் பிடித்துத் தன் படுக்கையில் அமர்த்திக் கொண்டாள்.

அவளது செய்கையில் வியந்தாலும்... அவளுக்குக் கட்டுப்பட்டான். அவளது அழுகை குறைவதும், "பெப்பி... பெப்பி..." எனப் புலம்புவதும்... மெல்லியதாகச் சிரிக்க முயல்வதும்... அது முடியாமல் மீண்டும் கதறுவதுமாக இருந்தாள்.

"எவ்வளவு பட்டுட்டேன் தெரியுமா நந்து... அதுவும்... அதுவும்... கடைசியா..." அதைச் சொல்லும் பொழுதே அவள் தேகம் மொத்தமும் நடுங்க... அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டான். அவன் தோள்களில் சரிந் தவள், தன் வாழ்வின் உச்சக்கட்டக் கொடுமையை விளக்கத் துவங்கினாள்.

நந்தினியின் ஹாஸ்டல் வாழ்க்கை துவங்கிய அன்று முழுவதும் மௌன விரதமிருந்தாள்.

அவளது பெரியப்பா... அவளிடம் எவ்வளவோ பேச முயன்றாலும், அவரிடம் ஒரு வார்த்தை கூடப் பேச மறுத்தாள்.

அவர் வாங்கிக் கொடுக்கும் பொருட்கள் முதல் அனைத்தையும் மறுத்தாள். மாதம் ஒருமுறை தன்னைக் காண வரும் தாயையும்... தந்தையையும் காண வரவும் அவள் விரும்பியதில்லை.

தன்னை வெறுத்து ஒதுக்கிய யாரும் தனக்கு வேண்டாம் என்று நினைத்தாள். எவ்வளவோ மன்றாடியும்... முகம் காட்டவும் மறுத்த அவளைக் கண்டு... கண்ணீர் வடிப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை அவர்களால்.

தனிமை மட்டும் அவளது உறவாகிப் போனது. உள்ளங்கையைப் பார்க்கும் பொழுதெல்லாம் கிளர்ந்தெழும் பாட்டியின் நினைவு, அவள் நினைவுகளை இம்சித்தது என்றால்...

ஹாஸ்டல் சாப்பாடு பிடிக்காமல்... பட்டினியாய் இருக்கும் வேளைகள்... பள்ளியில் உடன் பயிலும் பிள்ளைகள் கொடுக்கும் சாக்லெட்... வீட்டிலிருந்து வரும் பிள்ளைகள் கொண்டு வரும் பணியாரம்... இனிப்பு என அனைத்தும்... அவளது பெப்பியை நினைவுபடுத்தியது.

வீட்டு நினைவில் பயத்திலும் வெறுப்பிலும் ஒரு பக்கம் இறுகினால்... மறு பக்கமோ... தன்னை விட்டுப் பிரிந்து சென்ற தோழனின் நினைவிலும்... ஏமாற்றத்திலும்... தவிப்பிலும் இறுகிப் போனாள்.

அவள் மேல் கடவுள் இரக்கமே வைக்கப் போவதில்லை என்பதற்குச் சான்றாக அமைந்தது அந்த நிகழ்வு. ஒன்பதாம் வகுப்பின் துவக்கத்தில் இருந்த நந்தினிக்கு...

ன்று காலையில் எழுந்து... காலைக்கடன் முடிக்கும் ளையில்... தன் மேனியில் இருந்து பெருகிய உதிரத் தக் கண்டு பயந்து போனாள்.

அவளுக்குத் தான் பெரியவளாகி விட்டோம் என்ற ண்மை புரியவில்லை. மாறாக... தனக்கு ஏதோ தீராத யாதி வந்து விட்டதாக அச்சமுற்றாள்.

குளியலறையில் இருந்து ஒலித்த அவளது அழு ரலில்.... பக்கத்து அறை பிள்ளைகள் வந்து என்ன வன்று கேட்க... அவர்களுக்குக் கண்ணீரையே பதிலாக் னாள்.

"யாரது அழுவுறது...?"

"யார்ருன்னு கேட்குறோம் இல்ல... கதவைத் திற..."

"ஏய்... உள்ளே இருக்குறது அந்த உம்மணா ஞ்சிடி..."

"அவ எக்கேடோ கெட்டு ஒழியட்டும் நமக்கென்ன..."

"என்னப்பா இப்படிப் பேசுறீங்க... பாவம்ப்பா அவ. ங்க போங்க. நான் என்னன்னு கேட்டுட்டு வாரேன்..."

விதவிதமான ஒலிகள் கேட்டும்... குளியலறையில் ரையில் அமர்ந்திருந்தவளிடம் எந்த மாற்றமும் ருக்கவில்லை.

இறுதியில் இரக்கக் குணம் கொண்ட, அவள் குப்புத் தோழி... ஓடிச் சென்று வார்டனை அழைத்து

அவளது வார்டனுக்கு எப்பொழுதும் நந்தினி மேல் ஒரு தனிப் பிரியம் உண்டு. ஆனால் அதை அவளிடம் வெளிப்படுத்த..., நந்தினி வாய்ப்பே கொடுத்தது இல்லை.

அவர் என்ன பேசினாலும் அவளது பதில் மௌன மாகவே இருக்கும். ஒரு நிலைக்கு மேல் அவராலும் இறங்கிச் சென்று... அவள் மௌனத்தையோ, பிடிவாதத் தையோ உடைக்க முடியவில்லை.

பதட்டமாக வந்தவர்... "நந்தினி... நந்தினி. முதல்ல கதவைத் திற. நான்தான் வார்டன் வந்திருக்கிறேன். இப்போ கதவைத் திறக்கப் போறியா இல்லையா...? உன் வீட்டுக்குப் போன் பண்ணவா...?"

அவரது கெஞ்சலோ... கண்டிப்போ செய்யாத வேலையை... இறுதி வாக்கியம் செய்தது.

தாழ்ப்பாளை நீக்கியவள்... வெளியே வராமல் உள்ளேயே இருக்க...

"வெளியே வா நந்தினி..." கை நீட்டி அழைக்க... மறுப்பாகத் தலை அசைத்தவளின் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன.

என்ன நினைத்தாரோ... சட்டென உள்ளே சென்ற வர்... "நீங்கல்லாம் போங்க... நான் பாத்துக்கறேன்..."

அவர்களை அனுப்பிவிட்டு கதவைச் சாத்தினார்.

"என்னம்மா ஆச்சு...?" அவர் குரலில் இருந்த கனிவு அவளைத் தாக்க...

அந்த நேரத்துப் பயமா... தனிமையா ஏதோ ன்று... நந்தினியையும் வாய் திறக்க வைத்தது. ஆனா ம் வார்த்தையால் தன் நிலையை வெளிப்படுத்த முடி மல்... தன் உடையை அவரிடம் காட்டவே... நொடியில் வருக்கு விஷயம் இன்னதென்று புரிந்து போனது.

"ஹேய்... சந்தோஷப்பட வேண்டிய விஷயத்துக்குப் ாய் இப்படி அழுவாங்களா...? முதல்ல கண்ணைத் டை. குளிச்சு முடிச்சுட்டியா...? இல்லன்னா முதல்ல ளி. நான் இப்போ வரேன். கதவைத் தாழ் போடாதே..."

அவளிடம் சொன்னவர்... ஓடிச் சென்று மஞ்சள் ள் எடுத்து வந்தார்.

தன் கார்டியன் பதற்றப்படாததாலோ என்னவோ... னக்குப் பெரிதாக ஒன்றுமில்லை எனச் சமாதான னவள்... வேகமாகக் குளித்து விட்டு... அவர் கொடுத்த ந்சளையும் பூசிக் கொண்டாள்.

அதன் பிறகு அவளுக்கு நேப்கின் உபயோகிக்கச் ால்லிக் கொடுத்தவர்... அவளுக்குப் பள்ளியில் டுப்புச் சொன்னவர்... அவளைத் தன் அறைக்கு ழைத்துச் சென்றார்.

அங்கு சென்று அவளுக்கு என்ன நேர்ந்த ன்பதை விளக்கியவர்... இனிமேல் அவள் சிறுமி ல்லை என்பதையும் சொல்லிப் புரிய வைத்தார்.

பொதுவாக அவளிடம் இப்படி யாரும் அமர்ந்து சியதில்லை என்பதால்... அவர் சொன்னதைக் கவன கக் கேட்டுக் கொண்டாள்.

சொல்லப் போனால் அவளது தாய் கூட இதைச் செய்திருக்க மாட்டார் என்பது அவளுக்குப் புரிய... கவனமாகக் கேட்டுக் கொண்டாள்.

அந்த நேரம் தாயை விட... பெப்பியும்... அவன் தாயின் அரவணைப்பும் வேண்டும் என்ற ஏக்கம் எழுந்ததை அவளால் அந்த நேரம் தடுக்க முடியாமல் தடுமாறிக் கண்ணீர் வடித்தாள்.

அவள் அழுவதைக் கண்டவர்... "இப்போதானே சொன்னேன். இது அழ வேண்டிய விஷயம் கிடை யாதுன்னு..."

அவளை மென்மையாகக் கண்டித்தவர்... அவர்கள் வீட்டுக்கு அழைத்துப் பேசினார்.

அவர் பேசவே... வேகமாக அவரைத் தடுக்க முயன் றாள். ஆனால் அது முடியாமல்... அவரது கண்டிக்கும் பார்வையைக் கண்டவள்... தலை குனிந்தாள்.

இங்கே நந்தினியின் வீட்டிலோ... அவள் பெரியவள் ஆனதைக் கண்டு சந்தோஷப்பட முடியாமல்... கவலை கொண்டார்கள்.

அதற்குக் காரணம்... நந்தினியின் அக்கா இன்னும் பெரியவள் ஆகியிருக்கவில்லை. பாட்டியோ அதை விட ஒரு படி மேலே போய்... அவளைக் கேவலமாகப் பேசினார்.

மாமியாரின் பேச்சைக் கேட்ட காயத்ரி துவண்டு போனார். பெரியவள் இருக்கையில்... சிறியவள் வயதுக்கு

வந்தது அவருக்கும் வருத்தம்தான். என்றாலும்... சிறியவள் தனக்கு மகளென்று இல்லாமல் போய் விடுமா...? இல்லையென்றால் அவள் வயதுக்கு வரக் கூடாதா என்ற ஆதங்கம் அவருக்கு எழுந்தது.

ஆனாலும்... மாமியாரின் வாயில் அவள் விழு வதைவிட... ஹாஸ்டலிலேயே அவள் நிம்மதியாக இருக்கட்டும் என்று... காயத்ரி 'நந்தினியை அழைத்து வரவேண்டாம்' என்று கலங்க... காசிநாதனோ... எல்லாம் தான் பார்த்துக் கொள்வதாகச் சொல்லி அவரை அழைத்துச் சென்றார். ஆனாலும்... அவரால் தன் மகள் காயப்படுவதை ஊமையாக வேடிக்கை மட்டுமே பார்க்க முடிந்த நிலை வந்தபொழுது... மனதொடிந்து போனார்.

ஹாஸ்டலுக்கு வந்த பெற்றவர்களுடன் செல்ல நந்தினி வெகுவாகத் தயாங்கினாள்.

அவளது தயக்கம் உணர்ந்து... இப்பொழுது பெற்ற வரின் கவனிப்பு அவளுக்கு எவ்வளவு முக்கியம் என்ப தைச் சொல்லி... அவளை அவர்களோடு அனுப்பினார்.

வீட்டிற்கு வந்து இறங்கிய நந்தினியை வரவேற்றது ஆரத்தித் தட்டு அல்ல... மாறாக, "வாடி மூதி... உடம்பு அவ்வளவு தினவெடுத்துருச்சா... அதுக்குள்ளே மாப் பிள்ளை சுகம் கேக்குதோ...! இங்கே இருந்து போய்... நல்லா தேறிட்ட போல..."

தேள் கொடுக்காய் அவரது நாவு அவளைக் கொட்டிச் சிதைக்க...

வாசலிலேயே இப்படியொரு பேச்சைக் கேட்டதால்... உடலெல்லாம் பற்றி எரிய... 'இயற்கையாக நடந்த ஒரு நிகழ்வுக்கு இப்படி ஒரு அவப்பெயரா எனக்கு...?' முதல் முறையாக அவள் மனம் அவளிடம் கேள்வி கேட்டது.

தான் செய்யாத குற்றத்துக்கு... என்னவென்றே புரியாத ஒரு நிகழ்வுக்கு... தான் கேட்ட பேச்சுகள் அவளைத் துடிக்க வைக்க...

அதைவிட அவர் சொன்னதன் பொருள் புரிபட... "ஏன் இப்படி அசிங்கமாப் பேசுறீங்க...?" முதல் முறையாக வாய் திறந்தாள்.

வாசலிலேயே நிற்க வைத்துக் கேட்டதும்... சுற்றிலும் வேடிக்கை பார்த்த தலைகளும்... இதுவரை நான்கு சுவர்களுக்குள் மட்டுமே பட்ட அவமானம் வீதியில் உலா வர எழுந்த அவமானமும்.... அவளைக் கேள்வி கேட்கத் தூண்டியது.

ஆனால் அதுவே அவளுக்கு வினையாகிப் போனது.

"என்னடி... வாய் ரொம்ப நீளுது. உண்மையைச் சொன்னால் கோபம் பொத்துக்கிட்டு வருதோ...?"

தாயின் பேச்சை ரசிக்க முடியாத காசிநாதன் அவரை அடக்க முயல...

"அத்தை... நாக்குல நரம்பில்லாமல் பேசாதீங்க...." காயத்ரியின் கண்ணீர்க் குரலோ... அவரது வேகத்தைக் கொஞ்சம் கூட நிறுத்தவில்லை.

"என்ன உங்க அப்பன் கூட்டிட்டு வந்துட்டான் என்ற நப்பா...! எப்பவுமே நீ எனக்கு ஆகாதவதான்டி..." அவர் ச்சலிட...

"அம்மா! கொஞ்சம் நிறுத்துறீங்களா...! ஒரு பத்து ள் அவ இங்கே இருக்கட்டும். அவளுக்கு உடனே ஒரு ப்பிள்ளையைப் பார்த்து நான் அனுப்பிடுறேன். துவரைக்கும் கொஞ்சம் பேசாமல் இருங்கம்மா... ப்போ வழியை விடுங்க..."

தாயை விலக்கித் தள்ளிவிட்டு வீட்டுக்குள் செல்ல யன்றார்.

"என்னடா சொன்ன...? இவளுக்குக் கல்யாணமா...! வல்லாம் கழுத்தில் தாலி வாங்கினால்... அடுத்த ஷமே முண்டச்சி ஆயிடுவாடா... அப்படி எந்த ப்பாவியோட உசுரையாவது காவு வாங்கலாம்னு கனா ணாதே... அதுக்கு ஒருக்காலமும் நான் சம்மதிக்க ட்டேன்."

ஆங்காரமாகக் கூறியவர், அதோடு நிறுத்தாமல்... ாலி வாங்கி... அப்படியே முண்டச்சி ஆகலன்னா... வகூட ஒரு நாள் வாழ்ந்தான்னா போதும். அப்போவே லோகம்தான்..." எள்ளலும்... எகத்தாளமும் ஆங்காரமு கக் கூறியவர்...

அவள் உருவத்தையும்... பெரிய பேத்தியையும் ாதுக்குள் ஒப்பிட்டவரின் எண்ணங்கள் தறிகெட்டு ஓட...

நந்தினியை அழித்தே ஆகவேண்டும் என்ற எண்ணம் வேரூன்ற...

"சும்மா தளதளன்னுதான் இருக்கா. எவனாவது இழுத்துட்டுப் போனால் கூட விளங்காமல் போயிடுவான். இவளை எவன் கட்டுவான்னு நானும் பாக்குறேன்..."

சொன்னவர் அதே ஆங்காரத்தோடு வீட்டுக்குள் நுழைய... அவர் என்ன செய்யப் போகிறார் என்று பதைப்புடன் நின்றிருந்தனர்.

நந்தினியோ... அவமானம் பிடுங்கித் தின்ன... உயிரோடு சமாதியானாள்.

அவரது பேச்சுக்கள் அவளைக் கொன்று கூறு போட்டது. அவரது பேச்சின் தெளிவான பொருள் புரிய வில்லை என்றாலும்... அவர் பேச்சின் சாராம்சம்... அவள் தேகத்தைப் பற்றி எரியச் செய்தது.

காயத்ரியோ... "நந்தினி... இங்கே இருந்து போயிடு. உன்னைக் கொன்னாலும் கொன்னுடுவாங்க. போயிடு..." தன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு மண்ணில் சரிந்தார்.

"காயத்ரி..." காசியும் மனைவியைத் தாங்கினார்.

"சொன்னேனே... கேட்டீங்களா...!" பலகீனமாகப் புலம்பியவரின் கண்களில் வற்றாத நீர்.

அந்த நிலையிலும் தாயின் நிலையே முதன்மை யாகத் தோன்ற... "அம்மா..." என்று தாயின் அருகில் ஓடினாள்.

"என்னடி...! என் புள்ளைக்குத்தான் எமனாப் போயிட்டன்னா... இப்போ நீ வயசுக்கு வந்த நேரம்... என் மருமகளையும் காவு கொடுக்கப் பாக்குறியா...?"

கேட்டவர்... அனைவரும் அசந்திருந்த வேளையில்... நந்தினியின் தலைமுடியை... கையிலிருந்த கத்திரிக்கோலால் வெட்டித் துண்டித்தார்.

தன் மாமியாரின் செய்கையை ஏற்கவே முடியவில்லை காயத்ரியால்.

"ஹையோ... என்னையும்... என் பொண்ணையும் இப்படியே விடுங்கன்னு சொன்னப்போ கேக்கலை... அவளைக் கூட்டி வர வேண்டாம்னு சொன்னப்போ கூட கேக்கலை. இப்போ என் மகளோட வாழ்க்கை போச்சே..." நெஞ்சில் அறைந்து கொண்டு அழுது அரற்றியவர் மயங்கிச் சரிந்தார்.

"காயத்ரி..." மனைவியைக் கைகளில் ஏந்தியவர்... "வா நந்தினி. டிரைவர், வண்டியை எடு..."

மனைவியை வண்டியின் பின்னிருக்கையில் கிடத்தியவர் மகளைத் திரும்பிப் பார்த்தார்.

நந்தினியோ... இதற்கு மேல் நான் வாழ வேண்டுமா... என்ற கேள்வி தலைதூக்க...

அந்த நேரம் தூரத்தில் ஒரு வாகனம் வருவதைக் கண்டவள்... ஓடிச் சென்று அதன் சக்கரத்தில் விழுந்தாள்.

மகள் ஓடுவதைக் கண்டவர் பின்னால் ஓடினார்.

அந்த மரணத்துக்கே கூட அவள் மேல் இரக்கம் வரவில்லை போல!

அவள் அருகில் வந்து பிரேக் போட்டு நின்ற வாகனத்தில் இருந்து இறங்கிய தேவனோ... ஒரு வார்த்தை கூடப் பேசாமல்... அவளை எழுப்பிக் காருக்குள் திணித் தவர்...

'அடேய் பாதகா...!' என்ற பார்வையைத் தம்பிடம் செலுத்தியவர்... காரை அங்கிருந்து கிளப்பிச் சென்றார்.

மகளைக் கவனிக்க முடியாமல்... மனைவியின் உடல்நிலை அவரைத் தடுக்க... மனைவியின் அருகில் ஓடினார்.

அதன் பிறகு நடந்தவையோ... நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது.

22

நந்தினி சாவது ஒன்றே முடிவாக இருக்க...

அவளை அந்த முடிவில் இருந்து திசை திருப்புவது பெரும் பாடாக இருந்தது.

"இந்த ஊரிலேயே இருக்க மாட்டேன் என்றும்... அப்படியே இருந்தால் செத்துத்தான் போவேன். என்னைத் தான் யாருக்கும் பிடிக்கவில்லையே! நான் எதற்காக உயிரோட இருக்கணும். நான் இப்படி இருந்து என்னத்தக் காணப் போறேன்." முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

அவள் பட்ட அவமானத்தால்... யாரின் முகத்தையும் மிர்ந்து பார்க்கவே அவள் விரும்பவில்லை. அதன் றகு அவளைக் கையில் எடுத்தது அவளது வார்டன் ான்.

அவளைப் பல அநாதை ஆசிரமங்கள்... இயலா மையால் தவிப்பவர்கள் என அனைத்து இடங்களுக்கும் ழைத்துச் சென்றவர்... அவள் அவர்களை விட வ்வளவோ மேலானவள் என்பதைப் புரிய வைத்தார்.

"நீங்க சொல்றது சரிதான்... ஆனா இந்த வமானம்... அசிங்கம் எல்லாம் அவங்க பட வேண்டியது ல்லையே! இங்கே இருப்பவர்கள் எல்லாம் ஒருத்தருக்கு ருத்தர் எவ்வளவு ஆதரவா இருக்காங்க. ஆனா னக்கு...',

தன்னிரக்கத்தில் கரைந்தவளைத் தேற்ற அவரால் டியவில்லை.

தன்னைச் சமாளித்துக் கொண்டு... "உனக்கு நீயே ான் ஆதரவு நந்தினி! நீயே பலருக்கு ஆதரவாக இருக்க டியும்பொழுது... இப்படி அழலாமா...?" அவளைத் ற்ற முயன்றார்.

"என்னால் எப்படி முடியும்...? அதுவும் யாரின் தரவும் இல்லாமல்! அதுவும் தனியாக..." தனிமை வளைக் கொல்வதை உணர்ந்து கொண்டார்.

"இந்த நினைப்பை அடியோடு விடு நந்தினி. இந்த லகத்தில் எல்லோரும் தனியாகத்தான் வந்தோம்.

தனித்தனியாகத்தான் போகவும் போகிறோம். கடவுள் கொடுத்த வாழ்க்கையை... நல்லபடியாக வாழ்ந்து முடிக்கணும். அது மலர்ப் பாதை என்றாலும் சரி, முள் படுக்கை என்றாலும் சரி.

"சிலருக்குப் பாதை முழுக்க மலரும்... முள்ளும் கலந்திருக்கும். சிலருக்கு வலிகளை மட்டுமே அறிமுகப் படுத்தலாம். ஆனால் ஒவ்வொருத்தருக்கும் கடவுள் ஒரு கடமையைக் கொடுத்திருக்கிறார். இதுவரை உன்னை ஓட ஓட விரட்டியவர்கள் முன்னாடி... நீ வாழ்ந்து காட்டணும் நந்து.

"நாலு பேரை நீ கேள்வி கேட்கும் இடத்துக்கு... உன்னை யாரும் கேள்வி கேட்க முடியாத இடத்துக்கு... பெண்தானே என்று உன்னை நெருங்க முடியாத இடத்துக்கு... ஒரு பெண் எப்படி இருக்கிறாள் என்ற இடத் துக்கு... நீ பெண் என்ற நினைப்பை விடுத்து... மற்றவர் வியந்து பார்க்க வேண்டும்.

"அதை மனதில் பதிய வை. கேவலம்... ஒரு முடிவு உன் வாழ்க்கையை நிர்ணயிக்கக் கூடியது என்று நீ நினைத்தால்... அந்த முடிவு உனக்கு வேண்டாம் என்று நீ முடிவெடு. இனிமேல் உன் வாழ்க்கையை நீதான் முடிவு செய்யணும்.

"யாரும் எதுவும் செய்யக் கூடாது. உன்னை யாருக்கும் வேண்டாம் என்றால் அதற்கு முன்பே... உனக்கு யாரும் வேண்டாம் என்று முடிவெடு. அனை

ரையும் உன்னை விட்டு எட்டி இருக்க வை. அந்த இடம் துவென்று நீதான் முடிவு செய்ய வேண்டும்..."

வார்டன் கவிதாவின் வார்த்தைகள்... நந்தினியைப் டம் போட்டது.

அந்த நாள் முதல்... நந்தினி புதிதாக மாறிப் பானாள். தன் லட்சியம் எது என்பதைக் கண்டு காண்டாள். காக்கிச் சட்டை மட்டுமே தன்னைப் பாது ாக்கும்... நிமிர்வைக் கொடுக்கும்... அழுத்தத்தைக் காடுக்கும் என்று முடிவெடுத்தாள்.

வேதனையை மட்டுமே அவள் ஏற்றுக் கொண் ாள். மனம் விட்டு அவரிடம் பேசவில்லை என்றாலும்... ன் மேல் கருணை காட்டும் ஒரே ஜீவன் என்பதால்... வரது உதவிகளையும் ஏற்றுக் கொண்டாள்.

தேவனிடம் சொல்லி... பாஷை தெரியாத இடத் க்குத் தன்னை கொண்டு விடச் சொன்னவள்... அதன் றகு அவரையும் காண மறுத்தாள். அதன் பிறகு தனது ட்சியம் மட்டுமே அவள் கண்முன் இருந்தது.

தமிழ்நாடு என்பதையே வெறுத்தாள். எரிமலை யன இறுகிப் போனாள் நந்தினி.

அவள் சொல்லி முடித்த பொழுது... இருவரும் ர்ந்து கதற... யாருக்கு யார் ஆதரவு சொல்வது என்பது தரியாமல் போனது.

"ஹையோ... நந்தும்மா...! அவங்க எல்லாம் னுஷங்க தானா...! அவங்க சொன்னது எல்லாம்

உண்மை இல்லை நந்து. எதேச்சையாக நடந்த அனைத் தையும்... உன் மேல் இருந்த வெறுப்பால் அவங்க உன்மேல் திணிச்சுட்டாங்க..." அவளைக் அணைத்துக் கொண்டு குமுறினான்.

"நீ எனக்காகச் சொல்லுற...! அப்படியெல்லாம் இல்லை..." அவள் தன் கூட்டை விட்டு வெளியே வர மறுத்தாள்.

அதோடு... "நீ ஏன் என்கிட்ட சொல்லாமல் போன...? நீ ஏன் என்னை விட்டுட்டுப் போன...? நான் உன்னை ரொம்பத் தேடினேன் தெரியுமா...? உன்மேல் நான் ரொம்பக் கோபமா வேற இருந்தேன்..." தன் ஏக்கம் மொத்தத்தையும் வார்த்தையில் வடிக்க முயன்றாள்.

"என்னை மன்னிடுச்சுடு நந்து... உன் பெப்பி தெரியாமல் செஞ்சுட்டேன்..."

அவள் உச்சந்தலையில் தன் இதழ்களை ஆழப் புதைத்தவாறு அவன் சொல்ல...

அவன் மேல் தான் கோபமாக இருந்தோம் என்பது கூட அவளுக்கு மறந்து போனது.

"இங்கே பார்... என்னைப் பார் நந்து...! எனக்கு... என் மனசுக்குள் ஒரு குட்டி நந்தினி இருந்தா. அவ எப்படி இருப்பா தெரியுமா? அப்படியே குட்டி தேவதைதான். அதுவும் பெப்பின்னா அவளுக்கு ரொம்ப ஸ்பெஷல்.

"பெப்பியைப் பார்த்தாலே... அவளோட முகம் ஆயிரம் வாட்ஸ் பல்ப் மாதிரி அப்படியே ஒளி வீசும்.

ப்பியைப் பார்த்த உடனே... ஓடி வந்து கழுத்தைக் டிப்பா பாரு...',

அந்த நாள் நினைவின் தாக்கத்தில் விழி மூடிக் ாண்டான்.

அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தவள்... அதில் தரிந்த பாவத்தில் அப்படியே அவனையே பார்த்தவாறு ருந்தாள்.

படிப்படியாக அவன் முகம் வேதனையைப் பிரதி ிக்கவும்... "பெப்பி..." மெதுவாக அழைத்தாள்.

அவள் அழைப்பில் விழி திறந்தவன்... "ஆனா ப்போ எனக்குத் தெரியாது நந்து. நீ தனியாக ருந்ததால்தான்... என் வரவை அவ்வளவு ஆர்வமா திர்பார்த்தாய் என்பதும்... உன் பசியால்தான் நான் காண்டு வரும் ஒரு மிட்டாய் கூட உனக்கு அவ்வளவு டித்தமானதாக இருந்தது என்பதும்... எனக்குத் தெரியவே ல்லை நந்து.

"ஆனா, என் அம்மாவுக்கு அது நன்றாகவே தரிந்திருந்தது போல. அதனால்தான்... நந்தினியைத் ன்னோட உயிரா அவங்க நினைத்தாங்க. ஆனா... ன்னோட தாத்தாவும் பாட்டியும் இறந்த பிறகு... எங்க நக்கு ஆதரவான இடத்தைத் தேடி நாங்க போக வண்டிய கட்டாயத்தில் இருந்தோம்..."

சொன்னவனின் எண்ணங்கள் பின்னோக்கிச்

ப்ரதீப்பும் அவன் தாயும்... அவர்களது மாமா பாஸ்கரின் ஆதரவின் நிழலில் சென்றார்கள்.

வாணியின் நிலைமைதான் கொஞ்சம் கவலைப் படும்படியாக இருந்தது. அவர் தனது கூட்டை விட்டு வெளியே வர மறுத்தார்.

பாதி நேரம் இயல்பாக இருப்பவர்... அடுத்த சில நேரங்களில்... நந்தினியிடம் பேசிக் கொள்பவர் போல் செயல்பட்டார்.

எந்த உணவு சாப்பிட்டாலும்... விசேஷமாகப் பலகாரம் செய்தாலும்... ப்ரதீப்பை அழைத்து, நந்தினிக்குக் கொடுக்கச் சொன்னார்.

அவரது இந்தச் செய்கையே அவர் நிலையை வெளிச்சம் போட்டுக் காட்ட...

அவரை மருத்துவரிடம் அழைத்துச் சென்றார்கள்.

மருத்துவர் சொன்னது ஒன்றுதான். 'நந்தினியை அவரோடு இருக்க வைத்தால்... அவரது மனநிலையில் முன்னேற்றம் இருக்கும்' என்றார்.

ஆனால் தூத்துக்குடியில் இருக்கும் அவர்கள் எப்படி... கோவையில் இருக்கும் நந்தினியை அழைத்து வர முடியும்...?

ப்ரதீப்பும்... தன் படிப்பில் கவனம் செலுத்த வேண்டிய நிலை வந்ததால்... தாய்க்கு ஆதரவாக இருக்க முயன்றான்.

"நந்தினி நல்லா இருப்பாம்மா...!" அவன் தாய்க்கு ஆறுதல் சொல்லும் வேளைகளில் எல்லாம்...

"அவளைப் போய்ப் பாத்துட்டு வந்து சொல்லுடா. அவளுக்கு யாருமே இல்லடா. நான் இல்லாமல் ஏங்கிப் போயிடுவாடா. அவளுக்குச் சாப்பிடக் கூட எதுவும் கொடுக்க மாட்டாங்கடா..."

தாய் கலங்கிய குரலில் சொல்லும் பொழுதெல்லாம்... தாய் தேவையில்லாமல் கவலைப்படுகிறார் என்றே எண்ணினான்.

ஆனாலும்... தாயின் கவலையில் ஏதேனும் உண்மை இருக்குமோ என்ற சந்தேகம் வரும்பொழுதெல்லாம்... தவிக்கவே செய்தான். ஆனாலும் தாயைத் தனியாக விட்டுச் செல்ல அவனால் முடியவில்லை.

அதோடு தாய் மனநிலை சரியில்லாமல் இருப்பதால் இப்படிப் புலம்புகிறார் என மாமா சொன்னபொழுது... அது தான் உண்மையாக இருக்கும் என எண்ணினான்.

வருடங்கள் உருண்டோட... தாயின் மனநிலையிலும் முன்னேற்றம் இருக்கவில்லை. புலம்பலும் நிற்கவில்லை.

இறுதியாகக் கல்லூரிப் படிப்பை அவன் முடித்த வேளையில்... தாயின் உடல்நிலை கவலைக்கிடமாகவே... அவர் கேட்டது ஒன்றே ஒன்றுதான். தான் நந்தினியைப் பார்க்க வேண்டும் என்பது!

வேறு வழியில்லாமல்... தனது மாமாவிடம் சொல்லிக் கொண்டு நந்தினியைப் பார்க்கக் கிளம்பினான்.

ஆனால் அவளைப் பற்றி அறிந்தவை அனைத்தும்... அவனைத் தவிக்கவும்... குற்றவுணர்வில் துடிக்கவும் வைத்தது.

அதிலும் அவள் வீட்டுக்கே வருவதில்லை. அவள் எங்கே சென்றாள் என்பதே தெரியாது என்பதை அறிந்த பொழுது... இருட்டில் தத்தளிப்பதாக உணர்ந்தான்.

தாயின் முகத்தில் எப்படி விழிப்பேன்...? தாயின் பேச்சை ஒரு பொருட்டாக மதிக்காததற்கு... எவ்வளவு பெரிய விலையைக் கொடுத்து விட்டோம் எனக் குற்ற உணர்வில் தவித்தான்.

ஒரு அளவிற்கு மேல்... அவளைப் பற்றி விசாரிக்க முடியாமல் திரும்பி விட்டான்.

மகனின் சோர்ந்த முகத்தைப் பார்த்த வாணி கேட்ட கேள்வியில் நிலைகுலைந்து போனான்.

"நந்தினி உயிரோடயாவது இருக்காளா பெப்பி...?"

உயிரற்ற வறண்ட குரலில் அவர் கேட்க... எவ்வளவு முயன்றும் தன் மனநிலையை மறைக்க முடியாமல்... அவன் கண்கள் கலங்கின.

அதை மறைத்தவன்... "அவ நல்லாத்தாம்மா இருக்கா..." தாய்க்காக அப்படி ஒரு பொய்யைச் சொன்னான்.

அவன் சொன்னதைக் கண்டுகொள்ளாமல்... "எனக்கு வாக்குக் கொடு பெப்பி. அவளை நல்லாப்

பார்த்துப்பேன்னு எனக்கு வாக்குக் கொடு. அவதான் என்னோட மருமகனு எனக்கு வாக்குக் கொடு. அவ அதிர்ஷ்டமில்லாதவனு நீ நம்ப மாட்டேன்னு எனக்கு வாக்குக் கொடு.

"அவளோட வருங்காலத்தையாவது வசந்தமாக்கு வேன்னு எனக்கு வாக்குக் கொடு..." தன் நலிந்த கரங்களை அவன் முன் நீட்ட... நொடியும் தாமதிக்காமல் தாயின் கரத்தில் தன் கரத்தை வைத்தான்.

ஏற்கெனவே அவன் அந்த முடிவிற்குத்தான் வந்திருந்தான். அதன் பிறகு அதிக நாள் அவன் தாய் உயிரோடு இருக்கவில்லை. மாமாவிற்குப் பாரமாக இருக்க விரும்பாமல்... வீட்டை விட்டு வெளியேறியவன்... நந்தினியைத் தேடத் துவங்கினான்.

தேவனைக் கண்டு... அவர் காலில் விழாத குறையாகக் கெஞ்சிக் கூத்தாடி அவள் இருக்கும் இடத்தை அறிந்து, அங்கு சென்று பார்த்தபொழுது அவள் அங்கு இல்லாமல் போனது... அடுத்த இரண்டு வருடங்கள் அவளைத் தேடி அலைந்து அவளைக் கண்டு கொண்டது... என அனைத்தையும் சொல்லி முடித்தான்.

அவன் சொல்லி முடித்தபொழுது... அவனது கையணைப்புக்குள் இருந்தாள் அவள். அவனை விட்டு விலக முயலவில்லை.

மனம் முழுவதும் ஒரு அமைதி. தன் வீடு வந்து சேர்ந்த நிம்மதி. இதுதான் என் இடம் என்ற ஆறுதல்!

இத்தனை நாள் பட்ட துன்பங்கள் எதுவுமே இல்லை என்பது போல்... அவன் அருகாமையில் அனைத்தையும் மறந்து... அவன் மட்டுமே நினைவில் நின்றான்.

ஆனாலும் இத்தனை நாள் மனதில் பதிந்து போன அந்த எண்ணம் மட்டும் அவளை விட்டு விலக மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்து மனதை முரண்டியது.

அதை எண்ணியவளின் உடல் விறைக்க... அதை உணர்ந்த ப்ரதீப், அவள் முகத்தைக் கேள்வியாகப் பார்க்க... "இந்த ராசியில்லாதவ உனக்கு வேண்டாம் பெப்பி..." அவன் கண்களைச் சந்திக்க மறுத்தாள்.

அவள் கன்னங்களில் கரம் வைத்து, "என்னைப் பாரு, நந்தினி. நீ ராசியில்லாதவள் என்பதெல்லாம் சுத்தப் பொய். எனக்கு ஆட்டோ வாங்கிக் கொடுத்தது நீ. அதில் முதல் சவாரி செய்தது நீ... எனக்கு என்ன ஆயிற்று? எதுவும் ஆகலை. உன் கண் முன்னாடி முழுசா இருக்கல.

"அதே மாதிரி... அன்று முழுவதும் வந்த வருமானம் எவ்வளவு என்பது உனக்குத்தான் தெரியுமே...! அதனால் இனிமேல் உன் மனதில் இந்தத் தாழ்வு மனப்பான்மையே இருக்கக் கூடாது. சரியா...?"

அவள் கண்களுக்குள் பார்த்து ஆழ்ந்து கேட்க...

அவள் தலை தயங்கினாலும்... சம்மதமாக ஆடியது.

அவளைப் படுக்க வைத்தவன்... வெளியே காத்திருந்த அனைவரையும் உள்ளே வரச் சொன்னான். நந்தினியின் முகத்தில் தெரிந்த களைப்பையும் மீறிய

அமைதியும், நிம்மதியும் அனைவர் கண்களிலும் விழத் வறவில்லை.

"அண்ணி... வாழ்த்துக்கள்..."

ரோஸ் அவள் அருகில் தயங்கிச் சென்று வாழ்த்துத் தரிவிக்க... முதல் முறையாக அவளைப் பார்த்து மல்லியதாகச் சிரித்தாள்.

"வாழ்த்துக்கள் சார்..."

கந்தன் வாழ்த்த... முதல் முறையாக சார் என்ற ந்த அழைப்பு அவளை உறுத்தியது. ஆனால் மறுத்து ன்றும் கூறாமல் அமைதியாக இருந்தாள்.

"வாழ்த்துக்கள் அக்கா... இல்ல தங்கச்சி! இல்ல க்காவே இருக்கட்டும்..." சரவணன் உளறிக் கொட்ட... ங்கே மெல்லிய சிரிப்பலை.

ரோஸ் சிரித்தவாறு அவனை ஓரக் கண்ணால் ர்க்க... 'மனுஷனைச் சிக்க வச்சுட்டு எப்படி பாக்குறா ரு? வெளியே வா... உன்னைக் கவனிச்சுக்குறேன்.'

கண்களாலேயே அவளை மிரட்ட... அதற்கும் ளுக்கிச் சிரித்தாள் ரோஸ்.

"ஏன்டா மாப்ள... இப்படி உதறுது...?" சிரிப்பை ள்ளடக்கியவாறு ப்ரதீப் வினவ...

'அடேய் துரோகி...' என்பது போல் அவனை றைத்தான். அந்த இடமே சந்தோஷ அலைகளால்

"அண்ணே... புதுசா இவ்வளவு பெரிய அக்கா... இல்ல தங்கச்சி... இல்ல அக்காவே இருக்கட்டும். அக்கா கிடைத்ததில் அவர் ரொம்ப ஷாக் ஆகிட்டார். இல்லங்க..."

பொங்கிய சிரிப்பை அடக்க முயன்று, முடியாமல் வெடித்துச் சிரித்தவாறு அவள் சொல்ல...

சங்கடமாக நந்தினியைப் பார்த்தவன்... வெளிப் படையாகவே ரோஸை முறைத்தான்.

அதே நேரம் ப்ரதீப்பும் நந்தினியின் முகத்தைத்தான் பார்த்தான்.

அதில் தெரிந்த மலர்ச்சியும்... மெல்லிய புன்னகை யும் அவனுக்கு மிகுந்த நிம்மதியைக் கொடுத்தது. மீண்டும் அவளது புன்னகையைக் காண...

அவன் நிலையைப் பார்த்து... "விடுடா மாப்ள. என் தங்கச்சிக்குக் கொஞ்சம் விளையாட்டு குணம் அதிகம். அதான் அப்படிப் பேசுது. நீ கண்டுக்காதேடா. நமக்கென்ன இதெல்லாம் புதுசா...?"

நண்பனுக்கு ஆதரவாகச் சொல்வதுபோல் அவன் காலை ப்ரதீப் வார... கொலை வெறியானான் சரவணன்.

"ஏன்டா... உனக்கு என்னைப் பார்த்தால் கிண்டலா இருக்கு இல்ல. புது மாப்பிள்ளைன்னு பாக்குறேன். இல்ல..." – பல்லைக் கடித்தான்.

"அதுக்காகப் பாக்குறியா...! இல்ல உன் அக்காவுக் காக... இல்ல தங்... இல்ல இல்லை... அக்காவுக்காகப் பாக்குறியாடா...!" – ப்ரதீப் சந்தேகம் கேட்க...

"ஐயோ அக்கா... தங்கச்சி... அப்படியெல்லாம் ல்ல. எனக்குப் பயமெல்லாம் எதுவும் இல்லை..." வகமாகச் சொல்ல...

அனைவரும் மீண்டும் வெடித்துச் சிரிக்க... அசடு ழிந்தான் சரவணன்.

ஆனால் தன் தோல்வியை ஒத்துக்கொள்ள மன ல்லாமல்... "டேய் உன்னை..."

சொன்னவாறு ப்ரதீப்பை அடிக்கத் துரத்த... ண்பனுக்குப் போக்குக் காட்டி ஓடினான் ப்ரதீப்.

இதுவரை யாரிடமும் கலகலப்பாக உரையாடிப் ழக்கமில்லை என்பதால், அவர்களது பேச்சில் கலந்து காள்ளாமல்... அமைதியாக அனைவரையும் பார்த்துக் காண்டிருந்தாள்.

அந்தப் பேச்சும்... கேலியும்... இணக்கமும் அன்பும் வளுக்கு மிகவும் பிடித்தது.

23

நந்தினி, தன் வாழ்வில் இழந்த அனைத்து சந்தோஷங்களையும் அவளுக்குத் திரும்பக் கொடுக்க விரும்பினான் ப்ரதீப்.

மறுநாள் முதல் நந்தினியிடம் ஒரு ழ்ந்த அமைதி நிலவியது. யாரையும் கடிந்து பேச ல்லை. முகம் இரும்பாக இறுகி இருக்கவில்லை. டிந்த அளவு இயல்பாக இருக்க முயன்றாள்.

ப்ரதீப்பையே சுற்றும் அவள் விழிகள்... அவள் அருகாமையை விரும்பும் அவள் தோற்றம்... என அனைத்தையும் உணர்ந்தார்கள். அதே நேரம்... மற்றவர்கள் முன்னால் அவளால் இயல்பாக இருக்க முடியாமல் தடுமாறுவதும் புரிந்தது.

எனவே... முடிந்த அளவு நந்தினிக்கும்... ப்ரதீப்புக்கும் தனிமை கொடுத்தார்கள்.

அதிகமாக உணர்ச்சிவசப்பட்டதாலா... என்னவென்று தெரியவில்லை. மறுநாள் நந்தினிக்குக் காய்ச்சல் வந்தது.

மருத்துவர்கள் அனைவரும் கவலை கொண்டார்கள். இந்தச் சூழலில் அவளுக்குக் காய்ச்சல் வந்திருப்பது நல்லதல்ல எனச் சொல்லவே... அனைவரையும் கவலை தொற்றிக் கொண்டது.

ஆனால் நந்தினி அதைப் பற்றிச் சிறிதும் அலட்டிக் கொள்ளவில்லை.

காய்ச்சலின் தாக்கமும்... மருந்தின் வீரியமும் சேர... எப்பொழுதும் அரை உறக்க நிலையிலேயே இருந்தாள். அந்த நிலையிலும்... இடையிடையே... ப்ரதீப் இருக்கிறானா என்பதை அவள் கண்கள் தேட... மனதுக்குள் தவித்துப் போனான்.

எங்கே அவளை விட்டுத் தான் சென்று விடுவோமோ என்று அவள் அஞ்சுவது அவனுக்குப் புரிந்தது.

"நான் உன்னை விட்டு எங்கேயும் போக மாட்டேன் நந்து. நிம்மதியாத் தூங்கு. உனக்கு இப்போ ஓய்வுதான் ரொம்ப முக்கியம். எதையும் யோசிக்காதே..."

அவள் இடக்கரத்தைப் பிடித்தவாறு... அவள் அருகிலேயே அமர்ந்து கொண்டான்.

நேரம் செல்லச் செல்ல... அவள் காய்ச்சல் அதிகரித்ததே தவிர குறையவில்லை. இதற்கு மேல் டெம்பரேச்சர் ஏறினால்... அவளுக்கு ஃபிட்ஸ் வந்து விடும் வாய்ப்பு அதிகம் என்று உணர்ந்து... மிகுந்த கவலை கொண்டான்.

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்து, அவள் தலையில் வெள்ளைத் துணியால் பற்றுப் போட... நொடியில் அதன் ஈரம் உலர்ந்து போவதைப் பார்த்து... என்ன செய்து அவள் காய்ச்சலைக் குறைக்கவென்று அவனுக்குத் தெரியவில்லை.

அவன் படும் கவலையைப் பார்த்த நந்தினி... "ரொம்பக் கஷ்டப்படுத்துறனா...?" தன் இதழ்களை ஈரப்படுத்தியவாறு மெதுவாகக் கேட்க...

அவளையே ஆழ்ந்து பார்த்தவன்... "ஆமா. ரொம்பக் கஷ்டப்படுத்துற...!" இடைவெளி விட்டவன்... அவள் முகம் வாடுவதைப் பார்த்து... "ஆனா, அது நீ நினைக்கிற கஷ்டம் இல்லை. மனசுக்குக் கஷ்டமா இருக்கு. உன்னோட இந்தத் துன்பத்தை வாங்கிக்க முடியலையேன்னு ரொம்பக் கஷ்டமா இருக்கு. இதை நீயே தனியா அனுபவிக்க வேண்டி இருக்கேனு ரொம்பக் கவலையா இருக்கு..."

அதே ஆழமான குரலில் சொல்ல... நந்தினியின் கடைவிழியோரம் ஈரம் வழிந்தது.

அவள் அழுவதைப் பார்த்தவன்... "என்னடா! ரொம்ப முடியலையா...?" வாஞ்சையாகக் கேட்க...

அவள் இல்லை எனத் தலை ஆட்டினாள்.

அவனையே பார்த்தவள்... "ரொம்பப் புடிச்சிருக்கு...!"

அவள் எதைச் சொல்கிறாள் என்பது புரிய... மனம் கனத்துப் போனான்.

'இந்த அளவுக்கா ஒரு சிறு கவனிப்புக்காக ஏங்கி இருக்கிறாள்.' இப்பொழுது அவனுக்கு வாய்விட்டுக் கத்த வேண்டும் போல் இருந்தது.

அவள் பேச்சை உணர்ந்து கொண்டதை அவளுக்குக் காட்டாமல்... "என்னை உனக்குப் புடிச்சிருக்குன்னுதான் எனக்கு எப்போவோ தெரியுமே...!" அவள் காதோரம் குனிந்து மெதுவாகச் சொன்னான்.

'அது இருநூறு சதவீதம் உண்மைதான் பெப்பி....' மனதுக்குள் சொன்னதை வெளியே சொல்லாமல்... தன் தகிக்கும் இடக்கரத்தால் அவன் வலக்கையைப் பற்றிக் கொண்டாள்.

அவன் கரங்களின் சிலிர்ப்பு அவளுக்குத் தேவையாக இருக்க... அவன் கரத்தைத் தன் கழுத்தடியில் வைத்துக் கொண்டாள்.

அவள் வெப்பத்தைத் தனக்குள் பெற்றுக் கொள்பவன் போல்... தன் இடக்கரத்தையும் அவள் கன்னத்தில் வைத்துக் கொண்டான்.

"நந்து... இந்தக் காய்ச்சல் குறைந்தே ஆகணும். இதுக்கு மேல் என்ன செய்யன்னே தெரியலை. அப்படி யென்ன பிடிவாதம்... காய்ச்சலை விட மாட்டேன்னு...! ம்ம்..."

என்னவோ அவள்தான் அதைப் பிடித்து வைத் திருப்பது போல் அவன் பேச...

'ஆமா பிடிவாதம்தான். என்ன செய்வியாம்...?" வார்த்தைகளை உதிர்க்காமல் அவள் கண்களால் கேட்டாள்.

"என்ன செய்வேன்னு கேக்குறியா...? ஏன் அதை வாயால் கேக்க மாட்டியாக்கும்...! சரி. இப்போ என்ன செய்வேன்னு உனக்குத் தெரியணும். அதானே..." கேட் டவன்...

என்ன செய்யப் போகிறான் என்று அவள் யோசிக்கும் முன்பே...

கைகளை அவளிடமிருந்து விலக்கிக் கொண் டவன்... தன் கன்னத்தை அவள் கன்னத்தோடு இணைத்து இழைந்தான். அவன் செய்கையில் திகைத்தவள்... "பெப்பி... என்ன இது...? தள்ளிப் போ."

அவள் வார்த்தையில் இருந்த விலகல் அவளிடம் இருக்கவில்லை.

அது அவளது பலகீனத்தால் வந்ததா...? இல்லை யென்றால் அவளுக்கு அப்பொழுது அவனது குளிர்ச்சி தேவைப்பட்டதா என்பது தெரியவில்லை. தன்னையும் தன்

கட்டுப்பாட்டையும் மீறி... அவள் முகம் அவனோடு இழைந்தது.

அவள் சாதாரணமாக இருந்திருந்தால்... அவள் உடல் வெப்பம் முழுவதையும் போக்க... அவன் தன்னை முழுவதும் அவளோடு இணைத்திருப்பான். ஆனால் அவளது உடல்நிலை அவனது நினைப்பிற்கு அணை போட... முகத்தை அவளுக்குக் கொடுத்து விட்டு அமைதியாக இருந்தான்.

அவளது சூடு அதிகமாகத் தாக்கும் பொழுது... முகத்தில் ஈரத் தண்ணீரைத் தெளித்தவாறு அவன் வேலையைத் தொடர...

இது எவ்வளவு நேரம் நிகழ்ந்ததென்று இருவருக்கும் தெரியவில்லை.

கதவைத் தட்டும் ஒலியில் அவளிடமிருந்து விலகியவன்... இருக்கையில் நிமிர்ந்து அமர்ந்தான்.

நந்தினி இவ்வளவு நேரம் நிகழ்ந்ததை எண்ணித் திகைத்தவள்... அவன் கண்களை ஏறிட முடியாமல்... முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

கதவைத் திறந்து உள்ளே வந்த மருத்துவர்... "முகம் கொஞ்சம் தெளிவா இருக்கே! காய்ச்சல் குறைஞ்சுடுச்சு போல..." சொன்னவர்... டெம்பரேச்சர் பார்த்து விட்டு... "இனிமேல் பயப்பட வேண்டாம். நீங்க பழசையே கண்டினியூ பண்ணுங்க..."

அவன் பத்து போடுவதாக எண்ணிச் சொல்ல...

அங்கே நடந்ததை எண்ணி முகம் சிவந்தாள் ந்தினி.

அதை ஆசையாகப் பார்த்தவன்... "நீங்க அவங்க ட்டேயே சொல்லுங்க டாக்டர். காய்ச்சல் குறைஞ்சுடுச் ன்னு ஒத்துக்க மாட்டாங்க.."

அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு சால்ல... அவனை முறைத்தாள் நந்தினி.

"இப்போ கூடப் பாருங்க. எப்படி முறைக்கிறாங் ன்னு..." அவளை மாட்டிவிட... இன்னும் முறைத்தாள்.

"நந்தினி... சார் இவ்வளவு ஸ்ட்ரெயின் செய்ததால் ன் உங்களுக்கு இப்போ காய்ச்சல் குறைஞ்சு இருக்கு. தை அப்படியே விட்டால் மறுபடியும் டெம்பரேச்சர் திகமாயிடும். சோ கொஞ்சம் அவருக்கு ஒத்துழைப்புக் காடுங்க..." கண்டிப்பாகச் சொன்னார்.

"இல்ல டாக்டர்... எனக்கு எந்த ஸ்ட்ரெயினும் ல்லை..."

அவன் நந்தினியைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டி ட்டு, வேகமாகச் சொல்ல... நந்தினிக்கு என்ன செய்வ நன்றே தெரியவில்லை.

"ஓ.கே. யூ கேரி ஆன்..."

அவன் சொல்வதன் பொருளைத் துருவாமல்... வறு சில மருந்துகளை எழுதிக் கொடுத்துவிட்டு அங் நந்து சென்றார்.

அவர் சென்றவுடன்... "டாக்டர்கிட்ட அது என்ன பேச்சு...?" அவனிடம் பாய்ந்தாள்.

"டாக்டர் கேட்டதுக்குப் பதில்தானே சொன்னேன்..."

அவன் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு சொல்ல...

"ராஸ்கல்..." அவளது இந்த வார்த்தையில் கோபத்துக்குப் பதிலாகச் சிரிப்பே அதிகமிருந்தது.

அதை உணர்ந்தவன்... "இதுக்கே இப்படிச் சொன்னால் எப்படி...? அப்போ நான் இன்னும்..." என்ன நினைத்தான் என்பதை அவள் காதில் சொல்ல...

"பொறுக்கி... பொறுக்கி... கிட்டே வந்த கொன்னுடுவேன்... நினைப்பைப் பாரு..."

தன் இடக்கையால் சரமாரியாக அடிக்க...

அவள் அடிக்கத் தன் தோள்களைக் கொடுத்தவாறு நின்றான் ப்ரதீப்.

அவனை அடித்து முடித்தவள்... "போடா...!" அவனைத் தள்ளிவிட...

"போகவே மாட்டேன்..." அவன் பிடிவாதம் வார்த்தையில் மட்டுமல்லாமல்... செயலிலும் வெளிப்பட்டது.

மறுநாள் முதல்... நந்தினிக்கு அனைத்தையும் அவனே செய்தான்.

காலையில் எழுந்து அவள் ப்ரஷ் செய்ய உதவுவது துவங்கி... அவளை வெந்நீர் தொட்டுத் துடைக்க

வப்பது... உடை மாற்றுவது... காலைக் கடன் கழிக்க ட்பேன் வைப்பது முதல்... சாப்பிட வைப்பது... என னைத்திலும் அவன் பிடிவாதம் தெரிந்தது.

அவளுக்கு உதவ வந்த செவிலியை... அனைத் தயும் தான் பார்த்துக் கொள்வதாகச் சொல்லி அனுப்பி ட்டான்.

கோபமாக அவனை முறைத்த நந்தினியை அவன் ண்டுகொள்ளவே இல்லை.

ப்ரஷ் செய்யும் பொழுது வாயைத் திறக்க மாட்டேன் ன்று துவங்கிய அவள் பிடிவாதம் நேரம் செல்லச் செல்ல றங்கியது.

"சரி. ப்ரஷ் மட்டும் பண்ணிக்கிறேன்..." வேறு தியில்லாமல் அவள்தான் இறங்க வேண்டி இருந்தது.

வெந்நீர்க் குளியலின்போது... குளிக்கவே மாட்டேன் ன்று அவள் பிடிவாதம் பிடிக்க... அந்தப் பிடிவாதத்தை வளால் இரண்டு நாட்களுக்கு மேல் நீட்டிக்க முடிய ல்லை.

"ப்ளீஸ்... நீ போய் சிஸ்டரை அனுப்பேன்..." ஞ்சியபொழுதும் அவன் நிலையில் மாற்றம் இருக்க ல்லை..

"என் மனசு ஏன் உனக்குப் புரிய மாட்டேங்குது...?"

கலங்கிய குரலில் அவள் கேட்ட பொழுது...

"நீ பெண்... நான் ஆண்... என்று நினைப்பதால் னே உனக்கு இந்த தடுமாற்றம்? அது நியாயமும் கூட

முதலாவது நான் இப்போ உனக்கு அன்னியன் கிடை யாது. உன் கழுத்தில் தொட்டுத் தாலி கட்டிய கணவன்.

"இப்போ நான் அந்த உரிமையில் கூட இதைச் செய்ய நினைக்கலை. உன்னை ஒரு குழந்தையாகத் தான் நான் இப்போ நினைக்கிறேன். நான் உன்னோட அம்மாவின் இடத்தில் இருப்பதாக நினைத்துக் கொள். ஒரு அம்மாவுக்குத் தன்னோட குழந்தையைக் குளிக்க வைக்கும் போது எந்த மனநிலை இருக்குமோ... அந்த மனநிலையில்தான் நான் இப்போ இருக்கிறேன்.

"அதே மாதிரிதான் உனக்குப் பெட்பேன் வைப் பதும். உன்னால் இதை நம்ப முடிந்தாலும் இல்லை யென்றாலும்... ஏற்றுக் கொள்ள முடிந்தாலும்... இல்லை யென்றாலும்... நம் இருவருக்கும் நடுவில் நான் யாரை யும் வரவிட மாட்டேன்."

அவனது பிடிவாதமே இறுதியில் வென்றது.

விழிகளை மூடிக் கொண்டு அவனது ஒவ்வொரு செய்கைக்கும் உடன்படும்பொழுதும், அவன் நேசத்தில் மெழுகாய் உருகிக் கொண்டிருந்தாள் நந்தினி.

அவனது நேசம் அவள் மனம் முழுவதும் நிறைந்து... அவள் உதிரத்தோடு கலந்து... உயிரில் நிறைந்தது.

முதலில் விழி மூடி இருந்தவள்... அடுத்த நாட்களில் அவன் கண்களைப் பார்த்தவாறு இருக்க... அதில் ஒரு துளிக்கூட அருவருப்போ... ஒரு பெண்ணை வெற்றுட

மாகக் காண்பதால் ஏற்படும் சலனமோ இல்லாமல் போக... ஆச்சரியப்பட்டுப் போனாள்.

அவனது அன்பில் அவள் கண் கலங்க...

"வரவர ரொம்ப அழற நந்து...! உன்னை அழவே விடக் கூடாதுன்னு நான் நினைத்தால்... இதென்ன...?"

அவள் விழிகளைத் துடைத்தவன், அவளை மென்மையாகக் கழிந்து கொண்டான்.

"உனக்குத் தெரியாது ப்ரதீப்... ஒரு சின்னத் தொடுகை... மெல்லிய அணைப்பு... குளிக்க வைக்கிறது... சாப்பாடு ஊட்டுறது... அம்மா மடியின் சுகம்... ஒரே ஒரு முத்தம்... மெல்லிய புன்னகை... அனுசரணையான பேச்சு... நோயில் சிறு கவனிப்பு... இப்படி ஒவ்வொரு விஷியத்துக்கும் எவ்வளவு ஏங்கியிருக்கிறேன் தெரியுமா...!" அந்த நாள் நினைவுகளில் கண் கலங்கினாள்.

"ஏய்... இனிமேல் இதுக்கெல்லாம் நீ ஏங்க வேண்டிய அவசியமே கிடையாது. இப்போ பாரு..." சொன்னவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

அதோடு நில்லாமல்... அவள் முகமெங்கும் மென்மையாக இதழ்களை ஒற்றி எடுக்க... அவனைத் தடுக்காமல்... அவன் செய்கைக்குத் தன் முகத்தைக் கொடுத்தவாறு அமைதியாக இருந்தாள்.

அவன் முத்தத்தில் கரைந்து... இதழ் நடுங்க அவள் இருக்க... அவள் இதழ்களின் நடுக்கத்தை உணர்ந்த வனால்... அவளை விட்டு விலக முடியவில்லை.

அதே நேரம் அவள் உடல் நிலையும் மனதில் வந்து போக... அவன் முத்த ஏக்கத்தை நிறுத்த முடியாமல், "நந்து... ஐ கான்ட்..." சொன்னவன்... அவன் இதழ்களை அவள் இதழ்களோடு பொருத்திக் கொள்ள... அவனால் அவளை விட்டு விலக முடியவில்லை.

மென்மையாகத் துவங்கிய அவனது முற்றுகை... இறுதியில் அழுத்தமாக மாற... மூச்சுக் காற்றின் தேவை... அந்த முத்த யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்தது.

அந்த நிமிட உணர்வைத் தாங்க முடியாமல்... அவன் தனக்கு அறிமுகப்படுத்திய உணர்வின் அலைகள் உடல் முழுவதும் கிளர்ந்தெழ... கண் மூடி அதை அனுபவித்தவள்... அவன் நெஞ்சுக்குள் தன்னைப் புதைத்துக் கொண்டாள்.

தொடர்ந்த நாட்களில்... ப்ரதீப்பின் ஒவ்வொரு செய்கையையும் உன்னிப்பாய்க் கவனித்தவள்... அதோடு அவளது போலீஸ் மூளையும் விழித்துக் கொள்ள... இந்தச் செயல்களை எல்லாம் ஒரு சாதாரண மனிதனால்... சராசரி ஆண்மகனால் செய்ய முடியுமா என்ற கேள்வி பிறந்தது.

அவள் கண்களில் ஆராய்ச்சியைக் கண்டவன்... என்னவென்று புருவங்களை உயர்த்திக் கேட்டான்.

அவன் அவளுக்கு உணவூட்ட வரும்பொழுது... "பெப்பி... நீ என்ன படிச்சிருக்க...?"

நிதானமாக அவள் கேள்வி கேட்க...

அந்தக் கேள்வியை எதிர்பார்த்திருந்தவன் போன்று நன் வேலையிலேயே கவனமாக அவளுக்கு உண ஊட்டினான்.

அதை மறுத்தவள்... அவனையே பார்த்திருக்க...

"என்ன நந்து... நீ யார்னு என்னைப் பார்த்துக் கேட்டால்... பெப்பின்னு பதில் சொல்வேன்னு இப்படி சுத்தி வளைத்துக் கேட்கிற போல..."

"பேச்சை மாத்தாமல் நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு பெப்பி..." அழுத்தமாகக் கேட்டாள்.

"நான் படிக்கலைன்னு சொன்னால் உனக்கு என்னைப் பிடிக்காமல் போயிடுமா நந்து..." சிரித்த முகமாகவே அவன் கேட்டாலும்... அவளுக்குத்தான் முகம் இறுகிப் போனது.

அவள் முகமாற்றத்தைக் கவனித்தவன்... "ம்ச்... இப்போ எதுக்கு இப்படி முகத்தைத் தூக்கி வச்சுக்குற...?" அவள் தாடையைப் பிடிக்க... அதைத் தள்ளி விட்டாள்.

"உண்மையிலேயே நீ யார் பெப்பி...?"

அவனைப் பற்றி எதையும் அறிய முடிய வில்லையே என்ற ஆதங்கம் அவள் குரலில் தெறித்தது.

அதை உணர்ந்தவன்... வேகமாக அவள் அருகில் சென்று... "உனக்குச் சொல்லாமல் வேற யாருக்குச் சொல்லப் போறேன் நந்து! அதுவரைக்கும் என்னை ஆட்டோக்காரனாவே நினைச்சுக்கோ.

"ஏன்... உன்னோட ஐ.பி.எஸ். படிப்புக்கு... இந்த ஆட்டோக்காரன் ரொம்ப மட்டுன்னு நினைக்கிறியா...?" அவள் வாயை அடைக்க, அவனுக்கு வேறு வழி இல்லை என்பதாலேயே அவ்வாறு சொன்னான்.

அது சரியாக வேலை செய்தது.

"என்னடா சொன்ன...? அப்போ என் மனசு உனக்கு இன்னும் புரியவே இல்லையா...! புரியாமல் தான் இதையெல்லாம் செய்யுறியா...? ச்சே...! எனக்குச் சாப்பாடும் வேணாம். ஒண்ணும் வேணாம். போ..." அவனைத் தள்ளி விட்டாள்.

"ஐ லவ் யூ நந்து..."

அவள் அருகில் சென்று அவன் சொல்ல...

"லூசாடா நீ..." கேட்டவள் அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்.

"நந்து... நான் சொன்னாலும் கேட்பியா?" திடீரென அவன் கேட்க,

கேள்வியாக அவன் முகத்தைப் பார்த்தவள்... பதில் ஏதுவும் சொல்லவில்லை.

"நந்து... நான் ஏற்கெனவே சொன்னதுதான். நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாக் கேளுடா! இந்தக் கோபால் கேஸ் உனக்கு வேண்டாம். அதை அந்த சி.பி.ஐ.யே பாத்துக்கட்டுமே..." அவன் சொல்லி முடிக்கும் முன்னர் அவனிடமிருந்து விலகினாள்.

"அது என் தன்மானத்தோட சம்பந்தப்பட்டது. அதை நான் விட்டு விலகணும்னா... அதுக்கு நான் இல்லாமலே போகணும். என் கையில் இருந்து கேசை சி.பி.ஐ.க்குக் கொடுக்குறது... என் காக்கிச் சட்டையை உருவி அவங்ககிட்ட கொடுக்குறதுக்குச் சமம். என்னால் அது முடியாது."

கிட்டத்தட்ட கொந்தளிக்கும் நிலையில் அவள் சொல்ல... ப்ரதீப்பின் முகம் கவலையைக் காட்டியது.

அதை அவளிடமிருந்து மறைத்தவன்... அன்று சாயங்காலம் ரோஸ் வந்தவுடன்... அவளை நந்தினிக்குத் துணைக்கு இருக்க வைத்துவிட்டு.... சரவணனைத் தேடிச் சென்றான்.

நண்பனின் சோர்ந்த தோற்றத்தைப் பார்த்தவன்... விஷயம் பெரிதென்பதை உணர்ந்து கொண்டான்.

"என்னடா... நந்தினி ஏதாவது சொன்னாங்களா...? ஏதாவது சண்டையா...? அவங்களுக்கு மறுபடியும் உடம்பு சரியில்லையா...? எதையாவது வாயைத் தொறந்து சொல்லுடா...!"

தன் கேள்விக்கு அவனிடம் பதிலில்லாமல் போகவே எரிச்சலானான்.

"இன்னைக்கு நந்தினிகிட்ட கேஸ் பத்திச் சொன் னேன்டா. அவ விலக முடியாதுன்னு சொல்லுறா. எனக்கு என்ன செய்யன்னு தெரியலை..." தன் கவலையை நண்பனோடு பகிர்ந்து கொண்டான்.

"என்ன சொல்லுற...? அதான் இந்தக் கேசை விட்டு அவளை எடுக்குறதா ஐ.ஜி. சொன்னாரே...! பிறகு எதுக்குடா நீ நோண்டப் போற...?" - கடுப்பானான்.

"புரியாமப் பேசாதடா! எம்.பி. ராஜமாணிக்கம்... இந்தக் கேஸ் ஒண்ணு நந்தினி கிட்ட இருக்கணும். இல்லையா சி.பி.ஐ.க்குப் போகணும்னு ஒத்தைக் காலில் நிக்கிறான். அதாவது பரவாயில்லை. இப்போ அவளோட விபத்துக்கு முன்னாடி... அந்த டிரைவரை அவ பிடித்ததால்... கேஸ் சுலபமா முடிஞ்சுடும்னு... அவ திரும்பி வர்ற வரைக்கும் கேசை நிறுத்தி வைக்கக் கேட்டிருக்கான்.

"மடையன்... அவன் மட்டும் என் கையில் சிக்கினான்..." - பல்லைக் கடித்தவன்... "ஆனா எனக்கு ஒண்ணு மட்டும் நல்லாத் தெரியும்டா. எப்படியும் இந்தக் கேஸ் சி.பி.ஐ.கிட்ட போவதை அந்தக் குற்றவாளி விரும்பலை. அதான்... எப்படியாவது நந்தினியைத் தவிர்க்கணும்னு நினைக்கிறான்.

"ஆனா இங்கே இந்த ஜென்மங்கள் எல்லாம் சேர்ந்து நந்தினிக்கு ஒரு முடிவு கட்டாமல் அடங்க மாட்டானுங்க போல. நானும் எவ்வளவு நாள்தான் அவளுக்குத் துணையா இருக்க முடியும்...? கவலையா இருக்குடா.

"நாளைக்கே அவளுக்கு இந்த விஷயம்... அதாவது மறுபடியும் கேஸ் அவகிட்ட வருதுன்னு தெரிஞ்சா... பெட்டை விட்டு இறங்கி ஓடாமல் இருக்கணும்..." வருத்தமும் சிரிப்புமாகச் சொல்லி முடித்தான்.

எதுவாக இருந்தாலும்... எதிர்கொண்டுதான் ஆக வண்டும் என்ற உறுதியும் பிறந்தது.



ஒரு வழியாகப் பத்து நாள் மருத்துவ மனை வாசம் முடிந்து... வீட்டுக்கு அடியெடுத்து வைத்தாள் நந்தினி.

வீட்டிற்கு வந்ததே மனதுக்கு நிறைவாக ருந்தது. அதோடு ப்ரதீப்பின் இருப்பும் சேரவே நிம்மதி ாக உணர்ந்தாள்.

அடுத்து-வந்த ஐந்து நாட்கள் மட்டுமே ப்ரதீப்பால் வளிடமிருந்து உணமையை மறைக்க முடிந்தது. ன்று மதியம் சாப்பிட்டு முடித்த வேளையில்... அறைக் நவைத் தட்டி விட்டு சரவணன்... ரோஸ்... கந்தன் அனை ரும் வந்தார்கள்.

கந்தன் தன்னிடம் எதையோ சொல்ல வருவதை ணர்ந்தவள்...

"என்ன கந்தன்... எதையோ சொல்ல வந்துட்டு பங்குறீங்க...?" அவள் கேட்கவே,

"சார்... கோபால் கேஸ் மறுபடியும் உங்க கைக்கே ந்துடுச்சு. சி.பி.ஐ. வருவதையும் இன்னும் ஒரு மாசம் ர்ளிப் போட்டுட்டாங்க. அமைச்சர் ராஜமாணிக்கம்தான் டாப்பிடியா இருக்கார். தன்னோட நண்பனின் சாவுக்கு

யார் காரணம்னு தெரிஞ்சே ஆகணும்னு ஒத்தைக் காலில் நிக்கிறார்.

"அதுவும் கேசை நீங்கதான் ஹேண்டில் பண்ணணும்னு வேற ஐ.ஜி.கிட்ட சொல்லி விட்டார்."

கந்தன் சொல்லச் சொல்ல... நந்தினியின் முகம் எவ்வளவு மலர்ந்ததோ... அதே அளவு சரவணனும்... ப்ரதீப்பும் கவலை கொண்டார்கள்.

"இது எப்படி சாத்தியமாச்சு...? அதுவும் சி.பி.ஐ. வருவதையே தள்ளிப் போடணும்னா..." அவளது புருவங்கள் சுருங்கி யோசனையைக் காட்டியது.

"சரி. நீங்க போங்க..." அவரை அனுப்பியவள்... சரவணன், ரோஸ் பக்கம் திரும்பினாள்.

"பெப்பி... இவங்களுக்கு உடனே கல்யாணம் பண்ணி வச்சுடலாம்." அவர்களையே பார்த்தவாறு பெப்பியிடம் அவள் சொல்ல... சிறியவர்களின் முகம் நொடியில் மலர்ந்தது.

"சரி... மாப்பிள்ளை என்ன வேலை பாக்குறாருன்னு எனக்குத் தெரிய வேண்டாமா...? தெரிஞ்சுக்காமல் எப்படிப் பொண்ணு கொடுக்க முடியும்...?"

அவள் சரவணனையே பார்த்தவாறு சாதாரணமாக வினவ...

சரவணனுக்கு உள்ளுக்குள் குளிர் பிறந்தது.

அவன் அவசரமாக ப்ரதீப்பைப் பார்க்க...

"நந்து... அவன் எனக்கு அசிஸ்டண்டா இருக்கான். தாவது நான் ஓட்டுற ஆட்டோவுக்கு க்ளீனரா இருக்கான். ாதுமா...?"

"அவன்கிட்ட கேட்டால் நீங்க பதில் சொல்றீங்க...!" ாபமாகக் கேட்டாள்.

"உனக்கு என் மேல் நம்பிக்கை இருந்தால்... வங்க கல்யாணத்தை நடத்தி வை." ஒரே பேச்சில் டித்து விட்டான்.

"ரோஸ்... நீ என்ன சொல்லுற?" இதற்கு மேல் வனிடமிருந்து எதையும் வாங்க முடியாது என்பதால்... ாஸிடம் கேட்டாள்.

"நான் உங்களையும்... அவங்களையும் நம்புறேன். ங்க எனக்கு நல்லதைத்தான் செய்வீங்க."

ஒருவர் மேல் ஒருவர் கொண்ட நம்பிக்கையின் டிப்படையில் மட்டுமே அவர்களது திருமணம் நிச்சய னது.

ப்ரதீப்பும்... சரவணனும் நந்தினியின் வீட்டோடு ந்து விட்டார்கள். அடுத்த ஒரு வாரத்தில்... அவர்கள் நமணம் கோவிலில் வைத்து நடந்தது.

அவர்களைத் தேனிலவுக்குப் போகச் சொல்லவே... வனன் இப்பொழுது போக முடியாது என மறுத்து ட்டான்.

நந்தினியின் அறையைக் கீழேயே மாற்றி விட் ர்கள். அடிக்கடி மருத்துவமனை செல்ல வேண்டி நந்ததால்... அவ்வாறு முடிவு செய்தார்கள்.

அவர்களது அறைக்கு நேர் எதிர் அறையில்... சரவணன், ரோஸ் அறை இருந்தது.

எப்பொழுதும் சரவணனுக்கு ரோஸிடம் வம்பு செய்வது மிகவும் பிடிக்கும். இப்பொழுதோ... ஒரு நிமிடம் கூட அவளை விட்டு விலகவில்லை. அவர்களது நெருக்கம் பார்த்துச் சிரித்துக் கொண்டாள் நந்தினி.

அவர்களது முதலிரவின் பொழுது... அங்கிருந்து வந்த புரியாத ஒலிகளில்... நந்தினி மிகவும் சங்கடப்பட்டுப் போனாள்.

அவளால் இப்பொழுது தனியாக நிற்க முடிந்தது. அதுவும் அவளது பிடிவாதத்தாலேயே செயல்படுத்தினாள்.

அவள் பிடிவாதம் உணர்ந்து அவனும் அதற்கு இசைந்திருந்தான். கட்டிலில் இருந்து அவள் இறங்க முயலுகையில்... அதைப் பார்த்தவன்... "நந்து... இப்போ எங்க போற...?" அவசரமாக அவள் அருகில் வந்து கேட்டான்.

"இல்ல... கொஞ்சம் ஜன்னல் பக்கம் நின்னு வெளியே தோட்டத்தைப் பாக்கலாம்னு..." அவள் இழுக்க...

"நடக்கப் போறியா...? சொன்னாலும் கேட்காதே. இரு, நான் வாரேன்."

அவள் அருகில் செல்ல முயன்றான்.

"இல்ல... நானே கொஞ்சம் நடந்து பாக்குறேன்..." தயக்கமாகச் சொல்ல...

"இன்னும் ஒரு வாரமாவது ஆகட்டும், நந்து. ல்லாம் உன் நன்மைக்குதான் சொல்றேன். இப்போ ன்ன... உனக்கு ஜன்னல்கிட்ட போகணும். அவ்வளவு னே! இரு, நானே கூட்டிப் போய் விடுறேன்."

அவளது மறுப்பைக் கண்டு கொள்ளாமல்... வளை நெருங்கித் தூக்கினான்.

'அதே நேரம்... "ரோஸ்... என்ன பிடிவாதம் இது...? ப்! சொன்னா கேளு..." சரவணனின் கெஞ்சல் குரல்... ரவின் நிசப்தத்தைக் கடந்து கேட்க...

"பாவம் பய..." ப்ரதீப்பின் கமெண்டில் வெட்கப்பட்டுப் ானாள் நந்தினி.

ஜன்னல் அருகில் அவளை இறக்கி விட்டவன்... வள் முதுகில் சாய்ந்து... அவளை இடையோடு கட்டிக் ாண்டான்.

"இங்கே வந்து நின்னா மட்டும் சத்தம் கேட் தாக்கும்..."

அவன் அவள் காதுமடலில் இதழ் உரசக் கேட்க... ன்னல் பக்கம் பார்த்த முகத்தை அவன் பக்கம் மறந்தும் நப்பவில்லை.

அதோடு நிறுத்திக் கொள்ளாமல்... "கொடுத்து ச்சவன்... ஹ்ம்..."

அவன் மூச்சுக் காற்றின் சுவாசம் அவளைத் தகிக்க

"பெப்பி... ப்ளீஸ்...!"

அவளது கெஞ்சலில்... அவளை விட்டு விலகிப் படுக்கையில் சென்று அமர்ந்து கொண்டான். நந்தினியின் எண்ணமோ... அவர்கள் முதல் நாள் அறையில் தனித் திருந்ததை எண்ணிப் பார்த்தது.

நந்தினியின் வீட்டிற்கு வந்தபொழுது... முதல் நாள் இரவில் அவளோடு... அவளது படுக்கையில் ப்ரதீப் படுக்க... சற்றுத் திகைத்தாலும் எதுவும் அவள் சொல்ல வில்லை. ஆனால் ஏனென்று தெரியாமல் மனம் தடுமாறியது.

நடு இரவில் அவள் உறங்காமல் விழித்திருப்பதைக் கண்டவன்... "என்ன நந்து... கால் வலிக்குதா?" அவளை நெருங்கி அமர்ந்து கேட்க... இன்னும் தடுமாறினாள்.

கடந்து சில நாட்களில் அவனது நெருக்கம் அவளுக்குப் புதிதில்லை. ஆனால் இந்தத் தடுமாற்றம் ஏன் என்பது அவளுக்குப் புரியவில்லை.

அவனது கேள்விக்கு இல்லை என்பது போல் தலையசைக்க...

"அப்போ வேற என்ன...? தண்ணி வேணுமா...? பெட்பேன் வைக்கவா...?"

அவன் ஒவ்வென்றாகக் கேட்க, அனைத்திற்கும் அவளது மௌனமே பதிலாக இருந்தது.

"எதுவா இருந்தாலும் சொல் நந்து. சொன்னாத் தானே தெரியும்?" கனிவாகக் கேட்டான்.

"இதுவரை என்னோட 'பெட்'டை... பெட்ல..." அவள் தயக்கமாக இழுக்க...

"ம்... புரியுது. அதுக்கு ஒரு வழி இருக்கு..." சொன்னவன்... அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

"பெப்பி..." அவள் தடுமாறி அழைக்க...

"ம்ச்... இப்போ பேசாமல் கண்ணை மூடித் தூங்கு. இன்னும் கொஞ்ச நாள் என்னைப் பழகணும். பிறகு என்னோட இந்த நெருக்கத்தைப் பழகணும். சோ... ஒரேயடியா என்னோட நெருக்கத்தைப் பழகிக்கோ..." சுலபமாகச் சொன்னவன் அவளை இறுக்கிக் கொண்டான்.

எப்பொழுதும் போல... அவனை விலக்கித் தள்ள அவள் கைகள் அசைய மறுத்தது.

மாறாக... அவன் முதுகில் கை கொடுத்து... அணைத்துக் கொண்டு கண்கள் மூடினாள்.

அடுத்து வந்த நாட்களில் நந்தினி பிடிவாதமாக நடக்க முயல... அவளைக் கட்டுப்படுத்த முயலாமல் அவளுக்குத் துணை நின்றான்.

அவள் கால்களை அழுந்த ஊன்றாமல்... அவள் எடையைத் தாங்கியவாறு... அவளுக்குப் பக்கபலமாக இருந்தான்.

சில நேரம் சில்மிஷங்கள் செய்யவும் அவன் தயங்கவில்லை. ஒரு நாள்... காய்ச்சல் வருவதற்கு அறிகுறியாக... வாய் சற்றுச் சுவையற்று இருப்பதாகச் சொல்லவே...

"இரு. இப்போ வாரேன்..."

சொல்லிச் சென்றவன்... கையில் சாக்லேட்டோடு வந்த பொழுது புரியாமல் பார்த்தாள்.

நமுட்டுச் சிரிப்பு சிரித்தவாறு... சாக்லேட்டைப் பிரித்து அவன் வாயில் போட்டுக் கொள்ள... அதைப் பார்த்தவள்... "எனக்குச் சரியாப் போச்சு." அடுத்து அவன் என்ன செய்வான் என்று தெரிந்ததால் வேகமாகச் சொன்னாள்.

அதைக் கண்டு கொள்ளாமல்... அவள் அருகில் நெருங்க... கலவரமாக அவனைப் பார்த்தாள். எழுந்து ஓடத் தன் கால்கள் ஒத்துழைக்காமல்... ஒத்துழைத்தாலும் எழுந்து செல்ல மனமில்லாமல் தேங்கிவிட... அவன் இதழ்களில் இருந்த இனிப்பு... அவள் வாய்க்குள் கரைந்தபொழுது... உருகித்தான் போனாள்.

முழுதாக மூன்று வாரங்களின் முடிவில்... அதற்கு மேல் தன் காலில் இருந்த மாவுக்கட்டை வைத்திருக்க அவள் தயாராக இருக்கவில்லை. மருத்துவமனைக்குப் பரிசோதனைக்குச் சென்றவள்... தான் 'பேண்ட்' மட்டும் போட்டுக் கொள்வதாகச் சொன்னவள்... மாவுக்கட்டுப் போட மறுத்து விட்டாள்.

தொடர்ந்த நாட்களில்... தன் வேலைகளைத் தானே செய்யப் பழகிக் கொண்டாள். சற்றுத் தடுமாறினாலும்... ப்ரதீப்பின் உதவியை ஏற்க மறுத்தாள்.

அவன் முகம் வாடும் நேரங்களில்... நின்ற இடத்திலேயே இருந்து... அவன் அணைப்பை ஏற்றாள்.

ஒருவர் முகம் பார்த்து ஒருவர் நடந்தார்கள்.

முதல் நாள் அவள் அலுவலகம் சென்ற பொழுது... வள் வலது காலில் பெருவிரலுக்கு அடுத்த விரலில் ன் ஃபிராக்சர் என்பதால்... அந்த விரல்... அவள் ந்தாலும் அசைய முடியாத அளவிற்குப் பாதத்தின் டியில் ஒரு தடுப்பு வைத்து... பேண்ட்-எய்டை இறுக்க கச் சுற்றி... காலில் ஷு மாட்டி விட்டான்.

அவனது அன்பில் நெகிழ்ந்தவள்... "ஐ லவ் யூ ப்பி..." அதே நெகிழ்வோடு சொன்னாள்.

"பாத்து நடந்துக்கோ நந்து. கேஸ் விஷயத்தில் ாம்பக் கவனம் அவசியம்..."

ஆயிரம் பத்திரம் சொல்லி அனுப்பினான்.

அவள் அன்று பிடித்து வைத்திருந்த டிரைவரிடம் சாரணை செய்ய...

தன் நண்பன் தரணிக்கு... இறந்த மந்திரி... பால் செய்த கொடுமைக்குப் பழி வாங்கவே இவ்வாறு ந்து கொண்டதாகச் சொன்னான்.

அவன் சொன்ன நண்பனின் விலாசமும்... போன் ன்னும் சரியாக இருக்கவே... சற்றுக் குழம்பினாள்.

தன் சந்தேகத்தை ப்ரதீப்பிடம் உரைக்க... அவள் ான்னவற்றை ஆழ்ந்து கவனித்தவன், ஒரு யோசனை ற... அடுத்த நாளே அதைச் செயல்படுத்த முனைந்

"எல்லாம் சரி. உன் நண்பன் தரணியைப் பத்திச் சொன்னியே... இந்தப் போட்டோக்களில் அவன் யாருன்னு சொல்லு, பார்ப்போம்...?"

அவள் போட்ட புகைப்படங்களில்... எது தரணி என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் திணறினான்.

அவனது திணறலைக் கண்ட நந்தினியின் கோபம் எல்லை கடக்க... அவன் அருகில் இருந்த காவலர்களைப் பார்க்க...

அவர்கள் கொடுத்த அடியில்... தனக்குத் தரணி யார் என்றே தெரியாது எனப் புலம்பினான்.

"அப்போ எதுக்காக... யாருக்காக நீ கோபாலைக் கொன்ன...?"

அவள் கேள்விக்கு அவன் பதில் சொல்லத் தயாராக இருக்கவில்லை. எவ்வளவோ முயன்றும்... அவன் வாயைத் திறக்கவே இல்லை.

தன் காவலர்களிடம் அவனை ஒப்படைத்து விட்டு அவள் வீட்டிற்கு வர... அவளது சோர்ந்த தோற்றம் கண்டு... ரோஸிடம் ஒரு டீ வாங்கிக் கொண்டு... அவளைக் காணச் சென்றான்.

"என்ன ஆச்சு?" கேட்டவாறு அவள் கையில் காஃபியைக் கொடுத்தான்.

அதை வாங்கியவள்... மடை திறந்த வெள்ளமாகக் கைதி சொன்னவற்றைச் சொன்னவள்... தான் எவ்வளவு

கட்டும்... அவன் உண்மை சொல்லாத விதத்தையும் சான்னாள்.

அவள் குடித்த கப்பை வாங்கி டீபாயில் வைத் வன்... அவள் மடியில் படுத்துக் கொண்டான்.

அவன் இந்தச் செய்கையை எதிர்பார்க்காமல்... பெப்பி... என்ன இது...?" கேட்டாலும்... அவள் கரங்கள் வன் சிகைக்குள் அலைந்தது.

ஒரு நிமிடம் எதுவும் சொல்லாமல் இருந்தவன்... னக்கு எங்க அம்மா மடியில் இப்படி படுக்குறதும்... வங்க என் சிகையை இப்படிக் கோதுவதும் ரொம்பப் டிக்கும் தெரியுமா!"

கண்களை மூடிச் சொன்னவன்... அவள் பக்கம் ரும்பிப் படுத்து... அவள் வயிற்றில் தன் முகத்தைப் தைத்துக் கொண்டான்.

நந்தினிக்குத் தன் கேசைப் பற்றிய சிந்தனைகள் னைத்தும் தொலைந்து, மறந்து போனது.

அந்த நிமிடம் நினைவில் நின்றவன்... பெப்பி ட்டுமே.

எதுவும் சொல்லாமல்... அவனை அணைத்தவாறு... கைக்குள் விரல் விட்டு அளைந்தவாறே இருந்தாள்.

"அத்தை உன்னோடவேதானே இருந்தாங்க பெப்பி. றகு என்ன?" அவன் அமைதி பிடிக்காமல் கேட்டாள்.

"தன்னோட குழந்தையைப் பயந்து பயந்து ஒரு ய் கொஞ்சுறதைப் பாத்துருக்கியா! எங்க அம்மா என்னை

அப்படித்தான் கொஞ்சுவாங்க. அவங்க அவங்களோட பயத்தை, தயக்கத்தை, இயலாமையை உடைக்க விரும்பியது ஒரு விஷயத்துக்கு வேண்டிதான்..."

சற்று அமைதியாக இருந்தவன்... "அது உன் விஷயத்தில் மட்டும்தான் நந்து. அப்போல்லாம் சில நேரம் உன் மேல் கொஞ்சம் பொறாமை கூடப் பட்டிருக்கேன் தெரியுமா...!" அவள் மடியிலிருந்து முகம் நிமிர்த்தி... அவளைப் பார்த்தவாறு சொன்னான்.

"இப்போ..." அவள் கேட்க...

"அதான் நீயே கிடைச்சுட்டியே...! சந்தோஷம்தான்..."

அவன் கண்ணைச் சிமிட்டிச் சொல்ல... முதல் முறையாக அவன் நெற்றியில் தன் இதழ் பதித்தாள்.

அவளையே ஆசையாகப் பார்க்க... அவன் கண்களில் தெரிந்த ஆர்வம் அவளைக் கவலைக் குள்ளாக்கியது.

நந்தினியால் எவ்வளவு முயன்றும் தன் பாட்டி சொன்னவற்றை மறக்க முடியவில்லை.

தாலி கட்டியபோது இல்லையென்றால்... தன்னுடன் வாழ்ந்த அடுத்த நிமிடம் எங்கே அவன் தன்னை விட்டுப் போய் விடுவானோ என்ற பயம் அவளை இப்பொழு தெல்லாம் அலைக்கழிக்கத் துவங்கி இருந்தது.

இரவு உணவை முடித்தவர்கள் அறைக்குள் சென்று முடங்க... அவளை நெருங்கிப் படுத்தவன்... அவள் இடை

ல் கை கொடுத்து அழுத்த... அதன் பொருள் உணர்ந்த ந்தினியின் உடல் நடுங்கியது.

அதை உணர்ந்தவன்... வேகமாக அவளை விட்டு லகி, அவளைத் தன் பக்கம் திருப்பி... அவள் முகத்தைப் ார்க்க... அவன் பார்வையின் தீட்சண்யம் தாளாமல்... னக்குத் தூக்கம் வருது..." உள்ளே சென்ற குரலில்... ார்வையை விலக்கியீவாறு அவள் சொல்ல...

"சரி தூங்கு. இப்போ உன்னை யார் என்ன சான்னாங்க...?" சொன்னவன் அவளைத் தன் பக்கம் ருப்பி, அவள் தலையை வருடிக் கொடுத்தான்.

அந்த வருடலின் இனிமையில் கிறங்கினாலும்... ள்ளுக்குள் இனம் புரியாத தவிப்பு.

ப்ரதீப்பை ரொம்ப ஏங்க விடுகிறோமோ...! துக்கப் ந்து தொண்டையில் சுழல... உறக்கம் வராமல் தவித் ாள்.

அவள் தவிப்பை உணர்ந்தவன்... "என்னம்மா...!" வள் முகத்தை நிமிர்த்திக் கேட்க...

உதடு துடிக்க... "சாரி..." என்று சொன்னவளால்... ன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் குலுங்கினாள்.

"ம்ச்... என்ன இது...? நியாயமாப் பார்த்தால் ான்தான் சாரி சொல்லணும். நீ ஏன்...? எல்லாம் ரியாயிடும் தூங்கு..." மென்மையாக இதழை அவள் நற்றியில் ஒற்றி எடுக்க... அவனை இறுகக் கட்டிக்

உறக்கம் அவளைத் தழுவ... அவள் முகத்தைப் பார்த்தவன்... 'உன் மனசில் இன்னும் ஏதோ ஒண்ணு உறுத்திட்டே இருக்கே... என்ன அது நந்து?" அவளிடம் கேட்டவன் அதை விடுத்து... "நீ கேசில் ஒவ்வொரு படியைக் கடக்கும்போதும்... எனக்கு ரொம்பப் பயமா இருக்கு நந்து..." எண்ணியவன்... விழிகளை மூடிக் கொண்டான்.



மறுநாள் காலை விடியல் கொஞ்சம் குழப்பமாகவும்... எரிச்சலாகவும் விடிந்தது.

அவள் மனநிலையை உணர்ந்து... அவளை காலை வாக் கூட்டிச் சென்றான். கடல் மணலில் நடப்பது அவளுக்குக் கொஞ்சம் சிரம மாகத்தான் இருந்தது.

நந்தினி எதையும் பேச முயலாமல்... தனக்குள் ளேயே மூழ்கி இருந்தாள். இல்லையென்றாலும்... அவள் கலகலப்பாகப் பேசும் ரகம் இல்லைதான். இருந்தாலும் இந்த அமைதி அவனையும் தாக்கியது.

அவள் கரத்தைத் தன் கரத்தோடு கோர்த்துக் கொண்டான்.

அவள் கனவிலிருந்து விழிப்பவள் போல், திடுக்கிட்டு அவனைப் பார்க்க... "ரொம்ப நடந்துட்ட. அப்படி உட்காருவோம்..." சொன்னவன் சிமெண்ட் பெஞ்சில் அவளோடு அமர்ந்தான்.

"எப்போ பாத்தாலும்... கேஸ்தான் மண்டைக்குள்ளே டுமா? யோசிக்க வேற எதுவுமே இல்லையா...?" மெது ாகப் பேச்சைத் துவங்கினான்.

"வேற என்ன யோசிக்கச் சொல்லுற...?" புரியாமல் கட்டாள்.

"வேற என்ன யோசிக்கிறதா...? உனக்கு இப்போ ல்யாணம் ஆயிடுச்சு. புருஷன்னு நான் ஒருத்தன் ருக்கேன். இனிமேல் நம்ம எதிர்காலம்... இப்படி ல்லாத்தையும்தான். இனிமேல் காக்கிச் சட்டையை ாட்டும்போது மட்டும்தான் நீ போலீஸ் என்ற நினைப்பே னக்கு வரணும். புரியுதா...!"

அவளுக்கு வாழ்க்கையைப் புரிய வைக்க யன்றான்.

"எனக்கு எதிர்காலம் பத்தி யோசிக்க எதுவுமே ல்லை பெப்பி. ஏன்னா... என் எதிர்காலம் நீதான். நீ ட்டும்தான். நீ இருக்கும்போது எனக்கு என் வாழ்க் கையைப் பற்றிய கவலையே இல்லை. நீ என் ாழ்க்கையில் வரும்வரைக்கும்... எனக்கு வாழ்க்கை ன்ற ஒன்று இருக்கு என்ற நினைப்புக் கூட இருந்தது டையாது.

"உயிர் போகுறவரைக்கும் வாழணும். அது ட்டும்தான் நினைப்பில் இருந்தது. ஆனா இப்போ... ன் நினைப்பு ஃபுல்லா நீ மட்டும்தான் இருக்க. என் ாழ்வில் நீ இல்லாத ஒரு நிமிஷத்தைக் கூட என்னால் னைத்தே பார்க்க முடியலை.

"நீ என்னை விட்டுப் போயிட மாட்டதானே...! அப்படி நீ போயிட்டா... அந்த நிமிஷமே நானும் இந்த உலகத்தை விட்டுப் போயிடுவேன்."

இமைகளை மீறி வழியத் துடித்த கண்ணீரை... இமைகளைச் சிமிட்டி அடக்க அவள் பாடுபட... அவள் பேச்சில் திகைத்து அமர்ந்திருந்தான் ப்ரதீப்.

அவளது ஒவ்வொரு வார்த்தையும் ப்ரதீப்பைப் பிரமிக்க வைத்தது. கர்வப்படுத்தவும் செய்தது.

ஒரு பெண் தன் எதிர்காலமே நீதான் என்று சொல்லும் நிலையில் தான் இருப்பதை எண்ணிப் பெருமைப்பட்டான்.

அதே நேரம்... இந்த ஒரு வார்த்தையை, நம்பிக்கையைத் தன் வாழ்நாள் முழுவதும் தான் காப்பாற்ற வேண்டும் என்ற உறுதியும் பிறந்தது.

'நந்து... நந்து...' அவன் மனம் அவளை இறுக்கிக் கொள்ளப் போராட... அதை மறைத்தவன்...

"ஏய்... என்ன நீ... நான் என்னைப் பத்தி நினைச்சுப் பாருன்னு சொன்னா... இப்படி உக்காந்து அழுவுற... என்னைப் பார்த்தால் கொஞ்சம் கூடப் பாவமா தெரியல உனக்கு...?

"எனக்கும் சின்னச் சின்னதா எக்கச்சக்க ஆசை இருக்கு. காத்து கூட நமக்குள் வர முடியாத அளவு... நீ என்னை இறுக்கிக் கட்டிக்கணும். மூச்சு முட்ட முட்ட...

நட்டைப் பிரிக்காமல் முத்தம் கொடுக்கணும். நமக்குள் தத் தடையும் இல்லாமல்..."

அடுத்து சொன்னவை அவள் காதில் ரகசியமாகச் ால்ல...

அவளால் அதற்கு மேல் கேட்க முடியாமல் வெட்கம் ங்கித் தின்றது. அவசரமாக அவன் வாயை மூடியவள்... பப்பி... போதும். பப்ளிக் பிளேஸ்ல உட்கார்ந்துட்டு ான பேச்சு இது...?"

அவன் பேச்சில் கூடேறிய அவள் தேகத்தின் க்கம் அவள் விரல்களில் தெரிய... அழுத்தமாக அவள் ரல்களில் இதழ் பதித்தான்.

அவசரமாகக் கையை விலக்கியவள்... "வீட்டுக்குப் ாகலாம்."

இமைகள் படபடக்க... அவன் மீசையின் குறுகுறுப்பு ள்ளங்கையை இம்சிக்க... சிவந்த முகத்தை அவ க்குக் காட்டாமல் இருக்க மிகுந்த பாடுபட்டாள்.

அவளை ரசனையாகப் பார்த்தான்.

அவன் பார்வை அவளை மேலும் தவிக்க விட... பப்பி..." அழுத்தமாக அழைத்து அவனைக் கலைக்க பன்றாள்.

ஆனால் இருந்த மனநிலையில் குரல் குழைந்து ளிவர... அவளுக்கே தனக்கு இப்படிக் கூட பேச நமா என்று திகைத்தாள்.

அதோடு... மனதில் எழுந்த கிளர்ச்சி... தேகத்தில் அலையலையாகப் பரவிய உணர்வு... அவனுக்குள்ளே கரைந்து போகத் துடித்த அவள் தேகம்...

அவன் கையணைப்புக்குள் புகுந்து கொள்ள உந்திய மனம்... அவன் கேட்டவற்றை உடனே கொடுக்கச் சொல்லி முரண்டிய உள்ளுணர்வு... தனக்கு இப்படியான உணர்வுகள் இருக்கின்றன என்பதையும்... தனக்கு இந்த உணர்வுகளை அறிமுகப்படுத்த ஒருவன் வருவான் என்பதையும்... சில மாதங்களுக்கு முன் சொல்லியிருந்தால்... அவர்களைத் தூக்கிப் போட்டுப் பந்தாடியிருப்பாள். ஆனால் இன்று...

அங்கிருந்து எழுந்து செல் என்று மூளை கட்டளையிட்டாலும்... அவன் அருகாமையை விட்டு விலக மனமில்லாமல் தவிப்பாய் அமர்ந்திருந்தாள்.

"நந்து... இந்த நிமிஷம் எப்படி இருக்க தெரியுமா...? ரியல்லி... ஐ காண்ட் கண்ட்ரோல்."

ஆழ்ந்த குரலில் அவன் சொல்ல... இதற்கு மேல் முடியாது என்பது போல் எழுந்து நடந்தாள்.

சில அடிகள் நடந்தவள்... அவன் வருகிறானா என்று திரும்பிப் பார்க்க...

தலையை அழுந்தக் கோதியவாறு அவன் அமர்ந்திருப்பது தெரிய... ஓடிச் சென்று அவனைக் கட்டிக் கொள்ள வேண்டும் என்ற வேகம் எழுவதைத் தடுக்க முடியாமல் தவித்தாள்.

இங்கேயே இருந்தால்... பொது இடம் என்று கூடத் தான் பார்க்க மாட்டோம் என்பது புரிய... காருக்கு விரைந் தாள்.

'அவனை ரொம்பத் தவிக்க விடுறோமோ...' தன்னையே கேட்டுக் கொண்டாள்.

பத்து நிமிடங்கள் சென்ற பிறகு... ஓட்டுனர் இருக்கையில் அவன் வந்து அமர... தானாகச் சென்று அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

அவள் தலையில் தன் கன்னத்தை வைத்துத் தேய்த்தவன்... காரைக் கிளப்பிச் சென்றான்.

வீட்டிற்கு வந்து... ஷவரின் அடியில் நனைந்த பிறகும்... மனதின் சிலிர்ப்பும்... தேகத்தின் தகிப்பும் அடங்க மறுத்தது.

கேஸ் பற்றிய எண்ணம் முற்றிலும் தொலைந்து போயிருந்தது.

இன்று காலையில் தான் இருந்த மனநிலை என்ன... இன்று இருக்கும் மனநிலை என்ன...?

குளித்து முடித்து வெளியே வர... சேரில் அமர்ந் திருந்த ப்ரதீப்பைப் பார்த்தவள் தயங்கி நின்றாள்.

ப்ரதீப் செய்தித் தாளில் கவனமாக இருக்க... அவளுக்குத்தான் ஒரு மாதிரியாக இருந்தது. கடிகாரத் தைப் பார்க்க... அது ஒன்பது மணியைக் காட்டியது. இன்னும் அரைமணி நேரத்தில் கிளம்பினால்தான்... அலுவலகத்துக்குப் பத்து மணிக்குச் செல்ல முடியும்.

உடை மாற்ற யூனிஃபார்மை எடுத்து வைத்தவள்... தயக்கமாக அவனைப் பார்த்தாள்.

பக்கவாட்டில் திரும்பிப் பார்க்க... அங்கிருந்த நிலைக்கண்ணாடியில் விழுந்த தன் பிம்பத்தை நம்ப முடியாமல் பார்த்தாள்.

ஹாஸ்டல் சென்ற பிறகு... கண்ணாடி பார்க்கும் வழக்கத்தையே விட்டு விட்டவள் அவள். ஆனாலும் ஐ.பி.எஸ். ஆன பிறகு... எப்பொழுதாவது பத்திரிகையில் வரும் தன் புகைப்படத்தைப் பார்த்திருக்கிறாள்தான்.

அவற்றில் எல்லாம் இறுக்கமாகத் தெரியும் தன் முகம்... முதல் முறையாக மலர்ந்திருப்பதைக் கண்டாள்.

முடி வெட்டி நாள் ஆகிவிட்டதால்... முகம் மறைக்கும் அளவுக்கு முடியும் வளர்ந்திருந்தது. பொட்டில்லாத நெற்றி மனதைப் பாரமாக்க... அவசரமாக அங்கிருந்த ட்ராயர்களை அலசினாள்.

ஏற்கெனவே வாங்கியிருந்தால் அல்லவா பொட்டு அங்கிருக்கும்.

"ரோஸ்..."

அவள் குரலுக்கு... அடித்துப் பிடித்து ஓடி வந்தாள்.

அவள் வந்த வேகத்தைப் பார்த்தவள்... "இப்போ எதுக்கு இவ்வளவு அவசரமாக ஓடி வர்ற?" அவளைக் கடிந்து கொள்ள... அவளை வேற்றுக் கிரகவாசியைப் போல் பார்த்தாள்.

அவள் பார்வையை உணர்ந்து... நந்தினிக்கே ஒரு மாதிரியாகப் போயிற்று.

நந்தினியின் முக மாற்றத்தை உணர்ந்து... ரோஸ் சங்கடமாக உணர... அவர்கள் அருகில் வந்தான் ப்ரதீப்.

நந்தினியின் கரத்தை அழுத்தியவன்...

"என்னம்மா...! உங்க அண்ணி பேசுறதைப் பார்த்து உனக்கு மயக்கம் வர்ற மாதிரி இருக்கா என்ன...? அப்போ இனிமேல் அடிக்கடி நீ மயங்க வேண்டி இருக்கும்..." புன்னகைத்தவாறே சொன்னான்.

"என்னது... மயக்கமா...! யாருக்கு...? என்ன ஆச்சு?" ப்ரதீப்பின் குரலை அரைகுறையாகக் கேட்டவாறு... பதட்டமாகக் கேட்டான் சரவணன்.

"உன் பொண்டாட்டிக்குத்தான்டா...!" ப்ரதீப் சொல்ல...

"அடிக் கள்ளி... முதல்ல என்கிட்ட சொல்லாமல்... என்ன இது...! இருந்தாலும் நான் ரொம்பச் சந்தோஷமா இருக்கேன்..." வேகமாக அவள் கரங்களைச் சேர்த்துப் பிடித்தவன்... அவசரமாக வழிந்தான்.

அவன் பேச்சைக் கேட்டுப் புரியாமல் திகைத்த வர்கள்... புரிந்த பிறகு கொல்லென சிரிக்க...

ரோஸ் அவன் தலையில் நறுக்கெனக் குட்டியவள்... "லூசு மாதிரிப் பேசாதீங்க...!" அவனை அடக்க முயன் றாள்.

"ஏய்... கல்யாணம் முடிந்த உடனே மயக்கம்னா... அதானே...!" அவனுக்குப் புரியவே இல்லை.

நந்தினியின் முன்னிலையில் அந்தப் பேச்சு... அவளுக்குச் சகிக்க முடியாமல் இருந்தது.

அவனைக் கண்டு கொள்ளாமல்... "நீங்க கூப்பிட்டீங்களே அண்ணி... ஏதாவது வேணுமா?" என்றாள்.

நந்தினியைப் பார்த்தவுடன் சரவணனும் அங்கிருந்து நழுவினான்.

"இல்ல... அது என்னன்னா... ஒண்ணுமில்ல. நீ போ..."

அவளிடம் கேட்கத் தயக்கமாக இருந்தது.

ரோஸுக்கும் அதற்கு மேல் அவளிடம் துருவிக் கேட்கத் தயக்கமாக இருந்தாலும்... "எதுன்னாலும் சொல்லுங்க..." என்றாள்.

"என்னன்னு சொல்லு நந்து...! நீ சும்மா அவளைக் கூப்பிடலைதானே..." அவனும் கேட்க...

அவனைப் பரிதாபமாகப் பார்த்தவள்... அறைக்குள் சென்றுவிட்டாள்.

"நீ போம்மா... நான் என்னன்னு கேட்டு சொல்றேன்..." அவளை அனுப்பியவன்... நந்தினியிடம் வந்தான்.

"என்ன நந்து இது...! எத்தனை முறை சொல்லிட்டேன். இப்படி உனக்குள்ளேயே நீ முடங்கிப் போகக்

கூடாதுன்னு! ஆனாலும் கேட்காமல்... அவ சின்னப் பொண்ணு. இந்தக் கேலி... கிண்டல்... எல்லாத்திலும் நீ கலந்துக்கணும்." ப்ரதீப் அவளிடம் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே...

"ரோஸ்! இப்போ எதுக்கு இப்படி அழுவுற...? நான்தான் தெரியாமல் கேட்டுட்டேன்னு சொல்லிட்டேன் இல்ல. அதுக்கெல்லாம் முப்பது, நாப்பது நாள் ஆகும்னு எனக்குத் தெரியாதுடி. நான் வளர்ந்த ஆஸ்ரமத்தில் எனக்கு இதையெல்லாம் சொல்லித் தரலை.

"நான் டீசண்டா நடந்துக்கிறதே ப்ரதீப் கிட்ட வந்த பிறகுதான். சொன்னா புரிஞ்சுக்கடி. இப்படி அழாதே. நான் வேண்ணா அவங்ககிட்ட போய்... அது அப்படி இல்லை யாம்னு சொல்லிட்டு வந்துடவா...!" அவன் அப்பாவியாகக் கேட்க...

வெடுக்கென நிமிர்ந்து பார்த்தவளின் பார்வையோ... "ஒரு ஆணியும் புடுங்க வேண்டாம்..." என்று சொல்ல... கப்பென அமைதியானான்.

"தெரியாமல் சொன்னதுக்கெல்லாமா இப்படி அழுவாங்க... ஏய் அழாதயேன்..." கெஞ்சினான்.

"நான் ஒண்ணும் அதுக்கு அழல." அவள் சொல்ல...

"அதான பாத்தேன். இதுக்கெல்லாமா அழுவாங்க..." அவன் கேலியாகச் சொல்ல... ரோஸின் முறைப்பில் அமைதியானான்.

"அப்போ இதென்ன வேண்டுதல் அழுகையா...?" அவள் அழுவதை நிறுத்தாமல் இருக்கவே கேட்டான்.

"உங்க தலை. இருந்து இருந்து... இன்னைக் குத்தான் அண்ணி பொறுமையா... நிதானமா என்கிட்ட பேச வந்தாங்க. நான் அதைப் புரிஞ்சுக்காமல்... அவங்க மனசு கஷ்டப்படுற மாதிரி நடந்துட்டேன். அப்படியே அவங்க முகம் தொங்கிப் போச்சு தெரியுமா...!"

'எவ்வளவு தூரம்...' என அவனுக்கும் கேட்க ஆசை தான். ஆனால் சூழ்நிலை கருதி அடக்கிக் கொண்டான்.

"அவங்க எதையோ கேட்க வந்தாங்க... அதையும் கேட்காமலே போயிட்டாங்க. அந்த நேரம் நீங்க வந்து... பெரிய மன்மதன் மாதிரி டின் கணக்கா வழிசல் வேற... ஆண்டவா...!" சோகத்திலும் அவனைக் கேலி செய்ய மறக்கவில்லை.

இவர்கள் பேச்சைக் கேட்ட நந்தினி, ப்ரதீப்பைப் பார்க்க... "அவ உன்னைப் புரிஞ்சுக்கிட்ட அளவு, நீ அவளைப் புரிஞ்சுக்கலையே...! போ... போய் என்ன வேணுமோ கேளு...!" அவள் தயக்கங்களை ஒவ் வொன்றாகத் தகர்க்க முயன்றான்.

"ரோஸ்...!" இந்த அழைப்பில் குரல் தெளிவாகவே இருந்தது. அவள் குரலுக்குக் கண்களைத் துடைத்த வாறு வெளியே வந்தவள், "சாரி அண்ணி, ஏதோ தெரி யாமல்... சரி, உங்களுக்கு என்ன வேணும்...?" ஆர்வ மாகக் கேட்டாள்.

"இல்ல... ஹேர் கட் பண்ணலை... முடி வேற வளர்ந்துடுச்சு... அது மட்டும் இல்லை..." தயக்கமாக அவள் இழுக்க... உள்ளே ஓடிச் சென்றவள், எதிரில் வந்த சரவணனையும் இடித்துத் தள்ளிவிட்டு, ஒரு பெரிய பாக்ஸோடு வந்தாள்.

"இந்தாங்க! உங்களுக்கு என்ன வேணுமோ எடுத் துட்டுத் தாங்க." அவள் கையில் கொடுத்து விட்டாள்.

அறைக்குள் வந்த ரோஸ், கீழே தலையில் படுத்திருந்த சரவணனைப் பார்த்தவள், "என்னங்க! கீழே படுத்து இருக்கீங்க...?" வேகமாக அவன் அருகில் சென்று கேட்டாள்.

அவனோ, முகத்தை அப்பாவியாக வைத்துக் கொண்டவன், "நீ என்னை இடிச்சுத் தள்ளியதைப் பத்தி கூட நான் கவலைப்படலை. ஆனால், ஏன் கீழே படுத்து இருக்கீங்கன்னு கேட்ட பாரு... சத்தியமா முடியலை...!" அவன் சொல்ல, வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தாள் ரோஸ்.

இங்கே அறைக்கு வந்த நந்தினி, அவசரமாக ஒரு பொட்டைத் தேடி எடுத்தவள்... அதன் ஸ்டிக்கரை எடுத்து விட்டு, நெற்றியில் ஒட்டிக் கொண்டாள். அவள் மதி முகத் தில் அந்தப் பொட்டு, பெரிய மாற்றத்தையே விதைத் ததைக் கண்டாள்.

குங்குமச் சிமிழில் குங்குமம் இருப்பதைப் பார்த் தவள், "பெப்பி...!" என அழைத்து, அதை அவனிடம் நீட்டினாள்.

அவளை ஆழமாகப் பார்த்தவன், எதுவும் சொல்லாமல், கொஞ்சம் விரல்களின் இடுக்கில் எடுத்தவன், அவள் வைத்த பொட்டின் மேல் லேசாகத் தீற்றினான். அவள் நெற்றி வகிட்டிலும், கண்ணுக்கே தெரியாத அளவு கொஞ்சம் வைத்தான்.

அவள் கேள்வியாகப் பார்க்கவே, " 'கேப்'ல எல்லாம் குங்குமம் ஆயிடும்டா. உன் ஆசைக்காக வைத்தேன்...!" சொன்னவன் அவளை... அவள் செய்கையில் நெகிழ்ந்து அணைத்துக் கொண்டான்.

அவள் செய்கையே அவள் தன்னை முழுதாக ஏற்றுக் கொண்டதை அவனுக்கு உணர்த்த, மெய் மறந்தான். அவன் அணைப்பில் கட்டுண்டு இருந்தவள், "பெப்பி... ஆபீஸ் கிளம்பணும்...!" முகத்தை அவன் நெஞ்சில் உரசியவாறே தயக்கமாகச் சொன்னாள்.

அவன் ஆண்மை வாசனை அவள் நாசிக்குள் நுழைந்து, அவள் பெண்மையை இம்சிக்கத் துவங்கியதைத் தாள முடியாமல், இன்னும் அவனோடு ஒன்றினாள்.

அவள் பேச்சிலும் செய்கையிலும் இருந்த முரண் புரிய, தனக்குள் சிரித்துக் கொண்டான். அவள் நெருக்கம் அவனையும் தடுமாறச் செய்ய, அவள் கழுத்து வளைவில் வாசம் பிடித்தான்.

அவன் இதழ்கள் சூடாகப் பதிய... அவன் மூச்சுக் காற்றின் வெப்பத்தில் மெழுகாய் உருகியது அவள் தேகம். அவன் தேடலுக்கு அவள் பாதை வகுக்க, அவள் கழுத்திலிருந்து அவனது பயணம் இறங்கியது.

அவளுக்குள் அவன் புதைந்து போக முயல, எப்பொழுதும் அவனைத் தடுத்து அறியாத அவள் கரங்கள், முதல் முறையாக அவன் பயணத்துக்குத் தடை விதித்தது.

அவளைச் சரியாகப் புரிந்து வைத்திருந்த ப்ரதீப்புக்கும் அவளிடம் வெளிப்பட்ட எதிர்ப்பு புரிந்தது.

'இது முடியாது... தொடரும்...' என அவள் மூளை எச்சரிக்க, சட்டென அவள் தேகத்தில் ஒரு எதிர்ப்புக் கிளம்பியது. அதை உணர்ந்தவன், சட்டென அவளை விட்டு விலகியவன், பாத்ரூமுக்குள் சென்று புகுந்து கொண்டான்.

தண்ணீரை அடித்து முகத்தைக் கழுவியவன், தன்னை நிதானத்துக்குக் கொண்டு வரப் போராடினான். 'அவ மனசை எதுவோ குழப்புது... அதை என்னன்னு தெரிஞ்சிக்கணும்' இறுதியில் தன்னைச் சமாளித்துக் கொண்டு வெளியே வந்தான்.

அவளோ கால்கள் துவள படுக்கையில் அமர்ந்தவள், கைகளால் படுக்கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். 'நான் ஏன் இப்படிச் செய்தேன்...?' தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

'எனக்கு என் பெப்பி வேணும். அவன் என் கூடவே இருக்கணும். என்னால் அவன் இல்லாமல் இருக்க முடியாது...!' முகத்தை மூடி அழுதவள், தன்னை நிலைப் படுத்திக் கொண்டு எழுந்தாள்.

அவள் எழுந்து உடை மாற்றத் துவங்கும் வேளையில், அவன் பாத்ரூமில் இருந்து வெளியே வர, சட்டெனத் தன் தேகத்தைக் காக்கிச் சட்டையால் போர்த்திக் கொண்டாள்.

அவன் அசையாமல் அந்த இடத்திலேயே நிற்க...

அவன் அசையப் போவதில்லை என்பதை உணர்ந்து, "நான் கிளம்பணும்...!" இமைகள் படபடக்க அறிவித்தாள். தான் புதிதாகப் பிறப்பதாக உணர்ந்தாள்.

"நான் ஏதாவது ஹெல்ப் பண்ணணுமா...?" குறும்பாக அவன் கேட்க, சட்டென நிமிர்ந்து அவனைப் பார்த்தவள், அவன் மாற்றம் மனதுக்கு மகிழ்வைக் கொடுத்தாலும்... அந்த நிமிட ஏக்கத்தை அவனுக்குக் கொடுத்து விட்டோமே என மனதுக்குள் தவித்தாள்.

அதை மறைத்தவள், அவனுக்கு இணையாக, "ப்ச்.. விளையாடாதீங்க... நான் ட்ரெஸ் மாத்தணும்...!" சிணுங்கினாள்.

"மாத்து...!" அசால்ட்டாகத் தோளைக் குலுக்கினான்.

அவள், அவன் கண்களின் பாஷையில் கவரப்பட்டு அப்படியே இருந்தாள் அவனோ நிதான நடையாய் அவளை நெருங்க... அப்பொழுதும் அவள் நிலையில் மாற்றம இருக்கவில்லை.

"ஏன்... இதுக்கு முன்னாடி..." அவன் பேசத் துவங்கவே, அவன் வாயை மூடியவள், "இப்பவும் அந்தப் பழைய பெப்பியா இருந்தா எனக்கு எந்த ஆட்சேபனை

யும் இல்லை!" தலை சரித்து நிதானமாக அவள் சொல்ல...

"ராட்சஷி...! அவனை இப்போ எங்கே போய்த் தேடுறது? ஹும்...!" பெருமூச்சை வெளியேற்றியவன்... "சரி... நீ மாத்திட்டு வா...!" சொன்னவன், அங்கிருந்து வெளியேறினான்.

அவன் பார்வையிலும் பேச்சிலும் உறைந்து நின்றிருந்தாள் அவள். அந்த விளையாட்டுப் பேச்சு அடிமனதில் தித்தித்தது.



அன்று அலுவலகம் சென்ற அவள், குற்றவாளியிடம் விசாரணையைத் துவங்கினாள்.

அவனது வாக்கு மூலம் அனைத்தையும் டேப்பில் பதிவு செய்தவள், அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

அதே நேரம்... நந்தினியின் அலைபேசிக்கு ஒரு அழைப்பு வர, அதில் பேசிய ஐ.ஜி. அவளை வந்து பார்க்கச் சொல்ல, தன் மேலதிகாரி என்பதால் உடனடியாக அவரைக் காணச் சென்றாள்.

கேஸைப் பற்றி அவர் விசாரிக்க, குற்றவாளி சொன்னவற்றில் தனக்குச் சந்தேகமான விஷயங்களையும், அவன் பொய் உரைத்ததையும் சொன்னாள்.

அவள் சொன்னவற்றை ஆழ்ந்து கவனித்தவர், "வெல்டன்... கேஸை ரொம்ப நல்லாவே டீல் பண்ணி இருக்கீங்க. அப்போ சீக்கிரமே குற்றவாளியைக் கண்டு பிடிச்சிருவீங்கன்னு சொல்லுங்க...!"

"இவன் மட்டும் இன்னும் ஒரு நாள் என் கஸ்டடியில் இருந்தால், கண்டிப்பா குற்றவாளி யாருன்னு கண்டு பிடிச்சுடுவேன்...!" அவள் விரைப்பாகச் சொல்ல...

கை தட்டியவர்... "வாவ்...! வாழ்த்துக்கள். எப்படியோ கேஸ் சி.பி.ஐ. கைக்குப் போகாததே எனக்கு ரொம்ப சந்தோஷம். சீக்கிரமே கேஸ் முடிந்தது என்ற சந்தோஷச் செய்தியை உங்க கிட்டே இருந்து எதிர்பார்க்கிறேன்...!" சொன்னவர், கை குலுக்கி விடை கொடுத்தார்.

அறையிலிருந்து வெளியே வந்த பிறகுதான், தனக்கிருக்கும் முக்கியமான சந்தேகத்தைச் சொல்லாமல் விட்டு விட்டோம் என்பது புரிய, 'சரி, இன்னொரு நாள் சொல்லிக் கொள்ளலாம்!' என்று அங்கிருந்து சென்றாள்.

அவள் அலுவலகம் விட்டு வெளியே வரும் வேளை... அங்கே ப்ரதீப் நிற்பதைப் பார்த்தாள்.

வேகமாக அவர்கள் வண்டியை நெருங்கியவன், "அண்ணே...! நீங்க பின்னாடி உக்காருங்க.. எனக்கு கொஞ்சம் பேசணும்...!" சொன்னவன், ஓட்டுநர் இருக்கை யில் அமர்ந்தான்.

எடுத்த எடுப்பிலேயே, "நந்து, நீ கேஸைப் பத்தி எதையும் ஜ.ஜி. கிட்டே சொன்னியா என்ன...?" தன் பதட்டத்தை மறைத்தவாறே கேட்டான்.

அவன் கேள்வியில் சற்று நிதானித்தவள், "என்ன கேள்வி இது பெப்பி...? அவர் கேஸைப் பத்தி விசாரிக்கத்தான் என்னை வரச் சொன்னார். அப்படியிருக்கும் போது..." அவள் சொல்ல

"ஓ... ஷிட்...!" உரக்கச் சொன்னவன், அவளது அலுவலகத்துக்குச் செல்லாமல், விசாரணைக் கைதிகள் இருக்கும் இடத்துக்குச் சென்றான்.

அப்படிச் செல்லும் வேளையில், அங்கே ஏதோ கலவரம் நடந்த இடம் போல்... பொருட்கள் அனைத்தும் இறைந்து கிடக்க... நந்தினியும் அவனும் வண்டியில் இருந்து குதித்து இறங்கி, அறைக்குள் ஓடினார்கள்.

அதே நேரம்... இருவர் உள்ளே இருந்து வெளியேற, "நந்து... நீ குற்றவாளியைப் பார்... நான் இவங்களைப் பாக்குறேன்...!" சொன்னவன், அவர்கள் பின்னால் ஓடத் துவங்கினான்.

செல்லும் வழியிலேயே சரவணனைச் செல்லில அழைத்தவன், "டேய்... நான் இந்த ரோட்டில் ரெண்டு பேரை சேஸ் பண்ணிட்டு இருக்கேன். உடனே நீ ஆட்டோவை எடுத்துட்டு வா...!" மூச்சு வாங்கச் சொன்னவன், முழு மூச்சாய் அவர்களைத் துரத்தினான்.

அலுவலகத்திலோ, அந்தக் குற்றவாளி கழுத்து அறுபட்டு இறந்து கிடந்தான். இப்படி ஒரு நிலையை எதிர் பாராத நந்தினி திகைத்தாள். உடனடியாக ஆம்புலன்ஸுக்குச் சொன்னவள், பத்திரிகையாளர்கள் வந்து

விடவே... அவர்களுக்குப் பதில் சொல்வதிலேயே கவனம் செலுத்தினாள்.

ஆனாலும் ப்ரதீப்பின் எண்ணம் மனதில் எழுந்து அலைக்கழித்தது. அவனது அலைபேசிக்குத் தொடர்பு கொள்ள... அது தொடர்பு எல்லைக்கு வெளியே உள்ளார் என்ற அறிவிப்பையே திரும்பத் திரும்பச் சொல்லப் பயம் பிடித்துக் கொண்டது.

சரவணனின் அலைபேசிக்கு முயற்சிக்க, அதுவும் அதையே சொல்ல... மெல்லியதாக எழுந்த பயம், மனம் முழுவதும் வியாபித்தது. 'அப்படியென்றால்... இருவரும் ஒரே இடத்தில்தான் இருக்கிறார்கள்.'

போலீஸ் மூளை விழித்துக் கொள்ள, பயம் கோபமாக உருமாறியது.

சரியாக இரண்டு மணி நேரங்கள் கடந்த பிறகு, சரவணனின் அலைபேசி எடுக்கப்பட, "எங்கே இருக்கே...?" அவளது கேள்வி காட்டமாகவே வந்து விழுந்தது.

"தியேட்டர்ல இருக்கேன்...!"

"தியேட்டர்லயா...? தனியாவா போனே...? ஏன் இவ்வளவு நேரம் போனை எடுக்கலை...?" கேள்வியாக அடுக்கினாள்.

"நான் ரோஸோட படம் பார்க்க வந்தேன். தியேட்டருக்குள்ளே நெட்வொர்க் சரியா இல்லை. அதான் கிடைக்கலை..."

"சரி. ரோஸ் கிட்டே போனைக் கொடு...!"

போன் கைமாறியதும், "எப்போ படம் முடியும்?" காதைக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்டாள்.

"படம் முடிஞ்சுடுச்சு, கிளம்பப் போறோம். ஹோட்டல்ல சாப்பிட்டுட்டுத்தான் வீட்டுக்கு வருவோம்..." சொன்னவள், அலைபேசியைச் சரவணனிடம் கொடுத்தாள்.

நந்தினி குழம்பிப் போனாள். 'இவன் எங்கே போனான்... பெப்பி...?" இவ்வளவு குழப்பங்களுக்கு இடையிலும், பெப்பியைப் பற்றிய பயமே பிரதானமாக இருந்தது.

"என்னங்க நீங்க... என்னை எதுக்கு இப்போ இப்படிப் பொய் சொல்ல வச்சீங்க...? அவங்களுக்கு மட்டும் நாம பொய் சொன்னது தெரிஞ்சுது... அவ்வளவு தான்...!" நடுக்கமாகவே சொன்னாள்.

"இப்போ பொய் சொல்லலேன்னா... ப்ரதீப்புக்கு அடிபட்டிருக்கிறதை அவங்ககிட்டே சொல்லணும். இவன் என்னன்னா... என்ன ஆனாலும், அவங்களுக்குத் தெரியவே கூடாதுன்னு புலம்புறான்...!" எரிச்சலாகச் சொன்னவன், ப்ரதீப்பைக் காணச் சென்றான்.

ப்ரதீப்போ... நெஞ்சில் பெரிய ப்ளாஸ்டருடனும், காலில் ஒரு கட்டுடனும், மருந்தின் தாக்கத்தில் உறக்கத்தில் அமிழ்ந்து இருந்தான்.

சரவணனின் முகமும் ரோஸின் முகமும் கவலை யைக் காட்டியது.

ஒரு வழியாகப் பத்திரிக்கைக்காரர்களின் கேள்விகள்... உயரதிகாரிகளின் கண்டிப்புகள்... எம்.பி. ராஜமாணிக்கத்தின் கண்டனம் என அனைத்தையும் வாங்கிக் கொண்டாலும்... 'எப்பொழுது வீட்டுக்குச் சொல்வோம்!' என்ற எண்ணமே அவளை வியாபித்து இருந்தது.

மாலையில் ப்ரதீப்பின் அலைபேசிக்குத் தொடர்பு கொள்ள, அதுவோ அணைத்து வைக்கப்பட்டிருந்தது. கோபமும், பயமும் நெஞ்சைக் கவ்வ, இருக்கும் சூழல் அதை அனுமதிக்கவும் செய்யாமல், முகம் மாறாமல் காக்கவே மிகுந்த சிரமப்பட்டாள்.

ஒரு வழியாக அனைத்தையும் முடித்தவள், வீட்டுக்குக் கிளம்பிச் செல்ல, அங்கே ரோஸைப் பார்த்தவள், "சரவணன் எங்கே...?" ஷூவைக் கூட கழட்டாமல் கிச்சனுக்குள் வந்து கேட்டாள்.

"அ... அவங்க ஏதோ வேலை இருக்குன்னு வெளியே போனாங்க...!" திணறியவள், சொல்லி முடித்தாள்.

பொதுவாகவே ரோஸ் இப்படித்தான் பேசுவாள் என்பதால், அவளது திணறலில் இருந்து எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை. வீட்டிலிருந்து நொடியில் வெளியேறியவள், அவனது செல் நம்பரைக் கொடுத்து, அது எந்த இடத்தில் இறுதியாக இருந்தது என்பதைக் கண்டு பிடிக்கச் சொன்னாள்.

அவர்களோ காலை பதினொரு மணிக்கு ஒதுக்குப் புறமான ஏரியாவில் இறுதியாக இருந்ததைச் சொன்ன

வர்கள், அதன் பிறகு அது தொடர்பு எல்லைக்கே வரவில்லை என்று சொன்னார்கள்.

இந்தத் தகவலே அவளைக் கலவரப்படுத்த... எந்த நேரமாக இருந்தாலும் சிக்னல் எல்லைக்குள் அது வந்தவுடன் தனக்குத் தகவல் கொடுக்கச் சொல்லி விட்டுச் சென்றாள்.

சிறிது நேரத்தில் காலையில் அலுவலகத்தில் தப்பிச் சென்றவர்களில் ஒருவனின் முகம் நினைவுக்கு வர, குற்றவாளிகள் லிஸ்ட்டில் அவனைத் தேடினாள்.

அவன் அறிக்கையை வாசித்தவள் திடுக்கிட்டாள். 'இப்போ ஜெயில்ல இருக்கும் குற்றவாளி எப்படி வெளியில் வந்தான்..? நான் காலையில் இவனைத் தான் பார்த்தேனா...?' குழம்பிப் போனாள்.

அப்பொழுது அவளது அலைபேசிக்கு அழைப்பு வர, அதில் ஒளிர்ந்த ப்ரதீப்பின் எண்ணைப் பார்த்தவள்... "பெப்பி.. பெப்பி.. நீ எங்கே இருக்கே? நீ நல்லா இருக்கியா..? உடனே வீட்டுக்கு வா. இல்லைன்னா நீ எங்கே இருக்கேன்னு சொல்லு, நான் அங்கே வர்றேன்...!" படபடவெனப் பொரிந்தாள்.

"நந்து... நந்து...! நான் நல்லாத்தான் இருக்கேன். காலையில் நான் விரட்டிப் போனவங்களைப் பிடிக்க முடியலை. அதான்... அதை எப்படி...?" அவன் தயங்க...

"டேய்...! லூசு மாதிரி உளறாதே...! முதல்ல வீட்டுக்கு வா... எனக்கு உன்னைப் பார்த்தே ஆகணும். என...க்கு...

பயம்மா இருக்குடா... உன...க்கு.. புரியுதா...?" அவள் கலங்கிய குரலில் கேட்க, மருத்துவ மனையின் படுக்கை யில் இருந்த ப்ரதீப் எழுந்து அமர்ந்தான்.

அவள் தவிப்பதை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. "இதோ உடனே வர்றேன்...!" சொன்னவன், அலைபேசியை வைக்க... அவனை உக்கிரமாக முறைத் தான் சரவணன்.

"எப்படியாவது இன்னைக்கு ஒரு நைட் சமாளிக்கச் சொன்னேனே...! நடந்தால் காயத்தில் ரத்தம் கசியும்னு டாக்டர் சொல்லி இருக்காங்க. அதுவும் நெஞ்சில் இருக் கும் காயம் ரொம்பவே ஆழமா இருக்கு ப்ரதீப்..." அவனைத் தேக்க முயன்றான்.

"நந்தினியை விட, என் உடல்நிலை ஒண்ணும் அவ்வளவு முக்கியமில்லை. கிளம்பு போகலாம்...!" கையிலிருந்த குளுக்கோஸைப் பிடுங்கித் தள்ளியவன்... இறங்கி விட்டான்.

"நந்தினியை நல்லாப் பார்த்துக்கவே நீ நல்லா இருக்கணும் ப்ரதீப்...!"

சரவணனின் சொற்கள் எதுவும் அவன் காதில் விழவில்லை.

"டாக்டர் பார்த்தால் திட்டுவார் பிரதீப். சொன்னாக் கேளேன். நான் எதையாவது சொல்லிச் சமாளிக்கிறேன்...!" காரை நெருங்கும்வரை அவன் புலம்பலும் நிற்கவில்லை, ப்ரதீப்பின் நடையும் நிற்கவில்லை.

"இப்போ நீ காரைக் கிளப்புறியா... இல்லை, நானே எடுக்கவா...?"

இறுதியில் அவன் பிடிவாதம் கண்டு காரைக் கிளம்பினான்.

வரும் வழியெங்கும்... தான் எங்கே வந்து கொண்டிருக்கிறேன் என்ற விவரங்களைச் சொல்லிக் கொண்டே வந்தான். "இதோ இப்போ வாசலுக்கு வந்துட் டேன்...!" அவன் சொல்லி முடிக்கும் வேளையில்... நந்தினி வாசலுக்கு விரைந்தாள்.

ப்ரதீப் காரிலிருந்து இறங்கவே, ஓடிச் சென்றவள், "பெப்பி...!" என்ற கேவலுடன் அவன் நெஞ்சில் சென்று விழுந்தாள்.

"நந்தும்மா...", "அண்ணி...", "அக்கா...." அனை வரின் குரலும் ஒவ்வொரு விதமாக ஒலித்தது. அனைவரை யும் நிமிர்ந்து பார்த்தவள்,. "என்ன..?" எனக் கேட்க...

"இல்ல... அவங்களையும் காலையில் இருந்து நீ பாடாப் படுத்திட்ட போல.... அதான் அலறுறாங்க..." ப்ரதீப் சமாளித்தான்.

"சரி, நீங்க எல்லாம் போங்க...!" அவர்களை அனுப்பியவள், ப்ரதீப்பின் கரம் பற்றி அவனை அறைக்கு அழைத்துச் சென்றாள்.

அவர்கள் செல்லும் முன்னர், "ப்ரதீப்...!" சரவணன் அழைக்க, ப்ரதீப் அவனிடம் செல்லப் போகையில் நந்தினியும் உடன் வரவே, "இல்லை, குட்டைநட் சொல்லத்

தான் கூப்பிட்டேன்...!" சொன்னவன், வேகமாக அங்கிருந்து சென்றான்.

அறைக்குச் சென்று கதவடைத்தவள், "டிரெஸ்ஸை கழட்டு ப்ரதீப்...!" கையைக் கட்டிக் கொண்டு இரும்புக் குரலில் சொன்னாள்.

கொஞ்சம் திகைத்தாலும், "ஹேய்...! என்ன, விளை யாடுறியா? எனக்குக் கூச்சமா இருக்கு..." சமாளிக்க முயன்றான்.

"என் கோபத்தைப் பாக்கணும்னு முடிவு பண்ணிட் டியா...? சொல்றதைச் செய்யப் போறியா இல்லையா...?" அவள் நிலையில் மாற்றம் எதுவும் இருக்கவில்லை.

"இல்லை நந்து... எனக்கு எதுவும் இல்லை. பாரு, நான் நல்லாத்தானே இருக்கேன்...!" தன்னைச் சுற்றிக் காட்டினான்.

"நீ நல்லா இருக்கேன்னா... என்னை விட்டு இவ்வளவு நேரம் தனியா இருந்திருக்க மாட்டே...!" நடுவில் பேச வந்த அவனைத் தடுத்தவள், "உன் மேல் இருந்து மருந்து வாசனை வருது... அதைவிட முக்கியமானது... நான் உன்னைத் தேடி ஓடி வந்தப்போ... நீ நார்மலா இருந்திருந்தால், என்னை விட அதிக வேகத்தில் நீதான் ஓடி வந்து என்னைக் கட்டிப் புடிச்சிருப்ப. என்னை ஏமாத்தலாம்னு நினைக்காதே பெப்பி...." சொன்னவள்,

அவனை நெருங்கி... அவன் சட்டைப் பட்டன்களைக் கழட்டினாள். அவள் செய்கைக்கு உடன்பட்டவன், அவன்

நெஞ்சில்... கட்டையும் மீறிக் கசிந்திருந்த ரத்தத்தைப் பார்த்தவள், கண்கலங்கினாள்.

"எல்லாம் என்னால்தானே...! ஐயோ! எவ்வளவு பெரிய கட்டு. ரத்தம் நிறையப் போயிடுச்சா...? வலிக்குதா...? ஏன் என் கிட்டே சொல்லவே இல்லை... எல்லாம் என்..." மேலே பேச அவள் இதழ்கள் அவள் வசம் இருக்கவில்லை.

அவள் இடையில் கை கொடுத்துத் தன்னோடு இறுக்கிக் கொண்டவன், வன்மையாக அவள் இதழைச் சுவைத்தான்.

அவள் இதழின் ரத்தம்... உவர்ப்பாக அவன் உணரும் அளவு இருந்தது அவனது வேகம்.

"இனிமேல் உன் ராசி அது இதுன்னு பேசுன...! உன்னை என்ன செய்வேன்னு தெரியாது." கிடைத்த இடைவெளியில் அவளுக்குத் தான் சொல்ல வேண்டிய தையும் அழுத்தமாகச் சொன்னான்.

"பெப்பி, காயம்...!" அவளது குரல் தவிப்பாய் அவனைத் தடுக்க முயல, அவன் முற்றுகைக்குத் தன்னைக் கொடுத்தவள், எங்கே அவனுக்கு வலிக்குமோ என்று எதிர்ப்பை முற்றிலும் தொலைத்து நின்றாள்.

அவள் கரங்கள் அவள் இடையிலிருந்து நழுவ... அது உணர்த்திய செய்திகளில், அவள் தேகம் சில்லிட்டது. அவனிடம் தன்னைக் கொடுக்க அவள் தேகமும்... மனமும் விழைந்தாலும், அவன் உடல்நிலை பிரதான

மாகத் தோன்ற, "பெப்பி... இப்போ எதுவும் வேண்டாம்...!" தன் இதழ்களை அவனிடமிருந்து பறித்தவள், ஒரு வழியாகச் சொல்லி விட்டாள்.

நிதானமாக அவளிடமிருந்து விலகியவன்... மென்மையாகச் சிரிக்க, தன் முகச் சிவப்பை மறைக்க, அவன் நெஞ்சுக்குள்ளேயே புதைந்தாள்.

தன்னை நிலைப்படுத்தியவள், "என்ன நடந்தது...? ஏன் என் கிட்டே எதையும் சொல்லலை...?" அவனிடம் கேட்டாள்.

அவளிடம் பிடிவாதத்தை உணர்ந்தவன், கட்டிலில் சென்று அமர, "படுத்துக்கோ...!" சொன்னவள், வெளியே வந்து...

"சரவணா...!" அவளது அழைப்பிற்குக் கையில் மருந்துகளோடு அவன் வர... தண்ணீர் பாட்டிலை எடுத்துக் கொண்டு அறைக்குச் சென்றாள்.

முதலில் அவனை மருந்து சாப்பிட வைத்து விட்டுப் படுக்க வைத்தாள். அவன் அவளையும் தன் அருகே இருக்கச் சொல்ல, அவனை நெருங்கி அமர்ந்து கொண் டாள்.

"பெருசா எதுவும் இல்லை. அவங்களை விரட்டிப் போனேன்... அவங்க ரெண்டு பேர், நான் ஒத்தை ஆள். என்ன செய்ய...? என்னைக் கத்தியால் தாக்கிட்டு ரெண்டு பேரும் தப்பிச்சுப் போயிட்டாங்க...!" சொன்னவன், சோர் வாகக் கண்களை மூடிக்கொள்ள... அவன் அருகில் அமைதியாக அமர்ந்திருந்தாள்.

ஏனோ அவன் சொல்வதை முழுதாக அவளால் நம்ப முடியவில்லை. தான் எங்கு செல்ல நினைத்தாலும் தனக்கு முன்பு அவன் நிற்பது... தன்னை நிழலாகத் தொடர்வது... இடையிடையே அவனது வேலைகள்... என அனைத்தையும் எண்ணியவள், குழம்பிய மனதுடன் அந்த இரவைக் கழித்தாள். .

காலையில் கண் விழித்தவள், சோர்வாகத் தன் அருகில் படுத்திருந்த ப்ரதீப்பைக் கண்டாள். கேஸ் முக்கிய கட்டத்தில் இருந்தாலும்.., அலுவலகம் செல்லாமல், பெப்பி விழிக்கக் காத்திருந்தாள்.

அவளது உடல்நிலை முழுதாகத் தேறி இருந்தாலும், சற்று கவனமாகவே நடந்து கொள்ள வேண்டி இருந்தது. சட்டென எழுந்து ஓட முடியாது, கையில் கனமான எதையும் தூக்க முடியாது எனச் சிறிய தொல்லைகள் மட்டும் மிச்சம் இருந்தது.

குளித்து முடித்தவள், அவனை எழுப்பினாள். அவளது முகம் அவனுக்கு அருகில் இருக்க, "ஏய்...! இன்னைக்கு எனக்கு ரொம்பவே நல்ல நாள் போல...!" சொன்னவன், அவள் கையைப் பிடித்துச் சுண்டி இழுத் தான்.

அவனது இந்தச் செய்கையை எதிர்பாராதவள், அவன் மேல் விழப் போனாள். அவன் நெஞ்சின் மீது இருந்த காயத்தில் விழுந்து விடுவோம் என்பது புரிய, சட்டெனக் கையை அவன் அருகில் ஊன்றினாள். அது வலக்கை என்பதால், வலியில், "ஸ்... ஆ...!" என முனகி னாள்.

"ஓ...! சாரிடா...!" சொன்னவன், அவசரமாக எழ முயல... நெஞ்சின் காயம் சுருக்கென வலிக்க... அவனும் சன்னமாக முகத்தைச் சுழித்தான்.

"எனக்கு ஒரு வலியும் இல்லை. நீ எழுந்திருக்காதே. பத்துத் தையல் போட்டு இருக்காங்களாம். சின்னக் காயம்தான்னு என்னைச் சமாதானம் பண்ணுற...! இன்னைக்கு நீ பெட்டை விட்டு எந்திரிக்கவே கூடாது...!" விரல் நீட்டிக் கோபமாகச் சொன்னாள்.

"நந்து... தையல் போட்ட காயம் மட்டும்தான் இருக்கு. ரெண்டு நாளில் சரியாப் போய்டும். இதுக்கெல்லாம் பெட்டிலேயே உக்கார்ந்திருக்க முடியுமா...? நீ ஆபீஸ் கிளம்பு. எனக்கு ஒண்ணும் இல்லை...!" தோளைச் சுற்றி டவலைப் போட்டவாறு கட்டிலில் இருந்து இறங்கினான்.

"இப்போ நான் சொல்லுறதைக் கேட்கப்போறியா இல்லையா...? ஏன், நான் உன்னைக் கவனிச்சுக்கக் கூடாதா...? நீ மட்டும்தான் என்னைப் பாத்திப்பியா...?" முகத்தைத் திருப்பிக் கொண்டு, உர்ரென இருந்தாள்.

நின்றவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். தாயிடம் கோபித்துக் கொண்டு அமர்ந்திருக்கும் குழந்தையைப் போன்று இருந்தது அவள் அமர்ந்திருந்த தோற்றம். சிரித்துக் கொண்டவன், அவள் அருகில் சென்று, அவள் நாடியில் ஒற்றை விரல் வைத்து, அவளைத் தன் பக்கம் திருப்பினான்.

"இப்போ என்ன...? உனக்கு என்னைக் கவனிச்சுக் கணும்... அவ்வளவுதானே...? வா, கவனி...!" அவன்

சீரியஸாகச் சொல்ல, அவன் குரலில் இருந்த குறும்பைக் கண்டு கொண்டவள்... படபடவென்று அவன் கையை அடித்தாள்.

"எப்போப் பாரு குசும்பு...! எதையுமே சீரியஸா எடுத்துக்க மாட்டீங்களா...?" சிணுங்கியவாறு கேட்டாள்.

"இனிமேல் நம்ம வாழ்க்கை முழுக்க இப்படித்தான் இருக்கும். சீரியஸ் எல்லாம் முடிஞ்சுப் போச்சு, சரியா...?" அவள் தலையில் செல்லமாக முட்டி சீரியசாகச் சொன்னான்.

அவனை அப்படியே கட்டிக் கொள்ள வேண்டும் என்ற வேகத்தோடு அவனைப் பார்க்க, "நினைச்சதைச் செஞ்சுடணும். இப்படியெல்லாம் யோசிக்கக் கூடாது. அதுதான் உன்னோட முதல் பாடம்...!"

அவன் சொல்ல, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

வாழ்க்கை அழகாகத் துவங்கியது அவர்களுக்கு.

27

நொடியில் கடந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு... யூனிபார்மை அணிந்து கொண்டிருந்தாள் நந்தினி. முகம் முழுவதும் பூரித்துப் போய் இருந்தது. மனம் முழுக்க ஒரு புத்துணர்ச்சி. நிலைக் கண்ணாடியில் தெரிந்த தன் உருவத்தை, இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளைப் பார்த்தவாறே அறைக்குள் நுழைந்தான் ப்ரதீப். "குட்மார்னிங் டி.எஸ்.பி. சார்...!" விறைப்பாக அவன் சல்யூட் அடிக்க... இதழ்களில் விரிந்த புன்னகையுடன் அவனைப் பார்த்தவளின் எண்ணம் முழுவதும்... கடந்த இரண்டு நாளைச் சுற்றி வந்தது..

காலை உணவை அவனுக்கு அவள் ஊட்ட, அவளுக்கு அவன் ஊட்டினான். விபத்து நடந்த பிறகு, அவள் கைகளால் அவள் இன்று வரை உணவு உண்ட தில்லை. பிடிவாதமாக மூன்று வேளையும் அவன்தான் ஊட்டுவான்.

இன்றும் அந்த வேலையை அவன் செய்ய... "இதென்ன பிடிவாதம்...? நான் சாப்பிட்டுக்க மாட்டேனா...?" அவள் கொஞ்சம் கோபமானாள்.

"இது, முடியும் முடியாது என்பதைப் பத்துனதே கிடையாது. என் நந்துவை எந்த ஒரு சின்ன விஷயத் துக்காகவும் இனிமேல் ஏங்க விட மாட்டேன். இது என்னோட வைராக்கியம்னே நீ நினைச்சுக்கோ...!" அவன் கண்களில் தெரிந்த உறுதியில் திகைத்துப் போனாள்.

நாளுக்கு நாள், அவனது அன்பில் திளைத்தாள். "பெப்பி...!" அவள் உணர்ச்சிவசப்பட்டு அவனை அழைக்க,

"ஓ.கே...! நாம இன்னைக்கு முழுக்க, எல்லோரும் சேர்ந்து இந்த நாளைக் கழிப்போம்...!" சொன்னவன், அவளை அழைத்துக் கொண்டு ஹாலுக்குச் சென்றான்.

"சரவணா... ரோஸ்...!" அவர்களை அழைத்தவன், "இன்னைக்கு நாம எல்லோரும் ஒண்ணாவே இருக்கப்

போறோம். ஒண்ணாவே எல்லாம் செய்யப் போறோம்...!" சொன்னவன், சரவணனைப் பார்த்துக் கண்கள் சிமிட்டினான்.

'ஹையோ! எதுவோ பெருசா பிளான் பண்ணுறானே...!' மனதுக்குள் எண்ணியவன், அதை மறைத்தவாறே சிரித்தான்.

"சரவணா...! நீதான் நல்லா வித்தை காட்டுவியே... கொஞ்சம் காட்டேன்...!" ப்ரதீப் சொல்ல, அவனை ஒரு பார்வை பார்த்தவன், நந்தினியைப் பார்த்தான்.

"பெப்பி... என்ன இது...? அவர் என்ன கோமாளியா, வித்தை காட்ட...?" ப்ரதீப்பைக் கடிந்து கொண்டாள்.

"ஹையோ அண்ணி...! அண்ணா சொல்லுறது சரிதான். அவங்க வேடிக்கையாப் பேசுவாங்க... எனக்கு ரொம்பப் புடிக்கும். சரியான வாலு அவங்க...!" ரோஸும் சொல்ல, சரவணன் வாய் விட்டுச் சிரித்தான்.

அவன் சிரிப்பைப் பார்த்த பிறகுதான்... நந்தினிக்கு மூச்சே வந்தது. சரவணன் நின்ற இடத்தில் இருந்தே எதையோ திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

அவன் பார்வையை உணர்ந்து, "என்ன தேடுறீங்க...?" நந்தினி தயக்கத்தை விட்டு வெளியேறிக் கேட்டாள்.

"இல்லை... எனக்கு வால் இருக்குன்னு ரோஸ் சொன்னால்ல... அதான் எவ்வளவு நீளம் இருக்கும்னு பாத்துட்டு இருக்கேன். ஆனா என் கண்ணுக்கு எதுவும்

தெரியலை. உங்களுக்குத் தெரியுதா...?" சற்றுத் திரும்பிக் கேட்க, அவன் பேச்சில் திகைத்தவள், 'ஞே' என விழித்தாள்.

அவள் பார்வையை உணர்ந்து... ரோஸும், ப்ரதீப்பும் சிரிக்க... அவள் நிலையில் சரவணனுக்கே சிரிப்பு வந்தது.

அனைவரும் வாய் விட்டுச் சிரிக்க...

"என்ன, எல்லோரும் என்னைக் கேலி பண்ணுறீங்களா...?" கொஞ்சம் கூடு ஏறத் துவங்கியது அவள் குரலில்.

சட்டென அவள் கரத்தைப் பிடித்த ரோஸ்... "அண்ணி... இன்னைக்கு முழுக்க, இங்கே என்ன நடந்தாலும்... நீங்க அதை ஜாலியாத்தான் எடுத்துக் கணும். உடனே மாறுறது கஷ்டம்தான். ஆனா எனக் காக...!"

ரோஸின் கெஞ்சல், அவளை வெட்கம் கொள்ளச் செய்தது.

அவள் நிலை உணர்ந்து, மற்றவர் அறியாமல் அவள் கரங்களை அழுத்தித் தான் இருப்பதை அவளுக்கு உணர்த்தினான்.

அதன் பிறகு அவளால் கொஞ்சம் இயல்பாக இருக்க முடிந்தது.

ஒரு கட்டத்தில்... ரோஸும் சரவணனும் அடிக்கும் கூத்தில்... தன்னை மறந்து, வாய் விட்டுச் சிரிக்கக் கூட

முடிந்தது. அதைக் கண்ட மற்றவர்கள், அவள் அறி யாமல், துளிர்த்த தங்கள் கண்ணீரை மறைத்துக் கொண் டார்கள்.

மதியம் சாப்பிடும் பொழுது கூட, ரோஸ் அவளுக்கு உணவை ஒரு வாய் ஊட்ட... திகைத்தாலும் மறுக்காமல் வாங்கிக் கொண்டாள். தானும் அவளுக்கு அவ்வாறே செய்ய, "தேங்க்ஸ் அண்ணி...!"

அவளைக் கட்டிக்கொண்டு அழ, நந்தினி தன் அழுகையை, உணர்வுகளைத் தனக்குள் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"சாரி ரோஸ்...! உன்னை ரொம்ப..." மேலே சொல்ல் விடாமல் அவள் வாயை மூடியவள், "எனக்கு உங்களைப் பத்தி நல்லாத் தெரியும். நீங்க எதுவும் சொல்ல வேண்டாம். உங்களுக்கு என் மேல் எல்லா உரிமையும் இருக்கு..." சலுகையாக அவள் தோளில் சாய, 'இந்த உறவுகளைத் தவிர... வேறு என்ன வேண் டும்?' என்று எண்ணிக் கொண்டாள்.

கடவுளுக்கு நன்றி கூட உரைத்தாள்.

மூன்று மணிக்கு அனைவரும் மதியத் தூக்கத் துக்குக் கலைந்து செல்ல... அறைக்குள் வந்தவள், "பெப்பி...! நான் எவ்வளவு சந்தோசமா இருக்கேன் தெரியுமா...? எல்லாம் உங்களால்தான்." கண்களில் சந்தோசமும் காதலும் போட்டி போடத் துள்ளலாகச் செல்லும் அவளை இமைக்காமல் பார்த்தான்.

'உன்னை இப்படிப் பார்க்கத்தான் நான் ஆசைப் பட்டேன் நந்து...!' மனதுக்குள் சொன்னவன்,

"ஆனா நான் சந்தோஷமாவே இல்லை...!" அவன் இப்படிச் சொல்லவே... தன் மனநிலை முற்றிலும் மாற, அவனைப் பார்த்தாள்.

"பின்னே...? சந்தோஷத்தை எப்படிக் காட்டணும்னு கூட உனக்குத் தெரியாதா நந்து...?"

ஆழ்ந்த பார்வையில் அவன் கேட்க, அவன் பார்வையில் இதயம் சில்லிட்டது.

"எப்படிச் சொல்லுவாங்களாம்...!" தன் படபடப்பை மறைத்தவாறு அவனிடம் கேட்டாள்.

"நான் ஒரு முறை சொல்லித் தர்றேன். பிறகு அதை அப்படியே பாலோ பண்ணணும். ஓ.கே... " சொன்னவன், வேகமாக அவளை நெருங்க... சட்டென நகர்ந்தவள்,

"இந்த டியூஷன் எல்லாம் பிறகு கத்துக்கலாம்... முதல்ல நல்ல பிள்ளையா போய்த் தூங்குங்க. புண் ஆறட்டும்...!" அவன் சுருங்கிய முகத்தைக் கண்டதால் ... இறுதி வாக்கியத்தை அவசரமாகச் சொன்னாள்.

அவள் விலகிச் சென்ற பிறகும்... பிடிவாதமாக அவன் நின்ற இடத்திலேயே நிற்க, "அப்படி என்ன பிடிவாதம்...?" அவள் குரலே... 'என்னவோ பண்ணிக்கோ!' என்பது போல் ஒலிக்க, 'இது போதும்!' என எண்ணி யவன்,. அவளை நெருங்கி இறுக அணைத்துக் கொண் டான்.

"இப்படித்தான் சந்தோஷத்தை வெளிப்படுத்தணும். புரி'யுதா...?" சொன்னவனின் கரங்கள் அவளை உருக வைக்க, அவன் இதழ்களோ அவள் கழுத்தில் புதைந்தது.

"வரவர... உங்க கையும் வாயும் ஒரு இடத்தில் இருக்கவே மாட்டேங்குது...!" காற்றாகிப் போன குரலில் சொல்ல... அவள் குரல் அவனை எட்டவே இல்லை.

அவனது உணர்வுகள் விழித்துக் கொள்ள..., அதை உணர்ந்தவள், சிறிது நேரம் அவனுக்குத் தடை விதிக்காமல்..அமைதி காத்தாள். ஆனால், அவளது அமைதியே அவனை உறுத்த, அதைக் கண்டு கொண்டவன், அவளை அணைத்தவாறே சென்று படுக்கையில் விழுந்தவன், அவளை அணைத்தவாறே உறங்கிப் போனான்.

'அவன் உடல்நிலை கருதியே விலகினோம்...!' என்று அவளையே அவள் சமாதானம் செய்து கொண்டாலும்... அது அப்பட்டமான பொய் என்பது அவளது மனச்சாட்சிக்குத் தெரியுமே...! மாலையில் உறக்கம் கலைந்து எழுந்தவர்கள், நள்ளிரவு வரை மொட்டை மாடியில் அரட்டை அடிக்க, அவர்களோடு கலந்து கொள்ள தன்னால் முடிந்த அளவு முயன்றாள்.

நள்ளிரவில், "நந்து...! உன்னோட போன் அடிக்குது, போய்ப் பார்...!" ப்ரதீப் சொல்ல...

"எனக்குக் கேட்கலையே...!" சொன்னவள், மறுப்பின்றி இறங்கிச் சென்றாள்.

அவள் அலைபேசியில் பேசிய அதே நேரம்... ஒலித்த மிரட்டலைக் கேட்ட ப்ரதீபின் முகம் கோபத்தில் ஜொலித்தது. ஆனால், நந்துவோ அந்த மிரட்டலைக் கண்டு கொள்ளாமல், சாதாரணமாக அவர்கள் பேச்சில் கலந்து கொள்ள வந்தாள்.

அவள் வந்தவுடன், "என்ன நந்து...? யார் இந்த நேரம்...?"

"அது ஒரு ராங் கால்..." சாதாரணமாகச் சொன்னாள்.

"நந்து...! நிஜமாவே உனக்கு இந்தக் கேஸ் வேணுமா...?" அவன் கேட்க...

"அப்படின்னா..?" அவளது இந்தக் கேள்வியே... 'எனக்கு இந்தப் பேச்சுப் பிடிக்கவில்லை!' என்பதை உணர்த்தியது. அதே நேரம் சந்தேகமாக அவனைப் பார்த்தாள்.

அவள் பார்வையை உணர்ந்து மேலே எதுவும் துருவாமல் அமைதியாகி விட்டான். அந்த அமைதியே அவளை மிகுந்த தொல்லை செய்தது. தூங்கப் போன பிறகும் தன்னை அணைக்காமல், மறுபக்கம் திரும்பிப் படுத்திருந்த அவன் செய்கையில் அவனது கோபம் புரிய, தவித்துப் போனாள்.

ஆனாலும் கேஸை விட்டு விலக அவள் மனம் ஒப்பாமல் தினறியவள், அவன் முதுகோடு ஒன்றிக் கொண்டாள். அதுவரை தூங்காமல் விழித்திருந்த

அவனும்... தூக்கத்தில் திரும்புபவன் போன்று அவள் பக்கம் திரும்பி, அவளை அணைத்துக் கொண்டு கண் மூடினான்.

"என் கிட்டே பேசாமல் இருக்காதே பெப்பி... என்னால் அதைத் தாங்கிக்க முடியாது...!" மெல்லிய குரலில் அவனிடம் சொன்னவள், அவன் நெஞ்சில் முகம் பதித்துக் கொண்டாள்.

மறுநாளும் அதே சூழலில் கழிய... மாலையில் அவனிடம், "பெப்பி...! என்னோட முடி, உடை விஷயம் எல்லாம் நான் மாத்திக்கணுமா...? அதாவது ரோஸ் மாதிரி...!" ஏனோ... அவனுக்கு அப்படி ஒரு ஆசை இருக்குமோ என்று தோன்றியதால் அவ்வாறு கேட்டாள்.

"நந்து... உனக்கு எப்படி இருக்க விருப்பமோ, நீ அப்படியே இருக்கலாம். இதெல்லாம் எனக்கு ஒரு பொருட்டே கிடையாது. எனக்கு உன் மனசுதான் முக்கியம்." அவன் சொல்லி விட, அவள் மனதுக்குள் மெல்லிய தடுமாற்றம்.

அந்த நாள் கொடுத்த உற்சாகத்தின் தாக்கத்தில் இருந்து விடுபடாமல் நின்ற அவளை உலுக்கினான். "என்ன, மேடத்துக்குக் கனவா...? முதல்ல ஆபீஸ் போய்... நான் சொன்ன எல்லா விஷயத்தையும் ஆராய்ந்து பார்...!" சொன்னவன், அவளிடம் விளையாடாமல் விலகி இருந்தான்.

இதுவும் அவன் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கும் ஒரு நடைமுறை. அவள் யூனிபார்மில் இருக்கும் வேளையில்,

அவளிடம் அந்நியனாகவே நடந்து கொள்வான். அதே முறையை நந்தினியும் பின்பற்றினாள்.

"ஆபீஸ் போயிட்டு எல்லாத்தையும் சொல்லு றேங்க...!" சொன்னவள் வெளியேற, "நந்து... நானும் ஒரு ரெண்டு நாளா கவனிக்கிறேன். என்ன திடீர்னு மரியாதை எல்லாம்...!" ஒற்றைப் புருவம் தூக்கி அவன் வினவ,

"போடா...!" கண்களைச் சுருக்கித் தலையை ஒரு புறம் சரித்து, உதடு சுழிக்க நொடியில் சொன்ன அந்த ஒற்றை வார்த்தையில் சிக்குண்டு தவித்தது அவன் மனம்.

அவன் கண்கள் உணர்த்திய செய்தியைச் சரியாகப் புரிந்தவள், "நான் இப்போ யூனிபார்மில் இருக்கேன்...!" அவனுக்கு நினைவு படுத்தினாள்.

"அந்த நினைப்பு இருப்பதால்தான் தள்ளி நிக்கிறேன். இல்லைன்னா.. சரி, சரி. கிளம்பு..." அவளைத் தள்ளிக் கொண்டு சென்று ஜீப்பின் அருகே நிறுத்தினான்.

அவளும் மறுக்காமல், அனைவரிடமும் விடை பெற்று அலுவலகம் கிளம்பினாள். வீட்டுக்குள் வந்தவன், மறக்காமல் ரோஸுக்கும் சரவணனுக்கும் நன்றி உரைத் தான்.

அலுவலகம் வந்த நந்தினி, அந்தக் குற்றவாளி கொடுத்த வாக்குமூலத்தை ஒவ்வொரு வரியாகக் கேட்டாள். பின்னர் அதில் தனக்குச் சாதகமாகவும்... சந்தேகமாகவும் இருக்கும் வினாக்களை அடுக்கியவள், சென்று நின்றது,

அவளுக்கு முன்னர் அவளது இருக்கையில் அமர்ந்திருந்த டி.எஸ்.பி. கோபிநாத்தின் வீட்டுக்குத்தான்.

கோபிநாத்தின் மனைவி ரஞ்சிதம், நாற்பதின் துவக்கத்தில் இருந்தாலும், கோபிநாத்தின் இறப்பு அவரை ஐம்பது வயது மதிக்கத் தக்கவராகக் காட்டியது.

"சாரி...! நான் பழசு எதையும் ஞாபகப் படுத்த வரலை. ஆனாலும் எனக்குக் கேஸுக்குச் சாதகமான விஷயங்கள் உங்கள் வாக்குமூலத்தால் எனக்குக் கிடைக்கலாம். அதான்...!" அவள் தயங்க, அவளது தயக்கம் அவளுக்கே புதிதாய், எப்பொழுதும் வெட்டு ஒன்று, துண்டு இரண்டாகப் பேசுபவளின் வார்த்தைகள் கனிந்திருந்தது.

அதை உணர்ந்தவள், 'பெப்பி... எப்படி மாத்திட்டடா என்னை...?' எண்ணியவள், ரஞ்சிதத்தின் குரலில் நடப் புக்குத் திரும்பினாள்.

"எனக்குத் தெரியும்... அவரும் இந்த டிப்பார்ட்மென்ட் தானே...! உங்களுக்கு என்ன கேட்கணுமோ கேளுங்க...!"

"எனக்குத் தெரிய வேண்டியது ஒன்றுதான்.. கோபி சார் கடைசியா விசாரித்த அந்தக் கேஸ்... அதைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா...?"

"இல்லை... பொதுவாக அவர் கேஸ் விஷயத்தைப் பற்றி வீட்டில் எதுவும் பேச மாட்டார். வீட்டையும்... அலுவலக வேலையையும் அவர் தனித் தனியாகத்தான் பார்த்தார்...!"

அவர் பதிலில் சோர்ந்தாலும், "இல்லை... கடைசியா அவர் எடுத்த கேஸ்... கொஞ்சம் க்ரிட்டிக்கலானது. அதுவும் அவர் கிட்டத்தட்ட கேஸை முடிச்சுட்டதா வேற சொன்னாங்க. ஜஸ்ட்... அந்தக் குற்றவாளி இவரா இருக்கலாம்... அப்படின்னு ஏதாவது...!"

"இல்லை. அவர் அதைப் பற்றிச் சொல்லவே இல்லை...!"

"கொஞ்சம் யோசிச்சுப் பாருங்களேன். ஏதாவது அவரோடு நடத்தையில் மாற்றம்... இப்படி...!" அவள் துருவினாள்.

சற்று யோசித்தவர், "ம்... எனக்குக் கொஞ்சம் நினைவுக்கு வருது. அவர் அவரோட டைரியில் எதையோ எழுதிட்டு, நான் போன உடனே மாற்றி வைத்தார். ஒரு நிமிஷம் இருங்க... அந்த டைரி இருக்கான்னு பாக்குறேன்...!" சொன்னவர் உள்ளே எழுந்து சென்றார்.

மேலும் அவரிடம் பேசியதில், இரண்டு நாட்கள் மந்திரி கோபாலின் செக்யூரிட்டிக்குச் சென்றதையும் உரைத்தார். அவரிடம் உரையாடியதில் ஒரு விஷயம் நெருட... கேட்டு விட்டு அலுவலகம் விரைந்தாள்.

அலுவலகத்தில் இருந்து கோபியின் டயரியை நிதானமாகப் புரட்ட, அதில் இருந்த நிறைய விஷங்கள் அவள் புருவத்தை உயர வைத்தது.

அதிலும்... அவர் ஹேண்டில் செய்த கேஸில்... குற்றவாளியை அடையாளம் காட்ட வேண்டிய நேரத்தில், இறுதிப் பக்கம் மட்டும் நிரப்பப் படாமல் இருக்க...

ஆனால், அவர் அடையாளம் காட்ட விரும்பியது யார் என்பது அவளுக்குப் புரிந்தது. ஆனால், அறிந்த விஷயம் மகிழ்ச்சி அளிப்பதற்குப் பதிலாக உச்ச அதிர்ச்சியை அளித்தது.

'இப்பொழுது நான் என்ன செய்ய...?' கைகளைக் கூப்பிப் பெருவிரல்களால் நாடியைத் தாங்கியவள், ஆள்காட்டி விரல்களால் நெற்றியில் தட்டிக் கொண்டாள்.

கேஸ் தெளியாமல் இருந்த வேளைகளில் கூட... அடுத்து என்ன செய்ய என்று அவள் குழம்பவில்லை. ஆனால் இப்பொழுது, இந்த வினா எழும்பி அவளைக் குழப்பியது. அதே நிலையில் மூன்று மணி நேரங்களாக இருந்தாள்.

ஆனாலும் ஒரு குழப்பம். 'கோபால் கேசில், இது எப்படிச் சம்பந்தப்படும்...?' தலையே வெடிக்கும்போல் இருக்க... வீட்டுக்குக் கிளம்பினாள்.

28

இரவு உணவு அனைவரும் சேர்ந்து சாப்பிட்டார்கள். முடிந்தவரை அவர்களோடு இயல்பாகப் பேச முயன்றாள். இதுதான் என் குடும்பம் என்பது அவள் மனதில் பதிந்து போனது. ப்ரதீப்பிற்கு, 'நந்தினியின் குடும்பம் என்ன வாயிற்று என்று தெரியுமா...?' என்று கேட்க ஆசைதான்.

ஆனால், அவள் வருத்தப்படுவாளோ என்பதால், எதையும் கேட்காமல் இருந்தான்.

அவனுக்கு, அவள் குடும்பம் என்னவாயிற்று? இப்பொழுது எப்படி இருக்கிறது என்பது வரை அனைத்தும் தெரியும்.

அதைவிட இரண்டு நாட்களுக்கு முன்னர்... நந்தினி யின் தங்கை அவளைத் தேடி வந்ததும் அவனுக்குத் தெரியும். ஆனால், அதைப்பற்றி ஒரு வார்த்தை கூட அவனிடம் அவள் மூச்சு விடவில்லை.

இதை அவன் எதிர்பார்த்ததுதான். இருந்தாலும், ஒரு சிறு சலனம் கூட இல்லாமல் அவள் இருப்பதை உணர்ந்து கவலை கொண்டான்.

அவனுக்கும் அவர்கள் மேல் மலையளவு ஆத்திரம் இருந்ததுதான். ஆனாலும் ஏதோ உதவி எனக் கேட்டு வந்தவளுக்கு என்ன பதில் சொல்லி அனுப்பினாள் என்பதாவது அவனுக்குத் தெரிய வேண்டி இருந்தது.

தான் எதார்த்தமாக எதையாவது கேட்கப் போய்... அது அவள் மனதைக் காயப்படுத்தி விடக் கூடாதே என்ற கவலையும் அதிகம் இருந்தது.

தங்கள் பேச்சில் ப்ரதீப் கலந்து கொள்ளாததைப் பார்த்த நந்தினிக்கு, எதுவோ சரியில்லை என்பது புரிய... முதலில் சாப்பிட்டு முடிப்போம் என எண்ணியவள், அதில் கவனமானாள்.

சாப்பிட்டு முடித்து விட்டு, மொட்டை மாடியில் பேச அமர்ந்தார்கள். இப்பொழுது சில நாள் வழக்கம் இது. சாப்பிட்டு முடிந்த பிறகு... சற்று நேரம் அமர்ந்து உரை

யாடுவது. "என்ன பெப்பி...! ஏன் ஒரு மாதிரி இருக்கே...?" அமர்ந்த சற்று நேரத்தில் கேட்டாள்.

"நான் சாதாரணமாத்தான் இருக்கேன்...!" சமாளித்தான்.

"பெப்பி...!" அழுத்தமாக அழைத்தவள், பிறகு அமைதியாகி விட்டாள்.

ஏனோ அவன் தன்னிடம் எதையும் மறைப்பதை அவள் எப்பொழுதும் விரும்புவதே கிடையாது.

அவன் கோபமாக இருந்தால் கூட, "உங்க கோபத்தை என்னிடம் காட்டிடு பெப்பி. இப்படி அமைதியா இருக்காதீங்க. என்னால் தாங்க முடியாது...!" உணர்ச்சி வசப்பட்டுப் பேசியது அவன் கண்களில் நிழலாடியது.

அவர்கள் எதுவோ தனியாகப் பேச விரும்புவது புரிய... "ரோஸ்... எனக்குக் கொஞ்சம் தண்ணி வேணும்." சரவணன் கேட்க, ரோஸ் கீழே இறங்கிச் சென்றாள்.

அவள் பின்னாலேயே அவனும் எழுந்து சென்று விட்டான்.

"உங்க பிரெண்ட் ரொம்பத் தெளிவு..." அவள் சொல்ல, "அதனால்தான் அவனைக் கூடவே வச்சு இருக்கேன்..."

சொன்னவன், பேச்சைத் திசை மாற்றினான். அவளைக் கையணைப்புக்குள் கொண்டு வந்தவன், அவள் விரல்களோடு விளையாடியவாறு அமைதியாக இருந்தான்.

அவன் விளையாட்டுக்குத் தன் விரல்களைக் கொடுத்தவள், பின்னால் சாய்ந்து, அவன் தோள்களில் தலை வைத்தவள், அவன் தாடையோடு உரசியவாறு, அவன் நெருக்கத்தை அனுபவித்துக் கொண்டு இருந்தாள்.

அவன் எதையோ சொல்ல வருவதையும், சொல்ல முடியாமல் தயங்குவதையும் கண்டவள், "என்னன்னு பளிச்சுன்னு சொல்லுங்க பெப்பி. என்கிட்டே என்ன தயக்கம்...? நீங்க என்ன கேட்டாலும் நான் கோபப்பட மாட்டேன். உங்ககிட்டே கோபிச்சுக்கிட்டு நான் எங்கே போவேன்...?"

அவன் தோளில் சாய்ந்தவள், அவனை ஊக்கினாள்.

"எனக்குத் தெரியும்டா...! நான் கேட்பது உன் மனசைக் கஷ்டப்படுத்துமோன்னுதான் தயக்கமா இருக்கு."

அவன் தயக்கமே, அவன் எதைப் பற்றிப் பேச வருகிறான் என்பது புரிந்து போக, "ப்ளீஸ் பெப்பி... நாம வேற பேசலாம்...!" குரலும் முகமும் இறுக, இரும்புக் குரலில் சொன்னாள்.

"இல்லடா... என்ன இருந்தாலும்... அவ உன் தங்..." தங்கை என்பதைக் கூட அவனை முழுதாகச் சொல்ல விடவில்லை.

"ஜஸ்ட் எனஃப் பெப்பி...! எனக்கு அண்ணன் தங்கை யாருன்னா... அது நம்ம சரவணனும்... ரோஸும் தான். வேற யாரையும் எனக்குத் தெரியாது. நான் கொஞ்ச

நாளாகத்தான் நிம்மதியா இருக்கேன். என் நிம்மதியைக் குலைக்காதீங்க. ப்ளீஸ்...!"

கோபத்தில் துவங்கிக் கெஞ்சலில் முடித்தாள்.

"இல்லடா... நமக்குத் தெரிஞ்சவங்க..."

"ஏன் பெப்பி, என்னைப் புரிஞ்சுக்கவே மாட்டியா..? முழுசா பதிமூணு வருஷம்... ஒரு வார்த்தை கூடப் பேசாமல் இருந்தவளுக்கு, இப்போ மட்டும் என்ன...? என் வேலைக்காகத்தானே.. அதோட, அவளுக்கு ஆக வேண்டிய காரியத்துக்காகத்தானே இந்த வரவு...?

"வேண்டாம். எனக்கு யாரும் வேண்டாம். எனக்கு உறவே இல்லாத கந்தன்... ரோஸ்... இவங்களுக்கு என் மேல் இருக்கும் ஒரு சின்னச் சொந்தம் கூட... ரத்த உறவான அவங்களுக்கு என் மேல் இல்லை. போதும்... இதுக்குமேல் பேசி என்னைக் காயப்படுத்தாதீங்க.

"என்னைப் பற்றி நல்லா தெரிஞ்ச நீங்களே இப்படிச் சொன்னால், நான் என்னோட நியாயத்தை யாரிடம் சொல்ல முடியும்...? எனக்கு நீங்களும், இவங்களும் போதும்..." சொன்னவள், அவன் அருகில் இருந்து எழுந்து சென்றாள்.

அவளை வருத்தப்பட வைத்து விட்டோம் என்பது புரிய, தளர்ந்து அமர்ந்திருந்தான்.

அவன் அருகில் வந்த சரவணன், ஆதரவாக அவன் தோளைத் தொட்டான்.

"எல்லாம் தெரிஞ்சும்... நீ ஏன் இப்படிச் செஞ்ச ப்ரதீப்...?" இப்பொழுது இந்தப் பேச்சுத் தேவையா என்று அவனுக்கு ஆத்திரமாக இருந்தது.

அவனுக்கு நந்தினியைப் பார்த்தால் முன்பு பயம்தான். ஆனால், அவள் கதைகளை ப்ரதீப் மூலம் அறிந்த பிறகு, அவர்கள் வீட்டில் உள்ளவர்களைக் கொலையே செய்துவிடும் ஆத்திரம் பிறந்தது அவனுக்கு.

"இதுக்கு என்னை மாதிரி அனாதையா இருப்பது எவ்வளவோ மேல் ப்ரதீப்...!" சரவணன் சொல்ல, அது உண்மைதான் என்பதை உணர்ந்து அமைதியாக இருந்தான்.

ப்ரதீப்பின் அமைதி அவனுக்கு எரிச்சல் மூட்ட, "கேட்கிறதுக்குப் பதில் சொல்லு ப்ரதீப்...!"

அவனை உலுக்கினான்.

"எனக்கும் நந்துவைக் காயப்படுத்தணும்னு எந்த ஆசையும் கிடையாது சரவணா. சொல்லப்போனால் அவ கண் கலங்கினாலே அதை என்னால் தாங்கிக்க முடியாது. அப்படியிருந்தும் நான் அவகிட்டே இதைப்பற்றிப் பேசுறேன்னா, ஏதாவது காரணம் இல்லாமல் இருக்குமா...?"

அவன் கேட்க, அவன் கேள்வியில் இருந்த நியாயம் புரிய அமைதியாக இருந்தான்.

அவன் அமைதி தொடர, "எனக்கு வெறியே இருக்குடா...! நீங்க எல்லாம் வெறுத்து ஒதுக்கிய என்னோட

நந்து எப்படி இருக்கான்னு பாருங்கன்னு காட்டணும் ன்ற வெறி. அவ முன்னாடி நீங்க எல்லாம் இப்போ கை கட்டி நின்னுதான் ஆகணும் என்பதைக் காட்டணும் ன்ற வெறி.

"அவளுக்குன்னு இப்போ ஒரு குடும்பம் இருக்கு... அவளை உயிரா நேசிக்க ஒரு கணவன்... எல்லாம் இருப்பதை அவங்களுக்குக் காட்டணும். அதுக்குக் கடவுள் கொடுத்திருக்கும் பெரிய வாய்ப்பு இது. அதை விடச் சொல்லுறியா...?" அவன் குரல் ஆத்திரத்தில் குமுறியது.

அவன் தோளைத் தொட்டு அமைதிப் படுத்தினான். இவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த நந்தினி, திகைத்துப் போனாள்.

அவன் அருகில் செல்ல முயல்கையில், அவர்கள் மேலும் பேசத் துவங்கவே, அங்கேயே நின்றாள்.

"ப்ரதீப்...! கேஸ் பத்தி நந்தினி ஏதாவது சொன்னாங்களா...? அவங்க குற்றவாளியை நெருங்கிட்டாங்கன்னு நினைக்கிறேன்."

"சொல்லாதடா...! அவ குற்றவாளியைக் கண்டு பிடிச்சுட்டான்னு தெரிஞ்சாலே, அடுத்த நிமிஷமே என்ன ஆகும்னு எனக்குக் கவலையா இருக்கு. கேஸை, நம் சி.பி.ஐ. கிட்டே கொடுத்துட்டால் நல்லா இருக்கும்னு இருக்குடா...!"

கவலை மண்டிக் கிடந்தது அவன் குரலில்.

அதைக் கேட்ட நந்தினி இன்னும் திகைத்தாள். 'நான் குற்றவாளியை நெருங்கிட்டேன்னு இவருக்கு எப்படித் தெரியும்...?'

அவள் சந்தேகம் கொள்ள, அதைத் தொடர விடாமல் அவர்கள் பேச்சுத் தடுத்தது.

"நான் கேட்கிறேன்னு நீ தப்பா நினைக்காதே ப்ரதீப். அவளுக்கு ஒரு குடும்பம்... கணவன் இருக்குன்னு காட்டணும்னு சொன்ன நீ... ஏன் குழந்தைகள் பத்தி மட்டும் சொல்லவே இல்லை...? நான் உன்னோட தனிப்பட்ட வாழ்க்கைக்குள் நுழையக் கூடாதுன்னு எனக்குத் தெரியும். ஆனாலும்..."

"எனக்கு மட்டும் அந்த ஆசை இல்லையா சரவணா...? ஒரு குட்டி நந்தினி வேணும்னு எனக்கும் கொள்ளை ஆசை இருக்கு. அவ கிட்டே இருக்கும் போதும், சாதாரணமா உரையாடும்போதும் கூட... என் னோட உணர்வுகள் கரை உடைக்கத் துடிப்பது எனக்குப் புரியுது.

"ஆனா.., என்னோட ஆசைகளை விட.. நந்தினி யோட மனசுதான் முக்கியம்னு தோணுது. அவ மனசை இன்னும் ஏதோ ஒண்ணு அழுத்துதுன்னு எனக்குப் புரியுது. ஆனா, அது என்னன்னு எனக்குப் புரியவே இல்லை. அதான்.

"விடுடா! எல்லாம் தானாகச் சரியாகிப் போகும். அப்படியே சரி ஆகலைன்னாலும், அவ கூடவே, அவளை

குழந்தையாப் பார்த்துக்கிற இந்தச் சந்தோசம் எனக்குப் போதும்...!"

குரல் தடுமாறினாலும், திடமாகவே சொல்லி முடித்தான்.

"உன் வாய்தான் இப்படிச் சொல்லுது. ஆனா நானும் சில நாள் கவனிச்சுட்டுதான் இருக்கேன் ப்ரதீப். நடு ராத்திரி பேய் மாதிரி நீ இங்கே உலாத்துவது எனக்குத் தெரியாதுன்னு நினைக்கிறியா...? இயற்கையான உணர்வுகளை அடக்க முயல்வதே, வாழ்க்கையில் சில நேரம் வெறுப்பைக் கொடுக்கும் ப்ரதீப்.

"இப்போ ஏதோ ஒரு வேகத்தில் நீ சொல்லலாம். ஆனா.. இதுவே இன்னும் ஐந்து வருஷம்... இல்ல... ஒரு வருஷம் தொடர்ந்தாலே... உன்னை அறியாமலே அவ மேல் ஒரு வெறுப்பு வந்துடும் ப்ரதீப்...!"

அவன் சொல்ல, எரிச்சலானான் ப்ரதீப்.

"கொஞ்சம் வாயை மூடுறியா...? எனக்கு அவமேல் ஆசை இருக்குதான். ஆனா அதை விடக் காதல் அதிகமா இருக்கு. என்னோட காதல் காமத்தைத் தடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு."

"காமம் கலக்காத காதல் சுவைக்காது ப்ரதீப்."

"உன்னை வாயை மூடச் சொன்னேன்...!" ஆத்திரமானான்.

"இப்போ எதுக்கு உனக்கு இவ்வளவு கோபம் வருது? உண்மையைச் சொன்னால் கோபம் வருமா?"

"டேய்! உன்னை... உனக்கு ரொம்ப இடம் கொடுத்துட்டேன்டா...!" அவன் சட்டையைப் பிடித்து உலுக்கியவன், அவனை உதறி விட்டு அங்கிருந்து சென்றான்.

அவர்கள் பேச்சு முற்றும்பொழுதே அறைக்கு வந்த நந்தினிக்கு, உடலெல்லாம் உதறியது. ப்ரதீப்பின் பேச்சு ஒரு பக்கம் பிரமிப்பையும்... மகிழ்ச்சியையும் கொடுத்தது என்றால், மறுபக்கம் அவன் ஆசைகள்... ஏக்கங்களை நிறைவேற்றாமல் இருக்கும் தன் நிலையை எண்ணித் தன்னையே வெறுத்தாள்.

'தன் மனநிலைக்காக அவனது ஆசைகளையும், தேவைகளையும் தான் எப்படி நிராகரிக்க முடியும்...? எனக்கு என்ன உரிமை இருக்கிறது அதற்கு...? என் சுயநலத்துக்காக அவனது நியாயமான ஆசைக்கு நான் குறுக்கே நிற்க முடியுமா...?'

மனம் அவளிடம் கேள்வி கேட்க, அதற்குப் பதில் சொல்ல முடியாமல் தலை கவிழ்ந்தாள்.

அதே நேரம், 'நூற்றில் ஒரு வார்த்தையாகத் தன் பாட்டி சொன்னது நடந்து விட்டால்...!' அந்த நினைப்பில் மனதில் குளிர் காய்ச்சலே பிறந்தது. 'எனக்கு என் பெப்பி உயிரோடு வேண்டும். அதற்காக நான் எதையும் செய்யத் தயார்...! 'எனக்காக ஏன் அவன் தன் ஆசைகளை அடக்க வேண்டும்...?'

யோசித்தவள், ஒரு முடிவிற்கு வந்தவளாக... அவன் வரவிற்காகக் காத்திருந்தாள்.

கோபமாக அறைக்குள் நுழைந்தவன், எதுவும் பேசாமல் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான். அவன் நிலை புரிய, தயக்கமாக அவன் அருகில் அமர்ந்தாள்.

அவள் அருகில் அமரவே, முயன்று தன் முகத்தைச் சீராக்கிக் கொண்டான்.

"என்ன நந்து...! நான் அப்படிப் பேசிட்டேன்னு கோபமா...? சரி. இனிமேல் உனக்குப் பிடிக்காததைப் பற்றிப் பேசவே மாட்டேன். சரியா...?"

தன் கோபத்தை மறைத்து விட்டு, அவன் தன்னைச் சமாதானம் செய்ய முயல்வதைக் கண்டவள், இன்னும் தவித்துப் போனாள்.

தாவி அவனை அணைத்துக் கொண்டவள், "பெப்பி!" என அழைத்தவாறு அவனை இறுகக் கட்டிக் கொண்டாள்.

அவளது நெருக்கம் எப்பொழுதும் போல அவன் உணர்வுகளைத் தட்டி எழுப்ப, "போய்ப் படுத்துக்கோ நந்து... வர்றேன்..." அவளை விலக்கியவன், தலையை அழுந்தக் கோதிக் கொண்டான்.

அவனது இந்தச் செய்கை அவன் நிலையை அவளுக்குப் படம் பிடித்துக் காட்ட, "பெப்பி... நான் ஒண்ணு சொன்னால் கேப்பியா...?" அவனைப் பாராமல் கேட்டாள்.

"என்னன்னு சொல்லு...!" அவள் தடுமாற்றத்தைக் கண்டு கொண்டவன் சொன்னான்.

"இல்லை... என்னால... உங்களுக்கு... நீங்க ஏன்...?" எதை எதையோ சொல்லித் தடுமாற, இது சரி வராது என எண்ணியவள், ஆழ்ந்து மூச்செடுத்துத் தன்னைச் சமன் செய்தாள்.

அவன் அவளையே பார்த்துக் கொண்டிருக்க, தலை கவிழ்ந்தவள், "என்னால் உங்களுக்கு எந்தச் சந்தோஷமும் இல்லையே...! சோ, நீங்க...!" அவள் தயங்க...

"நான்..." அவன் குரல் கூடாக ஒலிக்க, அதை உணர்ந்தாலும், உள்ளுக்குள் உதறினாலும் அதைக் கண்டு கொள்ளாமல்...

"நீங்க வேணா வேற பெண்..." அடுத்த வார்த்தை சொல்லும் முன்னர்... காதுக்குள் 'ஊ...' என்ற இரைச்சல் மட்டுமே கேட்டது. கன்னமும் திகு திகுவென எரிய... அப்பொழுதுதான் அவன் தன்னை அடித்ததையே உணர்ந்தாள்.

ஏற்கெனவே சரவணன் பேசியதில் கோபமாக இருந்தவன், நந்துவும் அதையே பேசவே தன் கட்டுப் பாட்டையும் மீறி அவன் கோபத்தை அவளிடம் காட்டி விட்டான்.

"உங்க மனசுல நீங்க என்னதான்டி நினைச்சுட்டு இருக்கீங்க...? என்னைப் பார்த்தால் பொம்பளைக்கு அலையுறவன் மாதிரியா இருக்கு...? அப்படியே ஒரு பொண்ணைத் தொடணும்னு எனக்கு வெறி வந்தால்... நீ இருக்கும் போது நான் எதுக்குடி வேற தேடிப் போகணும்?

"எனக்கு யார் வேணும் வேண்டாம்னு நான்தான் முடிவு பண்ணுவேன். அதென்ன உன்னால் முடியாதுன்னு சொல்லுறது...? அது ஏன்னு எனக்குத் தெரிஞ்சே ஆகணும்...!" சொன்னவன், அவளைக் கைகளில் ஏந்தினான்.

அவன் அடித்தது வலிக்கவே இல்லை. மாறாக உள்ளுக்குள் தித்தித்தது. அதுவரை கன்னத்தில் கை வைத்து... வெறித்த பார்வையாக அமர்ந்திருந்தவள், அவன் தன்னைத் தூக்கவே திகைத்துப் போனாள்.

தான் எதைச் சொல்ல வந்தால்... அது தன்னையே தாக்குகிறதே என எண்ணினாள்.

"பெப்பி...! என்ன செய்யிறீங்க...? விடுங்க முதல்ல." அவன் கைகளில் திமிறினாள்.

"இதுவரை எதுவும் செய்யலை. இனிமேல்தான் செய்யப் போறேன். எனக்கு உன்னை முழுசாத் தெரிஞ்சுக்கணும். ஒரு பொண்ணை முழுசா தெரிஞ்சுக்கணும் என்ற ஆசை வந்துடுச்சு." சொன்னவன், அவளைப் படுக்கையில் கிடத்தினான்.

"அவசரப்படாதீங்க... நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்க...! எனக்கு நீங்க வேணும்...!" அவள் அரை குறையாகச் சொன்னாள்.

"அதேதான் நானும் சொல்லுறேன். எனக்கு நீ வேணும்...!" அவள் வார்த்தையையே அவன் திரும்பப் படிக்க... விக்கித்துப் போனாள். தான் சொன்னதற்கு

இப்படி ஒரு பொருள் இருக்கிறது என்பதையே அப் பொழுதுதான் உணர்ந்தாள்.

அவள் திகைத்த நொடியைத் தனதாக்கியவன், படுக்கையில் அவளைச் சரித்து, அவள் மேல் அழுத்த மாகப் பதிந்தான்.

தேகங்கள் இரண்டும் முழுமையாக உரசிக் கொள்ள, அவன் இதழ்களை அவள் இதழ்களில் அதை விட அழுத்தமாகப் புதைந்து போனது.

அவன் நெஞ்சில் கைவைத்து விலக்க முயல... அவனை ஒரு இஞ்ச் கூட அவளால் நகர்த்த முடிய வில்லை.

அவள் நினைத்தால் அவனை ஒரு நொடியில் வீழ்த்த முடியும். அது அவனுக்கும் தெரியும்.தெரிந்தே தைரியமாக முன்னேறினான்.

மூச்சுக் காற்றுக்கு அவள் போராடிய பொழுது... அவனது முச்சுக்காற்றே அவள் சுவாசமாக.. அவனது தடைகள் ஒவ்வொன்றாக அவன் கடக்க... அவனைத் தடுக்க முடியாமல் அவள் கரங்கள் அவன் முதுகில் அழுந்தப் புதைந்தது.

அவன் கைகள் முரட்டுத்தனமாக அவள் மேல் பதிய.. அது உணர்த்திய உரிமையிலும்... அவன் உணர்த்திய அவனது தாபத்தையும் உணர்ந்தவளுக்கு... கொஞ்சம் கொஞ்சமாக மனதில் இருந்தவை அனைத்தும் மறந்து போனது.

அவனது முரட்டுத்தனமான அணுகுமுறை அவளை மலரச் செய்தது. அவளுக்குள் இருந்த மெல்லிய உணர்வுகளை அவன் வெளிக் கொண்டு வர, அவனுக்குள் புதைந்து, அமிழ்ந்து போகத் துவங்கினாள்.

ஒரு பெண்ணை அறியும் வேகமும் வேட்கையும் அவனிடம் அதிகமிருக்க, அதை உணர்ந்தவள், அவனைத் தடுக்க முயலவில்லை.

இந்த நிலையில் அவள் பாட்டி சொன்ன எதுவும் அவள் மனதில் இல்லை. அவளுக்கு நெருக்கமாக அவன் வந்தபொழுது, இந்த உலகிலேயே அவள் இருக்கவில்லை..

மாறாக, அவளது பெப்பியின் தேவை மட்டுமே அவள் கண்களுக்குத் தெரிந்தது.

முழுதான இனிமையான சங்கமம் முடிந்த பிறகு தான்... தான் அவசரப்பட்டு விட்டோமோ எனக் கலங்கிப் போனாள்.

தன் நெற்றியில் அழுந்த முத்தமிட்ட அவனை, கழுத்தில் கை கோத்து அருகில் இழுத்தவள், அவன் முகமெங்கும் ஈரமாக முத்தமிட்டாள்.

அவள் முத்தத்தின் வேகத்தில் திகைத்துப் போனான். அதை விட, தன் கன்னங்களில் உணர்ந்த ஈரம் அவனைக் கவலைக்குள்ளாக்கியது.

"சாரி, சாரிடா...! உன்னைக் கட்டாயப்படுத்திட்டேனா, பிடிக்கலையா, கஷ்டமா இருக்கா...?"

அவளைத் தன் மேல் போட்டுக் கொண்டு அவள் அழுகைக்கான காரணத்தை அறிய முயன்றான்.

ஆனால், அவளது பதில் கண்ணீராக மட்டுமே இருந்தது. "எனக்குப் பயமா இருக்கு பெப்பி. என்கிட்ட பேசிட்டே இரு, தூங்காதே... ப்ளீஸ்...!"

அவனைத் தன்னோடு இறுக்கிக் கொண்டு, அவனை எதிலிருந்தோ காப்பது போல் இருந்த அவள் நடவடிக்கையில் குழம்பிப் போனான்.

"என்னடா... ஒண்ணும் இல்லை. நான் உன் னோடவே இருக்கேன்...!" அவனது சமாதானங்கள் அவளை எட்டவே இல்லை.

"பெப்பி..., ப்ளீஸ்...! நீ... நீ... வேணும் பெப்பி...!" பேயைக் கண்டு பயந்த குழந்தை போல், அவனை விட்டு இம்மி கூட நகராமல்.., அவன் நெருக்கத்தை இன்னும் நாட... குழம்பிப் போனான்.

அழுத்திக் கேட்கவும் அவனால் முடியவில்லை. இரவு முழுவதும் அவள் விருப்பப்படியே நடந்து கொண்டவன், எதை எதையோ பேசியவாறு விழித் திருந்தான். குயில் கூவும் ஓசை கேட்ட பிறகுதான் தன்னை மீறி உறக்கம் கொண்டாள் நந்தினி.

அப்பொழுதும் அவனை விட்டு விலகாமல், கழுத்தை இறுக்கிக் கட்டிக் கொண்டிருந்தாள். ஏனென்று புரியாமல் அவளையே பார்த்திருந்தவன், அதன் பிறகு தான் கண் மூடினான்.

திடீரென, "பெப்பி...!" என்ற நந்தினியின் வீறிடலில் திடுக்கிட்டு விழித்தவன், தன் அருகில், தன் தலையை அவள் மடியில் தாங்கியவாறு அமர்ந்து அழுது கொண் டிருந்த நந்தினியைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

"நந்தும்மா, என்ன... என்ன ஆச்சு..? ஏதாவது கெட்ட கனவு கண்டாயா...? எதையாவது பார்த்துப் பயந் துட்டியா...?"

விருட்டென எழுந்து அமர்ந்தவன் கேட்கும் போதே, "அண்ணே, அண்ணி, என்ன...?"

வெளியே அவர்கள் அறைக் கதவைப் பதட்டமாகத் தட்டும் ஒலி கேட்டது.

"பெப்பி..., உனக்கு ஒண்ணும் இல்லைதானே...! நீ நல்லா இருக்கேதானே! நான் கனவு காணலையே...! நிஜம் தானா...? பெப்பி...!" அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு விடவே மாட்டேன் என்று அடம் பிடித்தாள்.

அதே நேரம் வெளியே அவர்களின் பதட்டம் அதிகரிப்பதைக் கண்டவன், 'இவளைச் சமாதானம் செய்யவா... அவர்களைக் கவனிக்கவா...?' தவித்தவன், அவளை அணைத்தவாறே எழுந்து,

"இங்கே பாரு நந்து...! எனக்கு எதுவும் இல்லை. வெளியே அவங்க கவலையா இருக்காங்க... முதல்ல ஒண்ணும் இல்லன்னு சொல்லிடலாம்...!" சொன்னவன், அவளையும் தோளோடு அணைத்தவாறே சென்று கதவைத் திறந்தான்.

அவள்தான் அவனை விட்டு விலக மாட்டேன் என்று அடம் பிடித்தாளே...! கதவைத் திறக்கவே, உள்ளே வந்த ரோஸ், ஓடி வந்து நந்தினியைப் பார்த்தாள்.

"என்ன அண்ணி...! எதுக்குக் கத்துனீங்க...? எதையாவது பார்த்துப் பயந்துட்டீங்களா...?" ரோஸ் கேட்கவே, ப்ரதீப்பை விடுத்து, ரோஸின் தோளில் சாய்ந்து கொண்டு கதறித் தீர்த்தாள்.

"என்னண்ணே ஆச்சு...?" அனைவர் கேட்டும் அவள் பதில் சொல்லாததால், அவனிடம் கேட்டாள்.

"எனக்கு எதுவுமே தெரியாதும்மா. நானும் எவ் வளவோ கேட்டுப் பார்த்துட்டேன்... பதில் சொல்லவே மாட்டேங்குறா. அவ மனசுக்குள் புகுந்தா பார்க்க முடியும்?" கவலையாகச் சொன்னான்.

நந்தினி அழுது ஓயும் வரை அவர்கள் காத்திருக்க, அழுது ஓய்ந்தவள்,

"நீங்க ஏன் தூங்குனீங்க...?" மூக்கை உறிஞ்சிய வாறே கேட்டாள்.

அவள் கேள்வியில் திகைத்தவன், 'மனுஷனை விடியுற வரைக்கும் தூங்க விடாமல் செஞ்சுட்டு கேட்கிற கேள்வியைப் பாரு...!' மனதுக்குள் எண்ணியவன்,

"தூக்கம் வந்தால் தூங்காமல் என்னம்மா செய்வாங்க...?" பரிதாபமாகக் கேட்டான்.

அவளோ, "நான் ஒருமுறை கூப்பிட்டு... நீங்க எழுந்திரிக்கலை என்றவுடன் பயந்துட்டேன்...!" கண்களில் நீர் நிறையச் சொன்னாள்.

"விடிஞ்ச பிறகு தூங்கினதால் அசந்துட்டேன்மா. என்னால்... நீ இப்படிக் கவலைப் படுறதைப் பார்க்க முடியலை. உன் மனசுக்குள் என்னதான் இருக்குன்னு சொல்லு நந்து...!" அவனது கவலை, அவளையும் தாக்கியது.

தான் நினைத்ததை அவர்களிடம் எப்படிச் சொல்ல என்று தயங்கியவள், வேறு வழி இல்லாமல்... அவர்கள் பாட்டி சொன்னதைச் சொல்ல, அங்கிருந்தவர்கள் அனைவரின் மனமும் பாரமாகியது.

ப்ரதீப்பின் உள்ளம் துடிக்க, ரோஸின் பிடியில் இருந்து அவளை விலக்கியவன்... தன்னோடு இறுக்கிக் கொண்டான். மற்றவர்கள் இங்கிதமாக அங்கிருந்து நகர்ந்து விட...

"ஹையோ நந்து...!" உள்ளம் தவித்தது. "இதனால் தான் ஒவ்வொரு முறையும் நான் நெருங்கும்போதும் நீ விலகினாயா...? நேத்து நைட் அதனால்தான் இவ்வளவு வருத்தப்பட்டாயா...? இதை என்கிட்டே முதலிலேயே சொல்லி இருக்கலாமே நந்து...!"

அவள் வருத்தமும், தவிப்பும் புரிந்தவன் கலங்கினான்.

"நான் ஏற்கெனவே உன்கிட்டே சொல்லி இருக்கேன். நான் உன்னை விட்டுப் போகவே மாட்டேன். அப்படியே போகவேண்டிய கட்டாயம் வந்தால், உன்னையும் சேர்த்துக் கூட்டிட்டுத்தான் போவேன். புரியுதா...?" சொன்னவன், அவளை இறுக்கிக் கொண்டான்.

ஆறுதலான அவர்கள் அணைப்பு... தனிப்பட்ட விதத்தில் மாற.. இனிய உதயம் துவங்கியது அங்கே.



வையில் உச்சியை எட்டும்வரை உறங்கிக் கொண்டிருந்த நந்தினியின் அருகில் அமர்ந்து, அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் ப்ரதீப். அவள் முகத்தில் தெரிந்த அமைதி, அவனையும் சாந்தப்படுத்தியது.

காலையிலும் அவள் உண்ணவில்லை என்பதை உணர்ந்தவன், "நந்து... எழுந்திரும்மா... சாப்பிட்டு வந்து தூங்கு. காலையில் கூட நீ எதுவுமே சாப்பிடலை...!" அவள் தோளைத் தொட்டு எழுப்பினான்.

"பசிக்கவே இல்லை பெப்பி. எனக்கு எதுவும் வேண்டாம்...!" சொன்னவள், அவன் மடியில் தலை வைத்துக் கொண்டாள்.

கலைந்திருந்த அவள் முடியை ஒதுக்கியவன், "அதெப்படிப் பசிக்காமல் போகும்...? இப்போ மணி பன்னிரண்டு ஆகப் போகுது. எழுந்து கொஞ்சமா சாப்பிட்டுப் படுத்துக்கோ...!" அவள் பசியே பிரதானமாகத் தோன்றியது அவனுக்கு.

"நிஜமாவே பசிக்கவே இல்லை பெப்பி. மனசெல்லாம் நிறைஞ்சு இருக்கு...!"

கண்களைச் சோம்பலாகத் திறந்தவள்... விழி விரித்து அவனை விழுங்குவது போல் பார்த்தாள்.

அவள் பார்வையில் கவரப்பட்டவன், "என்னைக் கொஞ்சோண்டு நல்லவனா இருக்கலாம்னு பார்த்தால் விடவே மாட்டியா...?"

அவள் முகம் நோக்கிக் குனிந்தவாறு கேட்டான்.

"நீ என் கிட்டே கெட்ட பையனா நடந்துக்குறதுதான் எனக்குப் புடிச்சிருக்கு...!" சொன்னவள், அவன், "ஏய்...." என்ற அழைப்போடு நெருங்கவே, அவன் நெஞ்சில் கை வைத்துத் தள்ளியவள்...

"ஆசையைப் பாரு.., முடிந்தால் என்னைப் பிடி...!" ஓடிச் சென்று பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டாள்.

அவள் பின்னால் ஓடியவன், அவள் கதவை அடைக்கும் முன்னர்.., உள்ளே நுழைந்து கதவைத் தாழ்ப்பாள் போட்டான்.

"ஹையோ பெப்பி...! ப்ளீஸ், ப்ளீஸ்...! நான் குளிச் சுட்டு வர்றேன்...!" புருவம் சுருக்கி... இதழ் குவித்து அவனிடம் கெஞ்சினாள்.

"அப்போ வெளியே போடான்னு சொல்லு... போயிடுறேன்...!"

தோளைக் குலுக்கிச் சொன்னவன்... பிடிவாதமாக நின்றான்.

அவனை முறைத்தவள், "முடியாது. போடா... என்னவோ பண்ணிக்கோ...!" அவள் சொல்லவே, அதற் காகவே காத்திருந்தவன் போல் அவன் சேட்டைகள்

துவங்க, அவர்கள் அறையை விட்டு வெளியே வரும் பொழுது கடிகாரம் இரண்டு மணியைக் காட்டியது.

"ச்சே...! என்ன பெப்பி இப்படி வம்பு பண்ணுறீங்க? எப்படி நான் ரோஸ் முகத்துல முழிப்பேன்...?" வெட்கமும்... சங்கடமும் கலந்த குரலில் கேட்டாள்.

"அதுக்கெல்லாம் நீ கவலையே பட வேண்டாம். அவங்க வெளியே போயிருக்காங்க. இன்னைக்கு புல் டே நமக்குத்தான்...!" கண்ணைச் சிமிட்டிப் போதையான குரலில் அவன் சொல்ல, "ச்சீய்...!" வெட்கம் கலந்த குரலில் குழையச் சொன்னவள், ஆசையாக அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்.

அன்று அவளை அழைத்துக் கொண்டு வெளியே சென்றவன், அவளுக்குப் பிடித்தவை என்று அவள் கை காட்டியது முதல்... அவள் ஆசையாகப் பார்த்தது வரை அனைத்தையும் அவளுக்கு வாங்கிக் கொடுத்தான்.

"எதுக்கு இவ்வளவு வாங்குறீங்க..?" அவனைத் தடுக்க முயல, "நீ இனிமேல் சின்ன விஷயத்துக்குக் கூட ஏங்கக் கூடாது நந்து." அவன் ஆழ்ந்த குரலில் சொல்ல.., திகைத்து விட்டாள்.

"என்னை எப்பவும் சீரியஸா இருக்கக் கூடாதுன்னு சொல்லிட்டு, இப்போ நீங்க என்ன பண்ணுறீங்க?" அவனிடம் போலியாகக் கோபப்பட்டாள்.

"நான் உன் விஷயத்தில் மட்டும் எப்பவும் சீரியஸாத் தான் இருப்பேன் நந்து. சரி, விடு. இன்னைக்குப் பார்லர்

போகணும்னு நினைச்சுட்டு இருந்தேன், வா போகலாம்...!" அழுத்தமாகச் சொன்னவன், அவளை இயல்பாக்க, அடுத் தடுத்த வேலைகளில் ஈடுபட்டான்.

"நான் முடி வெட்டிக்கலை பெப்பி, நான் முடி வளர்க்கப் போறேன்...!" அவள் சொல்ல,

"இல்ல நந்து... நீ எப்பவும் போல இருக்கிறதுதான் எனக்குப் பிடிச்சிருக்கு. எனக்காக நீ எதையும் மாத்திக்க வேண்டாம் நந்து. இந்தக் குட்டை முடியை வைச்சிட்டு நீ ரொம்பச் சிரமப்படுற. நான் சொன்னா கேட்பதானே! வா..." அவளை அழைத்துச் சென்றவன், பார்லரில் விட்டு விட்டு, அவளுக்காகக் காத்திருந்தான்.

திரும்பி வந்தவள், "உன் கண்களில் இருந்து எதுவுமே தப்பிக்காதா பெப்பி...?" நெகிழ்ந்திருந்த அவள் குரலில், பெருமிதமும் காதலும் நிரம்பி வழிந்தது.

காலை முதல் அவளுடன் எவ்வளவு இயல்பாக இருந்தாலும், அவளுடன் எதையோ பேச விரும்புவதை யும்., பின்னர் அதை விட்டு விட்டு, வேறு எதையோ பேசியவாறு இருப்பதையும் உணர்ந்து கொண்டாள். 'சரி, வீட்டுக்குப் போய்ப் பார்த்துக் கொள்ளலாம்!' எனப் பேசாமல் இருந்தாள்.

இரவு உணவையும் வெளியே முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தவர்கள், தூங்கப் போகும் முன்னர், சோபாவில் அமர்ந்தவன், அவள் குளித்துவிட்டு வரவே, அவளை இழுத்து மடியில் அமர வைத்தான்.

"பெப்பி... என்ன இது...? விடுங்க, நான் கீழே உக்காருறேன்...!" அவள் திமிற, "ப்ச்... இப்போ என்ன ஆச்சுன்னு இப்படிச் சொல்லுற...? அப்படியே உக்காரு...!" அவள் இடையோடு கட்டிக்கொண்டு... அவள் பின்னங் கழுத்தில் வாசம் பிடித்தான்.

"ஆரம்பிச்சாச்சா...?" சிணுங்கியவள், வாகாக அவனுக்கு இசைந்து கொடுக்கவே செய்தாள்.

"நந்து! உன்கிட்டே நான் ஒண்ணு சொல்லணும். நான் சொன்னால் கேட்பதானே...!" தன் சில்மிஷங்களை நிறுத்தி விட்டு... அவள் முகத்தைத் தன் பக்கம் திருப்பிக் கேட்டான்.

"நீ சொன்னால் நான் எதையும் கேட்பேன் பெப்பி!"

அவன் எதைப் பற்றிக் கேட்கப் போகிறான் என்பது தெரிந்து உறுதியாகவே சொன்னாள்.

"இந்த கேஸை சி.பி.ஐ. கிட்ட கொடுத்துடு நந்து...! எனக்காக... ப்ளீஸ்..." இறைஞ்சலாகக் கேட்டான்.

அவனை ஆழமாகப் பார்த்தவள்... "செஞ்சுடுறேன் பெப்பி! ஆனா அதுக்கு முன்னாடி எனக்குக் குற்றவாளி இவர்தானான்னு உறுதிப்படுத்திக்கணும்..." அவள் சொல்ல...

"நீ சரியான பாதையில்தான் போயிட்டிருக்க நந்து! ஆனால் நீ எப்போ உறுதிப்படுத்துறியோ... அடுத்த நிமிஷம் என்ன நடக்கும்னு எனக்கு ரொம்பக் கவலையா இருக்கு..."

அவள் கழுத்து வளைவில் புகுந்து இளைப்பாறி யவன் சொன்னான்.

அவன் சிகைக்குள் கை கொடுத்து அவனை நிமிர்த் தியவள்... "உங்களுக்கு இந்தக் கேஸைப் பத்தி எப்படித் தெரியும்...? நீங்க பேசுறதைப் பார்த்தால்... குற்றவாளி யாருன்னு உங்களுக்குத் தெரியுமா...?"

அவனைப் பார்த்தவாறு நிதானமாகக் கேட்டாள்.

"ப்ளீஸ் நந்து...! எனக்காக... இப்போ எதுவும் சொல்லும் நிலையில் நான் இல்லை..."

"அப்போ நான் கேஸை விசாரிச்சு முடிச்சுட்டு ரெண்டு நாளில் உங்களுக்குச் சொல்றேன்..." இருவரின் பேச்சும் ஒருவருக்கு ஒருவர் வேதனையையும் வருத்தத் தையும் அளித்தாலும்... அமைதியாகவே இருந்தார்கள்.

காலையில் எழுந்து அலுவலகம் செல்லும்வரை... ஒருவருக்கொருவர் அனைத்து வேலைகளையும் செய் தாலும்... ஒருவித அமைதி சூழ்ந்திருப்பதை மற்றவர்களும் உணர்ந்தார்கள்.

ரோஸின் முகம் கவலையைக் காட்ட... "எல்லாம் சரியாகிவிடும்..." என்று ஆறுதல் படுத்தினான் சரவணன்.

அலுவலகம் வந்த நந்தினி... இன்றே இந்தக் கேஸின் முடிவு தெரிந்தே ஆகவேண்டும் என்று வெறி யோடு செயல்பட்டாள்.

அதன் முடிவில் அவளுக்கு ஏற்பட்ட சந்தேகம் அவளைத் திகைக்க வைத்தது.

அதே நேரம் ஒலித்த அலைபேசியின் அழைப்பு அவள் புருவங்களை உயர்த்த வைக்க... அந்த அழைப்பைக் கண்டுகொள்ளாமல் இருந்தாள்.

அதன் பிறகு.அவள் டேபிள் மேலே இருந்த தொலைபேசி ஒலிக்க... சலிப்போடு அதற்குச் செவி மடுத்தாள்.

"சார்... எஸ்... சார்..." சொன்னவள் உடனடியாக ஐ.ஜி.யைக் காணச் சென்றாள்.

"கேஸ் முடிஞ்சுடுச்சா நந்தினி... குற்றவாளி யாரென்று தெரிந்ததா....?" அவர் கண்கள் அவளைத் துளைத்தது.

"கிட்டத்தட்ட முடிஞ்சுது சார்..." பிடி கொடுக்காமல் பேசினாள்.

"உங்க கேஸைப் பார்க்காமல்... தேவையில்லாமல் நீங்க ஏன் கோபி கேஸை நோண்டுறீங்க? அதை இப்போ ராகவன் தானே பாக்குறார்..." அவர் குரல் கண்டிப்புடன் ஒலித்தது.

"ஐ...நோ... சார்... கோபால் இறந்தப்போ அவங்களோட சேர்ந்து கோபியும் இறந்துட்டார். அதனால் சும்மா விசாரிக்கப் போனேன். அவ்வளவுதான். கேஸ் முடிந்தால்... முதல்ல உங்ககிட்டதான் சொல்லுவேன்..."

சொன்னவள் விறைப்பான ஒரு சல்யூட்டோடு அங்கிருந்து வெளியேறினாள்.

அவள் அலுவலகம் வந்தபொழுது... பெப்பி அங்கே இருந்தான்.

இதை எதிர்பார்த்தேன் என்பது போல் அவனைப் பார்த்தவள்... "வாங்க. வீட்டுக்குப் போகலாம்..." சொன்னவள்... அவனையும் அழைத்துக் கொண்டு வெளியேறினாள்.

வீட்டிற்கு வந்து உடை மாற்றும்வரை அமைதியாக இருந்தவள்... உடை மாற்றிவிட்டு... "பெப்பி... கேஸை சி.பி.ஐ. கிட்ட கொடுக்க நான் சம்மதிக்கிறேன்..."

அவன் அருகில் அமர்ந்தவாறு சொன்னாள்.

அவளைத் திகைப்பாய்ப் பார்த்தவன்... "நந்து... நீ நிஜமாகத்தான் சொல்லுறியா...! உனக்கு ஒண்ணும் இதில் வருத்தமில்லையே...! நான் மேற்கொண்டு எல்லா நடவடிக்கையும் எடுக்கட்டுமா...? முதல்ல போய் மந்திரி ராஜமாணிக்கத்தைப் போய் பாப்போம்..."

அவன் வேமாகச் சொல்ல... தன் சந்தேகங்களை மூட்டை கட்டிவிட்டு... அவனுக்கு உடன்பட்டாள்.

ராஜமாணிக்கத்தைப் பார்ப்பது அவ்வளவு சுலபமில்லை என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் ப்ரதீப் வந்திருப்பதாகச் சொன்ன அடுத்த நிமிடமே... மந்திரியே வெளியே வந்து அழைத்துச் சென்றதைப் பார்த்து நந்தினி வியப்படைந்தாள்.

அவள் யோசிப்பதைப் பார்த்தவன்... அவளைத் திசைதிருப்பும் பொருட்டு... "சார்! இவங்கதான் நந்தினி. என்னோட மனைவி. அவங்க கோபால் சார் கேஸை சி.பி.ஐ. கிட்ட ஒப்படைக்கச் சம்மதிக்கிறாங்க. இனிமேல் நீங்க ஒரு உத்தரவு போட்டால்... சி.பி.ஐ. வசம் கேஸ் போயிடும். அதைச் சொல்லத்தான் வந்தோம்..." அவன் வேகமாகச் சொல்ல...

அவனைப் பார்க்க... அவன் கண்கள் சொன்ன செய்தியில் அமைதியானவர்... "அப்போ நீங்க சொன்ன படியே செஞ்சிடலாம். உனக்குச் சம்மதம்தானேம்மா...?" அவளிடம் கேட்க...

அவளும் சம்மதம் தெரிவித்தாள்.

அதன் பிறகு காரியங்கள் மிகவும் வேகமாக நடந்தேறின.

கேஸ் சி.பி.ஐ வசம் செல்லப் போவதாக அனைத்துப் பத்திரிக்கைகளிலும் செய்தி வெளியாக... நந்தினியைப் பத்திரிகைக் கூட்டம் சூழ்ந்து கொண்டது.

"இதை உங்களோட தோல்வின்னு ஒத்துக்கிறீங்களா?"

"உங்க திருமண வாழ்க்கை... உங்க சாமர்த்தியத்தைத் திருடிட்டதா சொல்றாங்களே... அதற்கு உங்க பதில் என்ன..?"

"நந்தினி ஐ.பி.எஸ்.சை இனிமேல் சார்னு சொல்ல முடியாதோ...? குற்றவாளியை உங்களால் ஏன் கண்டு பிடிக்க முடியலை?"

"உங்களோட முதல் தோல்வி இது... இதை நீங்கள் எப்படி எடுத்துக்கறீங்க...?"

பத்திரிகை அன்பர்களின் கேள்விகளில் அவளுக்கு ரத்தம் கொதித்ததுதான். ஆனால் அதை அடக்கிக் கொண்டவள்...

"இந்தக் கேஸ் தெளியும்போது... உங்க எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்றேன்..." சொன்னவள் அங்கிருந்து நகர்ந்துவிட்டாள்.

வீட்டிற்கு வந்த நந்தினியை நெருங்கவே அனை வரும் அஞ்சினார்கள்.

ரோஸ் அறைக்குள்ளிருந்து வெளியே வரவே இல்லை.

அனைத்துச் செய்தி சேனல்களிலும்... இதையே ஒளிபரப்ப...,அமைதியாகச் சோபாவில் சாய்ந்திருந்தாள் நந்தினி.

அவள் அருகில் வந்து அமர்ந்தவன்... அவளைத் தன் மடியில் சரித்துக் கொண்டான்.

மறுப்பு சொல்லாமல் அவன் மடியில் தலை வைத்தவளின் கருவிழிகள் இமைகளுக்குள் உருண்டது.

"சாரி நந்தினி... எல்லாம் என்னால்தான்..." வேதனையாகச் சொன்னான்.

"இந்தத் தலைகுனிவை விட உயிர் பெருசுதான் இல்ல பெப்பி..."

அவள் சாதாரணமாகச் சொன்னாளா... இல்லை அவமானமாகச் சொன்னாளா என்பதை அவனால் பிரித்தறிய முடியவில்லை.

அவளைத் தூக்கி நெஞ்சோடு அணைத்தவன், "இப்படி ஆகும்னு எனக்குத் தெரிஞ்சும் இதைச் செய்யாமல் இருக்க எனக்கு வேற வழி தெரியலை நந்து. ரியல்லி சாரி..." வேதனையாகச் சொன்னான்.

"என்னோட இந்த அவமானம் உனக்கும்தான்னு எனக்குத் தெரியும் பெப்பி. கண்டிப்பா நீங்க செய்யுறதுக்கு ஏதாவது காரணம் இருக்கும். இது இப்படித்தான் ஆகும்னு எனக்குத் தெரியும். ஆனாலும், சரி விடுங்க..." சாதாரணமாக இருக்க முயன்றாள்.

அவள் மனம் படும் துன்பம் புரிய... இந்தச் சூழலில் தன்னை நிறுத்திய அவன் நிலையை... அந்த நேரம் மிகவும் வெறுத்தான்.

மறுநாள் அவள் அருகில் வந்தவன், "நந்து... எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு. ஒரு மூணு நாள் வெளியூர் போயிட்டு வாரேன். என்னோட சரவணனும் வாரான்..." அவன் தயங்கியவாறு சொல்ல...

"ஆல் தி பெஸ்ட்..." அவன் கைகளைக் குலுக்கி அவனுக்கு விடை கொடுத்தாள்.

அவள் தன்னிடம் எதையும் கேட்காததே அவனுக்கு எதையோ புரிய வைக்க... அமைதியாகவே கிளம்பினான்.

ரோஸ் தான் அழுது அடம் பிடித்தாள். அவளைச் சமாதானம் செய்வதற்குள் திணறிப் போனான் சரவணன்.

"ஏய்... உன்னை மாதிரிதானே அவங்களும். அவங்க பேசாமல் இருக்காங்கல்ல. நீ மட்டும் ஏன் இப்படி அழுது அடம் பண்ணுற...?" சங்கடமாகக் கேட்டான்.

"நான்தான் இன்னைக்கு ஹர்ஸ்பிடல் போகணும்னு சொன்னேன்ல... அப்போ மண்டையை மண்டையை ஆட்டிட்டு... இப்போ வெளியூர் போறேன்னு சொன்னால் என்ன அர்த்தம்...?" கால்களைத் தரையில் உதைத்துக் கொண்டாள்.

"அதான் ரெண்டு நாள்ல வந்துருவேன்னு சொல் றேன் இல்ல... அப்படியே அவசரமாப் போகணும்னா... அக்காவைக் கூட்டிட்டுப் போ..." அவளிடம் கடுப்படித் தான்.

"மாக்கான்... மாக்கான்..." அவள் கத்தினாள்.

அவள் சொல்ல வருவதைப் புரிந்து கொண்ட நந்தினி... "பெப்பி! சரவணன் இங்கேயே இருக்கட்டுமே..." ப்ரதீப்பிடம் கேட்டாள்.

"இல்லக்கா. அவன் சொன்னாலும் நான் இருக்க மாட்டேன்..." மாற்றமே இல்லாமல் சொன்னான்.

"ரோஸ்... நீயே போய்ச் சொல்லு..." சொல்லி விட்டு அவர்களை அனுப்பினாள்.

என்னவென்று புரியாமல் நின்ற ப்ரதீப்... அவளிடம் என்னவென்று கேட்க... "நீங்க கூடிய சீக்கிரம் மாமா ஆகப்

போறீங்கன்னு அர்த்தம்..." அவன் மூக்கைப் பிடித்துத் திருகினாள்.

"ஹேய்! நிஜம்மாவா..."

"உங்க ஃபிரண்ட் இப்போ வருவாரு... வேண்ணா அவர்கிட்டயே கேட்டுக்கோங்க..." அவள் சொல்லவும்...

முகம் முழுக்கப் பூரிப்போடும், அவன் முதுகின் பின்னால் ஒளிந்தவாறு, வெட்க முகமாக ரோஸ் வருவதற்கும் சரியாக இருந்தது.

"கன்க்ராட்ஸ் மாப்ள...!" அவனைக் கட்டிக் கொண்டு சொன்னான்.

"வாழ்த்துக்கள் தங்கச்சி..." அவளுக்கும் வாழ்த்துச் சொன்னவன், "நீ வேண்ணா..."

"நீ என்ன சொன்னாலும் இதில் நான் கேட்க மாட்டேன்." பிடிவாதமாக அவன் சொல்லிவிட... வேறு வழி யில்லாமல் அவர்கள் கிளம்பினார்கள்.

அடுத்த ஒரு வாரம் அவர்கள் எங்கே இருக் கிறார்கள்... என்ன செய்கிறார்கள் என்ற எதுவும் நந்தினிக்குத் தெரியவில்லை. ஆனால் என்னவாக இருக்கும் என்ற சந்தேகம் அவளுக்குள் முளைவிட்டது. அவர்களின் வரவுக்காகக் காத்திருந்தார்கள்.

ஆனால் அவர்கள் வருவதற்கு முன்பே, சி.பி.ஐ. கேஸை முடித்து விட்டதாகவும், குற்றவாளி யார் என்பதை அடையாளம் காட்ட வருவதாகவும், ஒரு சிறிய அளவில்

அவசர நீதிமன்றம் கூடியிருப்பதாக அவளுக்குத் தகவல் வந்தது.

முன்னர் கோபால் கேஸை அவள்தான் கவனித்துக் கொண்டாள் என்ற முறையில் அவளுக்கு அழைப்பு வந்திருந்தது.

அதை ஏற்பதா வேண்டாமா என்ற குழப்பத்தோடே இருந்தாள்.

அதை விட... தான் கண்டுபிடித்த கேஸ்... மற்ற வன் கண்டுபிடித்துப் பெயர் வாங்குவதை நேரில் காணும் அளவு தனக்கு மனவலிமை இல்லை என்று தனக்குச் சொல்லிக் கொண்டாள்.

ஆனால் அன்று காலையில் அவளது அலை பேசிக்கு அழைத்த ப்ரதீப்... அவள் கண்டிப்பாகச் சென்றே ஆகவேண்டும் என்று சொல்ல... அவன் வார்த்தைகளை மீற முடியாமல் செல்வதாகச் சொன்னாள்.

வழியிலேயே பத்திரிகைக்காரர்களின் கேள்விக் கணைகள் தொடர வெறுத்துப் போனது.

எரிச்சலும் கோபமுமர்க... அவள் பெயர்ப்பலகை இருந்த இருக்கையின் முன்னால் சென்று அமர்ந்தாள்.

அங்கே ஏற்கெனவே மூன்று வக்கீல்கள்... மூன்று நீதிபதிகள்... மந்திரி ராஜமாணிக்கம், ஐ.ஜி., டி.ஐ.ஜி., எஸ்.பி... என அனைவரையும் கண்டவள்... ஒரு சல்யூட்டை உதிர்த்து விட்டு இருக்கையில் அமர்ந்தாள்.

ஒரு ஓரத்தில்... சில பத்திரிகை அன்பர்கள்கூட இருப் பதைக் கண்டாள்.

'ஏற்பாடெல்லாம் பலமாத்தான் இருக்கு...' பொருமிய வாறு அமர்ந்திருந்தாள்.

"கேஸ் ஆரம்பிக்கட்டும்..." நீதிபதி குரல் கொடுக்க...

அந்த ஹாலின் மூலையில் இருந்த கதவு படாரெனத் திறக்க... கம்பீரமான நடையுடன்... கையில் சிறிய ஃபைலுடனும்... காலில் பளபள ஷு... கிளீன் ஷேவ் செய்து... ட்ரிம் செய்த மீசையுடன்... ஒட்ட வெட்டிய முடி யுடன்... டக்கின் செய்த உடையுடன்... வீர நடையுடன் வந்தவனைக் கண்டவள்... இமைக்கவும் மறந்திருந்தாள்.



நிமிர்ந்த நடையுடன் வந்த ப்ரதீப்... நேராகச் சென்று நீதிபதிகளுக்கு லேசாகத் தலை சரித்தவன்... அந்த நீள்வட்ட மேஜை யின் நடுவில் வந்து நின்றான்.

அவன் பார்வை அனைவரையும் தொட்டு மீண்டது. அவன் பின்னால் சின்ன சூட்கேஸை எடுத்து வந்த சரவணன் ஒதுங்கி நின்றான்.

நந்தினியைக் கண்டவனின் கண்கள்... கூடுதலாக இரண்டு நிமிடம் அவளிடம் நிலைக்க... பின்னர் தன்னை மீட்டுக் கொண்டு,

"ஹாய்... நான்தான் கோபால் கேஸை ஹேண்டில் செய்யும் க்ரைம் பிராஞ்ச் சி.பி.ஐ. ஆபீசர் ப்ரதீப்குமார்

சுபாஷ் சந்திர போஸ். உங்களுக்கு நான்தான் புதுசு. ஆனால் என் அப்பா சுபாஷை ரொம்ப நல்லாத் தெரியும். கலவரத்தில்... கலகக்காரர்கள் கையில் சிக்கி.... கல்லடி வாங்கி செத்துப் போன அவரை... அவ்வளவு சீக்கிரம் யாரும் மறந்திருக்க மாட்டீங்க...

"சரி, இப்போ நமக்கு அது தேவையில்லாத விஷயம்... இதோ இவன் என்னோட அசிஸ்டென்ட் சரவணன்..." முறைப்படி அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"நாங்க இந்த கேசுக்குள் நுழைந்து கிட்டதட்ட ஐந்து மாசம் ஆகுது... அதற்குக் காரணம் நம்ம எம்.பி. சார் மிஸ்டர் ராஜமாணிக்கம் ஐயா அவங்கதான்... நந்தினி கேஸ் பின்னாடி போயிட்டு இருக்கும்போது... நானும் அதே கேஸ் பின்னாடிதான் ஓடிட்டு இருந்தேன்..."

அவன் சொல்லச் சொல்ல... அனைவரின் பார்வையும் அவன் மீதே இருந்தது.

"சரி. நான் கேசுக்கு வாரேன். இது ரொம்பவே எமோஷனலான கேஸ். செத்துப் போனது ஒரு மந்திரி. அவர் சாவுக்குக் காரணமாக இருந்தது ஒரு சாலை விபத்து. விபத்தில் நமக்கு க்ளூவா கிடைத்தது ஒரு பர்ஸ்.

"உங்களுக்கே தெரியும்... இது ஒண்ணை வச்சு... ஒரு கொலையைக் கண்டுபிடிக்கிறது ரொம்பவே கஷ்டம்னு. ஆனா இந்தக் கேஸை முதலில் ஹேண்டில் செய்த நந்தினி... கிட்டத்தட்ட கேஸை முடிச்சுட்டாங்க.

"முடித்த பிறகுதான் கேஸ் என் கைக்கே வந்தது. நந்தினி குற்றவாளியைக் கொஞ்சம் இனம் கண்டு...

அவனைப் பிடித்த கொஞ்ச நாளிலேயே அவங்களுக்கு மிகப் பெரிய விபத்து ஏற்பட்டது உங்க எல்லோருக்குமே தெரிந்து இருக்கும்.

"அந்த இடத்தில்தான்... என்னோட சந்தேகம் திசை திரும்பியது. அது எப்படின்னா... நந்தினி குற்றவாளியைக் கைது செய்த விஷயம் உடனடியா எந்தப் பத்திரிகைக் குமே தெரியப்படுத்தவில்லை. அப்படியிருக்கும்போது... உடனடியா அவங்க அலைபேசிக்கு ஒரு மிரட்டல் கால் வந்தது.

"மூன்றாவது மனிதர்களின் காதுக்குப் போகாத ஒரு விஷயம்... எப்படி வெளி ஆளுக்குத் தெரிந்து அவன் கால் செய்தான்? அப்படின்னா அதுக்கு அர்த்தம்... டிபார்ட் மெண்டுக்குள்ளேயே யாரோ ஒரு ஆள் குற்றவாளிக்கு உதவுகிறான் என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது.

"அதை உறுதிப்படுத்துவது போல்... இல்லாத குற்றவாளி ஒரு இடத்தில் இருப்பதாகச் சொல்லி... அவங்களை வர வச்சு... அதே லாரி விபத்து திரும்பவும் ஏற்பட வச்சாங்க. அங்கேதான் அந்தக் குற்றவாளி தப்புப் பண்ணிட்டான்..."

சொன்னவன்... அங்கிருந்த அனைவரையும் உற்றுப் பார்த்தான்.

அங்கே மயான அமைதி நிலவியது.

மீண்டும் பேச்சைத் துவங்கினான். "குற்றவாளிக்கு ஏனோ... நந்தினி இந்தக் கேஸை நடத்தினால் தான்

சிக்கிடுவோம்னு பயம்... அதான் அவங்களை அப்புறப் படுத்த முயன்றிருக்கான். பாவம் அது முடியாமல் போச்சு...

"அதே மாதிரிக் கேஸ் அவங்க கையை விட்டு போகப் போகுது என்ற தைரியத்தில்தான் அந்த டிரைவரை விட்டு வச்சாங்க போல. ஆனால் நந்தினி மீண்டு வந்து... மறுபடியும் கேஸ் துவங்கவே... டிரைவரையும் தீர்த்துக் கட்டிட்டாங்க...

"அதில் ஒரு சுவாரசியமான விஷயம் என்னன்னா... நந்தினி அவங்க உயரதிகாரிகிட்ட... டிரைவர் வாக்குமூலம் கொடுக்குறான் என்று சொல்லிட்டு... அவங்க ஆபீஸ் போகும் முன்னாடியே இந்தத் தாக்குதல் நடந்ததுதான் ஸ்பெஷல். இல்ல ஐ.ஜி. சார்..."

ஐ.ஜி. ஞானராஜைப் பார்த்துக் கேட்க... அவருக்கு லேசாக வியர்த்தது.

அதை மறைத்தவர்... "மிஸ்டர் ப்ரதீப். நீங்க தேவையில்லாமல் என்னை இதில் இழுக்குறீங்க..." இருக்கையில் இருந்து எழுந்து கத்தினார்.

"ஹலோ மிஸ்டர் ஞானம். நான் நீங்கதான் அந்த உயரதிகாரின்னு சொல்லவே இல்லையே! கூல்... கூல்..." அவரை அமரச் சொன்னவன்... லேசாகச் சிரித்துக் கொண்டான்.

"உங்க எல்லோருக்கும் தெரியுமா என்னன்னு தெரியலை... ரெண்டு நாளைக்கு முன்னாடியே... கோபால் சார் வண்டியை ஆக்சிடெண்ட் பண்ண ஏற்பாடு

பண்ணி இருக்காங்க. ஆனால்... கடைசி நேரத்தில் வந்த ஒரு போன் கால்தான்... அதைத் தடுத்து இருக்கு.

"அது... அந்த இடம்தான்... என்னை ரொம்பவே குழப்பிய ஒரு விஷயம். ஏன்... ஏன்... அன்னைக்கு என்ன ஆச்சு...?

"அதில் கிடைத்த ஒரு விஷயம்தான்... விபத்து நடந்த அன்னைக்கு... கோபால் சார் கூட இருந்த அதே ஆட்கள் எல்லோரும்... விபத்து கேன்சலான அன்னைக்கும் இருந்திருக்காங்க.... ஒரே ஒருத்தரைத் தவிர...

"அது யாருன்னா..." சிறிது இடைவெளி விட்டவன்... "அது வேற யாரும் இல்லை... விபத்தில் கோபாலோடு இறந்து போன டி.எஸ்.பி. கோபிநாத் தான். இது... இதுதான்... இந்தக் கேஸுக்குள் ஒளிந்து இருந்த ஒரே விஷயம்...

"அப்போ அந்தக் கோபி சார் பின்னாடி போய் பார்ப்போம்' என்று போனால்... அது அவர் கடைசியாப் பார்த்துக் கொண்டிருந்த கேஸைத் தூசித் தட்டச் சொல்லுச்சு. அவர் ஹேண்டில் செய்த கேஸ்... மரக் கடத்தல் பற்றியது. ஒவ்வொரு கட்டத்தில் அவர் லாரிகளை மடக்கும் போதும்... குற்றவாளிகள் ரொம்பச் சுலபமா வெளியே போயிட்டே இருந்தாங்க.

"அவரோட விசாரணையின் முடிவில்... அவருக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அது என்னன்னா... அந்த லாரி கம்பெனியும் சரி... அந்த மரங்களைக் கடத்

துபவர்களும் சரி... அவரோட உயரதிகாரி ஒருத்தரைச் சுட்டிக் காட்டவே... நேரடியா அவரிடம் போய்ச் சொல் லிட்டார்.

"உங்க கைக்கு விலங்கு வரும்னு நேரடியா மிரட்டவே... கோபியைப் பணம் கொடுத்து வாங்க எவ்வளவோ முயற்சி பண்ணி இருக்கார். ஆனால் முடியாமல் போகவே... எப்படியாவது அவரை இல்லாமல் போக வைக்கணும்னு முடிவு பண்ணிட்டார்.

"ஆனா எப்படிச் செய்வதுன்னு அவருக்கு ஒரே குழப்பம். ரொம்பச் சுலபமா அவரை அவரால் முடிக்க முடியும். ஆனா அப்படிச் செய்தால்... ரொம்ப ஈஸியா அதுக்குக் காரணம் யார் என்பதைக் கண்டு பிடிச்சிடு வாங்க. அதே நேரம்... தன்னைக் கண்டுபிடிக்க இருக்கும் அந்தக் கேஸும் போகாது...

"அந்த நேரம்தான்... கோபால் சார் வர்ற விஷயம் அவருக்குத் தெரிய வந்தது. அதுக்கு அவர் தேர்ந்தெடுத்த வழிதான் இது. கோபாலோட சேர்ந்து கோபி இறந்துட்டா... எல்லோரும் எம்.பி. கோபால் பின்னாடி போவாங்களா... இல்ல, ஒரு போலீஸ் பின்னாடி போவாங்களா...

"அதுதான் இங்கேயும் நடந்தது. நந்தினியும் அவர் நினைத்தபடி... கோபால் கேஸ் பின்னாடிதான் போனாங்க. ஆனா... ஒரு கட்டத்தில் அந்த டிரைவர் பிடிபட்டதுதான் அவர் எதிர்பாராத திருப்பத்தைக் கொடுத்தது. இல்ல ஐ.ஜி. சார்..."

ப்ரதீப் கேட்க... அந்த அரங்கமோ அமைதியில் மூழ்கியது.

ஒரு நிமிடம் அவன் சொல்வதை அங்கிருந்த யாரும் புரிந்துகொள்ளவில்லை.

ஆனால் ஐ.ஜி.யோ... "நோ... நோ... என்ன நினைச்சுட்டு இருக்கீங்க ப்ரதீப்... குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியலன்னா அதைச் சொல்லிட்டுப் போங்க... அதை விட்டுட்டு... என்னையே குற்றவாளியாக்கை காட்டுவீங்களா...?" எகிறினார்.

"நீங்க அவ்வளவு சீக்கிரம் குற்றத்தை ஒத்துக்க மாட்டீங்கன்னு எனக்கும் தெரியும். இது என்னன்னு தெரியுதான்னு பாருங்க..."

சொன்னவன்... சரவணனின் கையில் இருந்த சூட்கேஸில் இருந்து ஒரு டைரியை எடுத்துக் காட்டினான்.

அதைப் பார்த்தவர் திகைத்தார்.

"இதெப்படி உன்கிட்டே..." திணறினார்.

"கூல்... கூல். இதில் எனக்கு உபயோகமா எந்தத் தகவலும் இல்லை. ஒரு ரெண்டு போன் நம்பரைத் தவிர..." சொன்னவன் அவற்றைச் சிவப்பு மையில் அடையாளமிட்டிருந்தான்.

"எனக்குத் தெரியாது..."

அவர் கர்சீப்பால் முகத்தை ஒற்றியவாறு சொன்னார்.

"உங்களுக்கு ரொம்ப ஞாபக மறதின்னு எனக்குத் தெரியும். அதான்... நானே ஞாபகப்படுத்துறேன். இது வேற யார் போன் நம்பரும் இல்லை. குற்றவாளி டிரைவரைக் கொலை செய்த இரண்டு கைதிகளின் போன் நம்பரும்... நந்தினிக்கு விபத்து ஏற்படுத்திய அந்த டிரைவரோட போன் நம்பரும்தான்..."

அவன் நிதானமாகச் சொன்னான்.

"அப்படி யாரையுமே எனக்குத் தெரியாது..."

அவர் முரண்டு பிடிக்க...

ப்ரதீப் சரவணனைப் பார்க்க...

வெளியே சென்றவன்... கைகளில் விலங்கிட்ட இரண்டு குற்றவாளிகளைக் கொண்டு வந்தான்.

அவர்களைப் பார்த்த ஐ.ஜி.யின் முகம் வெளுத்தது.

"இவங்களையாவது தெரியுதா...? இல்ல அறிமுகப் படுத்தவா...?" நக்கலாகக் கேட்டான்.

"இல்ல... வேண்டாம்..." அவசரமாகச் சொன்னார்.

"ஓ... ஞாபகம் வந்துடுச்சோ...! நான் எடுத்த கேஸிலேயே மிகவும் வித்தியாசமான கேஸ் இதுதான். ஒரு போலீஸே... இன்னொரு போலீஸைக் கொல்ல... கிரிமினல் வேலையைச் செய்தது. அதோட நிறுத்தாமல்... தொடர்ந்து இவ்வளவு குற்றங்களையும் செய்ததைப் பார்த்ததும்... இதுதான் முதல் முறை.

"காவல் துறைக்கே ஒரு களங்கம் நீங்க. அதிலும்... ஒரு மந்திரியை முன்னிறுத்தி... சக காவலரைக் கொன்னது... மன்னிக்கவே முடியாதது..."

அவன் பேசப் பேச... நந்தினி இமைக்க மறந்து அவனது ஆளுமையில் திளைத்திருந்தாள்.

தன் கணவன் சி.பி.ஐ. ஆபீசர் என்பது அவளுக்கு மிகுந்த பெருமையாக இருந்தது.

அவன் ஏதோ ஒரு வேலையில் இருக்கிறான் என்ற சந்தேகம் அவளுக்கு இருந்ததுதான்.

ஆனால் க்ரைம் பிராஞ்ச்... என்று அறிந்தது முதல் என்னவோ... கோபத்துக்குப் பதிலாக... சந்தோஷமே நிரம்பி வழிந்தது.

ஓடிப் போய் அவனைக் கட்டிக் கொண்டு முத்தமிட வேண்டும் என்று எழுந்த ஆவலை அடக்க மிகுந்த சிரமப்பட்டாள்.

இதுவே பழைய நந்தினியாக இருந்திருந்தால்... கோபம் கட்டுக்கடங்காமல் பெருகி இருக்கும்.

ஆனால் இப்பொழுது இருப்பதோ பெப்பியின் மனைவி ஆயிற்றே...! தன் கணவன் அவன் என்பதில் நெஞ்சு கொள்ளாப் பெருமை பிறந்தது.

எப்பொழுது இங்கிருந்து கிளம்புவோம்... தனிமையில் அவனைக் கட்டிக் கொள்ள வேண்டும்போல் இருந்தது.

அவள் நினைப்பைத் தடுத்தது, ப்ரதீப்பின் பேச்சு.

"நந்தினியே... நீங்கதான் குற்றவாளின்னு கண்டு பிடிச்சுட்டா. ஆனா நம் இந்தியாவுக்கே ஒரு சாபக்கேடு உண்டே...! உயரதிகாரியைக் கீழே வேலை செய்பவர்கள் கேள்வி கூடக் கேட்க முடியாதே... அதனால்தான்... நீங்க சுதாரிக்கும் முன்னாடியே...

"மந்திரி ஐயாவைப் பார்த்து நாங்க கேஸை எங்க கீழே கொண்டு வந்தோம். இனிமேல் உங்களால் தப்பிக்கவே முடியாது..."

அவன் சொல்லி முடிக்க... அந்த அரங்கமே நம்ப முடியாமல் அமைதி காத்தது.

இறுதியில் நீதிபதிகள் ஐ.ஜி.யைக் குற்றவாளி என நிரூபித்ததற்காக... ப்ரதீப்பிற்கு வாழ்த்துத் தெரிவிக்க... மந்திரியும் அதையே செய்தார்.

அனைவரின் பாராட்டையும் பெற்றவன்... நந்தினி எங்கே என்று தேட, ஆனால் அவளோ அங்கே இருக்க வில்லை.

வெளியே சென்று பார்த்தால்... பத்திரிகை அன்பர் களின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தாள்.

வேகமாக அவர்கள் அருகில் செல்ல... அனை வரும் அவனைப் பிடித்துக் கொண்டார்கள்.

அவர்கள் கேள்விகளை அடுக்கும் முன்பே...

"முதல்ல உங்க எல்லோருக்கும் ஒரு விஷயம் கிளியர் பண்ணிடுறேன். நான் கிரைம் பிராஞ்ச் ஆபீசர்னு உங்களுக்கு எப்போ தெரியுமோ, அப்போதான் நந்துக்கும் தெரியும்... இந்தக் கேஸில் இருந்த சிக்கல் களால் தான்... அவ குற்றவாளி யார் என்று கண்டு பிடித்த பிறகும்... கேஸ் எங்க கைக்கு வந்ததது. மீதி பிறகு பேசிக்கலாம்..."

சொன்னவன்... அவளை இழுத்துக் கொண்டு காருக்கு விரைந்தான்.

ஏற்கெனவே முன்னிருக்கையில் சரவணனும்... கந்தனும் இருந்தார்கள்.

வேகமாக அவனை விட்டு விலகி அமர்ந்தவள்... "கந்தா! காரை எடுங்க..." குரல் இறுகச் சொல்ல...

கந்தன் இருந்ததால்... ப்ரதீப்பும் விலகி அமர்ந்து கொண்டான்.

வீட்டிற்கு வந்தவுடன்... ரோஸ் அனைவரையும் நிற்க வைத்து ஆரத்திச் சுற்றியவள்... சரவணனை முறைத்த வாறே சென்றாள்.

அவள் முறைத்துக் கொண்டே சென்றதைக் கண்டவன்... "மவனே! இன்னைக்குச் செத்தடா..." சிரிப்பை உள்ளடக்கியவாறு சொன்னான்.

அவனை முறைத்தவன்... "அங்கே பாரு..."

அவன் காட்டிய திசையில் நந்தினி கோபமாகச் சென்று கொண்டிருந்தாள்.

"ஹேயோ...!" அலறியவன் அவள் பின்னால் செல்லப் போனான்.

அவனைத் தடுத்தவன்... "உன் தங்கச்சிக்கிட்ட விளக்கம் சொல்லி... என்னைக் காப்பாத்திட்டுப் போனாப் போதும்."

அவனை விடாமல் பிடித்து வைத்துக் கொண்டான்.

"டேய் கடன்காரா... அவளாவது சாஃப்ட்டுடா. நந்தினி என்னைக் கொன்னே போட்டுடுவா..."

அவன் கையை உருவிக் கொள்ள முயன்றான்.

"இவ சாஃப்ட்டுடா... எப்போ டி.வி.யில் நம்ம மூஞ்சியைப் பார்த்தாளோ... அப்போ இருந்து எனக்கு அர்ச்சனைதான். இதை மட்டும்தான் மறைச்சீங்களா... இல்ல, இன்னும் இருக்கானு கேட்டு உயிரை வாங்குறா...

"காதில் வச்ச போனைக் கீழே இறக்க முடியலை... வைக்கிறேன்னு சொன்னா... அதுக்கும் அழுகை. பொண்டாட்டி பிள்ளை உண்டாகி இருக்கானு ஆசையாக் கொஞ்ச வந்தால்... பார்க்கக் கூட மாட்டேங்குறாடா. ப்ளீஸ்டா..."

பரிதாபமாகக் கெஞ்சினான்.

அவனது கெஞ்சல் பாவமாக இருக்க... ரோஸை அழைத்துப் பேச முயன்றான்.

"நீங்க எதுவும் பேசாதீங்கண்ணா..." கண்டிப்பாகச் சொன்னவள்... அறைக்குள் சென்று மறைந்தாள்.

"ஏய் ரோஸ்... சொன்னாக் கேளும்மா... மறைக் கணும் என்றெல்லாம் நினைக்கலை..."

அவள் பின்னால் சென்றான்.

"அப்போ ஏன் சொல்லலை...?"

"அதெல்லாம் ஆபீஸ் சீக்ரெட்டும்மா... எப்பவுமே இதுதான் வழக்கம்..."

"பொண்டாட்டி கிட்ட கூடச் சொல்ல முடியாதா...! பேசாதீங்க...."

அவளைத் தொட்ட கையைத் தட்டி விட்டாள்.

"என்னம்மா... இப்படி அடம் பிடிக்கிற...! உன்னையே ஒரு வாரம் கழிச்சுப் பாக்குறேன். பட்டினியா வந்து இருக்கேன்... எனக்குள்ளே வரப் போற முதல் சொந்தம்... நம்ம குழந்தை. அதையும் பார்க்கணும்னு ஆசையா வந்திருக்கேன். இப்படிப் பண்றியே..."

அவனது இந்தப் பேச்சு அவளைக் கொஞ்சம் இளக்கியது.

அதை உணர்ந்தவன் போல்... தன் கையை அவள் வயிற்றில் பதித்தவன்...

"டாக்டர் என்ன சொன்னாங்க...? மருந்தெல்லாம் ஒழுங்காச் சாப்பிடுறியா...? என்னைத் தேடுனியா...?"

அவன் கரங்கள் இப்பொழுது அவளைச் சுற்றி வளைக்க... அவனுக்குள் ஒடுங்கினாள்.

அவர்கள் ராசியானதை உணர்ந்த பிறகு... அவசரமாக தங்கள் அறைக்குச் சென்றான்.

அறை வெறுமையாக இருக்க... பாத்ரூமிலிருந்து வெளியே வந்த அவளை... விழிகள் தெறித்து விழும் அளவு விழி விரித்துப் பார்த்தான்.

கதவை அடைத்துத் தாழ்ப்பாள் போட..

அவன் எதிர்பாராத வகையில்... ஓடி வந்தவள்... "பெப்பி..." என்று சொல்லி அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கினாள்.

இதை எதிர்பாராத பெப்பி தடுமாறி... இருவரும் கட்டிலில் விழுந்தார்கள்.

அவளோ எதையும் உணராமல்... அவன் முகம் முழுக்க ஈரமாக முத்தமிட்டாள்.

அவள் வேகத்தில் திகைத்தவன்... தானும் அவளுக்குக் குறையாத தாபத்தை வெளிப்படுத்தினான்.

எதைப் பேச வந்தோம் என்பது இருவருக்குமே மறந்து போனது.

ஒரு வாரப் பிரிவு அவர்களை ஒருவர் நெருக்கத்தை ஒருவர் நாட வைத்தது.

தங்கள் தேவை தீர்ந்த பிறகே... தங்களுக்குள் பேசி முடிக்க வேண்டியது இருப்பதை உணர்ந்தார்கள்.

தன்னிடமிருந்து விலகிய அவனைப் படபடவென்று அடித்தாள்.

அவளது அடிகளை பெற்றுக் கொண்டவன்... "நந்து... உனக்குத் தெரியாதது இல்லை... சில நேரங் களில் ரகசியத்தைக் காக்குறது அவசியமா இருக்கு. அதான்..." அவள் கைகளைத் தடுத்தவாறே சொன்னான்.

"அதுக்கு அடிக்கலை. என் போனையே டுப்ளிகேட் சிம் பண்ணி வச்சு... எனக்கு வந்த கால் எல்லாம் நீயும் ஒட்டுக் கேட்ட இல்ல... எனக்கு அப்போவே சந்தே கம்தான்.

"யாரு...? இதெல்லாம் அந்த சரவணன் செஞ்ச வேலைதானே! அவன்தானே உனக்கு ஹெல்ப் பண்ணு றவன்.

"அவனை நேர்ல பாக்கும்போது வச்சுக்கறேன். இதில் அந்த எம்.பி. ராஜமாணிக்கம் வாசலுக்கே வந்து கூப்பிட்டுப் போகும்போதே எனக்குச் சந்தேகம்தான்."

அவள் பொறும... அவன் சிரித்தான்.

"ஏய்! அவருக்கு ஒரு நேரம் நான் உதவி செய்தேன். அந்த அபிப்பிராயத்தால்தான் அவர் அப்படி நடந்து கிட்டார். இல்லாமல் எம்.பி.க்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அதோட கோபால் அவரோட நண்பர். அந்த விஷயத்துக்காகவும் இருக்கலாம்..." அவளுக்கு விளக்கி னான்.

"அது சரி... அப்போ என் போன் விஷயம்..."

கோபம் குறையாமல் கேட்டாள்.

"அது என்னோட மன திருப்திக்காக நந்து... உனக்கு எதுவும் ஆபத்து வந்துடக் கூடாதேன்னு... ஆனாலும் அந்த ஆக்சிடெண்ட்... என்னால் தடுக்க முடியாமல் போயிடுச்சே...! செத்துப் பிழைச்சேன் தெரியுமா..."

அன்றைய நினைவில் அவன் தேகம் நடுங்கியது.

"யாரோ என்னைத் தைரியமா இருக்கணும்னு சொல்லிட்டு இப்போ இப்படி நடுங்குறாங்க..." அவன் கன்னத்தோடு கன்னம் இழைத்தவள்... "ஆனா... எனக்கு அந்த ஆக்சிடெண்ட் நடந்ததைப் பத்திக் கவலையே இல்லை. இந்த நந்து இவ்வளவு மாறவும்... பெப்பி எனக்குக் கிடைக்கவும் காரணமா இருந்ததாச்சே..."

சொன்னவள்... அவன் கன்னத்தில் தன் இதழ் பதித்தாள்.

"அதென்னவோ சரிதான். இல்லன்னா இந்த முசுட்டு முத்தம்மாகிட்ட என் காதலைச் சொல்லி... கன்வின்ஸ் பண்ணி... உன் கழுத்தில் தாலி கட்டுறதுக்குள்ளே எனக்குத் தலையெல்லாம் நரைச்சிருக்கும்..." அவள் மூக்கோடு மூக்குரசிச் சொன்னான்.

"என்னது முசுட்டு முத்தம்மாவா...? ஏன் சொல்லமாட்ட...! அதான் கைக்குள்ளே இருக்கேன்ல... அந்த தைரியம் உனக்கு. நான்தான் முசுட்டு முத்தம்மா ஆச்சே...! என்னை ஏன் கட்டிக்கிட்டு இருக்க...? எந்திரிச்சுப் போடா..."

அவனைப் பிடித்துத் தள்ளினாள்.

"போக முடியாது. எங்கே நீ எந்திரிச்சுப் போ பார்ப்போம்..."

கண்களில் குறும்புடன் அவன் சொல்ல...

தன் நிலை உணர்ந்து அவன் தன்னைக் கேலி செய்கிறான் என்பது புரிய...

"பொறுக்கி. ஆசையைப் பாரு..." சொன்னவள் அவன் மீதே படுத்துக் கொண்டாள்.

"நீ என்னை எப்போ காதலிக்க ஆரம்பிச்ச நந்து...? எனக்குத் தெரிஞ்சுக்கணும்னு ஆசையா இருக்கு... நான் உன் கழுத்தில் தாலி கட்டி இருக்கலைன்னா... என்னை ஏத்துட்டு இருக்க மாட்டதான...?" நீண்ட நாட்களாக அவளிடம் கேட்க நினைத்ததைக் கேட்டுவிட்டான்.

"உண்மையைச் சொல்லவா...! முதல் நாள்... என்னைப் பார்த்து சொன்னியே... 'நான் உயிரோட இருக்கவே இவங்கதான் காரணம்னு...' அந்த நிமிஷம்... நீ என் மனசுக்குள்ளே போய்ட்ட... ஆனா அதை நான்தான் உணராமல் இருந்துட்டேன்.

"ஒரு கட்டத்தில் நீயும் என்னை விட்டுப் போயிடுவியோ என்ற பயம்... வெறுத்துடுவியோன்னு பயம்... எல்லாம் சேர்ந்துதான்... உனக்கு என்ன உரிமை இருக்குன்னு உன்னைத் தூண்டி விட வச்சுது போல...

"நான் மட்டும் அப்படிச் சொல்லலன்னா... ஐயாவுக்கு வீரம் வந்துடுமாக்கும்...! நந்து... நந்துன்னு... உருகத்தான் தெரியும்."

அவனைப் போலவே சொல்லிக் காட்ட... அசந்து போனான்.

"அடிப் பாவி. உனக்கு இப்படியெல்லாம் கூடப் பேசத் தெரியுமா!" வியந்தான்.

"எனக்கு இப்படில்லாம் பேசத் தெரியாது பெப்பி... பேசச் சொல்லிக் கொடுத்தது நீ... சிரிக்கச் சொல்லிக் கொடுத்தது நீ... வாழ்க்கையோட அழகான பக்கங்களை எல்லாம் கொடுத்தது நீ மட்டும்தான் பெப்பி. வாழ்க்கை யில் ஒரு கட்டத்தில் கோபமும், வெறுப்பும் மட்டும்தான் என்னோட இருந்தது.

"என் முகமே எனக்கு மறந்து போயிருந்தது. என் மனசுக்குள் இருந்த எல்லாத்தையுமே... ஒரு தீரை போட்டு மறைத்து வைத்திருந்தேன். அந்தத் திரையை விலக்கி... என் முகத்தையே எனக்கு அறிமுகப்படுத்தியது நீதான்டா... ஐ லவ் யூ பெப்பி...

"நீ இல்லன்னா... நான் என்ன ஆயிருப்பேன்னே..." மேலே சொல்ல முடியாமல் தவித்தாள்.

"அதெப்படி என்கிட்ட இருந்து நீ அவ்வளவு சீக்கிரம் தப்பிச்சுட முடியுமா...?" கேட்டவன்... அவன் வேலையைத் தொடர...

"டேய் மறுபடியுமா..." மேலே பேச அவள் இதழ்கள் அவள் வசம் இருக்கவில்லை.

மாலையில் எழுந்து அனைவரும் டீ அருந்திய வாறே மொட்டை மாடியில் பேசிக் கொண்டிருக்க...

"அக்கா... நான் உங்ககிட்ட ஒண்ணு கேக்கணும்னு நினைச்சேன்... அதுக்குப் பிறகு... அதாவது நீங்க ஹாஸ்டல் போன பிறகு எப்போவாச்சும்... உங்க அம்மா அப்பாவைப் பார்த்தீங்களா...?"

கேட்ட பிறகுதான் ஏன் கேட்டோம் என்று ஆனது அவனுக்கு.

சற்று நேரம் அமைதியாக இருந்தவள்... "நான் ஹாஸ்டல் போன ரெண்டே வருஷத்தில் எங்க அம்மா இறந்துட்டாங்க... அடுத்த வருஷமே எங்க அக்காவுக்குக் கல்யாணம் முடிச்சுக் கொடுத்த எங்க அப்பா... அடுத்த ரெண்டு வருஷத்தில் என் தங்கச்சிக்கும் கல்யாணம் பண்ணி வச்சுட்டார்.

"தம்பியை வெளிநாட்டுக்குப் படிக்கன்னு அனுப் பியவர்... சொத்தை எல்லாம் பிரிச்சு நாலு பங்கா எழுதி னவர்... அவங்க அம்மாகிட்ட சண்டை போட்டுட்டு வீட்டை விட்டே போயிட்டாராம்...

"உன் பிள்ளைப் பாசம்தானே என் பொண்ணையும் என்கிட்ட இருந்து பிரிச்சு... என் பொண்டாட்டியையும் அல்பாயுசில் போக வச்சுது... என் கையால் கொள்ளி வேணும்னுதானே இதையெல்லாம் செஞ்ச...!

'ஆனா நான் என் கடமையெல்லாம் இவ்வளவு அவசரமா முடிக்கக் காரணமே... நீ... இனி இருக்கும் காலம் முழுக்கத் தனியா இருக்கணும்னுதான். என் கையால் கொள்ளி வேணும்னு கேட்டல்ல... அது

உனக்குக் கிடைக்கவே செய்யாது. உன் பிள்ளை உயிரோட இருக்கானா இல்லையான்னு நீ ஏங்கியே போய்ச் சேரணும். அதுதான் நான் உனக்குக் கொடுக்குற தண்டனைன்னு சொல்லிட்டாராம்.

"எல்லாம் கடைசியா என்னை வந்து பாக்கும்போது சொல்லி... என் காலில் விழாத குறையா மன்னிப்புக் கேட்டுட்டுத்தான் போனார். ஆனால் அந்தச் சொத்தை உடனேயே ஒரு அநாதை இல்லத்துக்குக் கொடுத்துட்டேன். அவங்களே எனக்கு இல்லைன்னு ஆனதுக்குப் பிறகு... அவங்க சொத்து மட்டும் எனக்கு எதுக்கு...?

"ஆனா அவங்கல்லாம் இல்லன்னு ஒரு பெர்சன்ட் கூட எனக்கு வருத்தமே இல்லை. அதான் எனக்கு நீங்க எல்லாம் இருக்கீங்களே... கடவுள் எனக்கு இப்படி ஒரு குடும்பத்தைத் தந்திருக்கும்போது... நான் ஏன் வருத்தப் படப் போறேன்..." சொன்னவள் மெல்லியதாகச் சிரித் தாள்.

ரோஸ் அவள் மடியில் படுத்துக் கொள்ள... வாஞ் சையாக அவள் தலை கோதினாள்.

தன் தங்கை இவள்தான் என மனம் சொன்னது. ஒரு அழகான குடும்பம் உதயமானது அங்கே!

ஐந்து வருடங்கள் கழித்து...

"அத்த... உங்க பொண்ணு என்னை அடிக்கிறா பாருங்க..." தலை தெறிக்க ஓடி வந்தான் பிரணவ். ரோஸ் – சரவணனின் மகன்.

"இருடா திருடா... உன்னைப் புடிச்சு ஜெயில்ல போடுறேன்..." அவனை விரட்டி வந்தாள் ப்ரதீப் - நந்தினியின் மகள் வர்ஷிகா.

"ஏய் வாலு... இப்போ எதுக்கு அவனை விரட்டி வாற... அவனே பாவம் அப்பாவி..." மகளைக் கையில் தூக்கிக் கொண்டான் ப்ரதீப்.

"அவ விதாட வத மாத்திக்கான்..." புகார் வாசித்தாள் வர்ஷிகா.

"நந்து... உன் பொண்ணைப் பாத்தியா...! பிரணவ் விளையாட வரலன்னு அவனை ஜெயில்ல புடிச்சுப் போடப் போறாளாம். அவளை விட நாலு வயசுப் பெரியவன். பாவம்... பயந்து போய் ஓடி வாரான்..." சிரிப்பாகச் சொன்னான்.

"பின்ன... எல்லோரும் அவளுக்குச் செல்லம் கொடுத்தால் அப்படித்தான். இருங்க... அவளை வந்து கவனிக்கிறேன்..."

கையில் குச்சியோடு வெளியே வந்தாள்.

"தேய்... ஓதி வாதா... போலீஸ் வதுது..." சொன்னவள் ஓட..

"உனக்கு அம்மான்னு சொல்லத் தெரியாதா... போலீசுன்னு சொல்லுற... இரு..." அவளை விரட்ட..

"அத்தை... காப்பாத்து..." சொன்னவள் ஓடிப் போய் ரோஸிடம் தஞ்சம் புகுந்தாள்.

"அவளை விடு இங்கே... நாலு சாத்து சாத்துறேன்." கோபமாகச் சொன்னாள் நந்தினி.

"அண்ணி... நீங்கதானே அம்மா யூனிஃபார்மில் இருக்கும்போது கொஞ்சக் கூடாதுன்னு சொன்னீங்க... அவ வயசுக்கு உங்களை யூனிஃபார்மில் பாத்தா போலீசுன்னு சொல்றா. அவ்வளவு தானே...!

"விடுங்க. இதுக்குப் போய் குழந்தையை விரட்டிக் கிட்டு..." வர்ஷிகாவை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு சொன்னாள்.

வர்ஷிகாவும் சலுகையாக அவள் தோளில் சாய்ந்து கொண்டு... கிளுக்கிச் சிரித்தது.

"அப்படியே அப்பாவைப் போல... சிரிச்சே மய்க்கு..." குறைபோல் பெருமைப் பட்டவள்... அறைக்குச் சென்றாள்.

"நான் உன்னை சிரிச்சு மயக்குறேனா..." அறைக்குள் வந்தவளிடம் புருவம் உயர்த்திக் கேட்க...

அவள் பார்வை ஆம் என்றது.

"சாயங்காலம் வா... உன்னை வச்சுக்கறேன்..."

"நான் இப்பவும் ரெடிதான்..." அவனைவிட குறும் பாகச் சொல்ல...

"ராட்சஷி..." அவன் நெருங்க...

"பெப்பி... ஆபீஸ் போகணும்... யூனிஃபார்ம் போட்டுட்டேன். வேண்டாம்..." சொன்னவள்... அவன் செய்கைக்கு இசையவே செய்தாள்.

அவளை விட்டு விலகியவன்... "சாயங்காலம் சீக்கிரம் வந்துடு. வர்ஷிக்கு இன்னைக்கு ரெண்டாவது பிறந்த நாள்... கோவிலுக்குப் போயிட்டு.. அப்படியே வெளியே போயிட்டு வரலாம்..." அவன் சொல்ல...

"உங்க பேச்சுக்கு மறுபேச்சே கிடையாது..." சொன்னவள்... மாலையில் சொன்ன வாக்கைக் காப்பாற்ற... அனைவரும் சேர்ந்து கோவிலுக்குச் சென்றார்கள்.

கடவுளையே வெறுத்த நந்தினி..., இப்பொழுதெல்லாம் நாள் தவறாமல் கடவுளுக்கு நன்றி உரைத்தாள்.

கடவுளின் விருப்பத்தையும்... கணக்கையும் நம்மால் மீற முடியுமா...?

அவர்கள் வாழ்க்கை பூந்தோட்டமானது அங்கே!



முகத்திரை

இன்பா அலோசியஸ்

